# வைகுந்த அம்மானை

எஸ். கந்தசாமிப்பிள்ளை

1912

—, 85 GPU,V
N12
68386

1912

உ

ஸ்ரீ ராமஜெயம்.



வித்வசிரோமணியாகிய

புகழேந்திப்புலவரவர்கள் இயற்றிய

மகாவித்தென்னும்

# வைகுந்தஅம்மானை.

கந்தப் பிரதி

மதுரை, ஸ்ரீ மீனாக்ஷிவிலாஸ், ப்ரொப்ரைடர்

எஸ். கந்தசாமிபிள்ளை

அவர்களால்

மதுரை

ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

௧௯௧௨

1912.


1-வது பதிப்பு.


இதன் விலை அணா 4.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட A. MANI
Dec மாதம் 1985 வருடம்
செப்பனிட்டு முடித்த
Dec மாதம் 1985 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்
5/1/86

68386

O-,185GPU,V
N12






இவர்கள் வைகுந்தம் ஏகுதல்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# மகாவிந்தமென்னும்

# வைகுந்த அம்மானை.

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

நற்புகழ்செறியுந் தருமாவர்வைகுந்தம்
புக்கபெருங்காதை புகலவே—மிக்க
வியமுகத்தான்பாரதத்தை மேவிடுக்கு நாடுங்
கயமுகத்தான் பங்கயத்தான் காப்பு.

வெண்செந்துறை.

கரிமுகப்பிள்ளையரே கணபதியேமுன்னடவாய்
அரியதவத்துதித்த ஐங்கரனேமுன்னடவாய்
எடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமம்மா
பாவிவழுவாமல் பரிந்தெனக்குமுன்னடவாய்
குரலில்குடியிருந்து குரலோசைதாருமம்மா
மறவியணுகாமல் வரமீந்துதாருமம்மா
வெட்டாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
சப்பாணிபிள்ளையரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொங்கரின்கணபதியே
நற்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வாராமல் குறைபொருந்தாமல்
கற்றமட்டும்யான்படிக்கக் கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி.

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனாபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்

புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலரேயுன் சிற்பாதம்பான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டமுகர்ஐவர்கதை
பஞ்சவர்கள் தன்கதையைப் பற்பலருந்தான்படிக்க
அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்பான்படிக்க
எம்பிரான்முன்னடக்க என்கந்தயும்பின்னடக்க
தம்பிரானுனசிவ சண்முகனேமுன்னடவாய்

சரஸ்வதி துதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்களைவரும் பட்சமுடன்வைகுந்தம்
தஞ்சமுடனெல்லோரும் தட்சணமேநேர்ந்தகதை
அல்லல்மிகநீங்கி ஐவர்களுஞ்சேர்ந்தகதை
புல்லனெனவாயில் புகழ்ச்சியாய்ப்பாடுதற்கு
வல்லமைகமாயி வாக்கிற்குடியிருந்து
நல்லவரந்தருவாய் நாவிற்சரஸ்வதியே
நித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பத்தியாயான்பாடப் பார்வதியேமுன்னடவாய்

ஈஸ்வரர் துதி.

ஆதிபரஞ்சுடரே அரியசிவனாரே
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொற்கபதியரசே தூண்டாச்சுடரொளியே
என்னுக்குளெண்ணெய்போல் எங்கும்நிறைபொருளே
துன்னுமெருகேதுந் தோன்றாதமெய்ப்பொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள்தன்கதையை பகவானேயான்பாட



ஆண்டவனே நீருமெந்தன் அடியேனுடநாவில்
இடருகள்வாராமல் இன்பமாயான்பாட
அடைவாகவென்னாவில் ஐயனே நீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றும்நேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவாமுன்னடவாய்

மகாவிஷ்ணு துதி.

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே
கஞ்சன்வலதழித்த கார்மேகமுன்னடவாய்
செஞ்சொலசோதையுடன் தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணாக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணைதிருடியே மிகவிடைச்சிகளாலே
வண்ணமுடனடியுண்ட மாயவனேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா

## கதையின் வரலாறு.

காரானைமாமுகனே கணபதியேகாப்பாக
சீரானமாமுகனே செல்வனேமுன்னடவாய்
எந்தன்குருவாழ்க ஏகாம்பராமுன்னடவாய்
தந்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
ஆத்திமதிசூடும் அரனார்திருமகனே
வந்துதவிசெய்வாய் மாபாரதக்கதைக்கு
முந்திபரமேஸ்வரனார் மொழிந்தவசனமிது
இப்புவியிலுள்ளோர் எழுதிப்படிப்பதற்கு
செப்புகிறேன்லட்சுமியாள் சீதேவியுமாக
ஞானமதில்மெஞ்ஞானம் நாலும்பரமபதம்
வாலைசரஸ்வதியே வந்திருந்துகூத்தாட
மாபாரதக்கதையை வகுத்துரைத்தசாத்திரத்தில்
ஆகாதசேடன் அவனியாயகிஷ்டேன்

மாபாவிசெய்த வஞ்சமெல்லாம்பொறுத்து
பூபாலரைவர் பொறுந்துதுரியோதிரனும்
வென்றுபுவியாண்டு விஷ்ணுபதஞ்சேர்ந்தகதை
ஒன்றுமறியாதான் உரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொறுத்தருளும் பிள்ளையிவனெனவே
தெரியாதான்சொன்னமொழி செந்தமிழோர்தான்பொறு [ப்பீர்
பாவாணர்பாதம் பணிந்துநமஸ்கரித்து
சொல்லுகிறேனம்மானை துதிக்குந்துணையாக
சொல்லுகிறேன்ஞானமெனச் செப்புகிறேனம்மானை
வெல்லுகிறகாலமென்ன வேதன்துணையாயிருக்க
சீராகப்புவிவாழ்க திசைகளெட்டுந்தான்வாழ்க
பார்புகழ்தமிழ்தேசர் பாவாணர்தான்வாழ்க
திங்கள்மும்மாரி பெய்துமிகப்பொழிய
பொங்குபுகழ்காவேரி பொய்யாமலெந்நாளும்
தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
ராசன்புவியாள நற்றவங்களுண்டாக
தேவாலயம்விளங்க திருப்பணிகளுண்டாக
மூவர்முதலாக முப்பத்துமுக்கோடி
தேவர்களும்வாழ்க செங்கதிரோனும்வாழ்க
நாராயணர்வாழ்க நான்மறையுந்தான்வாழ்க
தாராதவத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாட்சரமும் பகருமோரெட்டெழுத்து
அஞ்சாமலெந்நாளும் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுதல் வெண்ணீறுமுண்டாக
கூறுமுபதேசம் குன்றாமலெந்நாளும்
நன்றாய்சிவன்றனையும் நாராயணன்றனையும்
ஒன்றாகக்காண்போ ருள்ளமகிழ்ந்திடவே
நல்லோருமிப்புவியில் நாட்டில்மிகவாழி
இல்லோருமுள்ளோரு மெளியோர்வழியோரும்
எண்ணரியஸ்ரீரங்க ராமனுடன்சேஷன்
மண்ணுலகில்வெங்கிடருள் வடவான்மனமகிழ்ந்து
அல்லலறவே அருவினைகள்தானறவே



சொல்லியவைகுந்தக்கதை சொல்லறவேயான்பாட
தண்ணளிசேர்வீதியிலே தழைத்தாலின்கீழிருக்கும்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
தோராதசூரனையுந் தொலையாக்கிவஞ்சமதை
வேரோடறுத்தெரியும் வேலவனேமுன்னடவாய்
துள்ளுமிடையாளே சொற்கலைக்குவல்லவளே
தவளநிறத்தாளே சரஸ்வதியேவாக்கருள்வாய்
தெரியுங்கலைகளுஞ் செந்தமிழோர்கள்முன்னே
அரியவைகுந்த வம்மானைசொல்லுதற்கு
வரிசைபெரும்வையகத்தில் மாரிபொழிவதுபோல்
பேச்சரியாப்பிள்ளை புலம்புகிறேன்வாய்திறந்து
காவிற்குயில்கூவக் கண்டேயதற்கிணையாய்
கூவிக்குளறுமந்த கூகையொக்குமம்மானை
ஆதரவாயானுரைத்த வம்மானைதன்னிலொரு
ஏதுபிழைவந்தாலும் என்னைப்பழிசொல்லாமல்
வாசமுள்ளபாடலென்று மாநிலத்தோர்கொண்டாட
தேசமுடனேபெரியோர் நிந்தைமிகச்சொல்லாமல்
சிந்தைமகிழ்ந்துகொள்வீர் சிறியேனுரைத்தமொழி
சந்தேகங்கொள்ளாமல் தாரணியிலுள்ளவர்கள்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
ஆசையுடன்படித்து அன்புவைத்துக்கேட்டவர்கள்
ஓசையுடன்வாழ்த்து உகந்திருப்பீர்கண்டீரே
ஆறுமுகவன்துணையாய் அவையடக்கம்பாடுகிறேன்
பூருவமுள்ள புலனும்வெளியாகி
வையகத்தோர்கேட்க வாழ்த்துகிறேனிக்கதையை
சர்ப்பனைகள்செய்தறியாத் தருமருந்தம்பியரும்
அத்திபுரநகரம் ஆளுகிறநாளையிலே
பத்தியுள்ளபஞ்சவரும் பாரளந்தமாயவரும்
நீதிமறவாமல் நெடுநாட்புவியாண்டு
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருஞ்சேர்ந்தகதை
காலதுவாபரம்போய் கலியுகமும்வந்ததினால்
சாலவேகோபாலர் சங்கையல்லவென்றுசொல்லி

உள்ளத்துக்குள்ளே வுபாயமனதிலெண்ணி
சீருடனேவைகுந்தம் சேரவென்றுசம்மதித்து
நாருடனேபூவும் நன்றாகச்சேர்ந்ததுபோல்
பஞ்சவர்களைவரையும் பார்த்தார்களப்பொழுது
தஞ்சமுடன்மாயவரும் தரணிதனிலெண்ணிச்
சிந்தைதனிலெண்ணித் திருமால்மனமகிழ்ந்து
வித்தையாயிக்கதையை மேதினியோர்தான்றுதிக்க
அம்மானையென்று அரியவைகுந்தக்கதை
இம்மானிலத்தோ ரெழுதிப்படிப்பவர்க்கு
வாக்கருளச்செய்த வடவான்மொழிந்தகதை
பார்க்கவிருத்தமென்று பாடவேயிக்கதையை
சுருக்கமாய்ப்பாடினதை தோற்றமுடனேதெரிந்து
பெருக்கவிரிவுசெய்து பெருமான்பதம்போற்றி
ஒன்பதுநூறு வொன்றுநூறுமாய்
என்றுமுத்திசித்தி யிதுவேபொருளாக
திருத்தமுடன்கதையைச் சிறப்பாகசீருடனே
விருத்தமுடன்சொர்க்கமும் விபரீதமாய்ப்பாடி
பூலோகமெல்லாம் புதுமையெனக்கொண்டாட
மாயோனுதவிசெய்வார் வைகுந்தமென்பார்க்கு
மெய்க்கண்டதேவே வியாசர்மொழிந்தகதை
வைகுந்த அம்மானை மகாபாரதமுடிந்து
குருகுலத்திலுள்ள கொற்றவர்கள்நூற்றொருவர்
போர்க்களத்தில்மாண்டு போனபின்பாண்டவர்கள்
தருமரைவருந் தம்பியருந்தானிருந்து
வாழ்ந்தகதையு மற்றுமுள்ளோர் தன்கதையை
தாழ்த்தகலிவருமுன் தங்களிலேதான்தெரிந்து
காளமுகில்வண்ணன் கண்ணனருளாலே
வாளபிமனிறை மன்னன்பரிச்சித்துவுக்கு
பட்டந்தரித்துப் பாராளவைத்ததுவும்
நடந்துவழிசெங்கோல் நடத்துந்திறமறிந்து

விருத்தம்.

ஓம்குருவாழ்கவென்று உலகெலாமகலநீக்கி
பாங்குடனேத்துபெரும் பத்தினிதுரௌபதையும்



எங்குள்ளகருமமெல்லா மெள்ளளவகையுமற்று
நீங்கிடுசெகமென்றெண்ணித் திறனிலேநடந்தஞாயம்.
மன்னுள்ளோர்வாழ்கவென்றுமற்றுமுள்ளதேவர்மூவர்
விண்ணுள்ளோர்வாழ்கவென்று மேதினிமுனிவர்ஞானம்
அண்ணுள்ளோர்திருமால்பாத மைவருஞ்சேரவென்று
கண்ணுள்ளோர்வாழ்கவென்று கலைமகள்காப்பதாமே.

சொல்லுகிறேனல்ல சோமலிங்கந்தான்போற்றி
வெல்லுகின்றகாலம் வெகுளியின்றன்மையினால்
வைகைநதியான் வாழ்வீரையம்பதியான்
மெய்க்கமலர்பூத்த விபூதிபஞ்சாட்சரந்தான்
எளியோர்வலியோர்க் கேழையிவனெனவே
தெளியோர்க்கடிபணிந்து சிஷரிஷிதைனுமாய்
வணங்கிநமஸ்கரித்து வாழ்த்துகின்றனம்மானை
அணங்கினுடசீர்பாதம் அருமலிப்போது
கூறுந்தமிழுடைய குருகுலத்தில்பஞ்சவர்கள்
பெருந்தவமும் பெருமைகளுமுண்டாக
சொன்னதமிழ்பெருகச் சொன்னதுவேயம்மானை
அன்னமெனுமீனாட்சி யம்மாள்துணையெனவே
விரித்துநான்சொல்லுகிறேன் மேதினியார்தான்பாட
சிரித்துப்பழியாமல் சித்தமேதான்பொறுத்து
அறும்பெரியோ ரடியேனுரைத்ததமிழ்
கேட்டாய்வைகுந்தக்கதை கிருபையுடனேயிருந்து

பஞ்சவர்களத்திபுரந்தை யரசுசெய்தல்.

இத்தானாளும் யிடத்திவிருந்தபடி.
முத்தானிற்பஞ்சவர்கள் மூர்க்கமுடனேயிருந்து
வேதமறவாமல் வேதியரும்பூசுரரும்
நாதமணிகீதம் நற்சங்குவிதானமுடன்
கேள்விகளோமம் மிருத்தபுராணகதை
கேள்விசெவகதைகள் கீர்த்தனைகள்தான்முழங்க
நீதிநடுநியாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணுபாதம் ஐவருமேபோற்றிசெய்து

மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிவேந்தருடன்
தந்திரிமார்வந்திருக்க தார்வேந்தர்காத்திருக்க
அந்தணரும்வேதியரு மானதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களும் தேவரிஷிமாதர்களும்
அன்னசொர்னதானம் அரவேபெரிதாகி
மன்னவர்தங்கள்செங்கோல் வாழமனு நீதி
வழுவாதசெல்வ மனு நீதிதப்பாமல்
நழுவாதசொல்லும் நான்தோறுந்தப்பாமல்
பூமிசெழித்துவர புவிராசன்வாழ்ந்திருக்க
சாமி திருமால் சகாயமனதிலெண்ணி
சேனைரதகெஜங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துவர
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதராகம் சகலகலைமுழங்க
இங்கிதமாய்நாளு மிடையூறுவாராமல்
கோத்திரங்களெல்லாம் குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்திருந்தகருமர் பஞ்சவர்கள்தன்னுடனே
மக்கள்மனைவிசுற்ற மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுந்தானதிர
ஆளுகின்ற அத்திபுரம் வகையாய்மனிதரித்து

அபிமன்னனுந்தப் பிள்ளைபிறந்தது.

வாழ்கின்றநாளில் வானபிமன் தன்தேவி
சுந்தரியுங்கெர்ப்பமுடன் தோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்ததென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
திங்களொன்றுமாகித் தேமாங்கனிபோல
பூரித்துநான்தோறும் பொன்போல்வளர்க்கலுற்றார்
பார்த்துமேபுத்திரனும்பருவமாய்த்தான்தேறி
அன்னைமுகம்பார்த்து ஆவலெனக்குளறி
தத்திவிளையாடித் தாலித்தவிழ்த்துவிடும்
வெற்றிவிஜயன் மிகமகிழ்ந்துபேரனுக்கு
தண்டைசிலம்பு சலங்கையுடன்தான்பூட்டி



பூஷணமும்பூட்டிப்பொன்னுலங்கரித்து
வாசமுள்ளவானபிமன் மைந்தனுக்குப் பூஷணங்கள்
தேடியவில்விஜயன் சிந்தைமகிழ்ந்திருந்து
அம்பியமுதிமொழுந் சொல்லும்பயின்றிடுமாம்
அம்புலியைவாவென்று ஆனைபசைத்தாடி
செங்கீரையாடிச் சிலகாலந்தானுடி
வங்காரமுத்தமென்று மருவியதேர்சப்பாணி
சிற்றில்விளையாடி சிறுதேருந்தானுருட்டி
மூத்திபொருவயது முழுதும்பருவமதாய்
தத்தடியுமிட்டுத் தம்பியிவனெனவே
பத்தடியுமிட்டு பருவமொருவயதால்
தெளிந்துமிகப் பஞ்சவர்கள் சிந்தைமகிழ்ந்திருந்தார்
மூன்றுவயதாகி மூலமறந்துவிதிகற்றி
ஊன்றுஞ்சிறுதோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடைபும்பாவனையும்
ஐந்துவயதாகி ஆனைரதமேறி
கொஞ்சும்பரியேறிக் கொற்றவனும்வித்தைகற்று
ஆறுவயதாகி ஆடைவெகுபூஷணமும்
நீரும்புனைந்து நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அரியசிலம்பணிந்து
ராஜாதிராஜனென்று நாற்றிசையுங்கொண்டாட
வில்வித்தைசாஸ்திரமும் விதம்விதமாய்த் தான்படித்து
கல்வித்தமிழறியக் கட்டழகன்வேணுமென்று
ஏழாம்வயதில் எழுத்தறிந்துஓதுதற்கு
வானபிமன்னன் மகனும்படித்திடவே
ஆதிகுருவிடத்தில் ஐவரிடசேதிசொல்ல

அபிமன்னன்பிள்ளையைஐவர்கூட்டி பள்ளியில்வைத்தது

ஓதுவிக்கவேணுமென்று ஒப்பிவித்தாரம்மானை
அரிவோமென்றட்சரத்தை அரியோன்றன்பேரனுக்கு

தெரியப்படுத்திச் சித்திரியும்பேரியும்
எழுத்தினிட அட்சரமு மெல்லாம்படித்தெழுதி
அழுத்தமுடனின்ற அன்பத்தோரட்சரமும்
படித்துவிரைவில் படிநூலுந்தானறிந்து
வகுத்ததமிழால் வகையாகத்தானறிந்து
ஆசுமதுரமுதல் அவையடக்கமுள்ளதெல்லாம்
பேசுதமிழ்பலவும் பிரியமுடன்தான்படித்து
துலங்குமகிழ்நாகரமும் நயனகுதிபாஷைகளும்
மாற்பேரன்தான்படித்து வயதுமீரெண்டாகி
தனுசாஸ்திரம்படித்து தாரணியெல்லாமகிழ
மனுவிக்கியானம் நீதி மனுவத்திவித்தைகளும்
பாஷைபதினெட்டும் பரிசித்துதான்படித்து
இசைபெறதேசம் உகமெங்குந்தான்மகிழ
நல்லவித்தைகற்றிருந்தான் நாராயணன்பேரன்
செல்வவித்தைகற்று சிறுவருடன்கூடி

## பரீட்சித்து வேட்டையாடப்போகிறது

தான்வேட்டையாடவென்று தாரணியிற்பிள்ளையுடன்
வனவேட்டையாடக் கையிற்சிலையெடுத்து
காளைகளாய்க்கூடி கணம்புகுந்து நாலிடமும்
சோலைகளுங்காவுகளுஞ் சுனையும்மலைபலவும்
ஓடிவிளையாடி உயர்ந்தமலைதானேற
தேடிக்கரடிபுலி சிங்கங்களாளியுடன்
தானமறைகள்புலிகள் வராகந்தான்வதைத்ததுவும்
மேன்மையுள்ளதேனும் விருந்தாரும்நற்கனியும்
வாழைப்பழமும் வருக்கைப்பலாக்கனியும்
விளையாடிப்பாலர் வெகுளிமிகவாகி
இளையாமற்சற்றும் இன்னதென்றுபாராமல்
காடுகலைத்துக் கடுமலையேறி
ஓடுகிறபாம்பை உயிரைவதைசெய்து
ஆடிவிளையாடி அலக்கழித்துநாகமதை



கோட்டிமிகப்பண்ணி கொன்றுயிர்தனையும்
நாகமதுசெத்ததையும் நலமாகவேயெடுத்து
வேகமுடனவ்வனத்தில் விளையாடிப்பாலர்களும்
அங்கேசடைமுனியும் ஆனதவமுனியும்
எங்கேசிவன்பாதம் என்றைக்குக்காண்பேனென்று
இருகைவிரித்து இருந்தார்சிவயோகி
அங்கேயிருவர் அவர்செயலைப்பாராமல்
சுடரில்விழும்விட்டிலைப்போல் அன்பமிகநினைந்து
இடர்வருமென்று வெண்ணமதுதோன்றாமல்
தையாண்டிபண்ணி நகைத்துவிளையாடி
ஐயாண்டமோதுமென்று அரவையெடுத்துவந்து
கேடுவரும்போது கெடுமதிகள்தோன்றாமல்
பாடுவருமென்று பரிசித்தறியாமல்
ஏதுவருமென்று வெண்ணியவன்பாராமல்
தீதுவினைதன்னைச் சிறுவனறியாமல்
சர்ப்பத்தைத்தானெடுத்து சன்னியாசிதன்கழுத்தில்
உற்பத்திதானுனக்கு உடமையிதுவென்றணிந்தார்
கண்டந்தமாமுனியுங் கண்கள்பொறிபறக்க
விண்டந்தக்கோபம் வெளியிலேகோரமதாய்
ஏன்டாசிறுபயலே என்மீதிற்பாம்புதனை
வேண்டாதார்போலே விடவரவைப்போட்டாயோ
தீண்டாதேயுன்னைச் சீறும்பெரியவரம்
ஆறுவுனக்கு அரவால்மரணமென்று
ஞானபரனை ஞானமுனிசாபமிட்டார்
சொன்னமுனிசாபம் அடைக்கஅறியாமல்
என்னமோவென்று பேசினர்காணம்மானை
தன்னிகரில்லாததொரு தனஞ்செயனார்தன்பேரன்
சென்றிகவிழ்ந்து சிறுவனுடன்தான்கூடி
அத்திபுரம்நோக்கி ஆரணியம்விட்டகன்று
வெற்றிமிகப்பேசி விளையாடிக்கொக்கரித்து
பட்டணமும்சேர்ந்து பரிசித்துவந்திருந்தான்

அட்டதிசைபுகழும் ஐவர்மிகமகிழ்ந்து
வில்லெடுத்துக்காளில் வேட்டையாய்வந்ததுவும்
தொல்லெடுத்தான்பேரன் சூரனிவனெனவே
அங்கங்குளிர்ந்து அன்புமிகப்பேசி
சாடந்தெளிந்துஐயர் தங்களிலேசம்மதித்து
நன்மைசெய்தருநாயம் நமக்கேபலித்ததென்று

பரீட்சித்துவுக்கு கலியாணஞ்செய்கிறது.

சித்தைமகிழ்ந்து சிறுவன்மேலன்புவைத்து
கன்னிகலியாணங் காசினியோர்தாமறிய
சிராகஜவர் சிறப்பாகப்பேரனுக்கு
நேராகதான்முகூர்த்தம் நிட்சயதாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டுமுகூர்த்தமிட
ஆதிநாராயணரை ஐவரும்போய்தெண்டனிட்டார்
சுந்தரிதன்மைந்தனுக்குச் சோபனமுந்தான்முடித்து
தந்திரமுமின்னதென்று சாத்துவீரெம்பெருமான்
அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
கனமுகில்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதெனக்கு மாயோனேசெய்யுமென்றார்
தொகைவகையுமைவருக்குத் தோற்றமுடநினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்தால் பண்பானகோத்திரத்தில்
இன்னபடியென்று இதமாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனைத் தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனென்னும்
வத்ததுளசி மகாராசனீன்றெடுத்த
செல்வியென்னும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்லவிதமென்று நாரணரைப்பெண்கேட்க
நாடிநடந்தவர்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவாரகா புரிதனிலேசென்றுபுக்கி



கண்டார்கள்மாயவன் கமலமலர்ப்பாதமதில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினாரம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியைவாவெனவே
உன்னுடையமைந்தன் உற்றதுளசியவன்
தன்னுடையதன்மகளைத் தனஞ்செயன்பேரனுக்கு
பூமடந்தையென்னும் பொற்கொடியைப்போது
தாமனபிமன்னன் தன்னுடையமைந்தனுக்கு
மாலையிட்டுநன்றாய் மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலையுமஞ்சள் செலுத்துமென்றவரையும்
மாயனுரைக்க மன்னவர்களாமெனவே
ஆயதொருமுகூர்த்தஞ் சொல்லுமென்றார்வேதியரை
கேட்டுவொருதினத்தில் கிருபையுடனெல்லோரும்
நிட்டுப்புகழைவர் திருமாலிடத்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் கூறையொடுபரியும்
கண்டுமகிழ்ந்து காயாம்புமேனியனார்
பாக்கியமாமெனவே பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்லி மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து
ஆயன்திருமால் அருளினர்காணம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுபஞ்சவர்கள்
விந்தைமலர்ப்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களத்திபுரம் வண்ணமணிமண்டபத்தில்
சந்தோஷமாகச் சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னசத்திவங்கிஷமும்
சித்திவிநாயகரைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே முக்கணுள்ளனுமாவே
ஞாலப்பொருளே நமஸ்கரித்துதான்தொழுது
பாலனொங்கள்மைந்தன் பரிட்சித்துவேந்தனுக்கு
கால்பலமாயிருந்து கலியாணந்தான்முடித்து
முன்னிற்கவேணுமையா முக்கணனார்புத்திரனே
சென்னிக்குள்நின்ற சிரேஷ்டமணியேமுன்னடவாய்

என்றுதுதிசெய்து இறையோனைத்தோத்தரித்து
சென்றுநகரில் சிறப்பானபட்டணத்தில்
வான்கமுகுநாட்டி வாழைமிகப்பந்தலிட்டு
தேங்காயிளநீர் தேன்கரும்புதானிரைப்பி
வாழைக்கனியுடனே பலாக்கனியுந்தானூன்றி
தாழைமடல்மல்லிகைப்பூச் சரமாரியாய்நிறைத்து
பட்டாலலங்கரித்து பட்டுமேல்கட்டிகட்டி
வட்டாரஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
கூடமலங்கரித்துக் கோபுரம்பாவனையும்
தெருவீதியெல்லாம் சித்திரங்கள்தானெழுதி
சாந்துபுனுகுநல்ல சவ்வாதுகஸ்தூரி
ஏத்தும்பரிமளங்கள் எங்குங்கமகமென
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தானிறைத்து
தேசம்புகழ தெய்வலோகம்போலே
வைகுந்தம்போலே வயிரவமிரியத்தால்
செய்கின்றாரவர் திருமால்மனமகிழ்ந்து
மருவுமலரும் மருக்கொழுந்துவாசனையும்
நாளும்முகூர்த்தம் நல்முகூர்த்தவேளையிலே
வாழுமரசாணியது மாணிக்கந்தானூட்டி
அன்னைசுற்றமெல்லாம் அலங்காரமாய்க்கூடி
தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்திலுள்ளவரும்
திக்குள்ளகோத்திரமும் சிறப்பாகத்தான்கூடி
முக்கியமாய்க்கல்யாணம் முடிக்கவேவந்தார்கள்
வந்ததொருமன்னர் மகுடமுடிவேந்தரையும்
பந்திபந்தியாகப் பாவாணர்சிலருடன்
ஆனையொருகோடி அசுவமொருகோடி
சேனையொருகோடி தேருமிருகோடி
சங்கிதவீணை தவின்முரசுமல்லாரி
எங்குமுழங்க எக்காளம்பூரிகையும்
பேரிகைமத்தளமும் பேசுங்கிடுமுடியும்
வாரியொளியிட்டதுபோல் வானமுழக்கமுடன்
அத்திகவுரி திருச்சின்னத்தாரையுடன்



சத்திக்குமேகமென்ன தம்புருவுங்கின்னரியும்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்கள்மாதர்களும் ஜெயசோபனமுழங்க
மங்களமும்பாடி மறையோர்கள்தான்துதிக்க
சிங்காசனத்தில் திருமாலும்வந்திருக்க
மாப்பிள்ளைகோலமிட்டு மாளிகையுந்தான்புகுந்து
முப்பிமார்தாதியர்கள் மொய்குழற்குபட்டுடுத்தி
ஆடையுடுத்தி ஆபரணந்தான்பூட்டி
வாடைபரிமளங்கள் வாசனையாய்த்தான்புசித்து
காதுக்குமிஞ்சியிட்டுக் கடுக்கன்சவளியிட்டு
கோலச்சரப்பளியுங் கொத்துமுத்துத்தாழ்வடமும்
வேடிக்கையாக விசையனுடபேரனுக்கு
சோடித்தார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
நாராயணன்பேரன் ராசாதிராசனுக்கு
சிராகதால்வகையுந் தெரிந்துநல்லபூஷணங்கள்
அரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனுக்கு
பரிசித்தவேத்தனுக்குப் பலமணியுந்தான்பூட்டி
துளசிமகாராஜன் துய்யதொருபெண்கொடிக்கு
வினையல்தரித்து வர்ணமிகப்பட்டுடுத்தி
பொன்னாலலங்கரித்து பிறைபோலணைமெழுதி
தேனாரும்சின்னமுல்லை செண்பகப்பூவாசமிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணும் மதனும்ரதிபோல
சிப்பிட்டுமைமெழுதி சித்திரம்போல்பொட்டுமிட்டு
வைத்துமகிழ்ந்து வந்துசொன்னார்மாயரிடம்
மாபவருமிருவருமே வந்துமேபந்தலின்கீழ்
தாயானகுந்தியம்மாள் தேவிதனையழைத்து
உன்பேரனம்மா உத்தமிமெனிட
தன்பாலவீர சமர்த்தன்பரிசித்தவுக்கு
சுபசோபனமுடித்துத் தோகையரோதிபார்க்க
வேணுமிதுமென்று விளம்பினார்பஞ்சவர்கள்
பூணுமெனவேயிருந்துபொற்கொடியாள்தான்மகிழ்ந்து

புகழ்பெரியதாயார் பொற்கொடியாள் தான்மகிழ்ந்து
திகழும்நவரசமே திவ்வியமேமாதாவே
கற்புடையமாதாவே காந்தாரித்தாயாரே
மைப்புடையோன்வானபிமன் மைந்தன்பரிசித்துவுக்கு
ஆகவாதிருந்து அபிமனிடபுத்திரர்க்கு
செகலோகமெய்க்கச் செய்யுங்கலியாணம்
மகாதேவர்தன்னருளால் வருந்திமுடிப்பதற்கு
தாயாரே நீரும் தருமருடனிருந்து
செல்வக்கலியாணஞ் செய்விக்கவேண்டுமென்றார்
சொன்னவுடன்காந்தாரி தோகையரும்ஆமெனவே
அன்னம்போல்தான்நடந்து ஐவருடன்கூடி
நல்லதென்றுபந்தலின் நடுவேதான்வந்துநின்றாள்
செல்வக்கலியாணம் திருமால்தன்பேரனுக்கு
மணமுடிக்கவேணுமென்று மாயோனெழுந்தருளி
மணவறையிற்சென்று மாப்பிள்ளையைக்கைபிடித்து
கெண்டிநீர்வாங்கிக் கெம்பீரமாய்த்தான்வாங்கி
வண்டானமரர்கோன் மாயோன்மனமகிழ்ந்து
மனையைவலமாய்வந்து மகிழ்ந்துமனையேற்றி
இணையாகப்பெண்களை இப்படியேகூட்டிவந்து
நேரேமணமேற்றி திண்ணமாயுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகப்பந்தலின்கீழ்
பைங்கொடிக்கும்மாப்பிள்ளைக்கும் பாங்குடனேநற்சடங்
சாத்திரத்திலுள்ள சடங்குமுடித்தபின்பு [கும்
கோத்திரங்கள்சூழக் குரவைமுழக்கமிட்டு
ஆனைரதமேறி அலங்காரமாய்வரவே
சேனைதளத்துடனே தெருவீதிசுற்றிவந்து
மங்கிலியந்தான்தரிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாயானையின்மேல் ஏற்றினார்மாப்பிள்ளையை
கன்னியுந்தேரேறிக் கணவனுடன்தான்வரவே
இரவுபகலாகி இந்திரன்பட்டணம்போல்
அரவயர்த்தான்பட்டணந்தான் அடங்கலுஞ்செல்வே
வானமெரிய வானத்தின்மீன்போல [ஞன்



காணவந்துநிற்பாருங் கண்டுமகிழ்வாரும்
இந்திரனேயென்பாரும் இறைவனேயென்பாரும்
சந்திரனேயென்பாருஞ் சரணங்களென்பாரும்
மன்மதனேயென்பாரும் மார்க்கண்டனென்பாரும்
தருமர்குலத்துதித்தார் தார்வேந்தனென்பாரும்
பூவாணமெங்கும் பூமலர்போல்தானெறிய
பாவாணரிராகம் படித்துவரச்சங்கீதம்
பட்டணத்திலுள்ள பலபேருந்தான்பார்த்து
கட்டழகன்தான்வார கட்டழகைப்பாருமென்ன
வீதிசுற்றித்தான்வாரான் வீமனுடதன்பேரன்
கோட்டையும்பட்டணம் குதிரைதளத்துடனே
தாயாரே நீயுந் தருமருடனிருந்து
நாட்டையுஞ்சுற்றி நகரம்வலமாக
வந்துமணப்பந்தலின்கீழ்மாப்பிள்ளையும்பெண்ணுடனே
மாயனருளாலே வந்தார்மணவறையில்
ஆயனுடனேவர் அருகிருந்துவேதியரை
ஜாமத்துக்குள்ளாகத் தாலிகட்டவேண்டுமென்று
ஓமம்வளர்த்தவென்று உத்தாரம்பண்ணினார்காண்
கும்பமுடன்மாவிலையுங் குசப்புல்லும்நூலுடனே
இன்பமுடன்ஜோடித்து இருந்தார்கள்வேதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆர்ப்பரித்துமேற்புகைய
முக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாம்
வைகுந்தமூர்த்தியவர்தான் துணையெனவே
தேங்காயுடைத்துச் சித்திவிநாயகர்முன்

பரிட்சித்து மங்கிலியந்தரித்தது

பாங்குடனேவைத்துப் பரிட்சித்துவேந்தனுக்கு
கங்கணங்கட்டி கன்னிக்குக்காப்புமிட்டு
லக்கினமாய்ப்பெண்கழுத்தில் மங்கிலியந்தான்தரிக்க
சந்தனமும்பூசித் தானிருந்தாரம்மானை

தெய்வப்பிராமணருந் தேவர்களுஞ்சாட்சியதாய்
ஐவருமேதொட்டு அபிமருடபுத்திரற்கு
கன்னர் திருக்கரத்தால் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணவர்கள்வாழிசொல்ல விரைவாகத்தான்வாங்கி
தரித்தானேமங்கிலியம் தையனல்லாள் தன்கழுத்தில்
பரிதேருடைய பரிட்சித்துமன்னவனும்
வேதம்முழங்க வெண்கவரிதான்வீச
நாதம்முழங்கிவர நாகசுரமிகமுழங்க
ஜெயஞ்ஜெயமென்று சேஷைகளுந்தானிரைக்க
ஆயனுடன்மாமுனிவர் அட்சதையுந்தான்கொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்தினர்பந்தலிலே
திங்கள்முகவாணர் ஜெயசோபனமுழங்க
சோபனமுஞ்சொல்ல துடியிடைப்பெண்பூமடந்தை
தாமமுடன்கைசேர்த்துத் தங்களன்னைசுற்றமுடன்
பண்ணினர்கோபர்லர் பரிட்சித்துவேந்தனுக்கு
தண்ணினர்கண்ணர் தடவுமென்றுகைப்பிடித்து
கணவருடன்பொற்கொடியைக் கைசேர்த்துத்தான்கொ
மணவறையிற்போமென்று மாயோனுதவிசெய்ய [டுத்து
அந்தநாள்சென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
நந்தகோபாலரவ் நரசிங்கமாமூர்த்தி
மற்றுநாள்மூன்றுநாள் மஞ்சள்நீராடுமென்றார்
அத்தனர்சொற்படிக்கு மஞ்சள்நீர்தானுடி
மாப்பிள்ளையும்பெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானை
மூப்பிளுள்ளவங்கிஷமும் முன்னோரும்பின்னோரும்
அல்லியுந்தாமரைபோல் அன்னைசுற்றமுள்ளதெல்லாம்
துல்லியமாய்வாழ்ந்து சுகமாயிருந்தார்கள்
தர்மருந்தம்பியரும் தாரணியையாண்டிருந்தார்
நன்மைவளர நாற்றிசையுந்தான்முழங்க
துன்பமகலத் தேசந்தழைத்தோங்க
கர்மமகலக் காவேரிபொங்கிவர
கன்னல்விளைந்து கனகமணிதான்விளைந்து



கதலிபழுத்து கனிந்துடைந்துஆறோட
மதுரைப்பலாப்பழுத்து வழிந்தொழுகித்தானோட
கமுகுதென்னைசாய்ந்து கனிந்துபழமுதிர
தெங்குடனேமாதுளையும் சேர்ந்துகலந்துதிர்க்க
ஓங்குபுகழ்செல்வம் ஒருசாதுஞ்குன்றுமல்
நடுநீதிஞாயம் நானுந்தவறுமல்
வாசருடனேவர் மனுநீதிதப்பாமல்
தாரணியெல்லாமகிழ தாயனிபோர்போற்றிசெய்ய
காரணியாம்நீடூழி கயற்கண்ணிதன்னருளால்

விருத்தம்.

ஐவருமிருந்தபாரி லனேகநாள்சீமையாண்டு
செய்வதுதருமநேயம் தாகபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாம் கலியமாலறிய்பின்னும்
பொய்வரும்புதுமைக்கன்றி மேதினியாளுங்காலில்.
சித்தசன்அபமான நிரன்வானாபிமன்னுமைந்தன்
பத்தனர்தமதுபேரன் பரிட்சித்துமகீபாலனும்
எத்திசைபுகழும்வேதா னேந்திழைகர்ப்பமாகி
வெற்றிசைமாதம்பத்தும் விளங்கவேசுமந்தாள்மாது

பரிட்சித்துமந்தப் பாலன் பிற...

பார்த்தனிடபேரன் பரிட்சித்துவேந்தனுக்கு
நாற்றிசையுங்கொண்டாட நாயகியாள்கெர்ப்பமதாய்
மாதமுந்திங்களுமே வந்ததென்றுதானறிந்து
நீதமுடன்சடங்கு நேசமதுதப்பாமல்
இதமானபூமடந்தைக் கெல்லாருந்தாமிருந்து
மூதாதுநீர்வார்க்க மொய்குழலாள்பூமடந்தை
திங்களொருபத்தாகச் செனமேஜெயன்தான்பிறந்தான்
சங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
மாணிக்கமுத்து வைரமணிகோர்த்தாப்போல்

ஆணிக்கனகமதை யச்சுருக்கிவார்த்ததுபோல்
சீலமுள்ளபாலன் ஜெனமேஜயன்வரவே
காலத்துவாபரமுங் கழிந்துகலியுகமும்
வருகுதுகாணென்று வழங்குதாமிவ்வசனம்
பெருகுபுகழ்தன்மருக்குப் பேரன்பிறந்ததினால்
வானபிமன்தன்பேரன் வந்தானெனவேதான்
காளமுகில்மேனியனார் கண்ணனறியவென்று
எழுதிநல்லவாசகமும் ஏவினார்தூதரிடம்
பழுதிலாவோலைதனைப் பார்த்தாரம்மெய்ப்பெருமாள்
ராசிகளும்நல்ல நட்சேத்திரம்பார்க்க
வாசியெனும்வேதியனை மாயோன்வரவழைத்து
பாலன்பிறந்தான் பரீட்சித்துவேந்தனுக்கு
காலமென்னராசியென்ன கருத்தென்னபாருமென்று
மாயனிவைசொல்ல மறையோனுமேதுசொல்வான்
தூயவரேயிப்போது சொல்லுகிறேன்கேளுமினி
ஜெனமேஜயன்பிறந்த சிறும்பலாபலமும்
கனமானநாளுங் காலதுவாபரமும்
நாளுஞ்சரியாகி சுயம்வரம்புதப்பி
கேளும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுகனிவாயன் பச்சமால்தானறிந்து
ஆனதுவாபரமும் ஆச்சுதினிமேலேதான்
கானகமேசெல்லக் கருதியமேகவண்ணன்
வையகத்தையாளும் மாதருமர்தம்பியர்கள்
ஐவருக்குந்தூதாள் அனுப்பினார்காணம்மானை

கண்ணன் ஐவர்க்குங் கலியுகத் தன்மையுரைத்தது.

விருத்தம்.

காசினியளந்தமாயன் கலியுகம்வருமுன்னாகப்
பேசியேகொள்வோமென்று பிரபஞ்சவிபரமெல்லாம்



ராசியமாகத்தூதர் நாழிகைதன்னிற்சென்று
தேசிகரைவர்தன்னைச் சீக்கிரங்கொடுவாவென்றார்.

இதுவுமது,

உற்றதோர்வசனங்கேட்டு ஒருநொடியதனிற்றூதர்
அத்தினபுரத்திற்சென்று ஐவரைவணங்கிக்கண்டு
கத்தனாருளிச்செய்த கருத்தையுமுரைத்தபோது
சித்தமேமகிழ்ந்துதன்மர் சீக்கிரம்பயணமென்றார்.

இதுவுமது.

தம்பிமார்நால்வரோடு தன்மரும்வருகவென்று
உம்பர்கோனானதேவன் உலகினையளந்தமாயன்
நம்பியேஉண்மையாக ரகசியமருளிச்செய்து
இன்பமாய்வருகவென்று ரேதென்றுதெரியவேணும்.

இதுவுமது.

ஆயனார்தூதர்வந்தா னருளினதெல்லாஞ்சொன்னான்
மாயனாருண்மைகண்டு வணங்கிநாம்வார்த்தைசொல்லி
நேயமாய்வருவோம்தம்பி நிமிஷத்திலேவாருமென்னத்
தூயதோர்தருமராஜன் துரகதமீதிலானார்.

சந்த விருத்தம்.

வீமன்விஜயன்நகுலனுமாய்வேதந்தெளிந்தசகாதேவன்
தாமோதரனார்தமைக்காண தர்மருடனேசொல்வாராம்
ராமஅரிசீதாபூமா நாராயணனேரட்சியென்று
சோமவாரத்தினமதிலே துவாராபுரியிற்சென்றாரே.

கதை.

வாசமுள்ளபஞ்சவரை மாயன்வரச்சொல்லியொரு
நேயமுள்ளதூதனைப்போல் நிமிஷத்தில்வந்தெனவே
சொல்லியனுப்பதூதுவனுந்தானோடி
நல்லதென்றுதர்மரையும் நமஸ்கரித்துவாய்புதைத்து
கண்ணன்திருமால் காயாம்புமேனியனார்
அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்தேன்

விந்தைமலர்மேனியனே விரைவாய்வரவேணுமென்று
அந்தனுரைத்தமொழி ஆயதன்மர்தான்கேட்டு
போதமனமகிழ்ந்து பூரித்திருபுயமும்
தம்பியருந்தாமுந் தத்துபரிமீதேறி
கெம்பீரமாய்நடந்தார் கேசவனூர்தம்மூரில்
வந்தோமென்றைவர் மாயனுக்குத்தூதுவிட்டு
சந்தோஷமாகத் தானிருக்கும்வேளையிலே
கஞ்சமலர்மார்பன் கரியமால்தான்கேட்டு
பஞ்சவரைவாருமென்று பவளமணிமண்டபத்தில்
வந்திருந்தார்செங்கண் மாலாதிநாரணனும்
செந்திருவையொத்ததோகு சிங்காதனந்தனிலே
பத்தியுள்ளபஞ்சவரும் பச்சைமால்சொல்படிக்கு
சத்தியவாய்மை தவறாதமன்னவர்கள்
மண்டபத்தில்வந்து மாயன்றனைவணங்கி
தெண்டனிட்டுத்தர்மர் தெரிசித்தடிபணிந்து
தெய்புண்டமாலே தெடியோனேயெங்களை நீர்
வைகுண்டமூர்த்தி வரவழைத்தகாரியமேன்
என்றுதர்மர்கேட்க வெம்பெருமானேதுசொல்வார்
வென்றுதிசையெட்டும் விஜயனுடன்வீமனுமாய்
மண்டலத்தையாண்டவர் மறுத்திதப்பாமல்
விண்டலத்தோர்கொண்டாட மேதினியிற்றானிருந்து
நீதிதவறாமல் நெறிமுறைமைபொய்யாமல்
சாதிவரம்பு தவறிலைகள்சேராமல்
வாழ்ந்திருந்தவரைக்கும் மன்னவரேயிப்போது
ஆழ்ந்தகருத்தொன்றை யருளுவேன்கேளுமென்றார்
நல்லதென்றுபஞ்சவர்கள் நாரணரேசொல்லுமென்றார்
வல்லதொருமாயன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
முன்னுள்யுகமும் முடிவுஞ்சரியாச்சு
இன்னுள்கலியுகமும் இப்போவருகுதுகாண்
சொல்லுந்துவாபரமுந் தொகையுஞ்சரியாகி
வெல்லுங்கலியுகந்தான் விளங்கிவருகுதில்லை



இங்கிருப்பதழகல்லவென்று நினைத்ததினை
உங்களிடமிவ்வார்த்தை யுரைப்போமெனவழைத்தோம்
இனிமேல்நமக்கு இடந்தாகியாது
கனிதேனிருக்குமந்தக் கானகமேவீடாக
போகவென்றுதானினைத்துப் பூருவமுறைங்களுக்கு
ஆகமமுஞ்சொல்லி யருளினேனுங்கண்மேலே
வேறுநினைவு விபரீதமொன்றுமில்லை
கூறுகின்றேனிவ்வசனங் கொற்றவரேயுங்களுட
சேதியென்னவென்று திருமாலுந்தான்கேட்க
நாதியநாதிநமோ நாராயணாயநமோ
அண்டர்பெருமானேயெங்க ளாதியநாதிநமோ
புண்டரிகமார்பழகா புருஷோத்தமனாயநமோ
ஆதிவராக அரிகேசவாசரணம்
சோதியேவேதச்சுருதிக்கதிபதியே
அச்சுதானந்தகுல மத்தனைக்குநாயகமே
சச்சிதானந்தமென்னுஞ் சாக்ஷாத்பரனானோனே
கற்பூரவாசகனே காயாம்புமேனியனே
பொற்பூவும்வாசமும்போற் பூலோகமீதில்வந்து
எங்களைக்காக்க இவ்வடிவுதானெடுத்து
தங்களுயிர்போலத் தற்காத்திரந்தானும்
சிறுஞ்சிறப்புஞ் செலுத்திவெகுசெல்வமெல்லாம்
பெருஞ்செலுத்திப் பிரபலமாய்த்தானிருக்க
வைத்திதுவரையும் வாழ்ந்தோம்புவிமீதில்
மைத்துனர்போலெங்களுக்கு வசமாய்த்தானிருந்து
அடாவிதெஞ்சன் அநியாயதிஷ்டிரன்
பாபவியான வணங்காமுடிவேந்தன்
செய்தவினைகளெல்லாம் ஜெயமாகத்தீர்த்து
பொய்தவினைக்கொன்று எமலோகந்தான்சேர்த்து
நத்திர்புவியாள சாங்கமாய்க்காத்துவைத்தீர்
நந்தகோபாலரெங்கள் நாரசிங்கமூர்த்தியென்று
தர்மருந்தம்பியருந் தான்போற்றிவாழ்த்தினின்று

மின்மருவுத்தின்புயனே வேதநாராயணரே
நாலுயுகந்தான்தெரிந்து நடப்பிருப்பீர்காண்
மேலுமிருப்பீர் மேதினியுந்தானளப்பீர்
ஆருமறியாம லாலிலைமேற்பள்ளிகொள்வீர்
பாருலகையுண்டு படைப்பீரடியளப்பீர்
கோலமெல்லாம் நீரெடுத்த கோலமேயல்லாது
ஞாலமதிலுன்னையல்லால் நடப்பதுவும்வேறுமுண்டோ
ஏதோதிருக்கூத்து எத்தனையோவித்தாரம்
ஆதோதெரியாதுன் சூஸ்திரத்தையாரறிவார்
கண்ணுக்குட்பார்வையதாய்க் கலந்திருந்தகாரணரே
விண்ணுக்குள்மேகஜலம் மேதினிக்குண்டாக்கிவித்து
சுத்தனேவும்முடைய காவலாலிங்கிருந்தோம்
நித்தனேயும்மைவிட்டு நிமிஷமிருப்போமோ
என்னமொழிபேசுகிறீ ரெம்பெருமானென்றுசொல்லி
பன்னகத்தின்மீதிருந்து பச்சைமுகில்மேனியரே
அட்டதிக்கெல்லாமறிய ஐவர்தமையெப்போதும்
விட்டுப்பிரியாதமேகவண்ணர்தம்மைவிட்டு
மண்ணாசையாலே மறந்தார்களென்றுசொல்லி
விண்ணோருமற்றுமுள்ள மேதினியோர்நானகைக்க
விருப்பமுடன் நாங்கள் மேகவண்ணாஉம்மைவிட்டு
இருப்பதுவுமில்லையினி யெந்தவிதமானாலும்
வருவோம் திருமாலே வார்த்தைரண்டுபேசாமல்
திருவுந்திபூத்தோனுன் செந்தாமரைபதத்தை
கண்டுவணங்கிக் கைகட்டிவாய்புதைத்து
தொண்டுபண்ணிநாங்கள் தொழுதுவைகுந்தமதில்
காத்திருந்துவேலைசெய்யக் கற்பிக்கவேணுமையா
வீற்றிருப்போம்எந்நாளும்மேதினியேவேண்டாங்காண்
என்றுதர்மர்சொல்ல எம்பெருமான்மேகவண்ணர்
நன்றுநன்றுதர்மரே நீர் நால்வகையுஞ்சீருபண்ணி
வாசமுள்ளசுற்றம் மனைவிமக்கள்வாடாமல்
தேசமலையாமல் செங்கோல்தவறாமல்



மகுடமுடிவேந்தர் மனுநீதிதப்பாமல்
விகடமுறையாமல் வேறுகூறுகாமல்
சட்டமுடன்நாடோறும் சாதகமாய்வார்த்தைசொல்லி
திட்டப்படுத்திச் செப்பனிட்டுக்கொண்டதற்பின்
ஏகாந்தமாய்வருவி ரெல்லோருஞ்சம்மதிக்க
பாகாய்த்தமென்மொழியைப் பாதையமலேயிருத்தி
மார்க்கமாய்வாரும் வைகுந்தஞ்சேரவென்றால்
தீர்க்கமிதுபஞ்சவரே செப்பினேனிவ்வார்த்தை
கலிபிறக்குமுன்னாகக் காளகத்தில்நாம்போறோம்
கலிபிறந்தசேதி காதில்விழுந்தவுடன்
அரைநாழிகைநேரம் அவனிதனில்நில்லாமல்
விரைவாகநீர்வாரும் வேறொன்றும்பேசாமல்
இந்தமொழிமாயனெடுத்துரைக்கதர்மருமே
சிந்தைமகிழ்ந்து திருத்தாள்சரணமென்று
தம்பியருந்தானுஞ் சரணமெனப்பணிந்து
நம்பினோம்மாலே நமஸ்காரம்போய்வாரோம்

விருத்தம்.

எங்குமாய்நின்றமூர்த்தி யீரேழுலோகமெல்லாம்
அங்குமாயிங்குமாகி யாருயிர்க்கெல்லாந்தானும்
பொங்குமாரணமாய்நின்ற பொன்னலங்காராபோற்றி
தங்குவதில்லைநாங்கள் தாரணியிலும்மைவிட்டு.

ஆவதோர்காலமெல்லாம் அச்சுதன்செயலினாலே
போவதோர்காலம்வந்தாற் புத்தியுமிலக்காமோ
சாவதோர்காலம்வந்தாற் சத்திங்கேதரிக்கப்போமோ
நாவதுரெண்டுசொல்லோம் நாரணாபோற்றிபோற்றி.

கதை.

என்றுதன்மர்மாயவர்தாம் இருதாளைப்போற்றிசெய்து
இன்றுபோய்வாரோமென் றேகினார்காணம்மானை

அத்திபுரம்நோக்கி ஐவருந்தான்போனதற்பின்
வெத்திபுரிமாயன் விளங்குந்துவாரகையில்
வீற்றிருந்துசெங்கோல் விசாரிக்குமன்னாளில்
சாற்றுசாத்திரங்கள்சொல்லுந் தவமுனிவரந்தணர்கள்
காலங்கலியுகமுங் கற்பனையுவந்ததினால்
கோலங்குறுகிக் குணபேதகமாகி
பொய்யுங்கொலையும்புலையாட்டுமேகளவும்
செய்யும்பிரவி சினமுமுதாசினமும்
குண்டுணியுங்கோளுங் குடிகெடுவஞ்சனையும்
தெண்டம்பெரும்பிடியுந் தெண்டனையுங்கண்டிதமும்
வானம்வரம்பழிந்து வரம்புதப்பிப்போவதுவும்
தானந்தவங்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமுங்கீழ்குலமாய் கீழ்குலமுமேல்குலமாய்
கால்மேல்தலைகீழாய்க் கலியன்பிறக்குமென்று
நால்வேதஞ்சொல்ல நாரணனுந்தான்கேட்டு
பால்பொருந்துமவ்வாயர் படைத்தவெர்மந்திரிமார்
சாத்தகியாழ்வார் சகலரையுந்தானழைத்து
எத்தவிசாரமிதற் கேதுபாயஞ்சொல்லுமென்றார்
தேவர்செயலாலே திக்கறியோமடியார்
எவ்செய்யுந்தொண்டரேதென்றெடுத்துரைப்போம்
சொற்புத்திகேட்குந் தொண்டருக்குச நீர்தாமும்
கற்பித்தருளியசொல் சுத்தனேசித்தம்வர
கேட்குமடியார்க்குக் கிருபையின்னதென்றுரையும்
இக்கமுடநீராயங்கள் செய்கிறோமென்றுரைத்தார்
ஆதலால்மாலும் அவர்தன்னைபாதரித்து
நீதமங்கைநாமும் நிலைத்திலேயிருக்க
சோதனைகள்சொன்ன சொற்படியே நீங்களுந்தான்
வாதனைக்குள்ளாகாமல் வனத்திற்றவமிருக்க
நன்றாகத்தோணுதப்பா நம்முடையயோசனைக்கு
குன்றாமல் நீங்கள் குலவாத்திலேயிருந்து
எப்போதும்போலே இருப்பீர்களாக



அப்போதிருந்தவர்க ளாகமிகவுருகி
இருக்குந்தருவாயி லின்னமொருகற்பனைதான்
பெருக்கும்பெருமாள் பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலீன்ற பதினாயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடிமுன்னாள் இசைந்துவிளையாடுகையில்
துருவாசமாமுனிவர் சோதனைக்குப்பாலரிடம்
திருபாகமாக நீண்டசடைமுடியும்

பகவான் குழந்தை பதினாயிரமும் பரலோகமடைந்தது

சன்றாசிவேடமுமாய்த் தான்வரவுங்கண்டவர்கள்
மின்னார்போல்வேடம் மிகுந்ததொருகெற்பிணியாய்
கோலஞ்சமைந்து குழாங்களுடன்தான்கூடி
காலஞ்சிறுமையதாய்க் காரணங்களேமுடிய
வந்துதவசியிடம் வாலைகளுஞ்சேட்டையண்ணி
இந்தப்பெண்கெற்பிணியா மெனனபிள்ளை தான்பெறுவா
ளப்பரேசெல்லுமென்று அடிபணிந்துநின்றார்கள்
வெய்யதவமுனியும் விந்தையிதுவென்றுசொல்லி
செப்புகிறோம்தம்பியரே சேயிழையாள்தன்வயற்றில்
இப்புவியில்நல்ல இருப்புலக்கையாய்ப்பிறந்து
உங்கள்குலமெல்லாம் உருவழிந்துபோம்படியாய்
கங்குலிருள்போலக் கழுந்துலக்கைதான்பிறக்கும்
என்றுமுனிசொல்லி யேகினார்காணம்மானை
அன்றுமுனிசொற்படிக்கு அவன்வயிற்றிலேயிருந்து
வந்துவிழுந்ததுகாண் மண்மேலிருப்புலக்கை
அந்தவுலக்கைதன்னை ஆயருடபக்கலிலே
கொண்டுபோய்வைத்தார்கள் குழந்தையர்களெல்லோரு
கண்டுதிருமால் கருத்திலேகொண்டருளி [ம்
கொல்லர்தனையழைத்துக் கூரியவாளரத்தால்
சல்லிப்பொடியாய்த் தவிடுபொடியாக்குமென்றார்

அத்தப்படியே அரத்தாற்பொடியாக்கிச்
சித்தப்பொடியுஞ் சிறுமணல்போலாக்குமென்றார்
அறத்திட்டுராவ அறுபிடிக்குமெட்டாமல்
உரத்துச்சிறுகணுவா யுச்சிதமாய்மிச்சமென்றார்
கணுவையெடுத்துக் கார்கடலிற்போடுமென்றார்
அணுவாயிருந்ததெல்லாம் அலைபோரத்தாவுமென்றார்
ஆமென்றுறித்தார்கள் ஆயனார்சொற்படிக்கு
தாமுயன்றுகன்மந் தனைக்கெடவித்துவிட
விரைத்தபொடியெல்லாம் மெல்லியான்கோரையதாய்
உரத்துமுளைத்துவெகு உன்னிதமாய்த்தான்வளர்ந்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
ஒன்றுமிச்சமான அறுண்டகணுவதனை
மச்சம்விழுங்கி வலியில்லைத்துசிக்கியதே
அச்சமில்லாமலே உடைந்தமச்சங்கொண்டேகி
கீறிக்கறிசமைக்கக் கிடந்தெடுத்தாளிக்கணுவை
மீறிச்சரத்தொடுக்க வேணுமென்றுதன்குடிலில்
வைத்திருந்தான்வேடன் வகையாக அம்மானை
புத்திரர்கள்கூடிப் பூரித்துக்கொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்துக்கைபிடித்து
ஊற்றிலேதாமுளைத்த உயிர்க்கோரைதான்பிடுங்கி
அடித்துவிளையாடவென்று அனைவோருஞ்சம்மதித்து
துடித்துச்சிறுவர் துயரவேதான்பிடுங்கி
நெருங்கிப்பிடித்து நிமிஷமதற்குள்ளாக
வருங்காரிகைமறியார் மதலைகளும்மாண்டார்கள்
விளையாடவுந்திடத்தில் விதிவசங்கள்தான்சூழ்ந்து
கிளையோடிறந்து கிடக்கிறாரென்றுசொல்லி
கண்டபேரோடிக் கண்ணனிடந்தாமுரைத்தார்
அண்டர்பிரானும் அதுவலொழிந்ததென்று
செய்புஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
வைகுந்தம்போய்ச்சேர மனமுற்றாரம்மானை



விருத்தம்.

தம்பியாமகுடமன்னர் சகலரும் வாருமென்ன
எம்பிரானருளிச்செய்ய ஏவல்கேட்டேதோவென்று
நம்பிநாரணரேவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிரானடிகள்போற்றிச் சாத்தகியாழ்வார்நின்றார்.

இதுவுமது.

நின்றதோர்தம்பிமற்ற நிருபர்தம்முகத்தைநோ
ஒன்றுகேளிகத்திறைசை யொழித்துகானகத்திசென்று
பொன்றிடவேணுமித்தப் புவிதனையாண்டுநீங்கள்
தென்றனைக்காமன்போலச் சிறப்புடன்வாழுமென்றார்.

இதுவுமது

கரியமாலருளிச்செய்த காரணமேதோவென்று
தெரியவேவிபரங்கேட்கத் தேசிகரறிந்துநன்றாய்
அரியதோர்கலியன்வாரானதால் வனத்திற்போறோம்
பெரியதோர்புவனமென்றன்போதனைச்செழுத்திவாழும்.

இதுவுமது.

இப்படியிறையோன்சொல்ல ஏங்கியேமுகமும்வாடி
அப்படியாருக்கூட அடியருமவாறேமென்று
செப்பிடத்திருமால்தானுந் தெரியவேஉண்மையாக
வைப்பினிலிருங்களென்று வளம்புகநடத்தாரையா.

கண்ணன் காடுறைந்தது.

வனத்திற்றவமிருக்க மாயவனார்தாம்நினைந்து
ஜனத்திற்கிதமாகத் தன்மைகளும்புத்திகளும்
சொல்லியபரித்துத் துயரமெல்லாந்தான்தீர்த்து
மெல்லியதோர்கான்புகவே விரும்பிமனதிலெண்ணி
சாத்தகியாழ்வாருக்குத் தனிமகுடந்தான்தரித்து

நாற்றிசையும்போற்ற நம்மைப்போற்றுவிரென்று
நெடியமால்வாழ்த்தி நீரணிந்தார்தம்பியற்கு
முடிமகுடந்தான்தரித்த மூதுமையினவ்வயரே
மன்னரமைச்சர்களே மகுடமுடிவேந்தர்களே
விண்ணமில்லாதபடி மேதினியிலாழ்வார்க்கு
சொன்னபடிகேட்டுத் தொழுதுவணங்கி நித்தம்
அன்னசுற்றமெல்லாம் அச்சமின்றித்தானிருங்கள்
காலங்கலியுகமாய்க் காரணமுந்தோன்றுகையால்
ஞாலங்கள்தாமறியும் நம்முடையருபமெல்லாம்
கலியன்வருமுன்னே கானகம்போய்நாமிருந்து
பலியாதார்நட்பு பாரிற்பொறுமையின்று
பொறுமைபெரிதாகப் போறோமிருங்களென்றார்
சிறுமைவருமெங்களுக்குத் தேவரீர்போவதினல்
என்றுமயங்கி யெழுந்துமன்னர்தாமழுது
நின்றுதலைகவிழ்ந்து நெடியோனைப்பின்றொடர்ந்து
தொடர்ந்தழுததம்பியையுந் துரைமக்கள்தங்களையும்
அடர்ந்துவராதபடி அமர்த்தியே அச்சுதனார்
வானம்புவியளந்த மலர்ப்பாதத்தானோ
கானகமேநோக்கிக் கடுகநடந்தனராம்
நாடுவிட்டுத்தேசம்விட்டு நன்னகரிதானும்விட்டு
கூடுவிட்டதேன்குளவி கொட்டாதபானைபோல்
காடுகரைகண்டாரே கண்ணனார்கண்ணாலே
தேடுதவமீதறிவு சிவயோகநாட்டமதாய்
பேரறிவுகொண்டு புறப்பட்டார்மாயவரும்
ஓரறிவாய்நின்ற வுயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியப் புவனம்மிகத்தழைக்கக்
காற்றுவிசிறியதாய்க் காளாஞ்சிபூரியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வானரங்கூத்தாடிவர
குயில்களிசைபாடக்கொஞ்சுகிளிபேசிவர
புலிகளடிபணியப் பூதங்கள்வாய்புதைக்கக்
கெலிகள்வெருண்டோடக் கீர்த்தனங்கள்வண்டார்ப்ப



அரிகளடிபணிய அரியோனுந்தானடக்க
கரிகளடிபணியக் கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசனென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவுக்குவேண்டினதோர் வஸ்தெல்லாம்வந்துதொழ
கற்பூரவாசனென்று கற்பூரஞ்சூழ்ந்துவர
நற்பூமலர்களெல்லாம் நாற்றிசையும்பூத்துதிர்க்க
அரவுநடித்தோன்பாதம் அரவுபணிந்தாட
இரவுபகலாகும் எம்பெருமான்வந்தவிடம்
மேகநிறமேனியர்க்கு மேகப்பணியாக
ஆகங்குளிர்ந்து அநேகநெடுந்தூரம்
வந்துநெடுமால் வனமெல்லாமாராய்ந்து
கொந்துலவுஞ்சண்பகஞ்சேர்குளிர்ந்தவனச்சோலைகளு [ம்
சந்தனமுங்கற்பூரத் தருவும்பெருவனமும்
கந்தமலர்க்காவுங் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனூடாடாத ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியாய் மனமுமிகமகிழ்ந்து

## தாமோதரன் வனத்தில் தவமிருந்தது.

நாலுதிக்கும்பார்க்க நடுவேயொருவிருட்சம்
ஆலுதித்துநின்ற அடவுதனைப்பார்த்து
இந்தவிருட்சம்போ லெங்குநாங்கண்டதில்லை
அந்தவிருட்சம் அதுவேநமக்குநிலை
நிற்போந்தவசு நிறைவேறவேணுமென்று
நற்பாலுங்கலையா சனம்விரித்துமெற்சயனம்
கற்பூரவாசனுமே கால்மேலேகால்போட்டு
பொற்பூவும்வாசமும்போற் பொருந்திமனமொன்றாகி
அஷ்டாட்சரத்தி லமர்ந்திருந்தாரம்மானை
நட்டாற்றிலன்று நடுக்கடலிற்போட்டதொரு
இருப்புக்கனுப்பித்த எய்யப்புதானெடுத்து

செருப்புச்செடிதாங்கிச் சீராகத்தான்பூண்டு
சிலையெடுத்துவேடன் சித்திரவாள்கைபிடித்து
கலைகளைத்துவேடன் கானகமெல்லாந்திரிந்து
மான்மரைகள்தேடி வனந்தாடெசெல்லுகையில்
தேன்மருவும்வாயான் திருவேங்கடப்பெருமாள்
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணியைவிட்டுத் தவசிருந்தகோலமது
வேடனுடகண்ணிக்கு வெருண்டுவந்தமான்போலே
காடதனிற்பன்னனுட காலதனைக்கண்டானே

அச்சுதன்மேல் வேடன் அம்புதொடுத்தது.

கண்டான்பதறிக் கடுகிச்சிலையெடுத்தான்
விண்டான்சரத்தை வேடன்கலைமானெனவே
மார்புரளவாங்கி வலைவேடனெய்த அம்பு
சீர்மருவுமாயனுட சீர்பாதந்தன்னில்வந்து
பட்டுருவியம்பு பரிந்துமருபுரமும்
தட்டுருவியம்புதைக்கத் தண்டாமரைப்பதத்தில்
மண்ணையுண்டமாயன் மயக்கம்வந்துபூமியிலே
வெண்ணையுண்டமேனி விதனம்பொறுக்காமல்
மூச்சற்றுமேலும் முகமும்வெளுப்பேறி
பேச்சற்றுகாலசந்து பிரக்கினையுந்தோற்றாமல்
தானேஅசந்து தனியேகிடக்கையிலே
மானெய்தோமென்று மகிழ்ந்துசிலைவேடன்
பதைபாதமர்ந்ததென்று பாங்குடனேஓடிவந்து
வதைப்பட்டமர்ந்துவிட்ட மானென்றுபார்ப்பளவில்
குதையம்புபட்டுருவிக் கோபாலர்தான்கிடந்தார்
இதைவந்துபார்த்து யேமாந்துவில்வேடன்
கதையோகதைப்பயனோ காலத்தின்வல்வினையோ
விதியோவிதிமயக்கோ வேதாவின்கற்பனையோ



சதியோசதிமயக்கோ சருவேசன்கற்பனையோ
மதியோமதிமயக்கோ மகாதேவர்கற்பனையோ
ஏதுவிதிப்பயனோ எம்பெருமான்தன்மீதில்
இதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
மானென்றெனைமயக்கி வந்தவிதிவசமோ
தானென்றுலகளந்த தம்பிரான்மானெனவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்
மெய்மானென்றெண்ணி விரும்பியெய்துவிட்டேன்
என்செய்வேனென்செயலோ யேதென்றறியேனே
முன்செய்ததீவினையோ முகுந்தர்மேலம்புபட
வஞ்சனைகளல்ல மனதறியவந்ததல்ல
கஞ்சனைமுன்வென்ற கார்வண்ணனென்றறியேன்
பாவியுமானேனே பச்சைமால்தானறிக
தீவினையுஞ்செய்தேனே ஜென்மமென்னஜென்மமிது
என்றுசிலைவேடன் யேங்கிவிழுந்தலறி
குன்றுதகர்ந்து குவலயத்தில்வீழ்ந்தாற்போல்
அலறிஅடபமிட்டுஅய்யோசிவனேயென்று
தலைமேலேகையைவைத்து தானழுதான்வில்வேடன்
வில்வேடன்றானழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
வில்வேடாநீயும் மலையாதேயென்றுசொல்லி
அழுதவனைத்தேற்றி அரவணைந்துவாவெனவே
தொழுதவனும்வந்து தாரநின்றுதெண்டனிட்டு
எந்தன்பிரானே யெளியோர்க்கெளியோனே
உந்தன்மலர்ப்பதத்தி லூடுருவியம்புதைக்க
எய்தேனேபாவி யெழுநரகில்வீழ்வேனே
மைதவளும்மேனியிலே வடுவரவுங்காரியமேன்
வம்புபடாமேனியிலே வடுவரவேயெய்ததொரு
அம்புதொட்டகையை அறுத்துமுன்னேவைப்பேனென்
அன்றுலகையெல்லாம் அளந்தபதமலவே
சென்றுதிசைநான்முகனார் தேடும்பதமலவே
அகலிகைக்குமோட்சம் அளித்தபதமலவே
புகலிகங்கை பிறந்தபதமலவோ

பேசுமுருவசியாள் பிறந்தபதமலவோ
பூசுரருந்தேவர்களும் போற்றும்பதமலவோ
வேடனிவைசொல்லி வெருண்டழுகமாயவனும்
தோஷமில்லையுன்பேரிற் சும்மா அழுகாதே
விட்டஅம்புபட்டதென்று மெய்சோர்ந்தழுகாதே
கிட்டவாவென்றழைத்துக் கிருபையுடனேதுசொல்வார்
முன்புதிரேதாயுகத்தில் மூர்க்கமுள்ளவாலியென
அன்பாயவதரித்து யார்வந்தெதிர்த்தாலும்
வரமினையாற்பாதி வல்லமையுந்தான்வாங்கி
கரமினையாலவரைக் கண்டித்துயிர்மாய்ப்பாய்
தம்பிசுக்கிரீபனுட தாரந்தனைக்கவர்ந்து
வம்புசெய்தடித்து மலைமேற்றுரத்திவிட
வானரவீரனுடன் வந்திருந்தான் அந்நாளில்
தானவர்கள்வெல்லுகைக்குத் தம்பிமார்மூவருடன்
ராமாவதாரமென தானிலத்தில்வந்துதித்தோம்
காமாந்தகாரருடன் கட்டுடித்து நீயிருந்தாய்
உன்தம்பிசுக்கிரீப னுக்குதவியாயிருந்து
என்னம்பினுல்மறைவா யிருந்துன்னைக்கொன்றதனுல்
அந்நாட்பழியை அவனிதனில்நீவாங்க
இந்நாட்பிறந்து எய்துவிட்டாய்வில்வேடா
நமக்குமுடிவிதுகாண் நல்வேடாசொல்லுகிறேன்
சுமக்குங்கலியுகத்தாற் றுன்பம்வருமெனவே
வைகுந்தஞ்சேரவென்று வந்தோம்வனத்திலேதான்
கைகொண்டெறிந்தகணை காலிலேதைத்ததுகாண்
முடிவுசரியாக முடிந்தவிதிப்படியால்
மடியவுயிர்பிரிந்து வைகுந்தம்போய்ச்சேர
போறதறியாமற் புலம்புவரோ நீவேடா
வாரவிதிவந்தால் மாட்டோமென்றால்விடுமோ
வந்தவிதிவந்ததென்று வெந்தவிதியானதென்
இந்தமயக்கமதை இப்போதேவிட்டுவிடு
உன்சேதியைப்பார்க்கி லுன்மீதிற்குற்றமில்லை
என்சேதிசொல்லுகிறே னிதமாயுதவிசெய்வாய்



நல்லதென்றுவேடன் நாரணரைத்தான்பணிந்து
சொல்லுமென்றவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடன்நிறைந்த வல்வேடன்றன்கேட்க
நாட்டமுடன்றானும் நம்பெருமானேதுசொல்வார்
வாராய்நீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாராரும்அத்திபுரம் தன்மருந்தம்பியரும்
சீராகவாழும் சிறந்தநகர்தனிலே
நேராகநீபோய் நிமிஷத்திலுண்மையதாய்
தன்மர்நகுலன் சகாதேவன்கேளாமல்
வன்மம்வெளியிலேதான் வாராமல்நீதானும்
வீமன்விஜயனுடன் விரைவிற்போய்உங்கள்பரந்
தாமன்நிமிஷம்வரத் தான்சொன்னரென்று நீ (ம்
வேறொன்றுஞ்சொல்லாமல் விபத்துவந்ததென்றுமட்டு
கூறென்றுசொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னிடத்தில்
அவ்வசனங்கேட்டு அசந்துசிலைவேடன்
இவ்வசனம்சொல்லு மிராகவனைத்தெண்டனிட்டு
வழிகூடித்தானடந்தான் மனநிறைந்துவில்வேடன்
பழிபாவம்வந்ததென்று பயந்துதிசைநோக்கி
காடுகடந்து கருமலைகள்தான்கடந்து
நாடுநகர்கடந்து நன்னகரினூடேபோய்
நாலுதெருவும் நடுத்தெருவுந்தான்கடந்து
கோலஅரண்மனையுங் கொற்றவர்கள்தாமிருக்கும்
கோட்டைதனிற்சென்று குருகுலத்தோர்தங்களுட
வீட்டையுங்கண்டு வீமன்விசையனிடம்
அச்சுதனர்சொன்ன அந்தரியமுள்ளதெல்லாம்
உச்சிதமாய்வேட னுரைத்தான்மனம்பதறி
அந்தமொழிதர்மரறியாமலென்றுரைத்தான்
இந்தமொழிகேட்டு யென்செய்வோமென்றிவர்கள்
வேடனைத்தான்போவெனவே வீமன்விசயனுந்தான்
தாடலருந்தன்மரிரு தாளிலடிபணிந்து
விதியோவிதிமயக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாயெங்களுக்கு ஆளனுப்பிவைத்ததை

ஏதோதெரியாது இப்புதுமைதான்கேட்டோம்
சூதோ அவருடைய சூட்சமோ கற்பனையோ
தம்பிநகுலன் சகாதேவன்றன்னோடும்
உம்பரேஉங்களிடம் உரையாமலிச்சேதி
அண்ணருக்குமென்றனக்கும் அனுப்பிவித்தகற்பனைதா
னென்னமென்னசாமி யினிமேற்கருமமென்ன [ன்
என்றுவிஜய னிவ்வசனந்தான்கேட்க
நின்றுமயங்கி நினைவழிந்துதருமருமே
நம்பிரானவர் சகாயந்தானிப்போது
எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுசொல்வேனன்
காரணமாய்க்காணுதுகாண் கார்வண்ணன்றன்செய்தி
நாரணனார்சொற்கேட்டு நடந்தோமிதுவரையும்
என்னபிழைவந்தாலும் பேதுவகையானாலும்
சொன்னமொழிதப்புவமோ சோதனைகாண் தம்பியரே
எப்படியோசித்தும் மெய்ப்பெருமான்றன்னினைவு
அப்படியேயல்லாது அன்றுமுதலின்றனவும்
சொற்படியேநாமும் தொண்டுபண்ணவேகடவோம்
விற்பிடித்தசேவகரே வீமரேயுங்களைத்தான்
வலுவுடையாராகையினால் வரச்சொன்னாருங்களையும்
மெலியுடையாராயிருக்க வீரியத்தைவாங்கிவைக்க
வரச்சொன்னார் நீங்கள் வழிவசமாய்க்கேட்பதற்கு
தரச்சொல்வார்கையைத் தானகல நின்று நீங்கள்
அகலநின்றுகாரியங்க ளாசாரமாய்வணங்கி
சகலகலையுமீந்த தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
சேய்போலிருவருமே தெண்டனிட்டுத்தருமரையும்
நடந்தார்வனத்தனிலே நாரணனைத்தான்தேடி
தொடர்ந்தார்வனங்களெல்லாஞ் சோதித்துத்தானோடி
சந்தனச்சோலையிலே தனித்தாலின்கீழேதான்
அந்தக்கன்னனங்கே அலறும்பரிதாபம்
தோற்றுதுகாணென்றவர்கள் துவளநடந்தோடி
மாற்றலரைவெற்றிகொள்ளும் மன்னரிருபேரும்



அந்தவனந்தனிலே அருச்சுனனும்வீமனுமாய்
இந்தவனமாமென் றிசைந்தோடிவந்துநின்று
அண்ணல்திருமாலென் றறிந்துமனமிடைந்து
கண்ணனுந்தான்மண்மீதிற் காயத்துடன்கிடக்க
கண்டாவிழுந்தார் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

விருத்தம்.

அய்யகோராமராமா உனைப்பிரிந்துகானில்
மெய்யதுபழுதிதாவ மேனியுந்திறமும்வேறாய்
நையவும்வசமோவுன்றன் நாமமுமறந்துநாங்கள்
உய்யவேயினிமேற்பாரி லுன்னையும்வேறுமோதான்.
காயமும்வருமோஎங்கள் கண்ணனார்கண்ணிற்காண
ஞாயமுமிதுவோஅய்யா நாங்களுஞ்சகிக்கலாமோ
மாயமாயெய்தாரோ மாயனென்றறிகிலாரோ
ஆயனைஎவர்சொல்லுமவனியிற்கொல்வோமென்றார்.

பார்ப்பார்விழுவா ரெழுந்திருப்பார் பழிபோகுலை யோமுடிந்ததென்பார், கேட்பார்திருமால்முகம்பார்ப்பா ர்கெதியோமதியோவிதியென்பார், எற்பாரிதுதான் செய் தபிழையெய்தார்பவொ ரித்துயரங், காப்பார்தேடிபோன் றனைநாளுங் கபிலைக்கடவுளவர்தாமே.

கனத.

என்றுபுலம்பி யிருவோருந்தானழுது
குன்றுமலைபோலக் குதித்துவிழுந்தழுது
அழுதுபிரண்டுருண்டு அய்யோஅபயமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பரதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிரச்
சாமியுந்தன்மீதிற் சரத்தொடுக்கவல்லவரார்
உலகளந்தபாதமதி லாருருவியம்புதைக்க
கலகஞ்செய்தாராரோ கண்டால்விடுவோமோ
எந்தவிதஞ்சாமி யிடையூறுவந்ததென்று
அந்தமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க

சுந்தரஞ்சேர்மாயன் சொல்லுவாரோர்வசனம்
வந்தவிதிவந்ததென்றால் மாட்டோமென்றால்விடுமோ
கேளீரருச்சுனரே கிலேசமதைவிட்டுவிடும்
மீளீர்வலுவீமா வியாகுலங்கள்வேண்டாங்காண்
காலங்கள்தான்முடித்த கற்பனையுந்தோணாமல்
ஞாலங்கடந்து நற்றவசுதானிருக்க
சீலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்லி
ஏலவந்துகானகத்தி லிருப்போந்தவமெனவே
நாமொன்றுதான்நினைக்க நடுவிருந்தோன்றன்செயலால்
தாமொன்றுதோற்றாமல் சகாயமாய்க்கூடநின்று
இந்தவுடலுயிரும் எப்போதுந்தான்றனதாய்
சொந்தமெனப்பூவுலகிற் சுமந்ததுந்தகாலமெல்லாம்
மெய்யென்றிருந்தோம்நாம் மேதினியைநம்மதென்று
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்தான்கேளீர்
மோசம்வருவதற்கு முன்னறியநம்செயலோ
பாசம்பிடித்திழுத்தால் பக்கவிலக்குமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுங்காண்
தேசம்புலையாட்டாய் நினைவுதடுமாறிவிடும்
வல்லமைகளாலே வாழ்வதுண்டோபூவுலகில்
நல்லவர்கள்நீங்கள் நமக்குதவியாகவந்தீர்
பயிருமொருவேலியுமாய்ப் பஞ்சவரும்நாமுமுதல்
உயிருமுடலதுபோ லுறவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்த இடையூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் சிலையெடுத்துமான்றுரத்தி
வந்திடத்தேயோர்மான் வழிதப்பியோடியதால்
இந்திடத்திலேபதுங்கி இருக்குமந்தமானெனவே.
என்னுருவம்மான்போ லிருந்தபடியாலே
மின்னுருவவேடன் விற்பிடித்துவெய்துவிட்டான்
வந்துவிழுந்தழுதான் மண்ணும்விண்ணுந்தானதிர
வந்தழுதவேடனைத்தான் வாவென்றருகழைத்து
அங்கேயனுப்பிவைத்தே னந்தரங்கவுண்மைசொல்லி
இங்கேநீர்வந்ததினா லென்னயரந்தீர்ந்ததிப்போ



அம்புபட்டவேதனைக ளாற்றமுடியுதில்லை
வம்புபட்டதேகம் வடுப்பட்டிருக்காது
ஆணிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணியெனைப்பார்த்து பிழைப்பிக்கவல்லீரோ
காயத்தைநீர்பாரும் கனைநரம்புதான்பாரும்
நேயத்துடனே நீங்களுமேதானிருந்து
சோதித்துப்பாருமென்று சொன்னார்காண்மாயவரும்
ஆதித்தன்போலே அருச்சுனனும்வீமனுமாய்
உள்ளமுருகி யொருடம்புபுண்ணாகி
கள்ளமில்லாத்தன்மர்மொழி கடந்துரைக்கமாட்டாமல்
கல்லாய்மரமாய்க் கருத்தசைந்துநின்றார்கள்
எல்லாம்விதிவசமோ யிதுநாளுடனுயிர்போல்
நடந்தோம்நகரிமெய்க்க நாமிருந்தகாலமெல்லாம்
இடந்தோம்தனியே கிட்டவரவேபயந்தீர்
போதாதோவிவ்வளவு புதுமையதிசயந்தான்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமே
இனியார்சதம்நமக்கு இளைப்புற்றவேளையிலே
தனியேயினிமாளச் சங்கரனார்கற்பனையா
தகையாயிருக்குதுகாண் தம்பியரேயிங்கெனக்கோர்
வகையாயிருக்குதுகாண் வந்திருவர்கைதாரும்
கைதாருமிப்போது களைப்பாய்வருகுதுகாண்
மெய்சோர்ந்துஇங்கேன் விழுமுன்னேகைதாரும்
இப்படியேசொல்ல யிடழிந்துமெய்சோர்ந்து
அப்படியேநின்றா ரர்ச்சுனரும்வீமனுமாய்
போகுதடாசீவன் புண்ணாய்க்குலையுதடா
ஆகுதடாசீவன் அருச்சுனரேவீமரேகேள்
அப்புவைத்தான்மண்வந் தடுத்துநெருக்குதடா
அப்புவுந்தேயுவைப்போய் அங்கேநெருக்குதடா
தேயுவும்வாயுவைப்போய் சிக்கெனவேகட்டுதடா
வாயுவுமங்கே வழிபார்த்துநிற்குதடா
காயம்விழுமுன்னே கையாயுதத்தாலே
நேயமாய்த்தூக்கி நிலத்திலவைக்கமாட்டீரோ

ஆபத்துகாக்கிறது ஐவரெனச்சொல்வார்கள்
நாசப்படுகையிலே தான்பார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொருக்காது நிற்சிவனுகுதடா
சமயமடாவீமரே தம்பிஅருச்சனரே
என்றுமுன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்
நின்றஅருச்சுனனும் நெடியதொருவீமனுமாய்
தங்கள்தெண்டாயுதமுந் தனுவையுமேநீட்டலுற்றார்
அங்கேஅதுவழியாய் அவர்பிலத்தைவாங்கலுற்றார்
தண்டுத்தனுவுந் தாமெடுக்கமாட்டாமல்
விண்டுமனமிண்டத்து விள்ளாமதுவுள்ளசத்து
ஒருத்துபிலங்குறைத்தே உள்ளசத்துமெய்சோர்ந்து
மறுத்துமொன்றுபோசாமல் வலுவிழந்துநிற்பளவில்
கறுத்ததிருமேனி காசாம்புமேகவண்ணர்
வெறுத்தப்புவியை மெய்மறந்துதானயர்ந்து
உடலும்வெருவி யுயிருமிகப்பதறி
சடலந்தனைபோட்டுத் தப்பிறொப்புடனே

விருத்தம்.

நீலம்பரத்துவிழிசொருகி நெருப்புத்தணிந்து நீர்மேலா
ய்க், கோலவுடலுமிகவேர்த்துக்கோனையுடனேசிலேட்டு
மம், ஆலம்பெரியமார்புருகி யாவியொடுங்கியதிவழிந்து
சீலம்பெரியவைகுந்தம்சேர்ந்தாரரியும்ஜெகத்தைவிட்டே

இதுவுமது.

விட்டுபிரிந்ததிருமாலை வீமன்விசயன்தானெடுத்து[து
தொட்டுப்புவியிலுள்ளடக்கித்துயரத்துடனேவிழுந்தழு
கட்டுப்பிரிந்துதெனவேங்கிக்கானந்தனையேவிட்டகன்று
பட்டுப்பதறிஆயுதத்தைப் பதையாதெடுத்தார்தலைமீதில்.

இதுவுமது.

ஆயுதந்தலைமேல்வைத்து அருச்சுனன்வீமன்றானும்
மாயனையிழந்தோமென்று மனமெலாமிடைந்துபுண்ணு
ய்த், தாயதோர்தன்மர்கேட்கச் சொல்லுவோம்வாருமெ
ன்ன, நேயமாய்க்கானம்விட்டுநிமிஷத்திலருவதானார்.



கதை.

சீரானவைகுந்தந் திருமாலுஞ்சேர்ந்தபின்பு
பேரானபார்த்தன் பெரியவலுவீமனுமாய்
மண்மேல்விழுந்தழுது மாயவனைக்காணுமல்
விண்மேல்முகம்நோக்கி மெய்சோர்ந்துநின்றழுதார்
கச்சதோபூமி கசந்தோமோநாங்களுந்தான்
மைச்சுனரேயென்று வயத்திலறைந்தழுதார்
அச்சுதரேயென்று அடிமேல்விழுந்தழுதார்
மெய்ச்சுடரேருப வெளியேவெளிமயக்கே
நச்சரவிற்பள்ளிகொள்ளும் நாரணரேயிப்போது
அச்சமிலாயெங்களுக்கு அலைச்சல்வைத்துப்போனீரோ
எங்கேயினிக்காண்போம் இப்பிறப்பிலும்மையென்றார்
அங்கேவருவோம் ஐவருந்தாமுமிடத்தில்
இப்படியாய்நின்று இவர்கள்புலம்புகையில்
தப்படியுஞ்சங்கீதம் சங்குஜெயகண்டியுடன்
தம்புருவம்வீணை சாமண்டலமுழங்க
கிம்புருவங்கின்னரவங் கெருடதுந்துமமாய்
முழங்குதுகாண்சத்தம் முனிவர்மிகக்கொண்டாட
வழங்குதுகாண்கீதம் வைகுந்தலோகமெல்லாம்
காராருமேனியனே கமலமுகத்தோனே
சீராருங்கோகனகை திருவுறையும்மார்போனே
வேதாவையீன்றவனே விண்ணவர்கள்கோமானே
சீதைக்குநாயகனே தெய்வசிகாமணியே
என்றுமுனிவர் இருடிதபோதனரும்
நின்றுதொழுது நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆரணியத்தன்னி லருந்தவத்தோர்சொல்லுமொழி
பூரணமாய்நெஞ்சிற் பொருந்தஇருவருக்கும்
காதாரக்கேட்டு கலக்கமகத்தெளிந்து
பாதாரந்தன்னிற் பணிமலர்கள்தான்தூவி
சேர்ந்தார்வைகுந்தஞ் செங்கண்மாலென்றறிந்து
பூந்தேனொழுகும் புட்பவனச்சோலையிலே
நல்லடக்கம்பண்ணி நமஸ்கரித்துமுக்காலும்
வல்லதொருமாயவற்கு வாகாகவாள்விஜயன்

செய்யுந்தாட்கு செய்கருமந்தான்முடித்து
கையுங்குவித்துக் கடுகிநடப்பதற்கு
வீமன்தண்டாயுதமும் வில்விஜயன்றனெடுக்க
தாமும்பலமில்லாமல் தலையிலேதான்சுமந்து
வந்தவழிநோக்கி வருகின்றவேளையிலே
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
ஆடுகளைத்தான்மேய்த்து ஆயர்களுந்தான்போனார்
வேடுவர்கள்சென்று விரைந்தேதடுத்தாராடுகளை
அப்போதிடையன் அருச்சுனரேவீமரேநீர்
இப்போதிவ்விடம் இவர்களும்போகையிலே
ஆடுகொள்ளைபோகுதுகாண் அபயமபயமென்று
நீடுபுகழ்மாயன் நெடுங்கானகமுறைய
கொள்ளைகொண்டார்வேடர் கூகூவெனவிடையன்
துள்ளிவந்துசொன்னான் துடிவீமன்பார்த்தனிடம்
இடையனிவைசொல்ல இவர்கள்மனமிடைந்து
தடைசெய்தவேடரொடு தான்பொருதவேணுமென்று
வீரத்துடன்வீமன் விஜயனுமேதிரும்பி
கோரத்துடன்வந்து கொல்லவென்றுவேடர்தனை
தெண்டெடுக்கவீமன் செயல்சற்றுமில்லாமல்
விண்டொலிக்கும்வில்லெடுக்க விஜயன்பலமில்லாமல்
வீமன்விஜயன் வேடருடன்போர்பொருத
நேமமுடன்ஆயுதங்க ளில்லாமல்நின்றதுகாண்
கண்டந்தவேடர் கடுகிக்குதித்தார்கள்
சண்டைதொடுக்கத் தாவிக்குதித்தார்கள்
வேடரதிர்ந்து வெகுண்டுசினந்தெழுந்து
சாடவேவீமனையுந் தம்பிவிஜயனையும்
போடவெகுண்டு புறங்காட்டிப்போகவுற்றார்
ஊடழித்துவேடர் ஒருமிக்கஆடுகளை
ஈடழித்துச்சேர்த்து இடையனையுந்தான்பிடித்து
கூடத்திரட்டிக் கோபாலர்தங்களுடன்
பாரித்துவாரபுரி பட்டணமுங்கொள்ளைகொள்ள
காரிற்புனல்வேடர் கருதியேவார்த்தைசொல்லி



ஊரிற்புகுவதற்கு உச்சாயமாய்ப்பேசி
சிறிதிறந்த சிறைபிடிக்கவேணுமென்று
போறார்கள்வேடரென்று போர்விஜயன்வீமனுமே
கூறுமவொன்றுங் குராவி மனம்புண்ணாகி
நீராகிவந்து நினைவுதடுமாறி
வீறானவரென்று மேதினியில்நாமிருந்தோம்
என்னமெல்லாம்போச்சென் றிடைந்துமனமுருகி
கண்ணனுடபட்டணமுங் காவலழிவதுவும்
என்னவென்றுசொல்வோம் எம்பெருமான்கற்பனைக்கு
வின்னல்வராதென் றிருந்தோம்வின்னமேவந்ததென்று
ஆதிபிரானை அச்சுதற்குமேற்காது [ல்
பாதிப்பிறையணிந்த பரமருக்குமேற்காது
நமக்குவலுக்குறைந்து நாணிநின்றோமாகில்
சுமக்கும்பழிபாவந் தோஷமிகவுண்டாகும்
அண்ணருக்குஇச்செய்தி அறியவுரைப்பமென்று
தன்னவரும்வீமன் தம்பியருச்சுனனும்
ஏங்கிமுகம்வாடி யிடைத்துவழிகூடி
தாங்கிநடந்திருவர் தன்மர்தனைநோக்கி
அத்திபுரஞ்சென்று அண்ணனையுங்கைதொழுது
சத்தியுள்ளவீமன் தனஞ்செயனுமேதுசொல்வார்
குருகுலத்தைநானுங் கோபாலர்காத்தருளி
வருங்கருமஞ்சொல்லி வாரமாய்த்தானிருந்து
ஆதிநாராயணற்கு ஆபத்துவந்ததென்று
சேதிசொல்லக்கேட்டு சேதிகளையறிய
போமென்றருள்செய்த புண்ணியரேநீர்கேளீர்
காவெங்குந்தேடிக் கானகமெல்லாந்திரிந்து
வனமும்வனத்திரளும் மலைகள்பலதேடி
புனமும்புகுந்துழந்தி புந்தோலைக்காணமல்
தேடித்திரிந்துமொரு செண்பகப்பூங்காவனத்தே
நாடித்திருமாலை நாங்கள்கண்டோமன்றுமே
அம்புபட்டேவாக மனத்தொருபாதமதில்
வம்புபட்டமேனி வாடிமெலிந்துநொந்து

மெய்க்கூடுதான்வெளுறி மேனியெல்லாம்புண்ணாகி
பொய்க்கூடுபோலாய்ப் பூமியின்மேல்தான்கிடந்தார்
கண்டவுடனே கதறிவிழுந்தழுதோம்
புண்டரீகமேனியனார் போதமாய்த்தானமர்ந்து
என்னையெடுத்து இருத்துமென்றார்கோபாலர்
பின்னைநினைவுகொண்டு பேசாமல்நாங்கள்நின்றோம்
நின்றவரைப்பார்த்து நெடியோனும்பூருவத்தில்
அன்றுசெய்தபேச்சும் நடந்துநின்றசொல்முறையும்
உடம்புருகச்சொல்லுகின்ற உத்தரங்கள்தான்கேட்டு
குடங்கவிழ்ந்து நீர்பிரிந்த கும்பமதுபோலாகி
தேவரீர்சொன்னதொரு செய்திதனைநீருமல்
நாவுலர்ந்துநின்றோமே நாரணனைநம்பாமல்
கருத்தறிந்துமாயன் கதரவுஞ்சொன்னார்காண்
உருத்தறிந்துநாங்கள் ஒன்றுமறையாமல்
நின்றோம்நெடியோய் நினைவுதன்னைநம்பாமல்
குன்றுமனது குன்றிமனம்புண்ணானோம்
அந்தநினைவறிந்து ஆயுதத்தைநீட்டுமென்றார்
எந்தவிதமாமோவென் றெண்ணியெங்களாயுதத்தை
நீட்டியிருவோரும் நின்றோமதுவழியாய்
வாட்டிவலுவை வாங்கிவிட்டார்மாயவனார்
பலங்குறைந்துநாங்கள் பேசாதிருக்கையிலே
கலங்கிவிழிபிரட்டிக் கண்ணருமேமெய்சோர்ந்து
பாசங்கள்பங்கிப் பதறியுடல்வேர்த்தும்
வாசங்கள்விட்டு வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
செங்கண்மாலதானுஞ் சீவன்விட்டுப்போகையிலே
சண்டமாருத தலைகுலைந்துபோகாமல்
காருங்கள் நீங்களென்று கற்பித்துப்போனார்காண்
வாருங்கள்ஐவரும்பின் வைகுந்தஞ்சேருதற்கு
என்றுசொல்லிமாயன் ஏகினார்காணம்மானை
சென்றுமலர்ப்பாதம் நிண்டியெடுத்தவனத்தில்
அடக்கிச்சடங்கதுக்கு அலங்காரமாகவேதான்
முடிக்குஞ்சடங்கதுதான் முடித்துவந்தோமண்ணாவே



வந்தோம்வழிகூடி வாடிமனதுநொந்து
அந்தவழியிலொரு ஆயனுத்தானுவிட்டு
மேய்த்துவருகையிலே வேடர்புகுந்தாடெடுக்கும்
பார்த்துநீர்போரீரோ பார்த்தாரேவீமரேநீர்
அடையமடையமென்று ஆயனுக்கூடவெனவே
உடையமெனச்சென்று ஒருமித்துவேடருடன்
தண்டிப்பொருத தயவாகநாங்களுந்தான்
மிண்டிப்பொருத வேடருமேவந்தார்கள்
தரிபட்டுநிற்கத் தத்துவங்களில்லாமல்
அரிவிட்டசாபமென்று அறிந்துவலுக்குறைந்து
முறிபட்டுவந்தோம் முதுகுபுறங்காட்டி
தெரிபட்டுவந்துமக்குச்செப்பியெலாஞ்சொன்னோம்காண்
என்றிருவர்சொல்ல ஏங்கியேதன்மருந்தான்
குன்றதிர்ந்துவீழ்ந்தாற்போற் குதித்துவிழுந்தழுது
சுகத்திலிருக்கவெண்ணிச் சொல்லாமற்போனீரோ
முகத்திலறைந்து முடிகுலைந்துதான்விழுந்து
துயிற்கொள்ளப்பாம்பணையிற் சுத்தமாய்ப்போனீரோ
வயிற்றிலறைந்து மண்மேல்விழுந்தலறி
பூலோகநாயகனே புவனமனந்தோனே
சலோகசாமீப சாரூபதேசிகனே
என்றுக்குளென்னையைப்போ வெவ்வுயிர்க்குத்தானுனை
வள்ளலேஉம்மைவிட்டு மறந்திருக்கக்கூடுமோதா
அழகுதிருமேனியனே ஆபத்தைக்காத்தோனே
களபமணிமார்பா கண்ணாரேயென்றழுதார்
துளபமணிமார்பழகா சுகத்துமணிநின்புயனே
புளகமதன்றனையீன்ற பூபாலகோபாலா
ஆறுதென்றுமெங்களுக்காய் ஆதரவிடமாக
நீதிகொண்டதெந்தன் துரியோதனன்றனையே
பாங்குடனேகொல்லப் பகைமுடித்துநாங்களுடன்
சாங்கமாய்நின்று தளமுமவன்சேனையெல்லாம்
கன்னன்சகுனிமுதற் காவலர்கள்நூற்றுவர்கள்
மன்னவர்களெல்லாம் மடித்தார்களத்தனிலே

மடிந்துவிழுமட்டும் வாரமாய் நின்றேனே
முடிந்ததோகாலம் முநிவன்றனுன்றனக்கு
எங்கேஇனிக்காண்போம் எப்பிறப்பிலும்மையுந்தான்
அங்கேவைகுந்தம் அருகிருந்துகாண்பேனோ
ஈரைந்துசென்னி யிராவணனைவெஞ்சமரில்
போரஞ்சாவீரனையும் பொருதுநீகொன்றாயே
வாலிதனைக்கொன்ற மாயவனேஉம்முடைய
கோலத்திருவழகைக் குறித்தென்றுகாண்பேனோ
ஆருக்குமேற்குமதோ ஐவரையும்விட்டகன்றீர்
ஊருக்குமேற்குமதோ உலகிலெவர்தன்னைவிட்டு
போவீரோயித்தப் புவியாட்டொழிந்தென்று
சாவீரோகாலஞ் சரியாச்சுதென்றுசொல்லி
மாமாவையாழ்விதென்று வைகுந்தஞ்சேர்ந்திரோ
ஆமாமெனவே அசந்துமறப்போமோ *
வாறேன்காணிங்கே வைகுந்தந்தானென்றி
கூறோங்காண்பொய்பொருநான் குவலயமும்வேண்டா
என்றுசொல்லிதன்மாிருந்தார்மனமிடைந்து [ங்காண்
நின்றுநகுலன்நெடுமாலைத்தானினைந்து
குத்திவிழுந்தது கோவென்றழையமிட்டு
பத்திக்கலங்கிப் பதறியுடலசைந்து
விழுந்துபுரண்டழுது மெய்சோர்ந்துகைசோர்ந்து
செழுந்துவர்வாய்மாயவனைச் சிநேகம்பிரிந்தோமோ
வித்தைநலர்ப்பதத்தை மேதினியிற்காண்போமோ
அத்தருள்ளமாலே அவனியளந்தோனே
அரிகேசவாமுகுந்தா அய்யாஉனைப்பிரிந்தால்
இருநிலராபூவுலகிற் தேசத்திலுன்னோர்கள்
பரிபாசம்பண்ணுவரே பஞ்சவர்கள்தாங்களிரோம்
தரியோந்தரணியிலே சத்திரேம்தாமிதமாய்
வருவோம்வைகுந்தமென்று வலுநகுலன்சொல்லியழ
தருவானநால்வேத சகாதேவன்தான்கிளிந்து
பொய்வாழ்வையெய்யிதென்று போதமனமகிழ்ந்து
மெய்வாழ்வுபோலே விரும்பினீர்மன்னவரே



தேகம்பொருளோ ஜேகம்பொருளோவுங்களுக்கு
தாகம்பசியினைப்பு சஞ்சலங்கள்தான்பொருளோ
தேடுந்திரவியங்கள் செல்வமுந்தான்பொருளோ
நாடும்நகருமிந்த நற்பணிகள்தான்பொருளோ
தந்தைதாய்சுற்றம் தமருங்கிளைபொருளோ
மைந்தருமனைவிடும் மனையாட்டிதான்பொருளோ
ஆனைகுதிரை பலங்காரந்தான்பொருளோ
சேனைவெகுபட்டணமுஞ் சிறப்புமிதுபொருளோ
என்னபொருளென்று இடைநிதியெல்லோரும்
தென்னவரோமாயைதனை திரமென்றுநம்புவரோ
காயந்தரியாது கணப்பொழுதுநில்லாது
நேயந்தவறாது நிலைநின்றோர்தங்களுக்கு
மேகந்தருநிழலை மெய்யென்றிருப்பார்களோ
காருத்தன்றன்செயலைக் காணமற்கண்டுகொண்டு
பதையாதிருப்பீர்காண் பாசத்தைநம்பாமல்
சதையுந்நரம்புஞ் ஜலமலமுங்கோழையுமாய்
ஊத்தைதிரண்டு உருவாயிருந்ததிலே
காத்தையடைத்துக் கயிரில்லாப்பம்பரம்போல்
நடையுமுடையும் நாகரிகப்பாவினையும்
அடையுங்கிருமிகளும் அழுகல்மிகநாற்றம்
மாயக்குரம்பையிது வஞ்சமிட்ட பொய்க்கூடு
காயக்கமேயிருந்த காமக்குரோதமிது
ஓட்டுப்பிரிவிதுகாண் ஓயாக்கவலையிது
விட்டுப்பிரியுமிந்த வீண்கவலைநம்புவரோ
காரணங்கள்தான்முடியக் கரியாமல்வந்துதித்து
நாரணனார்வந்து நடத்துகின்றார்பாரதத்தை
யுகத்துக்குகம்பிறந்து ஒடுங்காதபோரையெல்லாம்
ஜெகத்தோடேபொருந்திருந்து ஜெயம்பண்ணியிப்படியாய்
எத்தனையோகோல மெடுத்தவதாரம்
கர்த்தனார்தன்செயலைக் காண்பதரிதெனவே
வேதங்கள்நான்கும் விளங்குதுகாண்சாஸ்திரமும்
ஆதலால்மாயனுக்கு அளவற்றகாலமெல்லாம்

அழிவதுவுமில்லையவர் ஆதிமூலப்பொருளே
தெளிவதுவேசித்தமெனச் செப்பச்சகாதேவன்
அப்போதுரோபதையு மடித்துவிழுந்தலறி
மைப்பரவுமேனியற்கு வந்தவிதியேதெனவே
நானுந்துணையிழந்தேன் நாரணரேயிப்போது
வானோர்கள்போற்றவுந்தான் வைகுந்தஞ்சேர்ந்தீரோ
கற்புகுலையாமலெந்தன் கற்பைநிலைதிருத்தி
அற்புதஞ்செய்தோரைச் சொல்லரியபாழ்நரகில்
வைப்பித்தபுண்ணியர்தான் மாளவந்தகாரணமேன்
மெய்ப்பித்தபஞ்சவரை மேதினியில்விட்டேகி
சொற்புத்தியோமதியோ துன்பம்பெரிதாலோ
தப்பித்தனிவழியே தான்போனநாயமென்ன
தெய்வமேநாயமிதோ செங்கண்நெடுமாலே
அய்வர்சகாயா ஆதியேஅச்சுதரே
நாயகமேபஞ்சவர்க்கு நானுந்துணையாயிருந்து
தாயகமாயென்றுமுந்து சாங்கமாய்நின்றேனே
கணக்குப்புகழாகக் காசினியோர்தாமறிய
எனக்குப்பிழைவாராமல் ஏழைபங்கில்நின்றேனே
என்றைக்குனைக்காண்பே னெங்கள்பெருமானே
குன்றைக்குடைபிடித்துக் கோவுகளைக்காத்தோனே
அப்போதுணையெனக்கு யாரினித்தான்பூவுலகில்
மெய்யோபெனைமறந்து விண்ணகத்திற்போனீரோ
கிளிமொழியாளிவ்வசனங் கிலேசமாய்ச்சொல்லியபின்
மொழிதனுதிக்குந்தியம்மாள் முகத்திலறைந்துகொண்டு
என்மருகா என்கோவே எல்லார்க்குந்நாயகமே
தனமருக்குந்தம்பியர்க்குஞ் சாங்கமாயென்றுநும்
இம்மைதனிலேயிருந்து எங்களையுங்காத்தோனே
நன்மைசெய்யக்கன்மம் நடுக்கானகந்தனிலே
மாண்டிறந்துபோன மகிமையென்ன நாரணரே
வேண்டிவினைசெய்த விதிவசமோவிப்படியாய்
அந்தரத்தில்நீரும் அருந்தவசுபோயிருந்த
தந்திரத்தையின்னதென்று தன்மரதிந்திலரோ



வீமன்விசயனுடன் மெய்வார்த்தைசொல்லாமல்
நாமன்சகாதேவனையும் நம்பாமற்போனீரோ
உற்றதொருதற்சேதி யொருவருக்குஞ்சொல்லாமல்
நற்பதனே நீர்போய்த் தவமிருந்தீர்மாயவரே
மந்திரவேதம் வரம்புதப்பிப்போனதுவோ
சந்திரருஞ்சூரியருந் தானெறிந்துபோனதுவோ
அண்டமடிக்கும் அச்சுநிலைதான்பேர்ந்து
கொண்டல்கருவழிந்து குறைகடலுந்தான்கவி
ஆகாசம்பூமி அந்தரங்கள்தான்குலைந்து
வாகானநாற்றுவங்கள் மாசடைந்துபோனதுவும்
இறப்பதுவுமேதுனக்கு எம்பெருமானென்றழுதாள்
பிறப்பதுவுமேதுனக்குப் பிறந்துமிறப்பதுவும்
இரண்டுதொழிலாய்நடத்தி யிலங்குகின்றபுண்ணியரே
மிரண்டுபலவுரையேன் விளம்பினறுவசனம்
என்றுருக்கமாதேவி யித்தனையுந்தான்புலம்பி
சென்றபுரந்தான் செப்பமணிமண்டபத்தில்
தம்பியருந்தருமருடன் தானேமனமுடைந்து
வெம்பிமுகம்வாடி வேதநாரயணர்தம்
சொல்லரியதேசந் துவாரகாபுரிநகரம்
வெல்லரியவேடர் விபரீதஞ்செய்யாமல்
இப்பொதேசென்று எம்பெருமான்பட்டணத்தை
மெய்ப்பாகக்காருமென்று விடைகொடுத்தார்தன்மருமே
வீமன்விசயன் மிருந்தசகாதேவன்
நாமனகுலனுடன் தங்கள்பரிசேனைதனம்
சிறப்பாகச்சேனையுடன் சீக்கிரத்திலன்னேரம்
புறப்பட்டார்பூமியிலே போரண்டன்தானேங்க
நடந்தார்துவாரகைக்கு நன்னகரம்விட்டேகி
கடந்தார்வெகுதூரம் கண்டார்பெருநகரம்
விரைந்துநகர்புகுமுன் வேடரங்கேதான்முடுகி
திரைந்தார்வளைந்தார் நெடுமால்தன்பட்டணத்தை
பச்சைமால்தேவியர்கள் பதினாயிரம்வரையும்
இச்சையுடன்வேட ரெல்லாரையும்பிடிக்க

வளைந்தாரரண்மனையை மாயவனார்தேவியரை
நுழைந்தேதப்பிடிக்கவென்று நோக்குகின்றவேளையிலே
கங்குல்வந்துமூடிக் கதிரோனும்போய்மறைந்தான்
செங்கிரவன்மறுநாள் திறமாகத்தோன்றியதால்
விடிந்தேஅரண்மனையில் மெல்லிநல்லாரெல்லோரும்
இடிந்தேகரைந்து எம்பெருமானென்றழுதார்

விருத்தம்.

தேவியழுதவோசை செககண்மாலனுக்குத்தோற்றி
பாவிகள்வேடர்தாமும் கங்கமேசெய்யாவண்ணம்
ஓவியமானபெண்க ளொருவெலாமாற்றிமுன்னுள்
தாவியரிஷிபோலாகித் தாதர்போல்வருகவென்றார்.

இதுவுமது.

தப்புசேகண்டிசங்கு சடைமுடிதுளசிமாலை
இப்புவிதனிலேபோற்றும் இருடிபோல்வேடம்பூண்டு
ஒப்புடன்தாதராகி யொருவர்பின்னொருவராக
மெய்ப்புடன்வந்தார்கண்டார் வேடருமலைந்துநின்றார்.

கதை.

அழுதார்கள்தேவியர்கள் ஆயிழைமாரெல்லோரும்
தொழுதடியைவிட்டுச் சொன்னதொருதோத்திரந்தான்
அந்தமொழிகேட்டு ஆயனார்சுவந்திரமாய்
மூத்தஇருத்த முனிவர்தபோதனர்போல்
ஆமென்றுநித்தித்தா ரப்போது ஆயிழைமார்
ஓமென்று ஒவ்வொருவம் உருமாறியேயிருந்து
சடையுமுடியுடனே தாதர்வந்தார்வீதியிலே
படைகூடிக்காத்திருந்த பாவேடரெல்லோரும்
விதிபோயசந்து மெய்மறந்துபார்த்திருந்தார்
சதிருடையபட்டணத்தைத் தான்கொள்ளையாடவென்று
நெருங்கிவரும்போது நிமிஷத்திற்றன்மர்படை
கருங்கடல்போற்சூழ்ந்து கைகலந்துதான்பொருதி
துரத்தியடித்துவிட்டுத் துன்பமறவேதிரும்பி
அரத்திபொசாத்தகி யாழ்வாருடனேதான்
மற்றுமுள்ளசேனை மகுடமுடிவேந்தரையும்
அத்திபுரந்தன்னி லழைத்துவந்தாரம்மானை



விருத்தம்.

மாயவனுலகையாண்டு வனத்திலேயிருந்தாரென்று
நேயவில்வேடர்வந்து நிலமைகைக்கொள்வாரென்று
ஆயதோர்தருமர்தானுஞ் சொல்லியோர்விரலைமூக்கில்
ஞாயமோசிவனேயென்று நைந்துடல்சோர்ந்திருந்தார்

இதுவுமது.

இப்பவுஞ்சேதியென்ன என்றுதான்தம்பிமாரை
ஒப்புடனழைத்துமுன்னே உண்மையேதென்றுகேட்க
அப்புரமினிமேலென்ன அண்ணலேயித்தனுயம்
மெய்ப்புடனிவடம்விட்டு விரையவைகுந்தஞ்சேர்வோம்

இதுவுமது.

இளையவர்நீங்களின்ன மிருந்துதான்புவனமீதில்
கிளைவழியுடனுங்கூடிக்கிரீடமாமகுடமன்னர்
பழையவர்தமருந்தாயும் பாக்கியமனேகமெல்லாம்
குறைவறநிறைந்துவாழ்ந்துகுவலயத்திருங்களென்றார்

கதை.

தன்மமிவைச்சொல்லத் தனஞ்செயனும்வீமனுமே
கன்மமோவென்று கண்ணீர்மிகச்சொரிய
நகுலசகாதேவன் நாட்டமுடன்வாட்டமதாய்
மிகுகவலையாகி விள்ளாமதுள்ளடைந்து
எங்களையும்விட்டு இனம்பிரிந்தமான்போலே
தங்குவதுமெங்கே தரிப்பதுவுமெவ்விடங்கான்
நாங்களோஉம்மைவிட்டு நானிலத்திலேயிருப்போம்
நீங்கொன்றும்பேசாத் திருவுளமேயல்லாது
இருந்துமென்னகோட்டை யெடுப்பதுமிங்கேதான்
வருந்துவோம்நாங்கள் வாடுவோமும்மைவிட்டு
என்னமொழிசொல்லி யெடுத்துரைத்தீரண்ணவே
இன்னமிதுவரையும் இனம்பிரிந்துநின்றோமோ
மாயைமிதுவாழ்வு மாமாலத்தன்னைநம்பி
சாயைமிந்தவாழ்வதனைச் சதமென்றுதானிருந்தால்
இந்தவுயிர்களுக்கு ஈடேற்றமெப்போதான்
கந்தவுடலெடுக்குங் கசமாலப்பாண்டமிது

நாறும்புழுக்குரம்பை நன்றிகெட்டகாயமிது
நாறுவபதனையும் நோக்காயிருந்தாலும்
சோற்றுத்துருத்தியிது சொல்லரியபாண்டமிது
காற்றுப்பொருமல் கழன்றோடும்பானையிது
இடிகரையில்வாழ்மரம்போ லென்னமற்றகாயமிது
நெடியமரமிதுகாண் நிழலில்லாத்தாலமரம்
வேரில்லாக்கொத்தான விழுசுவரை நம்புவரோ
தூரில்லாப்பொந்துமரஞ் சுட்டோடுஞ்சாம்பலிது
அலைகடற்றுரும்பதுபோ லாசைவைத்தபொக்கிஷத்தை
நிலையில்லாக்கப்பலிதை நிசமென்றுநம்புவரோ
ஓடும்மரக்கலத்தை ஒன்பதுவாசற்கூட்டை
போடுவதுமெய்விடமோ பொருத்துயிரெவ்வாரோ
இந்தவுடலெடுத்து இவ்வுலகமேசுகமாய்
சொந்தமெனத்தானிருக்கச் சுகிர்தமோ அண்ணாவே
இதுகருமமல்லஇறையோனேஉம்முடைய
பதுமமலர்ப்பாதம் பணிவதுவேயல்லாது
அதுகருமமெங்களுக்கு அடவுக்காணிப்போது
மநுமொழிபகரும் வாசகமேயண்ணாவே
நடக்கும்வகையறிந்து நாயகமேநீதானும்
அடக்குமுபாயம் அவனிதனிலுண்டெண்ணி
வைக்கவுபாயம் வழங்குமென்றார்தம்பியர்கள்
தக்கபுகழ்கருமர் தம்பிபோதுமென்றுசொல்லி
நேசமுடன்வாழ்ந்து நிலைத்திருக்குமன்னாளில்
நேசத்திலுள்ள நெய்வைப்பிராமணரில்
முன்னாளில்வேதியன்றார் முழுதுங்குடியாயிருந்தான்
பின்னொருபாப்பான பிரதேசம்விட்டுவந்து
இந்தப்பிராமணனை யிருக்கவிடதாருமென்றான்
அந்தமனையிலவனுக்கொருபுறத்தை
விட்டுக்குடியிரென்று வேதியனுந்தான்கொடுத்தான்
கட்டுடன்வீடங்கே கட்டிக்குடியிருக்க
பாப்பானுஞ்சம்மதித்துப் பதியிற்குடியிருக்க
தோப்பாகஅவ்விடத்தில் நிலம்பிளந்துமண்ணெடுக்க



வெட்டினான்பூமிதனில் விரும்பிச்சுவரேற்றிக்
கட்டினான்வீடு கனத்தபுதையலொன்று
மண்ணிலிருந்தெடுத்தான் மறையோனுமன்னேரம்
கண்ணிலேகண்டபொருள் கர்மமென்றுதானினைந்து
நமக்குத்தரியாது நம்மிடத்தினிற்காது
சுமக்கும்பழிபாவம் துன்பம்வருமென்றேதான்
மனைநமக்குத்தந்த மனையாளன்தனமிதென்று
வினையொழியவேண்டி வேதியனுந்தானேடி
அய்யரேவேதியரே அதிசயந்தான்கேட்டீரோ
துய்யமனைகட்டத் தொடங்கியதோர்மண்கிடங்கில்
கண்டேன்திரவியந்தான் கர்மணிப்பொட்டகத்தில்
கொண்டேவந்தான்பார் குடத்திற்பணந்தனையும்
உந்தன்பொருளிதுகா ணுற்றவர்கள்தான்புதைத்த
சொத்துமுனக்கென்று தோற்றுகாணென்மீதில்
என்றுஇவர்சொல்ல எற்றமுள்ளவேதியன்தான்
நன்றுநன்றுஇவ்வார்த்தை நாமெங்குங்கண்டதில்லை
உன்மனையிற்கண்டபொருளுனக்கல்லால்வேறுமுண்டோ
தன்மனையிற்கண்டபொருள் தன்னைவிட்டுப்போகாதே
ஆனதினாலுன்பொருளை அய்யரேவாங்குமென்றான்
நூதனமாய்ச்சொல்ல நூல்மறையோனேதுசொல்வான்
அன்றுமக்குநாமும் அன்பாகவிட்டுதந்தோம்
இன்றுமக்குத்தந்த யில்லிடத்திற்கண்டபொருள்
கண்டவற்கோசும்மா காணுதிருந்தவற்கோ
உண்டவற்கோஇன்பம் உறங்கினபேர்க்கென்றாகும்
வேண்டாங்காண்வேதியரே வீட்டிற்கொடுபோவீர்
தீண்டாப்பொருளதனைத் தீண்டுவரோநல்லோர்கள்
போங்காணுஞ்சும்மா பொருளதனைக்கொண்டேதான்
வாங்கேனொருநாளும் மதியேன்மனந்தனிலும்
என்றுமறையோனு மிவ்வசனஞ்சொல்லுவதை
நின்றுபிராமணனும் நீதியோவென்றுசொல்லி
பொருந்தாதகாரியத்தைப் பொருந்தவேபேசுகிறீர்
வருந்தாதாரென்றும் வருந்துவரோமானிலத்தில்

உத்தன்மனையெனக்கு உபகாரஞ்செய்ததற்கு
சொந்தமெனக்கெப்படியாஞ்சொல்லுங்காண்வேதியனே
அடமழையிற்காக்கைக்கு அன்னமிடந்தந்தாற்போல்
கிடைபொருளை நானெடுக்கக் கிட்டாதுவேதியரே
எத்தன்விதிப்பயனோ இவ்வூரிலும்மடத்தில்
வந்தவிதிமயக்கோ வழக்கமாய்முடிந்ததுகாண்
உன்சமத்தும்என்சமத்தும் ஊரறியவேணுமென்று
புன்சமத்துப்பேசிப் புறப்பட்டார்மன்றேற
மறியலிருந்து மடிபிடியுஞ்சண்டையுமாய்
நெறியுடையதன்மரிடம் நீதிவிளங்கவென்று
பூசலிட்டுக்கொண்டு புண்ணியனார்தம்மிடத்தில்
ஊசலிட்டுச்சென்றார் உறுபூசல்தன்னுடனே
அந்தணர்கள்தன்மரிடம்அவர்வழக்குச்சொல்லலுற்றார்
வந்தவர்கள்சொல்லை வாகாகத்தான்கேட்டு
மந்திரிமார்தன்னை வாவென்றழைத்து
தந்திரிமாரெல்லோருஞ் சதிராகத்தான்கேட்டு
ஞாயம்நடுக்கண்டு நமக்குரையுமென்றுரைத்தார்
தூயதன்மர்சொல்லத் துரந்தார்கள்எல்லோரும்
அடுக்கஇருந்து அவர்வழக்கைக்கேட்கலுற்றார்
தொடுக்குமறையோரேதொடுத்தவரார்சொல்லுமென்றார்
குடியிருக்கவந்தவனுங் கூறினான்தன்வழக்கை
மிடியிலிருந்து வெகுதூரந்தானிருந்து
இவரிடத்தில்வந்து இருக்கஇடங்கேட்டேன்
அவரெனக்குவீடு ஆமென்றுதான்கொடுத்தார்
அவ்விடத்தில்மண்ணெடுத்து அணைவாய்ச்சுவரேற்றி
இவ்விடத்தில்வீடு இதமாய்முடித்திருந்தேன் [அ
மண்ணெடுத்தகேணியிலே மறைபொருளாய்த்தானிருந்
கன்னிடத்திலேதிரிந்து கரகத்திற்பொன்னெடுத்தேன்
எடுத்தேனிவரிடத்தில் எடுத்தவுடன்கொண்டேகிக்
கொடுத்தேனிவர்பொருளைக் கொள்ளேனெனவுரைத்தார்
அதுதிடரதேதி அடுத்துக்குடியிருந்தால்
பகுதிபெரும்படியாய்ப் பண்ணிகிறேனென்றுரைத்தார்



அந்தமொழிகேட்டு அவரை நீர்சொல்லுமென்றார்
எந்தன்மனையி லிவருக்கிடங்கொடுத்தேன்
இடத்திற்பொருள்தா னிருந்தெடுத்தாராமாகில்
மடத்திலேவைத்துவா ழாமலென்னிடத்தில் [மையா
கொண்டுவந்தால்வாங்குவனோ குற்றமென்னசொல்லு
பண்டுமுன்னுள்வைத்திருந்த பழையபொருளாகிலும்
தன்னிடத்திற்கண்டபொருள் தனக்கோபிறர்தனக்கோ
என்னிடத்திற்கொண்டுவந்தா லெப்படிநான்வாங்குவது
என்றிரண்டுவேதியரு மியன்றமொழிதான்கேட்டு
நன்றிவர்கள்சொன்னமொழி நாம்தெளிவதெப்படியோ
சொல்லுமறையோர்வழக்குத் தோற்றமல்மந்திரிமார்
சொல்லும்வழக்கிதற்குத் தேறுந்தான்மட்டாமல்
நல்லதென்றுதன்மரிடம்நவின்றார்கள்மந்திரிமார்
வல்லதொருதன்மர் மறையோரிருவருக்கும்
அஞ்சாதநாயந் துலங்கியுரைப்பதற்கு
அஞ்சாம்நாள்வாருமென்று அருளினார்காணம்மானை
அடுத்தநாட்மூன்றுநாள் அதுகழிந்தநாலாநாள்
உடுத்தகரித்துணியும் உதாசினவார்த்தையுமாய்
அழுக்குச்சிறையும் அகந்தையிடம்புகளும்
ஒழுக்கமற்றபேச்சும் உருட்டும்பிரட்டுடனே
மானமரபில்லாமல் வரம்பழிந்துநாணமற்று
ஞானதவமில்லாத சண்டாளசென்மமுமாய்
ஈனமிரக்கமின்றி யிரவலர்க்குமீயாத
ஊனமில்லாப்பாவ முறைந்தசடமாகி
கால்மேலுந்தலைகீழாய்க் கலியன்வந்துதோன்றினனே
மேல்சாதிகீழும் கீழ்சாதிமேலாக
தாய்தலையிலேகைமைந் தகப்பன்குடைபிடிக்க
பாய்பரியின்மேலேபைந்தொடியைத்தானேற்றி
வந்தான்கலியென்று வையகமெல்லாமுரைக்க
அந்தநாட்சென்று அலகைதிரோன்வந்துதித்தான்
மற்றநாளாம்போது மறையோரிருவோரும்
சித்தமுடன்றன்வழக்குந் தேறவென்றுதன்மரிடம்

சொன்னகெடு அஞ்சாநாள் தோற்றமுடன்வந்துநிற்க
என்னகாண்வேதியரே இருவருடைஞாயம்
என்றுதன்மர்கேட்க இருவோருந்தர்க்கமதாய்
நின்றுநடுஞாயம் நீதியுடன்சொல்லுமென்றார்
எத்தன்மனையிலிவனுக்கிடங்கொடுத்தேன்
எத்தன்புதையலெடுத்திவன்றன்கொள்ளைகொண்டு
கொடுக்கமனஞ்சற்றுங் குறியாமல்வார்த்தைசொல்லி
பிடிக்கிறான்சண்டை பெருமாளேஎன்றுரைத்தான்
உன்செய்தியென்னெனவே வுகந்துதன்மர்தான்கேட்க
என்செய்தியென்னசொல்வேன்எடுத்தபுதையலைத்தான்
கொடுப்பேனென்றாலுங் கூடத்துப்பணத்தையெல்லாம்
எடுப்பார்கொடுப்பதுண்டோஎத்தனைநாளுறையும்
குடியிருப்பிலாதாயங் கூடுத்தொகையிதெல்லாம்
கொடுத்துக்குடியிருக்க வந்தேனேகொற்றவனே
அடுத்துக்குடியிருக்க அய்யனிடம்வந்தேனே
நிட்டூரம்பண்ணுகிறான் நீதியில்லைபோயிவிடம்
எட்டோதிய இழுக்கிறான்சத்தியிலே
நீதியுடன்சொல்லுமையா நீதிநெறிதப்பாமல்
வேதியன்றனிவ்வசனம் விளம்புவதைத்தான்கேட்டு
இனியென்னஞாயம் எடுத்துரைக்கவாயேது
அனியாயமிப்போது அந்தணர்கள்தன்வழக்கு
கண்டோமதிசயங்கள் கலியனுடைதன்கீர்த்தி
விண்டோம்புவியை வெறுத்தோங்கலியாலே

விருத்தம்.

அந்தணர்வழக்குங்கண்டோமடிக்கடிபிரட்டுங்கண்டோ[ம்
இந்தமாநிலத்தில்நாமும் இருப்பதுகருமமல்ல
அந்தநாளச்சுகாலம் ஆண்டுதான்முடிந்துமற்றும்
வந்ததால்வந்துதென்றால் வழக்கென்னவழக்குஞாயம்.

இதுவுமது.

பஞ்சமாபாவங்கொண்டு பாரினிற்கலியன்வந்தான்
என்செய்வோம்தம்பிமாரே இப்படியுலகந்தன்னில்



முன்செய்தஞாயம்போல முற்றுமேயினிமேல்தம்மால்
பஞ்சவரென்றுசொன்ன பாவனைமுடியாதின்றே

இதுவுமது.

ஆண்டவர்நடந்தாரித்த அதிசயம்வருமென்றென்னி
நீண்டவர்மொழிந்துபோன நிச்சயம்நிசமாங்கண்டோம்
பாண்டவர்புதல்வாநாமும் பாயுனிலிருந்தோமானால்
மூண்டதோர்கலிவிடாது முடிந்தது நமக்குக்காலம்

இதுவுமது.

வாழ்ந்ததுதுவாபரத்தில் மனுநெறிமுறைமைநீதி
தாழ்ந்ததுகலியுகத்திற் றருமமென்பெயரும்போகும்
சூழ்ந்ததோர்கலியைத்தப்பி சுகத்தில்வைகுந்தஞ்சேர
ஆழ்ந்ததோர்புவியைவிட்டு அகலுவோமகலுவோமே

இதுவுமது.

நாரணர்நம்மைவிட்டுநடந்துவைகுந்தஞ்சேர்ந்தார்
காரணர்முடிந்தகோலங் கலியுகம்வருமென்றென்னி
ஆரணன்றன்னையீன்ற அச்சுதன்பச்சைமால்தான்
பூரணர்நடந்தமார்க்கம் போவதுகருமமின்றே

இதுவுமது.

வானவரிமையோர்மற்றுமாதவர்முனிவர்தேவர்
தானவரிஷிகள்வேதத் தபோதனர்போற்றிசெய்ய
ஞாயமுமினியகீத நாகமுமிசைகள்கூவ
மேனகைபணிகள்மாற வெகுசுகமடைந்தானே

இதுவுமது.

வீமனேவிஜயாதம்பி மேதினிதன்னிலுங்கள்
தேயமும்பிலமும்வாங்கி நெடியமால்போனரன்றே
சாமமாம்வேடர்முன்போய் சமீனிற்புறமுங்காட்டி
நாமினியுலகில்வாழ நமக்கிதுசகியாதின்றே

கஎ௩

நெறியுடனேபோக நினைத்தநினைவுள்ளதெல்லாம்
குறியுடனேசொல்லிக் கோபாலர்சன்னதிக்கு
பயணமென்றுசொல்லிப் பரிமளித்துநால்வருக்கும்
சயனமாயுள்ள சுற்றத்தார்தங்களுக்கும்

மன்னர்மகுடமுடி வர்த்தனர்களெல்லோர்க்கும்
தென்னன்பயணமென்று சீமையெங்குஞ்சொல்லுமென்
சீட்டெழுதிவிட்டார்கள் திசையிலுள்ளமன்னருக்கு [றார்
எட்டெழுத்தைவாசித்து எல்லோருந்தான்கூடி
என்னவிதிவசமோ என்றுமன்னரெல்லோரும்
மன்னர்சமுகமதில் வந்துகண்டாரம்மானை
ஆண்டவனை நீர்தா மழைத்தபணிவிடையென்
நீண்டபுகழ்பெற்ற நிமலனைசொல்லுமென்றார்
அப்போதுதன்மர் அரசர்தனைநோக்கி
இப்போகொடுங்கலிய னிவ்வுலகில்வந்துவிட்டான்
இனிமேற்கலியுகத்தி லிருக்கவுந்தான்முற்றாது
தனியேவனவாசஞ் சஞ்சரிக்கமெத்தநன்று
ஆனதினாலுங்களை நா மருகேவரவழைத்தோம்
மானமுடன்நீங்கள் வரம்புதப்பிப்போகாமல்
காலமறிந்து காசினிக்குள் நீங்களுந்தான்
காலத்துக்கேற்றதொரு கணக்கின்படியாக
தெரிந்துநடந்துகொண்டு செங்கோல்தவறாமல்
பிரிந்தொருவர்போகாமற் பிள்ளைசிறுபாலருடன்
கலந்துஜெகமுழுதுங் கட்டாக நீங்களுந்தான்
உலகும்பரிட்சித்துவுக்குத் துரந்தரிகந்தான்தழைத்து
வைக்கிறோம் நீங்கள் மகுடமுடிதரித்து
நிற்கிறோமென்று நிண்ணயமாய்ச்சொல்லுமென்றார்
நிற்கிறோமுண்மை நிகழ்பரிட்சித்துவுக்கு
வைக்கிறோம்பாரில் வணங்குகிறோமுள்ளபடி
நீங்களிருந்து நெடுகவனம்புகுந்தால்
நாங்களிருந்து நடப்பதென்னகாரியந்தான்
எல்லோரும்வாறோம் இந்தரபதிசென்றாலும்
பல்லோரும்வந்து பணிவோமேயல்லாது
அரைக்ஷணமும்மைவிட்டு அவனிதனிலேதரியோம்
துரையேதுரையரசே துரந்தரிகமன்னவனே
என்றுமன்னர்சொல்லி யிரைந்தலறியோலமிட
அன்றுதன்மராஜன் அவர்களையுங்கையமர்த்தி



ஒன்றுக்குமஞ்சாம லுலகளந்தான்றன்னருளால்
கன்றுக்கிரங்குகின்ற கற்றாப்பசுப்போலே
தம்மையடுத்தோரும் நன்றாகக்காத்ததுபோல்
செம்மையுடன்செங்கோல் செலுத்தும்பரிட்சித்துவுக்கு
ஆதரவாய்த்தானிருந்து அரசுநிலைதானிருத்தி
பேர்தரவாய்வாழ்ந்து புவியிதிற்றானிருப்பீர்
வெப்போதுமண்ணும் விண்ணுமுள்ளகாலமட்டும்
தூயமறையோர் துதித்துப்புகழ்ந்தேற்ற
இருமென்றுதன்மர் எல்லோர்க்குஞ்சொல்லியபின்
குருமுன்னிலையாகக் கொற்றவனுமன்னேரம்

### பரிட்சித்துவுக்குப் பட்டங்கட்டியது

முடிசூட்டிவைக்க முடிமகுடர்போற்றிசெய்ய
படியேழும்போற்றப் பார்மன்னர்கொண்டாட
தானிருந்துசெங்கோல் தரிக்கமகுடமுடி
கோனிவன்றானென்று கொலுவிலலங்கரித்து
தானிவன்றானென்று நாற்றிசையுந்தானறிய
தானிவன்றானென்று சாற்றிமகுடமதை
வைத்துமுடிசூட்டி வாழ்த்திப்பரிசித்துவைத்தான்
மூத்துமுடிசூட்டி முடிமன்னர்காத்திருக்க
கொற்றக்குடைநெருக்கக் கோவேந்தர்சூழ்ந்திருக்க
சந்தகடல்போலத் தனங்கள்நெருங்கிநிற்க
கட்டும்பரியுடைய காவலர்கள்வந்திருக்க
வெட்டும்பரிவீரர் வீரவாள்கைப்பிடித்து
தத்தும்பரியேறி தளங்களுடன்வந்துநிற்க
சந்தும்ரதமேறித் துரந்தரிகர்வந்துநிற்க
ஆருமதவாரணமேற் அரையமார்கள்வந்துநிற்க
கூறுந்தமிழ்வாணர் கொண்டாடிவாழ்த்திநிற்க
தம்புருவும்வீணை சரமண்டலமுழங்க
கிம்புருவுங்கின்னரங்கள் கீதங்கள்தான்முழங்க
சங்கீதராகமது தாளமுடன்மத்தளமும்
இங்கிதநாகசின்ன மெக்காளம்பூரிகையும்

நவுரியுடன்சேகண்டி நற்சங்குதான்முழங்க
பவுரிகமாய்பேரிகைகள் பலதிக்குமேமுழங்க
சேனைதளமுஞ் சிறப்பாகத்தான்சூழ
ஆனைபரிரதமும் அணியணியாய்த்தான்சூழ
யானையின்மேலேற்றி பவனியெல்லாந்தானதியச்
சேனைதளத்துடனே சிங்காரமாய்க்கூடி
பட்டணமுஞ்சுற்றிவரப் பாவாணர்கொண்டாட
சிட்டர்பரிபாலனெனத் தேவேந்திரன்போல
வட்டக்குடைநிழற்ற வந்தான்பவனிவலம்
சட்டமாய்ச்செங்கோல் தரித்திரென்றுமன்னவர்கள்
துங்கபிராமனெனச் சொல்லிலரிச்சந்திரன்போல்
சிங்காரமாகவந்து சிங்காதனத்திருக்க
சிங்காசனச்சிறப்புஞ் சேனைமன்னர்தன்சிறப்பும்
துங்கன்பரிசித்துடைய துரைத்தனத்தின்சிறப்பும்
இருந்துசிலகால மிராச்சியபரிபாலனத்தை
பொருந்தநடத்துகின்ற புதல்வன்றனைப்பார்த்து
ஆளும்புவிராஜன் ஆம்பிள்ளையாமென்றுசொல்லி
நாளுஞ்சிலகழித்து நாடெழுந்தான்வணங்க
தங்களுடபேரனெனத் தர்மருந்தம்பியரும்
எங்கள்பதிகாக்கு மிவனேபுவிராஜன்
ஆனதினிமேல் அச்சங்களொன்றுமில்லை
போனாலும்நம்முடைய புவியிவனேயாள்வனென்று
செலுத்துவான்செங்கோல் திருமாலருளாலே
அலுத்தயர்ந்துநானிருந்த ஆலோசனைகளெல்லாம்
இன்றைக்குத்தீர்த்தோம் இனிமேற்கிலேசமில்லை
குன்றைக்குடைபிடித்த கோபாலர்தன்னிடத்தில்
போகலாமென்று புரிந்துபஞ்சவர்கள்
ஏகலாந்நன்றாய் இனிமேல்மயங்காமல்
என்றுபரிசித்தவையும் இங்கேவரவழைத்து
ஒன்றுமுரையாமல் உலகாள்வீரென்றுறும்
தாங்கள்வைகுந்தமதில் நடக்கவழிகாட்டி
போங்களென்றுசொல்லும் புண்ணியனே நீதானும்



மனதுசலியாமல் வாழ்ந்திமிகமகிழ்ந்து
எனதுமனங்குளிர இன்பமுடன்சொல்லுமென
விம்மல்மிகுந்து வெகுண்டுபரிசித்துவுந்தான்
செம்மல்மலர்விழியாற் றிரண்டுகண்ணீர்தானோட
அய்யரேஎன்னைவிட்டு ஐவருந்தான்போனக்கால்
உய்யவேநானும் உடைந்திடைந்துபோகவோதான்
விட்டுப்பிரிந்தால்விளங்குவனோயான்பாவி
மட்டுப்படாச்செல்வம் வாழ்வுமிகவிழந்து
என்னைத்தனியவிட்டு ஏகினீராமாகில்
முன்னைப்பயனோ முடிந்தவிதிப்பயனோ
தந்தையரைப்பெற்றவர்கள் தாரணியையாண்டிருந்து
விந்தையாமிந்த மேதினியைவிட்டிறந்து
நடந்துசடத்தோடே நாம்போரோமென்றுசொன்னால்
தொடர்ந்துவருவேனான் தூரநீர்போனாலும்
கண்டிருக்கநானுங் காவலரேபோரோமென்றால்
விண்டிருக்கப்போமோ வித்தகரேயென்றனே
சடத்தையிங்கேபோட்டுத் தப்பியுயிர்போனாலும்
சடத்துக்குள்ளதெல்லாந் தான்கருமம்நான்முடித்து
மறந்திருப்பேன்கண்டீர் மாநிலத்தோர்புத்திசொல்ல
இறந்துசடமொழிந்தா லெனக்குக்கிலேசமில்லை
உயிரோடேநாம்போரோ முலகாளுமென்றுசொன்னால்
தயிரோடேநீர்பிரிந்த தன்மைபோலாவேனோ
ஊரிருக்கநானிருக்க உற்றஜனந்தானிருக்க
பேரிருக்கநீர்போற பேச்சறியேனையாவே
எந்தவிதமென்று எனக்குவகைசொல்லுமிப்போ
அந்தவசனம் அரியதன்மர்தான்கேட்டு
மைந்தன்மகன்மனது மலையாமல்வார்த்தைசொல்லி
கந்தமலர்க்கையாற் கட்டியுறவணைத்து
முகந்துமடியில்வைத்து முதுகுதனைத்தடவி
மகன்றன்குழந்தை மனதுவரவார்த்தைசொல்லி
அமர்த்தியிருமென்று அரவணைத்துக்கொண்டாடி
சமத்தன்பரிசித்துவுந்தான் சாந்தமாய்நல்லதென்று

நல்லவழிசென்று நாரணனைத்தானோக்கி
செல்லுமென்று நல்வசனம் செப்பினாரம்மானை
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவேந்தருக்கும்
புத்தியுடன்சொல்லிப் புகுந்தாரரண்மனையில்
தாயாரிருக்குந் தனிமாளிகைநோக்கி
ஆயாளிருக்குமந்த ஆசனத்தின்முன்னேகி
விழுந்துநமஸ்கரித்தார் வேதியருந்தம்பியரும்
அழுந்தத்தடவி ஐவரையும்முத்தமிட்டு
சூழவேமைந்தருடன் தாயாரிருக்கையிலே
தாழமொழிபேசி தன்மருத்தம்பியரும்
தாயேசரணம் சலிப்பொன்றும்பேசாமல்
ஆயேநீயெங்களுக்கு அன்புடனேஇன்பமதாய்
மாயோனிடத்தினிலே வைகுந்தஞ்சேர்ந்திருக்க
நீயேகுமென்றுசொல்லி நெற்றியிலேநீறணிந்து
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமிப்போ
என்தாயேவேறென்று மெண்ணுமலன்புடனே
அனுப்புவீரென்று ஐவருமேதான்கேட்க
எனைப்பிரிந்துமக்கா ளென்னைவிட்டுநீங்களுந்தான்
நடப்பதற்கோவந்து நன்றாயுபசரித்து
கடப்பற்றுநாளும் நரைத்துஉடல்தளர்ந்து
கூனிவிழிமயங்கிக் கோலூன்றியேதிரிய
வானீரொழுக வயதுஞ்சரியாகி
உடலுந்தளர்ந்து ஊனுஞ்செயல்குறைந்து
படருமிருமல் பாசத்தினைப்புடனே
முகமுஞ்சுரித்து முழங்காற்பிடிப்பாகி
சுகமுஞ்சுவைமறந்து தோற்றமதுவேறாகி
உள்ளுடைந்துமேனி யுடலும்நசைகளைந்து
வெள்ளுடலுமாகி மெய்யும்மிகத்தளர்ந்து
ஆக்கைகுலைந்து அவதிவருந்நாளில்
இக்கடனும்நீர்க்கடனும் செய்துமுடியாமல்
போரமென்றபுண்ணியரே புத்திரரோமித்திரரோ
வாரமென்றமக்களுடன் மண்ணில்விழுந்தழுது



தந்தையருகில்லாமற் றனித்துநானுங்களையும்
சிந்தைமயங்காமற் சிறியோர்பெரியோராய்
ஆருமட்டுந்தான்வளர்த்த அன்னையல்லோயெந்தனையும்
சாகவிட்டுப்போகச் சம்மதியோஉங்களுக்கு
அந்தநாளெங்க ளன்னைபிதாவிடத்தில்
குந்தமாதேவியென்று குழந்தையாய்நானிருந்தேன்
சொல்லரியவேதத் துர்வாசமாமுனிவர்
வெல்லரியருத்திரபுரம் வீதிவழிவந்தனவில்
எங்களையர்கண்டே யிருமென்று ஆதரித்தார்
அங்கவருந்தயங்கி யமர்ந்திருக்கும்வேளையிலே
அஞ்சவயதான ஆரணங்குகையாலே
மிஞ்சவொருசமையல் விதமாகத்தான்முடித்து
அன்னம்படைத்தா லமுதுண்போங்கையாலே
என்னமுனிசொன்னளவில் எங்களையரெந்தனையும்
அவற்குப்பணிவிடைசெய் யம்மாவெனவுரைத்தார்
அவற்குமனதுவர அன்னம்பலகறிகள்
அன்புடனேநான்சமைத்து அமுதுபடைத்துவந்தேன்
இன்பமுடனேயமுதுண் டேகுகின்றநாளையிலே
சந்தோஷமுற்றுமுனி தனியேயெனையழைத்து
மந்திரமோரைந்து மகிழ்ந்துரைத்தாரெந்தனுக்கு
வேதமுனிசொன்ன வித்தைதனைவைத்திருந்தேன்
நீதமுள்ளபாண்டவர்தான் நிச்சயதாம்பூலமிட்டு
கலியாணஞ்செய்தார் கருத்துடனேஉண்மைசொன்னார்
வலிமையாய்நீங்கள் வருவதற்குமார்க்கமதாய்
உங்களையர்தம்மிடத்தி லுண்மைசொல்லிநான்கேட்க
அங்கவர்தான்சொன்ன அன்பானமந்திரத்தால்
தோன்றுந்தவமிருந்து தொல்லுலகிற்புத்திரரை
ஈன்றுபுதல்வரையும் எத்திறமைகொடென்றார்
அப்படியேதப்பாமல் அவர்சொல்லைமீறாமல்
இப்படியாயுங்களை நா னீன்றெடுத்துக்காப்பாற்றி
தாயாதிக்காரர் சதிகேடர்நாடதனில்
மாயாதேஉங்களையும் வளர்த்தேனிதுவரையுங்

என்னைவிட்டுப்போக எழுந்ததோஉங்கள்மனம்
அன்னையென்றுசொல்லி யருகிருந்துபோற்றாமல்
பிள்ளையில்லாத பெருமலடிபோலாகி
கிள்ளையில்லார்போலக் கிலேசமுற்றுவாடுவேனோ
குந்திமைந்தரைவரென்று குவலயமெல்லாமறிய
முந்தித்தவமிருந்து மூன்றாறுநாட்சுமந்து
பெற்றெடுத்ததாய்வயிற்றிற் பெருந்தழலைத்தான்மூட்டி
வைத்துவிட்டுப்போரமென்று வாய்விண்டுப்பேசுவரோ
ஈன்றெடுத்ததாய்வயிறு எரியவோஎன்னிடத்தில்
தோன்றுமெனக்குத் துயர்வருத்தவந்திரோ
மக்களல்லவேயெனக்கு மாந்தான்போலானீரே
பக்கமுள்ளபெருதவி பண்ணுவரோஎந்தனுக்கு
தன்மரேவீமரே சகாதேவாதம்பியரே
தன்மையாதானே நகுலா அருச்சுனரே
இம்மைதனிற்பாவம் என்னளவில்வந்ததுவோ
செம்மைஜென்மந்தானெடுத்துஞ் சிறப்பார்க்குள்ளானே
இத்தவிதிவசத்தா லென்றலையிலேயயனும் [னை
மைந்தரில்லையென்று வகுத்தெழுதிவிட்டானோ
அருமையுடன்பெற்றெடுத்த ஐவரேதம்பியரே
பெருமையோஉங்களுக்குப் பேசவந்தகாரியந்தான்
இத்தனையுஞ்சொல்லி யிரைந்தழுதாள்குந்தியம்மாள்
சுத்தனையேநொந்தழுது கண்ணீர்சொரியவுற்றாள்
தண்ணீர்தனைவாங்கித் தாய்முகத்தைத்தான்துடைத்து
கண்ணீர்துடைத்தவர் காலிலேதான்விழுந்து
எந்தனுடமாதாவே எங்களையேபழிக்க
வந்தகலிதந்திரத்தில் மாயாமலங்களையும்
சத்தியவாய்மை தவறாமல்நீகாத்து
நித்தியமுமிங்கே நீணிலத்திலேயிருந்தால்
புத்திகலங்கிப் பொறிகலங்கிப்பொய்யாகி
பத்திகலங்கிப் பஞ்சவர்கள்கொஞ்சமதாய்
மெய்வார்த்தைசொல்ல விரதம்பிடித்தவர்கள்
பொய்வார்த்தைசொல்லப் புலையராய்மாநிலத்தில்



சிரிக்கவுடம்பெடுத்துத் திரியாமலெங்களுக்கு
விரிக்கும்பரலோகம் மெய்யுடனேதான்சேர
துதிக்கும்படியாய் துயரமற்றுநீர்தானும்
விதிக்கும்படியாய் விளம்புவீர்மாதாவே
உனக்குப்பரிசித்தே உகந்தபிள்ளையெங்களைப்போல்
தனக்குத்தான்வேணுமென்ற சவுபாக்கியத்துடனே
அன்னசுற்றமெல்லா மருகிருந்துபோற்றிசெய்ய
சொன்னபடிகேட்கத் துரைமக்கள்தானிருக்க
ஆறுவனக்கு அச்சுதனார்தன்பாதம்
வானுள்முடிந்து வரும்போதுநாரணனும்
நாங்களுங்கூட நடந்தெதிரேவந்துநின்று
பூங்குடனேவைகுந்தப் பதியிலேநீயிருக்க
முன்னேபோய்நாங்கள் முற்றுந்தனதாக
அன்னேயிருப்போம் அழவேண்டாந்தாயே நீ
தாயேதவங்குலைந்து தவங்கெட்டுப்போகாமல்
நீயேதுணையாக நேசமுடன்புத்திசொல்லி
கன்மக்கலியுகத்தைக் கடந்துகரையேறி
தன்மந்தவறாமற் றேயோலியாமல்
அக்காலஞ்சென்று அழைக்கவந்தகாலர்கையில்
சிக்காமல்நீரும் சிந்தைமகிழ்ந்திருநீர்
இறப்பதுவும்மெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்பதுகாண்மாதாவே செல்வந்தனையனுப்பும்
ஆகாசம்பூமி யந்தரமுள்ளளவும்
போகாதுதன்மம் புகழேபெரிதாகும்
எனக்குமென்தம்பியர்க்கு மிடமுமினிமேலும்
உனக்குமிருக்க உதவியேதாங்களுந்தான்
இடம்பிடித்துமங்கே இல்லிடமுந்தான்சமைத்து
உடம்படிக்கைபண்ணி உலகளந்தான்றன்னிடத்தில்
வீற்றிருக்கவேண்டி விரும்பியனுப்பிவிடும்
தேற்றிருந்தாலின்றிருக்க நிச்சயமில்லாதவுடல்
சதமல்லதாலுஞ் சதமேஅவடமம்மா
நிதமுஞ்சிவபூசை நீயதினுந்தப்பாமல்

அவடஞ்சதமென்று ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
இவடஞ்சதமில்லையென்று எங்களையுந்தானனுப்பும்

குந்திதன் மைந்தரை நீதுபேசித்தம் வைகுந்தம் போகவிடைகோரிந்து.

மாதாவேதாயே மனங்கள்சலியாமல்
நீதானனுப்புமென்று நீதியுடன்பாதமதில்
வீழ்ந்தார் ரணமென்று மெய்மகிழ்ந்துமாதாவும்
தாழ்ந்தும ஈரிரங்கித் தம்பியரேபோமெனவே
நீறுதரித்து நெடியோனையேநினைத்து
வேறுவினையாராமல் வேதநாராயணரே
காருமென்றுவாழ்த்திக் கைநீறுதானணிந்து
சேருமுத்தன்பாதந் திருமாலைஐவரையும்
என்றுகுந்தமாதேவி இன்பமுடன்றானனுப்ப
மன்னுபுகழ்காந்தாரி மனைநோக்கியேநடந்தார்
காந்தாரிவீற்றிருக்குங் கனகமணிமாளிகையில்
பூந்தாரிவர்கள் புதியமனைபுகுந்தார்
கண்டாரடிபணிந்தார் காந்தாரியம்மனையும்
கண்டமைந்தரைவரையுங் கட்டியுரவணைத்து
மைந்தருக்குநல்ல வார்த்தையுபசாரமுடன்
ஐந்தருப்போல்தானிருந்த ஐவரையுங்கொண்டாடி
சிந்தைமகிழ்ந்துருகித் தேன்மொழியாள்தானிருக்க
அந்தமொழிகேட்டு ஐவருந்தான்மார்க்கமதாய்
எந்தாயேமாதாவே இப்போதுஎங்களையும்
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமிதோ
கலியன்பிறந்தான் காரணமாயிங்குவந்தான்
சலியாமலெங்களையுந் தாயேஅனுப்பிவிடும்
வைகுந்தஞ்சேர்வதற்கு வாழ்த்திவிடைதாரும்
கைகொண்டுநீறுதவுங் கலியனுக்குள்ளாகாமல்
என்றுதன்மார்கேட்க ஏங்கியேகாந்தாரி
ஒன்றுமுறையாமல் ஊசலிட்டுப்பேசாமல்
என்னிடதில் நீங்களுந்தா னேதுக்குவந்தீர்காண்
உன்னிடத்தேனம்பி உற்றதுணையென்றிருந்தேன்



மாபாவிகிட்ட மைந்தரெனவந்தீர்காண்
பூபாலரைவர் போதுமென்றுநானிருந்தேன்
நூற்றுவருமாண்டு நொந்திடைந்துமண்மீதில்
காத்திருந்துநானுங் காலம்முடியுமட்டும்
நீங்கள்துணையென்று நீணிலத்தில்நானிருக்க
நாங்கள்பயணமென்று நன்றாகச்சொல்லவந்தீர்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
பின்செய்ததீவினையோ பெருமாளின்கற்பனையோ
அந்தமைந்தர்நூற்றுவரும் அரசிழந்துபோனாலும்
இந்தமைந்தர்போதும் இங்கேயெனக்குதவி
ஆமென்றுநம்பி ஐவரையுமுண்டெனவே
நாமொன்றுதானினைக்க நடுநின்றோன்பேதகமாய்
தானேமுடித்துவைத்தால் தம்பியரேதுசெய்வோம்
நானேதுசெய்வேன் நாயகமேதம்பியரே
நாளுஞ்சரியாச்சு நடையுடையும்வேறாச்சு
வாழும்புவியைவிட்டு வருவதுவுமங்காச்சு
போங்காலமென்றனக்குப் புத்திரருமில்லாமல்
சாங்காலம்வந்திருக்கத் தம்பியரேஎன்னைவிட்டு
ஏகிடுவீரேயானால் என்றனக்குவேறுதுணை
ஆகிலும்நான்காணேன் ஐவரேஎன்றழுதாள்
பெற்றும்பெருமல் பெருமலடியானேனே
சற்றுமிரங்காமற் றன்மரேபோரமென்றீர்
மாளக்கொடுத்த மனச்சலிப்பேமாறுமுன்
ஆழக்குளிதனிலே அழுந்தவிட்டுப்போவீரோ
பக்கத்துணையில்லை பரிந்தழுகப்பிள்ளையில்லை
துக்கத்துடனிருக்கச் சொல்லிவிட்டுப்போனீரோ
ஆரானிருந்தாலென் யானைகட்டிவாழ்ந்தாலென்
தாராருமைவரைப்போற் சகாயமெனக்குண்டாமோ
செய்யுஞ்சடங்கு திக்கடனும்நீர்க்கடனும்
கையுங்கணைக்குங் கடனுங்கழியாமல்
போகவழிகேட்டீரோ புத்திரரேஎந்தனையும்
ஏகவழிபார்த்து இருந்துபுலம்புவளே

யோசனைகள்சொல்லெனக்கு உத்தமவிசேடமதாய்
வாசனைசேர் தன்மரே நீர் மகனேஉரையுமென்றான்
அந்தமொழிகேட்டு அன்புடனே தன்மருந்தான்
வந்தவழிசொல்லுகிறேன் மாதாவே நீர்கேளிர்
என்னுடையதன்பிறவி ஏற்றதொரு நூற்றுவரும்
மன்னுகுருவாசாரி மகுடமன்னரெல்லோரும்
உற்றதொருமைத்துனனும் உடன்பிறந்தார்சுற்றமுதல்
பற்றறவேகொன்று பாராண்டேன் நான்பாவி
ஆண்டிருந்ததுகாண் அவர்களுடன் நான்போக
வேண்டும்யுகாலம் விதியும்வெளிவசமாய்
காலஞ்சரிபாகிக் கலியுகமும்வந்ததுகாண்
கோலஞ்சரமைத்திருந்த கூற்றுஞ்சரியாச்சு
இனிமேற்கலியுகத்தி லிருந்தேனேயாமாகில்
அனியாயம்மேலாகும் அகந்தையேயுண்டாகும்
இடும்புகொலைகளவு ஏராளமாகிவிடும்
நெடும்புவியிலுள்ளே நீதிநடவாது
அந்தத்துவாபரத்தி லெய்தாதுதானதவம்
இந்தக்கலியுகத்தி லெய்தாதுதானதவம்
நன்றிசெய்தோமென்றால் நமக்கறிவுவேறாகும்
குன்றிவிடும்புத்தி குருகுங்கலிகாலம்
ஆனதினாற்றாயே அடியேன்பயந்துவந்தேன்
தானதவமிழந்து தன்மரென்றபேர்போகும்
பேருந்தவமும் பெருமையுந்தான்போகாமல்
காருமெந்தன்மாதாவே கற்புநிலைபோகாமல்
உன்றனுக்குநல்ல உதவிசெய்யப்பாலகன்றான்
என்றனுக்குப்போரன் இலங்குபரிசித்துடனே
வேந்தர்மகுடமன்னர் வீரபரிவாரமுடன்
சேர்ந்ததுரைமக்கள் சேனைதளத்துடனே
இருக்கிறுருன்றனக்கு ஏவல்செய்யவேண்டியபேர்
உருக்காமபெங்களை நீ ரொன்றுந்தடைபண்ணாமல்
வாக்குத்தம்பாமல் மனமுந்தமொழுமல்
நோக்குமொருதீனவாய் நோகாமல்நல்வசனம்



சொல்லியனுப்புந் துரோபதையுமெங்களையும்
செல்லவிடைதாருமம்மா திருவாக்காலென்றுரைத்தார்
அய்வருந்தான்கேட்க ஆனதொருகாந்தாரி
மெய்வருந்திநல்வசனம் விரும்பிவிடைகொடுத்தாள்
விடைவாங்கிஐவருந்தான் விழுந்துநமஸ்கரித்து
அடைவோங்காண்வைகுந்தம் அச்சுதனார்தம்மிடத்தில்
வென்றுகலியுகத்தை விட்டுவெளியில்வந்தோம்
இன்றுபிழைத்தோம் இனிமேற்கிலேசமில்லை
நமக்குப்பயமில்லையினி நடப்போமெனத்துணிந்தார்
சுமக்குஞ்சுமையிறக்கி துன்பமெல்லாந்தான்கழித்தோம்
கேட்டவரங்கொடுக்கும் கிருஷ்ணனுவுனக்கபயம்
நாட்டமுடன்நாங்கள் நல்லவழியறிந்து
வாட்டமறவாரதற்கு மாயவனே நீ துணையாய்
தேட்டமுடன்வந்து திருவுளமேகாத்தருள்வாய்
வழித்துணையாய்நில்லும் மாலேசரணமென்று
கழித்துமனமகிழ்ந்து கண்ணனர்தனைநோக்கி
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துநன்றாகந்
தோத்திரமுஞ்சொல்லித் துணிந்துநடக்கலுற்றார்

—•—

விருத்தம்.

மாத்திரைப்போதானாலும் மாயனைமறந்துபாரில்
கோத்திரத்துடனேகூடிக்குலாவுதல்செய்யோம்நாங்கள்
பாத்திரமறிந்துவேத பரகதிசெல்லவாரோம்
சூத்திரத்துடனேவந்து துணைசெய்வாய்கரியமாலே

இதுவுமது,

நாடிநடந்துதான்வாரோம் நகரும்பதியும்விட்டேகிக்[கி
கூடிநடந்துவழியேதான்குறித்துத் திசையைத்தானேக்
வாடியிடைந்துமருகாமல் மனமேதானுயட்புகுந்து [லே
தேடித்திகைத்துத்திரியாமல் செவ்வேநடந்துந்திருமா

இதுவுமது.

சித்தன்போக்குஞ் சிவன்போக்குஞ் சிவன்போக்கும்போ
லாகி, மத்தன்போக்குமதம்போக்கும் வானத்திருந்த ம
ழைப்போக்கும், கத்தன்போக்குங்காரியந்தான்கண்டார்

விண்டார் கொண்டாரோ சத்தும்போக்கோ மினிப்பே
சோம்சமையமினிமா கோபாலா (கசு)

இதுவுமது.

சரணஞ்சரணங்கோபாலா சாமிசரணந்தருவாய்நீ
கரணம்பொறிகள்புலன்குணங்கள் காமக்குரோதமனு
திரணமிதுவேசடமாகத் திரமிதுவேபெரிதாக [காமல்
மரணமறியாதுடலாகிவந்தாட்கொள்ளவருவாயே (கஎ)

இதுவுமது.

வழிவிற்பயங்கள்தடையிடைகள்மற்றுமுளதோர்வி
க்கினங்கள் தெளியப்படுத்தியடியார்கள் திகைத்துமலைத்
துநில்லாமற்பழிகள்வினைகளணுகாமற் பால்போலுள
மும் பூரணமாய்வெளியிலறிவு வெளியா வெளியேவ
ருவாய் பெருமானே (கஅ)

கருத்தைப்பொருளாய்த் திறப்படுத்திக் கன்மக்காட்
டையறுத்தெரித்து, திருத்தபறிவை நிலைநிறுத்தி திருந்
தாப்புலனைவேரறுத்துக், குருத்தைக்கொழுந்தைமுளை
கூட்டிகொழுகொம்பேறவகைப்படுத்தி, இருத்திநடத்தி
வழிகூட்டும் எங்கள்பெரியபெருமானே. (க௯)

நானேர்வசனமல்லாது நாவுமிரண்டுசொல்லறியே
ன், தானேதானேதானாகத் தனக்குத்தானே நினைவாகி, ஏ
னேயெனவந் தாண்டாய்நீஇகத்திலெவர்க்குந் தெரிய
வேதான், வானோரறியவழிகாட்ட வருவாய்பெரியபெரு
மானே. (உ0)

தேசமிழந்துஜெகமிழந்து சேனைதனங்கள்தானிழந்து
வாசமிழந்துமனைமிழந்துமைந்தர்பெண்டிர்தனையிழந்து
பாசமொழிந்துபகைபொழிந்துன்பதமலரேபொருளாகி
நேசமிகுந்தநினைவுநிலைநின்றேவனர்த்தபெருமானே.
ஐவருந்துணிந்துவாரோம் அவடமேகெதிகளென்று
தெய்வமேபொருளென்றெண்ணித் தரிசிக்கக்காணக்கண்
கள், மெய்வளர் திருமாஸ்பாதம்வேண்டிவைகுந்தஞ்சேர
க்கைதருமாலேபோற்றி கருணையங்கடலானே. (உக)



ராகவாமுகுந்தாபோற்றி ராஜகோபாலாபோற்றி
ஏகமாய்நின்றாய்போற்றி யெம்பெருமானேபோற்றி
லோகநாயகனேபோற்றி நால்பலவுதித்தாய்போற்றி
நாகமேற்றுயின்றாய்போற்றி ராமனேபோற்றிபோற்றி.
மந்திரப்பொருளேவுன்னை வழுத்தினேன்துதித்துப்போ
தந்திரத்துடனேயென்றன் தம்பியர்நாலுபேரும் [ற்றி
ஐந்தருகுழலிநானும் ஐவரோடாறுபேரும்
சந்திரவரைவைகுந்தந் தன்னையேநோக்கிவாறோம்
அரிகரிராமராமா அச்சுதாநந்தகோபா
கரியமாலுந்திபூத்த கார்முகில்மேகவண்ணா
பிரியமாயவனியீன்ற பிரமனைப்பெற்றமாயா
உரியவாபதவிசேர உகந்தவர்வாரோம்வாரோம்.

கதை.

பஞ்சவர்களைவருடன் பத்தியுள்ளதுரோபதையும்
சுத்தமலர்வைகுந்தங் காணவென்றுநானடந்தார்
நடந்ததொருபஞ்சவரை நல்லபரிசித்துவுந்தான்
தொடர்ந்துவழிவிட்டுத் தொழுதுநமஸ்கரித்து
சேனைபடைத்தலைவர் ஜெகவேந்தரெல்லோரும்
ஆனைபரிரதமும் ஐவருந்தான்தொழுது
வந்தார்களத்திபுரம் மகுடமுடிமன்னரெல்லாம்
நொந்தாரிடைந்தார் நோக்கிவனம்போனவர்மேல்
காசினியோரெல்லாங் கலங்கிமனம்வெருகி
வாசனைசேரைவர் வனம்போனரென்றுசொல்லி
கோவென்றழையமிட்டுக் கொற்றவரைக்காணுமல்
பாவமோவென்று பரதவித்துநிற்பாரும்
ஐயோசிவனே ஐவருந்தானிழந்து
மெய்யோபுவியை விரும்பியிருப்போமோ
மன்னர்மன்னரெல்லாம் மனைகள்தானிருந்து
தென்னவரைக்காணுமற் தேடிநினைப்போரும்
ஆரிருந்தாலென் ஆனைகட்டிவாழ்ந்தாலென்
தாராருமைவரைப்போற் றுரணியிற்கிட்டாதே

போனவழிபார்த்து புலம்பித்தவிப்போரும்
தானவனேயென்று தலைவிரித்துநிற்போரும்
வஞ்சனைகள்செய்தோமோ மாபாவியானோமோ
பஞ்சவரேஉங்களுக்குப் பாவிகளுமானோமோ
உங்களையும்விட்டு உலகிலிருப்போமோ
எங்களையும்விட்டு நீ ரிருக்கமனதாமோ
ஊரிருக்கச்சேனை யுலகேழுந்தானிருக்க
சீரிருக்க நீரும் தேசமிழந்தீரோ
பாரிருக்கச்செல்வம் பரிகரிகள்தானிருக்க
தேரிருக்கவாழ்ந்த தேசம்விட்டுப்போவீரோ
தாரிருக்குமார்பா தனஞ்சயனேஇங்கேயுன்ன
பேரிருக்க நீரும் பிறதேசம்போனீரோ
மாடமிருக்கமனைவிமக்கள்தானிருக்க
கூடமிருக்க குடியிழந்துபோனீரோ
தாழ்விலாச்செல்வம் சகலபொருள்தானிருக்க
வாழ்வில்லாவாழ்விழந்து வனவாசம்போனீரோ
நன்மரேவீமரே தனஞ்செயரேதம்பியரே
நன்மைசெய்து நீங்கள் நாடிழந்துபோவீரோ
துடியிடையாள்சோரத் துரைமக்கள்தான்சோர
அடியெடுத்துவைத்து அவனிவிட்டுப்போனீரோ
குந்தியம்மாள்தானிருந்து குழந்தைகளையேநினைந்து
அந்திசந்திதேடி யழுகுரல்கேட்கலையே
வேதாவிதித்த விதியின்படியெனவே
மாதாவழுகுரல் வைகுந்தங்கேட்கலையோ
சாந்ததமருந் தங்கிளையுஞ்சுற்றமுடன்
காந்தாரிகூடவென்று கதறினதுகேட்கலையோ
காலங்கலியுகத்தைக் கடந்துவழிகூடி
கோலங்கள்கொண்டு கூட்டோடேபோனீரோ
கூடுகொண்டுபோன குருகுலத்துமன்னரென்று
நாடுள்ளமட்டும் நடக்குமென்றுபோனீரோ
மெய்கண்டதுவரென்று மேதினியோர்கொண்டாட
வைகுந்தஞ்சேர மனந்துணிந்துபோனீரோ



ஆறுவினிமேல் ஐவர்செயலுண்டெனவே
மாறுபிமானமுடன் வாழ்வோம்புவிமீதில்
என்றுமன்னர்கூடி யிருந்தமன்னர்மந்திரிமார்
சென்றுபரீசித்துமனந் தேற்றியுபசரித்து
பூலோகந்தாங்கும் புரந்தரனேயிப்போது
ஆலோசனைகள்பண்ணி யழவேண்டாமென்றமந்தி
வழிவசமாய்நாளும் மனதைமிகத்தேற்றி
களிகூர்ந்திருமெனவே காவலருங்காத்திருந்தார்
காத்திருந்தமன்னரையுங் காவலர்கள்தங்களையும்
பார்த்திருந்துசொல்வான் பரீசித்துவேந்தனுந்தான்
குந்தியம்மாள்பாட்டியவள் கூவென்றழுதசத்தம்
புத்திகலங்கிப் பொறிகலங்கிப்போகுதையா
அந்தமனத்துயரம் யாவருக்கும்போயாற்றுதற்கு
எந்தனுடன்கூட வெழுந்தருளுமென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அரசமன்னர்தான்கூடி
வந்துகுந்தமாதேவி மனச்சலிப்புதான்தீர்த்து
காந்தாரிமாளிகையிற் கட்டுடனேதானடந்து
பூந்தாரிருந்தார் பொற்கொடியாள்தன்சலிப்பும்
வேண்டாமெனத்தீர்த்து வீற்றிருந்தாரம்மானை
காண்டாவனமெரித்த கண்ணுதலோன்தன்புதல்வன்
பார்வேந்தர்போற்றப் பரீசித்துமன்னனுந்தான்
தார்வேந்தர்கொண்டாடத் தரணியையாண்டிருந்தான்
தேசக்குறிப்புத் தெரியவெடுத்தெழுதி
வாசக்குடிதழைக்க மனுநீதிதப்பாமல்
அரசருடசீமை யடங்கலெடுத்தெழுதி
விரசப்படிக்கு விபரமாய்க்கண்டெழுத
மன்னரமச்சர் மற்றுமுள்ளோர்தங்களுக்கு
ஆனைபரிக ளடங்கலுக்குமிப்படியாய்
சேனைதனந்தனக்குஞ் செல்லும்படியெழுதி
வாசல்வழிகள் மனையாட்சியுள்ளதுக்கும்
ரோசபடிச்சிலவு ரொக்கமாய்த்தானடத்தி

வேதியர்களந்தணர்கள் வீரசைவபூசிகர்க்கும்
ஓதியதபோதனர்க்கும் உள்ளபடிதான்கொடுத்து
நீதிவழுவாமல் நெறிமுறைமைதப்பாமல்
சாதிமுறைமை தவங்குலைந்துபோகாமல்
அதிபரதேசியரும் அவதியென்றுசொல்லாமல்
பகுதியுமேஆதிலொன்று படியேதப்பாமல்
தெய்வத்தலங்கள் சிறப்புடையபூசைகளும்
ஐவிருந்தநுபோ லவனியெல்லாங்கொண்டாட
கொலுவிலிருந்தால் குவலயங்கள்போற்றிசெய்ய
வலுவானவாள்வீமன் மகனுடையசிங்காரம்
மன்மதனென்று சாற்றுஞ்சிலபேர்கள்
தன்மராமென்று வாழ்த்துஞ்சிலபேர்கள்
வில்லியுடதன்பேரன் விஜயன்காணென்பாரும்
சொல்லரியவீமன் துரந்தரிகனென்பாரும்
நல்லசகாதேவன் ராஜனிவனென்பாரும்
வல்லபுகழ்நகுலன் மன்னன்காணென்பாரும்
ஐவர்குலந்தனக்கு அரசுநிலையென்பாரும்
சைவர்சமயந் தழைக்கவந்தானென்பாரும்
குருகுலத்தில்வந்த குலக்கொழுந்தாமென்பாரும்
பெருகுந்தமிழ்வளரும் பிரபலன்காணென்பாரும்
கனகநிதிகொடுக்குங் கர்னன்காணென்பாரும்
தனதனெனுங்குபேர தனபதிகாணென்பாரும்
ராஜாதிராஜனிவன் ராஜசிங்கமென்பாரும்
போஜனிவனென்று பூரித்துநிற்பாரும்
பாராளவந்த பரராஜமென்பாரும்
சீரானநால்வகைக்குஞ் சீமான்காணென்பாரும்
மீதானசெல்வம் விளங்கவந்தானென்பாரும்
ஆதாரமாய்ப்புவியை யாளவந்தானென்பாரும்
வங்கிஷக்கட்டு வரப்பழிந்துபோகாமல்
அங்கிஷங்காக்கவந்த ஆண்பிள்ளைகாணென்பாரும்
எல்லோரும்வாழ்த்திமினி எண்ணமிலையென்பாரும்
பல்லோரும்போற்றப் பார்த்திபன்போல்வீற்றிருந்தான்



தேசமெங்குங்கொண்டாடச் சிங்காசனத்திருந்து
ராசனெனயோகம் நடத்தும்படிகேளீர்
நந்தவனந்தோப்பு நாலுதிக்கும்நின்றிலங்க
சந்தனச்சோலைகளுஞ் சாலைகளும்சூழ்ந்துநிற்க
செண்பகச்சோலைகளும் செங்கழுநீரோடைகளும்
பண்பானதெங்கு பலதிக்குஞ்சூழ்ந்துநிற்க
பூமரங்களெங்கும் பூமலர்கள்தான்சொரிய
மாமரங்களெங்கும் வளமாப்பழம்சொரிய
தெங்குபலாவிலுப்பை சிறந்தநெல்லியாரஞ்சு
கோங்குகமுகுபுன்னை கூட்டமாய்ச்சாய்ந்துநிற்க
கன்னல்கதலி கதிர்க்குலைகளீன்றுநிற்க
செந்நெல்வயலுஞ் செந்தாமரைத்தடமும்
செல்வமுடன்தேசஞ் சிறப்பும்அரசிருப்பும்
வில்வவனஞ்சூழ வீற்றிருக்கலச்சுமியும்
பூங்காவனமும் புதியமலர்ச்சோலைகளும்
பாங்கானவாவிகளும் பதியும்பதிச்சிறப்பும்
கோபாலர்தன்பேரன் கொற்றவன்போல்வீற்றிருந்தான்
பூபாலனுமிருந்து பூமியவனாளுகையில்
மந்திரிமார்வந்து வாய்புதைத்துச்சேதிசொல்ல
தந்திரிமாரெல்லோரும் சரணமென்றுபோற்றிசெய்ய
மன்னனரசிருக்க மண்டலத்தோர்காத்திருக்க
தென்னவர்கள்வந்து திறையிட்டுக்காத்திருக்க
அரசரோடுசேனை ஆனைபரிரதமும்
முரசொலிகளார்ப்ப முடிமன்னர்சூழ்ந்திருக்க
கொடிபிடிகளார்ப்பக் கொடிமன்னர்காத்திருக்க
அடியதிரப்பேரிகைகள் துரைமக்கள்காத்திருக்க
காளமொடுபேரிகையுங் கனகதப்புந்தான்முழங்க
தாளமொடுமல்லாரி சங்குத்தொனிமுழங்க
கைத்தாளமேளங் கடல்போலவேமுழங்க
மத்தளம்பம்பை மணிகள்மிகமுழங்க
ஜெயகண்டிநாகசின்னம் ஜெகமெல்லாம்தான்முழங்க
ஆகண்டலன்போலே அரசன்கொலுவிருக்க

ஆலாத்திப்பெண்கள் அலங்காரமாக நிற்க
தாலத்திருவிளக்கு சமூகத்தைச்சூழ்ந்து நிற்க
மெல்லி நல்லார்கையால் விசிறிகழற்றி நிற்க
வல்லிமருங்கிடையார் மதுரகவிபாடி நிற்க
முன்னனையபெண்கொடியார் வெண்கவரிதான்வீச
பொன்னணிசேர்மாதரெல்லாம் பூமலர்கள்தான்சொரிய
பாவாடைவீசப் பாவாணர்கொண்டாட
நாவலரைப்பாட நாட்டியப்பெண்ணாடிவர
கொற்றக்குடைநிழற்றக் குப்பக்குழலுடனே
மத்தகெஜமீதேறி மன்னன்பவனிவர
ஆலவட்டஞ்சூழ்ந்துவர அதிவீரர்முன்னடக்க
பீலிவட்டஞ்சூழ்ந்துவர பேரணிகள்பின்னடக்க
சந்திரகாவிபிடால் தளத்துடனேசேர்ந்துவர
இந்திரவிமானமது இணையாய்நெருங்கிவர
சாந்துசவ்வாதுடனே சாம்பிராணிதான்வீச
எந்துமுலைமாதர் இருபுறமுமாடிவர
கட்டியங்கள்கூறக் கனவிருதுமுன்னடக்க
பட்டணமுங்கோட்டைகளும்பவனிவலமாக
பார்த்துமிகக்கொண்டாடி பரிசித்துமன்னனுந்தான்
ஆர்த்தர்களும்போற்றிசெய்ய துரைமகனும்பவனிவந்
வந்துமிகாலுவில் மகாராஜன்போலிருந்தான் [தான்
சாந்துபயில்சாஸ்திரங்கள் தான்கேட்கவேணுமென்று
வேதியரைத்தானழைத்து விரையவரவேணுமென்று
ஓதினன்தூதுவன்பால் ஓடினன்தூதுவனும்
அந்தணர்கள்தன்தெருவில் அன்னேரந்தானோடி
கொந்தலரும்வேதியனார் குடிலிலிருந்தவரை
கண்டுநமஸ்கரித்து காவலரேவேதியரே
அண்டர்பெருமாள் அழைத்துவரச்சொன்னார்காண்
என்றுசொல்லவேதியரு மேதென்றெழுந்திருந்து
நின்றமனையாளை நிமிஷத்தில்வாருமென்று [றோர்
புத்தகத்தைத்தானெடுத்துப் பொற்கொடியேவாருமென்
வித்தகப்பெண்புத்தகத்தை விரைவேகொண்டுவந்தாள்



வந்ததொருபுத்தகத்தை மாமறையோன்தான்வாங்கி
அந்தமுடன்அத்திபுரம் அரண்மனையில்வந்தடுக்கி
பரிசித்துவேந்தனையும் பாங்குடனேவந்துகண்டு
தெரிசித்துஅட்சதையுஞ் செப்பமுடன்தான்கொடுத்து
அரசற்கரசே அரசர்பெருமானே
முரசக்கொடியுடைய முடிபொருந்தமன்னவனே
என்னைவரச்சொன்ன இயல்பேதெனக்கேட்டான்
முன்னைப்பயனும் முடிந்தரகசியமும்
நாளும்பலனும் ராசியுடலக்கினமும்
கோளும்பகையும் குணமுள்ளகாசினியும்
ஆளும்புவியும் அரசியற்கைசெங்கோலும்
வாழும்பதியும் மணப்பொருத்தமுள்ளதுவும்
பார்த்துரையுமென்று பரிசித்துமன்னனுந்தான்
வார்த்தைசொல்லக்கேட்டு மாமறையோர்நூலெடுத்து
ஆராய்ந்துபார்த்து அளவிட்டுச்சாஸ்திரத்தை
நேராய்மனைகீறி நிலையறிந்துகோலெழுதி
ஓரைகள்பார்த்து உச்சநிலைதான்பார்த்து
பேரைவிளங்கிப் பெரியஅரசுநிலை
ராசிபிரித்து நட்சேத்திரம்பிரித்து
ஆசுபலன்தாரகைகள் அடவுடனேதான்பார்த்து
பலகறைகள்வைத்துப் பலசாஸ்திரம்பிரித்து
அலகுநிலைநிறுத்தி அட்டதிக்குந்தானுரைத்து
திசைகள்பதினாறுந் தெரிந்துவகைப்படுத்தி
இசையாகலக்கினங்கள்இதமாகத்தான்பார்த்து
சொல்லுகிறான்வேதியனுந் தேற்றமுடன்சாஸ்திரத்
செல்லுமொருகாலமதில் நிலைகளுண்டாச்சு [தை
கேளுங்காண்மன்னவனே கிருபையுடன்சாஸ்திரத்தை
வாழுங்குருகுலத்து மன்னவனேயுன்னுடைய
ராசிபொருத்தம் நவக்கிரகந்தான்பார்க்க
தேசிகுதிரை திரவியங்கள்தானுமில்லை
உடமைகடமை உற்பத்திதானுமல்ல
கிடைமடையச்செய்பொன்முதற் றேடும்புதையலல்ல

மாடமொடுகூடம் மனையாட்டிமைந்தரல்ல
ஆடவனேஉம்முடைய ஆத்துமத்திலோர்வினைகள்
சென்மச்சனியுந் தேகத்தில்வல்வினையும்
கன்மச்சிறுவினையுங் காலபலம்போதாது
செவ்வாயின்தோஷம் தென்னவனேபோதாது
கவ்வார்வியாழன் கருதிபனிரண்டில்வந்தான்
மாதமொருநாளில் வருகுதுகாணித்தோஷம்
போதாதுனக்குப் புத்திசொல்வந்தான்கேளும்
நத்துவருகுதுகாண் தந்திரமாறியிருந்து
எத்துடனே நீயும் இதமாகத்தானொளித்து
தப்பியிருக்கச் சமர்த்துண்டோயாமாகில்
ஒப்புடனேசொல்லுகிறே னுண்மைதனை நீர்கேளும்
விடவரவுதீண்ட வருகுதுகாண்மித்திரமாய்
அடவுடனிம்மாதந் தந்திரியக்கழிவுதனில்
சர்ப்பத்தினாலே சாவுனக்குத்தட்டாது
உற்பத்தியாக வுரைத்தேன்காண்சாஸ்திரமும்
என்றுமறைவேதியனும் எழுந்திருந்துதான்போனான்
ஒன்றுமனமில்லாம லுள்ளுடைந்துபுண்ணாகி
என்செய்வோம்நாமும் இதுக்குவகையேதெனவே
முன்செய்ததீவினைதான் முடிந்ததோநம்மளவில்
பெரியோர்கள்சாபம் பின்னேதொடர்ந்ததையோ
தெரியாமல்நாம்செய்த தீவினையால்வந்தகுற்றம்
போகநினைவு பொருத்தமுடன்பார்க்கவென்று
வாகானமந்திரிமார் மன்னவரைத்தானழைத்து
நமக்குவருங்கருமம் நாட்டமுடன்போதாது
உமக்குந்தெரிய உரைக்கிறேன்மன்னவரே
சனிபகவான்போதாது சர்ப்பமுந்தீண்டுமென்னை
இனிமேலுபாயம் இருக்கும்படிகேளீர்
கார்க்கடலுக்குள்ளே கம்பமதுதானூன்றி
நீர்மேல்சவுக்கை நிறுத்தியேகால்நாட்டி
சுத்திவரக்காவல் சூழ்ந்துதிறைதிறையாய்
வைத்தாலிருந்து வகையாகத்தப்பிவித்து



வரலாமறைநொடியில் மாளிகையுண்டாக்குமென்றார்
பரமரகசியமாம் பாரிலுள்ளோர்காணுமல்
அந்தப்படியே அலைகடல்மேல்மாளிகையும்
மந்திரிமார்தான்முடித்து வந்துசொன்னாரம்மானை

பாம்புக்குப்பயந்து பரிசித்து கடலிற் போயிருந்தது.

மன்னன்பரிசித்துவுந்தான் மைந்தன்ஜெனமேஜெயனை
தென்னவராமச்சரையும் சேரவரவழைத்து
நான்போயிருந்து வருமளவும்ராச்சியத்தை
தான்போயிருந்து சட்டஞ்செலுத்துமென்று
மைந்தன்ஜெனமேஜெயற்கும் மன்னனுக்குந்தானுரைத்
இந்தப்பயணமென்று ஏகினார்காணம்மானை [து
கடலின்நடுவே கப்பலெல்லாஞ்சூழ்ந்துநிற்க
அடவுடனேகாற்கடலில் ஆகாயப்பந்தலிட்டு
படவுசூரிப்பு பலதிசையுங்காவலுமாய்
இடைவிடக்காவல் எச்சரிக்கைஉச்சிதமாய்
வைத்துநடுவே வகையாகவீற்றிருந்தான்
மைந்தவிடவரவு கார்க்கோடனவனும்
முந்நாட்பழிவாங்க முகூர்த்தம்வந்ததென்றுசொல்லி
இந்நாட்பயணம் இவனெங்கேயென்றழுது
நாடுநகர்தேடி நன்னகரிதான்தேடி
காடுகரைதேடி காவலனுமெங்கேயென்று
உலாவித்திரிந்து ஊரெங்குந்தான்தேடி
பலாபத்துக்காகக் கடல்மேலிருப்பனென்று
ஊரிற்குடியிருக்கும் உற்றஜனங்களெல்லாம்
பாரிற்பலகூடிப் பைபரகசியமாய்
பட்டணத்திலுள்ள பலஜனங்களெல்லோரும்
இட்டமாய்த்தனித்தனியே செப்புமிவ்வசனம்
உரைக்கும்வசனம் உகத்திற்கேட்டபின்பு
திரைகடலைநோக்கிச் சீறவந்தானடந்து
வருகுதுகாண்கோபமுடன் வலுவேகத்தனுடனே
பெருகுகடலருகே பெருநாகம்வந்துநின்று

நீடியதூரம் நிலையாச்சமுத்திரத்தில்
ஓடியொளித்தானிவனை ஒருதொடியிற்றீண்டுதற்கு
உபாயமென்னசெய்வோம் ஒருவழியுங்காணோமே
கபாயமிட்டகப்பலுமுக் கொள்ளுவமாகார்க்கடலில்
தோணிபடவு சொரூபமெடுப்போமா
வாணிபங்கள்செய்யும் வளம்போலெடுப்போமா
சம்பரன்சொரூபம் சாதித்தெடுப்போமா
கம்பமாய்மிதந்து கடல்தனிலேபோவோமா
பட்சியாய்ச்சென்று பறந்துவிழுவோமா
கட்சிக்கரிய காகம்போற்செல்வோமா
பாம்பாய்மிதந்து பழுதைபோற்செல்வோமா
நாம்போகவேநினைவு நால்வகையிலேதெனவே

### பரீட்சித்துவை பாம்பு தீண்டினது.

பார்த்துமுன்று நாகம் பரிசித்தைக்கொல்வதற்கு
வேற்றுருவங்கொள்ள விதமொன்றுங்காணாமல்
என்னவடிவெடுப்போம் இணக்கமொன்றுங்காணோமே
மன்னவனைக்கொல்ல வாய்ப்பொன்றுங்காணோமே
தனதுபோல்நாமும் சற்பனைகள்செய்வதற்கு
மனதுபிரியமுடன் வாரியெடுத்தணைத்து
முகந்துமணங்கொண்டு முகத்தோடுறவணைக்க
மிகுந்தகனியொன்று விசாரித்துபார்ப்பளவில்
இன்றுல்புளித்திருக்கும் தின்னவென்றுற்பக்கசம்
கண்டாற்களிகூறுங் கண்மலரிற்றுணையும்
திவ்வியமானதொரு தெய்வக்கனியாகும்
அவ்விதமானவுரு வாகநினைவுகொண்டு
எலுமிச்சதற்கனிதா னின்பமுடன்தோன்றுகையால்
வலுமிச்சமென்று வடிவெடுத்தான்கார்க்கோடன்
கனிரூபங்கொண்டு கடலிற்குதித்திறங்கி
தனியேமிதந்து தடையறவேபோகலுற்றான்
கப்பல்விட்டுச்சுற்றிக் காத்திருந்தகாவலர்கள்
தெப்பமெனவோர்கனிதான் தெரியுதுகாணென்பாரும்



அந்தாவருகுதுபா ரதிசயங்காணென்பாரும்
வந்தாலெனக்கென்று மற்கட்டிநிற்பாரும்
எனக்கெனக்கென்றுசொல்லி இச்சித்துநிற்பாரும்
உனக்கேன்கிடைக்குமென்று உபாயமிட்டுநிற்பாரும்
நான்கண்டேனென்று தாண்டிவிழநிற்பாரும்
நான்கண்டேனென்று நகைத்துச்சிரிப்பாரும்
ஆர்கண்டாலென்ன அமையாதொருவருக்கும்
பார்கொண்டராஜன் பரிசித்துவேந்தனுக்கு
தக்குமேயல்லாது தர்க்கமிட்டுக்கொண்டாலும்
சிக்குமோஉங்களுக்குத் தெய்வகனியென்பாரும்
இப்படிச்சொல்லி இசலிவெகுஜனங்கள்
நிற்பளவிற்சம்பீரம் நிலையாச்சமுத்திரத்தில்
அலையிலடிப்பட்டு அசைந்தசைந்துதான்குதித்து
கொலைசெய்யவாரதொரு குருசம்பீரங்கனிதான்
ஒதுங்கிவழிவிலகி ஒருஇடமும்போகாமல்
பிதுங்கிநெகிழாமற் பிடித்தார்பழந்தனையும்
எடுத்தகனிதன்னை இன்புற்றுஎல்லோரும்
அடுத்தகனிதன்னை அனைவோருந்தான்பார்த்து
யோசனைகள்பண்ணி ஒருமித்துஎல்லோரும்
ராஜனுக்காகுமென்று நடந்தார்சமுகமதில்
மன்னன்பரிசித்து மகாராஜன்றன்கொலுவில்
தென்னவர்கள்காரியப்பேர் சென்றுதொழுதேத்தி
ஆண்டவனேஎங்கள் அரசர்பெருமானே
நீண்டவனே நாங்கள் நீணிலத்திற்கண்டதில்லை
கண்டறியாக்காட்சியெங்கள் கையில்வந்துசிக்கியதே
புண்டரிகமார்பா புவியரசேஉன்யோகம்
அதிசயமாய்க்கண்டெடுத்தோம் அய்யாபுதுமையிது
விதிசேரும்யோகம் வெகுயோகமாமுனக்கு
வந்ததுகாணென்று வாழ்த்தியேயெல்லோரும்
சந்துபயில்மன்னன் தார்வேந்தன்றன்னிடத்தில்
கொண்டாடிக்கையிற் கொடுத்தார்கனிதனையும்
கண்டான்துரையுங் கனபிரியமாய்மகிழ்ந்து

நல்லகனியென்று நகைத்துமுகமலர்ந்து
செல்வமகன்வாங்கிச் செந்தாமரைமுகத்தில்
ஒத்திடுவன்கண்ணில் ஊடுருவக்கார்க்கோடன்
கொத்திடுவன்சீறிக் குதித்தான்கடல்தனிலே
பழிநமக்குவந்ததென்று படவரவுதானினைந்து
வழிகூடியேநடந்து மறைந்ததுகாணம்மானை
விதியின்பயனை விலக்கலாமென்றுசொல்லி
மதியுடன்வந்தொளித்த மன்னவனும்பட்டிருந்தான்

விருத்தம்.

விதியின்பயனை விலக்கவென்றுவிரும்பியொருத்தன் மூத்தானில், அதிபுதலையைத் தான்சிரைத்து அகன்றுபிழைத்துவருவமென்று, சதியேவருவதறியாமல் தாழ்நிழலிற்போயிருக்க, விதிதான்மொட்டைத் தலைதனிலே விழுமாம்பழமென் கனிதானே. (சுள)

வெண்பா.

தலையில்விதித்த விதிதனக்குத் தலையைச்சிரைத்தோன்பட்டதுபோல், அலைமொளித்த பரீசித்தும் அமத்தாரைவிடுத்தாலே, கொலைசெய்த பழிபாவங்கொலையாய்முடித்து தனைவேங்கி, மலையாநிருத்த மன்னரெல்லாம்மலைந்தேதுலைந்து குலைத்தாரே. (சுஎ)

வெண்பா வேறு.

எங்கினர்முகங்கள்வாடி யென்செய்வோமென்றுசொல்லி
தாங்கினர்ராசதன்னை தனமெல்லாமபயமென்று
ஏங்கினர்தலைகவிழ்ந்து ஆயாரும்வேறுவேறாய்
ஓங்கினர்குமரன்கேட்க உத்தமமெழுதுமென்றார். (சுஅ)

கதை.

பட்டிக்கிடைக்கின்ற பரீசித்துவேந்தனையும்
கட்டிக்குள்வைத்துக் காவலிட்டுத்தான்போற்றி
சாந்துசவாது சந்தனமுந்தானிமிர்ந்து
பூத்துகிலுமாபரணம் பூமலரும்வாசனையும்
கமகமவென்றிருக்க கனமெல்லாந்தானிமிர்ந்து
சம்மானபொட்டகத்தில் சயனமாய்த்தானிருத்தி



முன்னேஎழுதிவிட்டார் முடிபொருத்தவேந்தனுக்கு
பின்னேபயணம் பெருங்கடலைவிட்டகன்றார்
ஓலைதனைக்கொண்டு ஒருநாகதேடியங்கே
சேலைதலைகுலைய ஜெனமேஜெயன்சமுகம்
தெண்டனிட்டுத்தான் சென்னிதனைக்கவிழ்த்து
தெண்டனுக்குவாய்தான் துணியுமோஎன்கோவே
என்றோலைதன்னை யெடுத்துமுன்னேவைக்கவுற்றான்
நின்றோலைவாசித்து நிலத்திலேதான்விழுந்து
மன்னனதிரவின்னதிர வயிற்றிலறைந்தழுது
கண்ணீர்களாறோடக் கதறியழுகவுற்றார்
வந்தொருநாகவனை வகையேதெனக்கேட்டான்
அந்தமொழியெல்லா மவன்வகையாய்ச்சொல்லவுற்றான்
கேட்டுஜெனமேஜெயற்குக் கிலேசமிகவுண்டாகி
நாட்டிப்புகழ்மன்னனையும் நாழிகையிலிங்கேதான்
கொண்டுவரவேணுமென்று கொற்றவருந்தானுரைத்
பண்டிசிவிகையின்மேற்பார்த்திபனைத்தானெடுத்துத்தான்
வந்தார்களத்திடம் மன்னவனைக்கொண்டேகி
சந்தானமான ஜனங்கள்விழுந்தலறி
அனலின்மெழுகதுபோல் அங்கமெல்லாந்தானுருகி
மனைவிமக்கள்சுற்றம் வந்துவிழுந்தலறி
கோவென்றசத்தங் கூக்குரலுந்தானுக
ஆவென்றழுக அனைவோரைத்தானமர்த்தி
நில்லென்றமர்த்தி நினையாதெல்லாநினைத்து
வெல்லும்பரீசித்துமகன் வேந்தன்ஜெனமேஜயனும்
அழுதுபரதவித்திங் காணவொன்றுமில்லை
பழுதுசெய்துபோனதொரு பாம்புதனைவதைத்து
எந்தன்பிதாவை எழுப்புவனோயல்லாது
அந்தவனைகவிழ்த்துக் கானமெல்லாந்தேசரித்து
எழுப்பிடுதற்பின்னை மில்லாட்டாலென்னபின்னை
மழுப்பியழுதால் வருமோஉயிர்தானும்
தந்தையரைவைத்துச் சமர்த்தாகத்தானிருத்தி
விந்தையுடனேவேள்வி விதமாய்வளர்க்கவுற்றான்

ஜெனமேஜெயமகாராசன் சர்ப்பயாகஞ்செய்தது.

சாஸ்திரத்திலுள்ள நளபாடமத்தனையும்
சூஸ்திரமாய்ச்சேகரித்துச் சூழத்திரைவனைத்து
வேதியரைத்தானழைத்து வேணதெல்லாந்தான்கொடுத்[து]
ஓதியவேதமது ஒன்றுங்குறையாமல்
சொல்லுமுயிர்திரும்பச் சூட்டுமென்றான்வேதாந்தம்
கல்லுமுருகிவிழக் கதித்ததொருமந்திரத்தால்
உற்பத்தியானதொரு ஓமஅனல்தான்மூட்டி
சர்ப்பத்தைவெந்துவிழத் தாக்குமென்றார்மந்திரத்தை
ஆமென்றுசொல்லி அந்தணருந்தான்கூடி
ஓமென்றுவேள்விசெய்ய ஓமத்திமூட்டினரே
யாகத்திபூண்டதுகாண் அண்டமுகடுமட்டும்
சாகத்தான்சர்ப்பந் தவிடுபொடியாக
நீராகிவெந்து நெருப்புத்தணலாகி
வேகுதிச்சர்ப்பம் வெந்துநீராவதற்கு
எங்கேனத்தேடி எழுந்ததேஅக்கினியும்
அங்கேஅரவமது அக்கினிக்குஆற்றாமல்
ஈரேழுலோக மெங்கெங்குந்தானோடி
பாரேழுந்தானலைந்து படவரவுஆற்றாமல்
மேலசந்துநாகம் வெருவிப்பயந்தேகி
காலசந்துஓடிக் கலவில்விழப்பட்டிடைந்து
பார்த்தவிடமெல்லாம் பரந்தெழுந்தஅக்கினியால்
ஆற்றமுடியாமல் ஆயிராவதத்தனிடம்
ஓடிச்சிங்காசனத்தி னூடேநுழைந்துகொண்டு
நாடிச்சீர்பாதம் நமஸ்கரித்துத்தெண்டனிட்டு
அபயமுனக்கபய மடைக்கலங்காணென்றுசொல்லி
உபயமுனக்காரும் உத்தமனேயென்றலறி
தெய்வேந்திரன்சடையிற் சென்றடுகுந்தவர்முன்
அப்வருடபேர ஒளைபரிச்சித்துவைத்தான்
முற்பழிசெய்தானெனவே மூயன்றவனைநான்தேடி
பிற்பழிதான்கேட்டுப் பிராணனையேவாங்கிவிட்டேன்



அந்தப்பழிகேட்க அடியேனைத்தொடர்ந்து
இந்தஜெனமேஜெயனும் ஏன்பேரிலக்கினியை
ஏவிவிட்டான்தாங்க என்னால்முடியாமல்
தாவிவிட்டுவந்தடைந்தேன் சரணமெனைக்காரும்
என்றரவஞ்சொல்ல இந்திரனுமப்போது
மன்றலருந்தின்புயத்தான் மன்னன்ஜெனமேஜெயனுக்கு
இந்திரனுஞ்சீட்டெழுதி யேவினான்தூதுவனை
அந்தரத்துத்தூதுவனும் அரைநொடியிலோடிவந்து
சீட்டைக்கொடுத்துச் செய்திசொன்னான்தூதுவனும்
சீட்டதனைப்பார்த்து ஜெனமேஜெயன்பயந்து
நம்மிடத்தில்வந்தவரை நாமேவதைகள்செய்தால்
தம்மிடத்தில்வந்தவரைத் தான்கொல்வரோபுவியில்
முன்னாட்டவமிருந்த முனிவன்மேல்நாகமதை
மன்னாஉன்தகப்பன் மாலையாய்த்தானணிந்தான்
கோபம்பெருமல்முனி கூறினார்சாபமதை
பூபனேசாவுனக்குப் போமென்றுசொன்னார்காண்
அந்தமுனிசாபம் அருகேகுடியிருந்து
வந்ததிவசந்தான் வருமளவும்பார்த்திருந்து
ஏழுந்துமுடிவும் இறுதியிம்மட்டெனவே
கொழுந்தமறலிவந்து கூட்டிசென்றதாலென்ன
சமையமிதுவென்று சர்ப்பமுந்தீண்டினது
அமையுமோஉன்றல் அமையாதுமன்னவனே
யாகத்தைத்தானமத்தி யாற்றுமென்றார்கோபமதை
வாகுற்றயாகம் வளர்த்தாயேயாமாகில்
ஏகமாய்ப்பற்றி எரியும்புவனமெல்லாம்
நாகமட்டும்எகுமென நடவாதுஇச்செய்தி
அண்டமெடுக்கும் அகண்டமுதலட்டதிக்கும்
விண்டலமும்வெந்து வெளியாய்முடிந்துவிடும்
உனக்குநிலையில்லை உலகத்திலெவ்வளவும்
எனக்குநிலையில்லை இந்திரனென்பேருமில்லை
செத்தாற்பிழைப்பதுண்டோ தேசத்திலுள்ளோர்கள்
மற்றுருஞ்சொல்லார் மயக்கத்தைவிட்டுவிடும்

நித்தைதனைபடக்கிச் சாஸ்திரங்கள் தான்முடித்து
வித்தையாய் நீயிருந்து மேதினியையாளுமென்றார்
வாசவன்கைச்சீட்டு வாசகத்தின்நகீருமல்
ராஜன்ஜெனமேஜயனும் நல்லதென்றுசம்மதித்து
ஆரியர்த்து அனைவோருந்தான்கூடி
தேதித்தெளிந்து தெய்வமேயென்றுசொல்லி
மந்திரிமாரும் மகுடமுடிவேந்தருடன்
தந்திரமாய்த்தானிருந்து சடங்குதனைமுடித்து
மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமீய்ந்து கொற்றவன்கையாலே
சடங்குமுடித்தார்காண் சாஸ்திரத்திலுள்ளபடி
அடங்காக்கிலேசமெல்லாம் ஆறித்தெளிந்தபின்பு
மன்னரமச்சர் மகுடமுடிவேந்தருடன்
தென்னவர்களெல்லோரும் ஜெனமேஜயன்றனக்கு
பட்டந்தரித்துப் பாராளுமென்றுசொல்லி
இட்டப்படித்தி ஜெகவேந்தர்காத்திருந்தார்
இருக்குந்தருவாயில் ஏலவேசாபமிட்ட
வருக்கமுள்ளமாமுனிவன் மன்னன்பரிசித்துவைத்தான்
நாளுமதுதீண்டுகையால் ராஜன்மடிந்திடுவான்
சாகுமுன்னேசென்று சர்ப்பத்தின்றன்விஷத்தை
இருப்பிவிஷமூட்டித் தென்னவனைத்தானெழுப்பி
விருப்பமுடன்வைப்போம்நாம் மேதினியையாளுமென் [று
தன்சாபந்தீர்க்கத் தவசிவருகையிலே
வம்பானசர்ப்பம் வழியிலெதிர்வந்ததுவாம்
எதிராகவந்ததொரு ஏற்றதவசுதன்னை
சதிராகவாழுந் தவமெங்கேயென்றுசொல்லி
நாகமதுகேட்க நற்றவசியேதுசொல்வான்
லோகமுழுதாளும் நிருபமதன்றன்னையொப்பாய்
இருக்கும்பரிசித்துவுக்கு என்றுடையசாபமதால்
பெருக்கவிஷந்தீண்டிப் பிடிக்கவருகுதென்று
தீர்த்துவிஷந்தன்னைத் திருப்பிவிடவேணுமென்று
ஏற்றதிசைநோக்கி பேகிவைத்தோம்கண்டீரோ



என்றுமுனிசொல்ல இடைந்திருந்துகார்க்கோடன்
நின்றுமயங்கி நெடுமூச்சுக்கொண்டுழன்று
படவரவுதீண்டிப் பரிசித்துராஜனுந்தான்
சடமழிந்துபாரிற் றனல்கொளுத்திச்சுட்டுவிட்டார்
சாம்பல்குவித்துச் சடங்குமுதற்செய்துவிட்டார்
வன்போசிரென்றரவம் எதிராகச்சொல்லியபின்
மெய்யோஉன்சாபம் வினையாய்முடிந்ததுவோ
அய்யோஅரசிழக்கலாமோபுவிமீதில்
நம்மாலரசனுக்கு நாசம்வந்ததாகையினால்
சும்மாவிடலாமோ தோஷம்நமக்குவரும்
அத்தியடக்கி யதுசாம்பலாறுவும்
சுத்தமாய்நாமெழுப்பித் துரைமகனையுண்டுபண்ணி
திக்கெல்லாம்போற்றத் தேசத்தையாளுதற்கு
வைக்கலாமென்று மனத்துணிந்துவந்தேன்காண்
இல்லாததாலெனக்கு ஈடேற்றம்வாராது
பொல்லாதசாபம் பொருந்தவுரைத்துவிட்டேன்

விருத்தம்.

வாக்கினாற்கண்ணாற்கையால் மனதினாற்செய்தபாவம்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனதினாற்றீரவேணும்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனதினாற்றீராவிட்டால்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனதிலழிந்துபோமே()

கனத

வாக்கினாற்கண்கையால் மனதினாற்செய்தபாவம்
வாக்கினாற்கண்கையால் மனதினாற்றீரவேணும்
தீராதேபோனாற் றிருவுளத்துக்கேறாது
வாராதசிவனையும் வரவழைத்துச்சாம்பலையும்
உருவாய்வருத்தே உயிரைஉடல்பொருத்தி
குருவினுடமந்திரத்தாற் கொள்ளலாங்காரியமும்
என்றுமுனிசொல்ல ஏற்றதொருநாகமது
ஒன்றுமறியாம லுரைத்திரோமாமுனியே
நாமென்றுசொல்லுகிறோம் நமக்கிசைய நீர்தாமும்
ஆமென்றுசெய்தா லதிசயமாமென்றறிவோம்

மாமரந்தான்பூத்து வடுவுடனேகாய்கனியாய்ப்
பூமரந்தான் திற்திறதைப் புகைந்தெரியத்தீண்டுகிறேன்
பற்பமாய்ப்போகும் பச்சைமாமான துவும்
உற்பத்தியாக உயிர்மரம்போலாக்கிவித்தால்
செத்தார்பிழைப்பார்கள் ஜெகத்துள்ளோர்கொண்டாட
வித்தகரேமாமுனியே மெய்யென்று நானறிவேன்
சற்பமிவைசொல்லச் சன்யாசி ஆமெனவே
கற்பகப்பூமாமரத்தைக் கடியுமென்றதா னுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு ஒருமித்து நாகமது
இரைத்தரவத்திறி எயிறுடையதந்தமதால்
வாய்விரைத்துகவ்வி மாமரத்தைத்தீண்டியதே
காய்கனிகளுள்ள கப்புக்கவர்களெல்லாம்
வெந்துநீரானதொரு விருட்சமெனுமாமரத்தை
சந்தியமில்மாமுனிவன் தளிர்மரம்போலாக்கிவிட்டான்
அப்போதுமாமுனியை அரவமதுகொண்டாடி
இப்போதுநம்பழிக்கு ஈடாகப்பண்ணிவித்தோம்
அஷ்டமாநாகமதில் யாதொருத்தன் தானும்
இஷ்டமுடன் நீரும் எழுப்பிடுவீர்மாமுனியே
எங்ஙளதிகாரம் என்னமெல்லாம்போய்விடுங்காண்
திங்களொளிரத்னமணி சிரத்திலிருந்தெடுத்து
பெரியவராமென்று பேரரவந்தான்கொடுக்க
அரியமணிவாங்கி யருந்தவசியேகியபின்
நாகமகிழ்ந்து நடந்ததுகாணம்மானை
ஏககயிலாசமதில் ஈசருடசன்னதிக்கு
சென்றரவம்போனதற்பின் ஜெனமேஜெயன்றானும்
அன்றலருந்தாமரைபோ லாகித்தன்றன்வடிவாய்
இருந்தசிலகாலம் இந்திரனைப்போலாகி
இருந்துபுகழ்கொண்ட ஜெயவிஜயன்றன்பேரன்
தேசமொருகுடைக்கீழ் செங்கோல்மனுநீதி
வாசமிருபூவுலகில் மன்னவர்கள்போற்றிசெய்ய
யோகமுடன்பாரி ஆகத்துஜெனமேஜெயனும்
ஏகசிம்மாசனத்தி லிருந்தான்காணம்மானை



விருத்தம்.

பஞ்சவான்பேரனென்னும் பரிசித்தைவிஷங்கள்தீண்டி
அஞ்சினதாகையாலே சுதன்ஜெனமேசன்றன்னை
சிம்மாசனத்தில்வைத்து வேந்தருமமைச்சர்தாமும்
அஞ்சலென்றடிகள்போற்றி அவனியிலிருந்தானன்றே.

இதுவுமது.

இப்படியேதககால மிருந்தரியற்றைசெய்து
சொற்படிதவறுவாய்மை சோர்வறநடத்திக்காலே
முற்படிஞாயம்போல முன்னவனிவறுமென்ன
அப்படியிருந்துபாரி லவனியையாளும்நாளில். (௧௪)

இதுவுமது.

ஆகமவேதஞானம் அருந்தமிழ்கவிதைநூல்கள்
பாகமாயுணர்ந்துகேட்டுப் பத்தியாய்ப்பெரியோர்தம்பா
போகவுமெவருந்தன்மைப்புகழுதுமதிரமோகம் [ல்
ஏகசிம்மாசனத்தி லிருந்துடன்வாழும்நாளில். (௧௫)

கதை.

பார்த்தன்மகன்வான்வீமன் பாலன்பரிசித்துவுடன்
ஏற்றதொருபால விராஜன்ஜெனமேஜெயன்றன்
சீற்றமுடன்பாரித் செங்கோலதிகாரம்
தோற்றமுள்ளநீதி துலங்கும்ரவிமதிபோல்
கத்துகடல்சூழுங் காசினியெல்லாம்விளங்கும்
முத்தும்நவமணிபோல் முளைத்தெழுந்தரத்னமென
வைத்தான்மகராஜன் மன்னன்ஜெனமேஜெயனும்
வித்தமலர்போல விகசிதமாய்ச்சிங்காரம்
தங்கியிருக்குந் தவளமணிமார்பன்
பொங்குபுகழ்பூரணமாய்ப் பூலோகநாயகமாய்
இறைமுறைமையாதிலொன்று என்னளவுமீறுமல்
புறையுடையதன்பமிரவைப் பூலோகமாளுகிறான்
அத்திபுரம்போற்ற அரசாளும்நாளையிலே
சத்தியவாய்மை தவறுதவேதமுனி
பத்திசையுங்கொண்டாட தன்னகிகன்னிவைத்தார்
பாழ்த்தியனைவோரும் மலரடியைப்போற்றிசெய்து

இருக்குந்தருவாயில் இளவரசுதான்கேட்டு
உருக்கமுடன்கண்டு ஒழுக்கமாய்வார்த்தைசொல்லி
போற்றிஜெயமேஜெயனும் பூரித்தகமகிழ்ந்து
ஏற்றிசிங்காசனத்தி லிருத்தியேதான்வணங்கி
கனிவகைகள்சீனிமுதற் கற்கண்டுசர்க்கரைதேன்
இனியபிலாக்கனியு மின்பமுள்ளமாங்கனியும்
வாழைக்கனியும் மாதுளையின் றன்கனியும்
தாழைக்கனியுஞ் சகலகனியுள்ளதெல்லாம்
கொண்டுவந்துவைத்துக் குருவேசரணமென்று
தொண்டுபண்ணிநின்றான் தொழுதுமிகவணங்கி
நல்லதொருவேதமுனி ராஜனையுங்கொண்டாடி
வல்லதொருமாங்கனிதேன் வாரியமுதுசெய்து
தாகமதுதீர்த்து தபோதனரும்வீற்றிருந்தார்
நாகரிகமானதொரு ராஜன்ஜெயமேஜயனும்
தாகமுடன்வேதமுனி தாளிணையைப்போற்றிசெய்து
பாகமுடன்வந்துநின்று பகருவாரோர்வசனம்

விருத்தம்.

பகமுடியுமுன்னுள் பயின்றதோர்வேதமெல்லாம்
மேருவிலாதியாக விநாயகன்கோடுகொண்டு
சீருஞ்சிறக்கக்கீறி ஜெகத்தினிலுதித்தவேந்தர்
போரதுமுடியவென்று புகன்றதுதேவர்தாமே. (ருக)

இதுவுமது.

குருகுலத்தரசர்க்கெல்லாங் குருவெனவந்துதோன்றிக்
கருவுருவகுத்துக்காட்டிக் காசினியாளுமென்று
அருகினிலிருந்த நீதி அறிவுடன்தெளிவுஞ்சொல்லி [றி
பெருகுசீர்புவனந்தன்னிற்பெரும்பகைமுடித்தாய்போற்

இதுவுமது.

பஞ்சவாள்நூற்றுவற்கும் பகையதுவருவதுண்டோ
அஞ்சலென்றமைத்திநீரும் அறிவிலுள்ளபரஞ்சொல்லில்
மிஞ்சவும்பகைகொள்வாரோ வேதமாமுனியேயுன்றன்
வஞ்சமேவஞ்சமல்லால் மற்றென்றுமுடியுமோதான். ()



எத்திசையுங்கொண்டாடும் எந்தன்குலத்தரசே
சத்தியவாய்மை தவறுதமாமுனியே
சீராளருடன் சிறந்ததுரியோதனனும்
பாராளும்நாளிற் பகைகளொன்றும்வாராமல்
தாராளமாகத் தன்மையுடன்கேசரமாய்
பேரானபூதலத்திற் பேதமொன்றும்வாருமல்
மார்க்கப்படுத்திவைக்க வாராதேஉன்றனக்கு
தீர்க்கமுடன்முன்னாள் திரிகாலமுள்ளபலன்
இன்னபடியென்று சஸ்பார்முன்றுரைத்தீர்
சொன்னபடிதப்பாமற் றேற்றமுடன்மேருவினில்
எழுதும்விநாயகமே யென்றிறையோன்தான்கூற
தொழுதுவிநாயகனுர் சொன்னதொன்றுந்தப்பாமல்
ஒருகொம்பொடித்தெழுதி ஊணிவித்தாரும்முடசொல்
பெருகுபுகழ்வேத வியாசரென்றுபேருமிட்டு
நிகரில்லாவேதாந்தம் நிலைகண்டுநின்றுனே
பகருமொழிகேளாத பேருண்டோபாருலகில்
குருகுலத்துக்கெல்லாங் குலக்கொழுந்தாய்நீயிருந்து
அருகிருந்துபுத்திசொல்லு மாசானுமாயிருந்து
வின்னம்வராதபடி வேதியரே நீர்மொழிந்தால்
மன்னவரும்வாழாமல் மாளுவரோபூவுலகில்
எத்தவிதமோகிருபை எதென்றறிவேனே
உத்தன்விநோத மொருவருக்குந்தோற்றுமல்
வஞ்சவினைசெய்திரே மாமுனியேயிப்படித்தான்
உன்செயலேயல்லாது உலகத்திலேவருமுண்டோ
தோராத்துரோணர்மதி சொல்லுங்கிருபருடன்
தாரார்துரியோதனனுந் தம்பிமார்நூற்றுவரும்
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவர்த்தனரும்
சுற்றமுள்ளராஜர் துரைமக்களெல்லோரும்
என்றுதேழுக்ரோணி எண்ணவொண்ணுச்சேனைதளம்
மன்றனைசயற்று மாண்டிறந்துபோனதெல்லாம்
உன்றலேயல்லோ ஒருவர்மேற்குற்றமில்லை
அன்றனிலேயத்து ஆமென்றகாரியந்தான்

தெரியவகைசொல்லி செப்பினீராமாகில்
பிரியாதிருந்து பேதமற்றுவாழுமேரா
இறந்தாரோ நூற்றவர்க ளிருந்தாரோடஞ்சவர்கள்
சிறந்திருந்தபஞ்சவர்கள் செடத்தோரோடேயிப்போது
விற்குதிரைவைகுந்தம் விரும்பியவர்சேர்ந்ததில்லை
அந்தவகையெனக்கு அறியவேசொல்லுமையா
சொல்லுமென்றுகேட்ட துரையோதனமேதையனை
சொல்லுகிறேன்கேளும் தோற்றநடைப்போது
மூண்டதுரையவர்கள் முன்னுணிதூழ்வினைகள்
பின்பொருவராலும் விலக்கவல்லாருண்டோதான்
ஆகையினாலே அவரவர்கள்தீவினையும்
மாயையாய்வந்து வினைநீக்குதானவர்கள்மலினை
என்றுமுனிதானு மெடுத்துரைத்ததெல்லாம்
தின்றுதிரெனமேறையனும் தீனமாகத்தான்கேட்டு
தீனமாதெல்லாந்தீர்ந்து தெளிந்துகளிட்டேட்கில்
இனைமைப்பினையாக்கித் திரணமைதமோரக்கி
கைக்குக்கைவில்லாமல் கால்வேதுதலைவேறாய்
மெய்க்குமெய்யில்லாத விகடமதைத்தான்மூட்டி
ஆட்டிவிட்டிட்டபாவைதனை யாடவிட்டுப்பார்த்திருந்து
ஓட்டிவிட்டபன்னரி குலத்திலுள்ளோர்தனையும்
கட்டிக்கலைக் கொளுத்திவிட்டதுவ்திரம்போல்
மூட்டிவினைசெய் முனியேயினிக்கேளும்
தன்மனென்றுபெரிடுத்துத் தாரணியில்லாத
கன்மமிசெய்முறைக் காசினியிற்றன்மமென்றுல்
என்னவென்றுசொல்லி யெடுத்துரைப்பேனும்மிடத்தில்
தன்மைபுரந்து தனுமுறைபுமற்று
இம்மைமறைமுற்றுவாழ எல்லோருமாண்டிறக்க
வன்மம்பிடித்து வதைசெய்தமாபாவி
இருந்தாரோபாவில் என்றுஞ்சதமெனவே
வருத்தமல்வைகுந்தம் வானேறிப்போனதென்ன
சொல்லுங்காண்மாமுனியே தோற்றமெல்லாந்தீயாக
செல்லும்வழிபும் விதிப்பயனுந்தானுகை



தோற்றுதுகாணென்றனக்குத் தோஷமெல்லாந்தீரென
ஏற்றுமொருவிபரம் இறையோனே நான்காணேன் [வே
பொறையுடையதன்மர் பொய்சொல்லாமெய்யரென்று
நிறையுடையாராகல் நீருரைத்தபூருவத்தை
கேளாரோசற்றுஞ் சிறுமையென்றுபாராரோ
வாழாரோபாரிற் மைந்தரொடுசெல்வமுமாய்
வன்மையாய்த்தீமைசெய்தார் மாண்டுபுவியிழந்தார்
நன்மைசெய்தார்பாராண்டு நானுமிருக்காமல்
என்காணும்பாரிழந்து ஏகினார்வைகுந்தம்
நான்தான்புவியாள ஞாயமோவென்றனக்கு
பாரதப்போருண்டுபண்ணி பகைமுடியமுன்னுனில்
பேருதனிற்குணமுதி விக்கவரும்தீரவோ
நினைத்தபடிமூட்டக் தீர்துணிந்திரல்லாது
மனந்தனையேதீர்திருத்தி வாழவைக்கமாட்டாமல்
புத்திமதிசொல்லிப் பொருத்தவுரையாமல்
சத்துருவாய்மாமுனியே சாப்பனைகள்செய்தீரே
தாராரும்வேந்தர் சமரில்மடிந்ததெல்லாம்
பாராய்முனியேதான் பழிபாவமுன்றனக்கு
சாராமற்சார்ந்ததுகாண் தப்பாதுசொன்னேன்பார்
தீராதபாவமிது செய்தீர்காண்மாமுனியே
என்றுதுரெனமேறையனு மிவ்வார்த்தைதானுரைக்க
நன்றுகாணென்று நகைத்துமுனியேதுசொல்வார்
தம்பியரே இப்படி நீ சமர்த்தாகப்பேசினதால்
நம்பிடவேசொல்வேன் ; நலமாய்க்கேளொன்வார்த்தை
வெம்பிபேசினையுரைத்தாய் விட்டகுறைபாராமல்
நம்பியுயிர்கொல்லும் நமன்றனையுந்தேராமல்
நலைபிலெழுதிவைத்த சதுர்முகனைச்சொல்லாமல்
கொலைசெய்யுமுருத்திரனைக் கூர்த்துநீர்சொல்லாமல்
மாயைபலசெய்யும் மாயனையுஞ்சொல்லாமல்
தாயகமாய்தன்மைச் சலித்துமிகச்சொன்னீரே
ஊழிவிதியெனவே ஒருமித்துச்சொல்லாமல்
காலியவிகொண்ட கதையையுந்தப்பாராமல்

பத்தியாய்முற்றும் பருஞ்சுமையாய்த்தானேற்றி
முற்றஞ்சுமைதலையாய் மொழிந்திர்வகைகேளும்
சுற்றும்வினைவந்து சூழ்ந்தசெயல்சொல்லுகிறேன்
கொற்றவனேகேளுமென்று கூறலுற்றான்மாமுனியும்
மன்னுகேள்நூற்றுவர்க்கும் வாய்த்தான்மறைவருக்கும்
முன்னுளிற்புத்தி மொழிந்திலையேயென்றுரைத்தாய்
தொயர்ந்தவர்க்குப்புத்தி சொன்னேனேசொல்லலையோ
நயந்தவருங்கேளாமல் நம்மையவர்தான்மீறி
சூதுங்களவும் துர்ப்புத்திவஞ்சனையும்
வாதும்பயிர்பிடியும் மற்கட்டுங்கற்பனையும்
தாயாதிபாராட்டிச் சற்பனையேதான்வினைத்து
வாயாதனுாயம் வாக்குபாயமிட்டு
உள்வஞ்சனைக ளுபாயமிகநினைத்து
கள்வொருநூற்றுவரும் காருடமேபெறிதாய்
உபகாரஞ்செய்வதுபோ லுடந்தையாய்த்தானிருந்து
அபகாரஞ்செய்யும் அநியாயதுஷ்டிர
வஞ்சனைமுற்றும் மாபாவிதானினைக்க
பஞ்சவர்கள்சற்றும் பதையாதொதுங்கிநிற்க
அஞ்சினபேர்நின்று ரகத்தைசெய்தோர்தான்போனார்
நெஞ்சமதில்வஞ்சமதை நினைத்தோரழிந்திடுவார்
நடக்குமியாதைபுத்தி நாமவர்க்குச்சொல்லலையோ
அடக்கமவர்க்கில்லைவெகு அகந்தையேஉண்டாகும்
சொன்னப டிகேட்பார்கள் தூயதொருபஞ்சவர்கள்
என்னதான்சொன்னாலு மிவன்கேளான்மாபாவி
வாதுசொல்லிப்பஞ்சவரை வகையாய்வரவழைத்து
சூதுவினையாடித் தூரத்திவிட்டான்கானகத்தில்
கானகமேதான்திரிந்து கன்னுறுக்குக்காணுமல்
தானதவமேலாய்த் தன்மம்பெரிதாகி
ஞானமதுகல்வி நற்கேள்விநல்வசனம்
மானமபிமானமுடன் வனவாசமேதிரிய
அங்குஞ்சிலதுன்பம் அநியாயமேநினைத்து
எங்குந்திருமால் இவர்வசமாய்த்தானிருந்து



கார்த்தார்வினைதீர்த்தார் காயாம்புமேனியனார்
எத்தார்முழுது மிட்டோரப்பஞ்சவரை
காட்டிலிருக்கக் கசடனுக்குவேளைவரில்
தாட்டிகமாய்வில்லி தற்காத்திவன்றனையும்
மீட்டிவனைக்கொண்டு வெளியேறவிட்டாலும்
நாட்டில்வராதேயென்று நடுங்கமொழிந்திடுவான்
தீதுசெய்வான்மாபாவி திரியோதனன்றானும்
ஏதுமறியா திருப்பவர்கள்பஞ்சவர்கள்
பொறுத்தாரரசாண்டார் பொங்கினார்காடுறைந்தார்
பொறுத்தார்கள்பஞ்சவர்கள் போனார்கள்நூற்றுவர்கள்
அகந்தையழிந்ததுகா ணவர்மேற்குற்றமில்லை
இகத்தனிலேசூதுபன்னி யெல்லோருமாண்டார்கள்
இப்படியாய்வந்ததற்கு என்னைநீபஞ்சொன்னீரோ
சொற்படியேகேட்டிருந்துந் துரத்திவிட்டாரோ
தம்பிஜெனமேஜெயனே தார்வேந்தேநீர்தாமும்
வெம்பிமனம்வெகுண்டு வெடுவெடென்றுசொன்னீயே
கேட்டீரோநாயம் கெடுகெட்டான்றன்செய்தி
போட்டீரோபுத்தி புலையாட்டேன்போகிறீர்
இவ்வசனம்மாமுனிதா னெடுத்துரைத்தநாயமதை
அவ்வளவுங்கேட்டு அரசன்ஜெனமேஜெயனும்
வாரீர்முனியேயுன் மந்திரமுந்தந்திரமும்
பாரீர்புவிதனிலே பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும்
வின்னம்வராதபடி விற்பனமாயுட்புகுந்து
தன்மைகள்பாராட்டித் தாங்கியேசொன்னக்கால்
இத்தனைக்குமித்திரங்க ளேதுவருவதில்லை
சுத்தனேதோற்றமற் கண்காட்டிப்பார்த்துவிட்டீர்
சுற்றமுந்தன்கோத்திரத்தைத் துன்பம்வந்துகுறாமல்
சித்தமதிற்சற்றிரக்கந் திரணமுமக்கில்லாமல்
இருந்ததவசியனாக் கின்பமில்லைதுன்பமில்லை
அருந்தவசியாயிருந்தும் ஆத்மநயமில்லாமல்
அவர்களுக்குக்காலபல னடவுடனீர்சொல்லாமல்
இவர்களுக்குக்காலபல னிதமுடனீர்சொல்லாமல்

இருந்ததிருல்மாண்டார்க ளேதொன் அந்தோற்றுமல்
வருந்ததிறுலேயும் வாராக்குமமுன்டோ
வேந்தனிவைசொல்ல வேதமுனிபேதுசொல்வார்
பூந்தேருடைய போர்வேந்தேயிப்போது
யாகம்வளர்க்கவென்று ஆரசேதினேந்தாயே
பாகமுடன்யாகமதிற் பலிக்குதுகாணுன்றனக்கு
வீற்றுபிரமஹத்தி யியல்பாய்ப்பிடிக்குதுகாண்
மாற்றுனக்கு வகையுண்டோ ஆமாகில்
என்னைச்சலித்ததுதா னெவ்வளவுங்குற்றமில்லை
பின்னையுனக்குத் தெரியும்பிரமையினுல்
உள்ளபடிசொன்னேன்நாம் உற்பனமாயடங்கிழுந்து
வள்ளலுமிய வழுத்துமின்றேமிவ்வசனம்
போறோம்புவிவேந்தே பொன்னுலகந்தான்சே
வாறோமினிமேலும் மன்னுவன்றன்னிடத்தில்
என்றுமுனிசொல்லி யேகினர்காணம்மானை
அன்றுஜெனமேஜெயனும் அவரைநமஸ்கரித்து
அனுப்பிச்சிலகாலம் ஆண்டிருந்தான்பூலோகம்
தனுப்பிடித்தகையுடைய தார்வேந்தனப்போது
யாகம்வளர்க்கவென்று அவனியெல்லாந்தானறிய
சேகரமாயுள்ள சகத்தனபாடமுதல்
வரவேணுமென்று மந்திரிமார்தன்னுடனே
அறைவேந்தர் தாமுஞ் சொல்லுற்றுரம்மானே
திறமுடையமந்திரிமார் தேசத்திலுள்ளோரை
பறைசாற்றவேதான் பார்வேந்தன்றன்னிடத்தில்
அந்தப்படியே அவனிதனிலேயிருந்து
வந்ததனபாடம் மற்றுமுள்ள தானதெல்லாம்
சிறாகச்சேகரித்துத் தெய்வப்பிராமணரை
நேராகஆயிரம்பேர் நிருபாகமுன்னோரை
வாகுடனேதானழைத்து வளர்ப்பதற்குயாகமதை
ஆகுதிகள்செய்ய ஆவிருடனெய்யாலே
நூறுருடாசெய்யும் தொடிக்குள்ளேதானழைத்து
வீறுடனேயாகம் வெதியரேசெய்யுமென்ன



சாலையதுமுடித்துச் சதுரவொக்கப்படுத்தலிட்டு
ஆலயமாய்ச்சுதானம் அந்தணருந்தானிருக்க
விலாசமாயுண்டுபண்ணி வித்தாரொருதொடியில்
பலாசமாம்பிளந்து பலகைவெகுசோடினையாய்
அரசபலமாவிலுப்பை ஆல்விறகுதெற்பையுடன்
புரசுமுதலுள்ள புஞ்சுசங்குவேணதெல்லாம்
சேகரித்துவைத்து ஜெனமேஜெயன்றன்முழ்கி
யாகத்தடியில்வந்து அந்தணரைத்தெண்டனிட்டு
வேதியர்க்கெல்லாமிசைய வேணுமென்றவஸ்திரமும்
தீதியுடன்தான்கொடுத்து திருவாகம்பண்ணுமென்ன
அக்கினியையுண்டுபண்ணி யாகுதிகள்தான்கொடுத்து
மெய்க்கினியமந்திரங்கள் வேதியர்கள்தானுதிக்க
ஆழவேதானிருந்து சொல்லுமந்தவேதியர்கள்
வாழ்வின்பேரையும் வாருமென்றுதானழைத்து
பலகைதனைப்பரப்பிப் பரிசித்துவைத்தனுக்கு
இலகுமணிரத்ன சனமுமிகவுடனே
பூசைசெய்யப்பண்ணுமென்றுபுகழ்ந்தார்கள்வேதியர்கள்
நேசமுடனிருந்து நேமமுடனெல்லோரும்
வாசனையாய்ச்செய்யுமென்று வகுத்துரைத்தாரம்மானை
ஆசனத்தின்மீதிருந்து அட்சதையுந்தான்வாங்கி
யாகத்தைநோக்கி அன்புற்றுத்தானிருந்து
வாகொற்றதெற்பையது வாங்கியிருக்கவுற்றன்
அழகுமதியாகம் அக்கினியுந்தானெழுந்து
புளகமாய்த்தானெரும் பூவானவெக்கியமும்
எக்கியத்துக்கேற்ற இதமானநெய்க்குடமும்
முக்கியமாய்ச்செய்து முடித்துவரும்யாகமதில்

விருத்தம்.

முன்னுன்முனிவன் சொற்படிக்கு முடிக்கும்யாகத்த க்னிலேதான், இன்னுன்பக்கம்வருவதற்குவதோமறை யோன்போலிருந்து, சொன்னுன்வேதயாகமதிற் றக்கம

தறைற்றுயின்றசத்து, தன்னும்பயங்கிவீழாமற் சன்னைசெ
ய்தான்தார்வேந்தன். (௫௬)

இதுவுமது.

ஐயோமறையோனக்கினியிலசந்துவிழுவானென்றெ
ண்ணிக், கையாற்றெர்ப்பைதனைக்கொண்டு கழுத்திற்பிட
ரியதிற்றொடவே, மெய்யாய்ப்புலிதான் பாய்ந்ததென்று
வெருவிப்பயந்து மறையோனும், நெய்யிலெரியுஞ் சுடர
தனில் நேராய்விழுந்து நிமிர்ந்தானே (௫௭)

கதை

அருமிருந்துசாஸ்திரங்கள் அனுஷ்டிக்கும்வேதியரில்
உருண்டுவிழுந்து ஓமத்தீமுன்னிலையாய்
அசதிவந்துபார்ப்பா னசத்துகண்ணைத்தான்மூடி
பிசகுவருமென்று பயனுந்தானென்னுமல்
நித்திரைகொண்டு நிலத்தில்விழுவார்போல்
பித்திரமாய்ப்பார்ப்பான் மெய்மறந்துகொண்டலைந்து
உறங்கித்தலைகவிழ்ந்து ஒனனிசைந்ததுபோல்
இறங்கலுற்றலைந்து தேகம்விழுவதுபோல்
அந்தஉரக்கமதி லானதொருசொற்பனமும்
வந்தவழிதன்னில் வதியகுவொய்ப்புலியும்
எதுக்கமறிந்து இவனைவதைசெய்வதற்கு
அதுக்கிவிழுந்தி அதட்டிப்பாழுமந்தி
பிடிக்கின்றதுபோலப் பிராமணனுந்தான்பயந்து
நடுக்கியுடற்பதறி நத்தண்டமீனதுபோல்
இருக்குந்திரமதனை இளவரசுதானறிந்து
வருக்கமுன்னபாகம் வளர்க்கவென்றுவந்திருந்தோம்
அதுக்குவிகாதம் அந்தணனெப்போது
எதுக்கஇருந்தும் இசைகேடுதான்முடிய
பார்த்திருக்கப்போகாது பாவம்வருமென்றுசொல்லி
எத்திருக்குந்தெற்பையிது விவன்சன்னைபண்ணவென்று
நீட்டினன்தெற்பைதனை நினைவுவருமென்றுசொல்லி
காட்டிற்புலிபாய்ந்ததென்று கலங்கியுடல்பதறி



மாட்டினன்றீயில் மடிந்தான்பிராமணனும்
ஆட்டிக்குதித்து அந்தணனுந்தீயில்விழ

பரிசித்துக்குப் பிரமஹத்திதோஷம் பற்றியது.

கண்டுஜெனமேஜெயனுங் கலங்கியுடல்பதறி
பண்டுவியாசர் பகர்ந்தமொழிப்படிக்கு
வந்ததுகாண்பாவம் மதியைவிதிவிலக்கித்
தந்ததுகாண்யாகபலன் சனியன்பிடிக்கவென்று
வெந்துமனமிடைந்து வெருட்சியதுதான்பிடித்து
இந்திரவியில்லாத இருளதுபோற்றான்மூடி
மாயைபிடித்து மனுநீதியைமறந்து
பேய்கள்பிடித்ததுபோற் பிரமைகொண்டானம்மானை
மன்னன்ஜெனமேஜெயனும் மாயைபிடித்திருக்க
தென்னவர்களெல்லாந் தீவினையோவென்றுசொல்லி
ஆறாத்துயரம் அருந்துயரம்வந்ததென்று
நீறுகிவெந்து நெஞ்சமெல்லாம்புண்ணாகி
என்னசெய்வோமென்று ஏங்கிப்பதைத்து
முன்செய்ததீவினையோ முனிவனுடசொற்படியோ
எந்தவிதமோதா னிடையூறுதான்முடிந்து
வந்தவிதியறியோம் மகாதேவாவென்றயர்ந்து
செய்யுமருந்துகள்தான் தேசத்திலுள்ளதெல்லாம்
வையமென்றுபண்டிதங்கள் வைத்தமருந்தாலும்
சற்குணமில்லாமற் றலைசுத்தியாடுகையால்
பித்துக்கலங்கிப் பிதற்றுகிறனென்றுசொல்லி
கலிக்கமுறைத்துக் கண்ணிலிட்டுமொன்றுமில்லை
பலிக்குந்தயிலமிட்டுப் பார்த்தாலுமொன்றுமில்லை
தலையிற்குடோரியிட்டுத் தயிலந்தனைத்தேய்த்து
கலையுதில்லைபித்தன் காலவினையென்பாரும்
மருள்பிடித்ததென்று மந்திரங்கள்செய்வாரும்
இருள்பிடித்ததென்று எந்திரங்கள்கட்டுவாரும்

செய்பவினைகளெல்லாஞ் செய்தலுந்தானெல்லோரும்
அப்போசிவனேயென்று அபயமிட்டுச்சொல்வோரும்
மெய்யன்பகேள்வரபூசை வேதியர்க்குப்போஜனமும்
வெய்யோனுக்குள்ள விளக்குபொங்கல்தான்முடித்து
அருதிபரதேசியர்க்கு அன்னமிக்கக்கொடுத்து
திருதியுடன்தானதவம் நேமமுடன்கோவில்குளம்
சத்திரமடங்களென்ன சாலைகளுமந்தணர்க்குச்
சித்திரமாய்ப்பூசைபல செய்வாரனுதினமும்
நால்வேதசாஸ்திரமும் நாளும்விளங்கிவர
பால்தயிர்கள்நெய்கள் பருப்புமுதலரிசி
வாகாய்மறையோர்க்கு மாறாமல்நித்தியமும்
பாகாய்முறைப்படியே படியளந்துவேதியர்க்கு
தானதவஞ்செய்து தவிப்பார்பரதவிப்பார்
ஞானசிவபூசை நடத்துவார்தாழ்ச்சியற
தேசத்திலுள்ள ஜெனமும்ஜெனமேஜெயனும்
வேசத்திருந்து மெய்மறந்துகைசோர்ந்து
பாருலகைத்தாங்கும் பரிசித்துவேந்தனுக்கு
ஊருலவுமேனியரே கன்னைநேமிப்போது
இதுவரைக்காரியமேன் செய்ததவக்குறையோ
வாதுசெய்தமாமுனியும் வாராதோஇப்போது
ஏதுசெய்வோமென்று இருக்குந்தருவாயில்
சாதுவெனும்வேதமுனி தன்னினைவிலேதோன்றி
பாராஜமாமுனிவன் பயின்றதொருபுத்திரனும்
சராஜவேத சகலகலைவல்லவனார்
வேதவியாசமுனி மேதினியிலேநடந்து
போதகமாயத்தினல் புரந்தனிலேவந்தார்காண்
வந்தரிஷிபாதம் மன்னரெல்லாந்தான்வணங்கி
இந்தவிகாரம் இவர்க்குவந்தகர்மவினை
தீர்த்தருளவேணும் ஜெயமேஜெயன்றனக்கு
காத்தருளவேணுங் கடவுளேகாரணரே
ஏழியோனறியாதே செய்தகுறையைப்பொறுத்து



வதிபோகப்பாருமையா வேதவியாசரே நீர்
என்றுமன்னர்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
ஒன்றுமறியாமலுரைத்தீரேமன்னவரே
நாமேதுசெய்வோம் நாடும்விதிதனக்கு
போமேதுசெய்தாலும் போமோபிரமைவிது
அல்லவேசொல்லுகிறே னந்தப்படியிவன்முன்
சொல்லவேகேட்டாற் றொடர்பிரமைதீர்ந்துவிடும்
முன்னுளிற்பஞ்சவர்கள் மூண்டுசமர்பொருது
மின்னுளபாரதப்போர் வென்றுமுடித்தகதை
சொல்லென்றுகேட்டான் சருதியதுவேதாந்தம்
மல்வென்றபோர்வீமன் வாகாய்ச்சமர்தனிலே
மத்தகசந்தன்னை வாரிப்பிடித்தெறிய
சத்தமுகில்கடந்து தாண்டிவெகுவாறுயரம்
போய்ச்சுழன்றதென்று பூரித்தான்பாரதத்தில்
வாய்வுச்சுழியில் வளைபட்டமத்தகஜம்
வாராமலங்கே மரித்ததுகாணந்தரத்தில்
சீராய்ஜெனமேஜெயனும் செவியுற்றுத்தான்கேட்டு
பொய்யென்றுசொன்னன் புத்திசற்றுமில்லாதான்
பொய்யென்றளவிற் பொரிவெறுப்புவெள்ளையதாய்
மெய்யெங்குந்தாவி வெண்பொரியாய்க்கண்டதின்பின்
ஜயமுடனெல்லோரும் அழுதுபரதவித்து
இதுக்குவகையேது என்னவென்றுபார்ப்பளவில்
அதுக்குவகைதா னறிந்தோரெடுத்துரைக்க
புத்தியென்றுகேட்கப் பொருந்திமதியுடனே
பத்தியாய்ப்பாரதத்தைப் படிப்படியாயின்னொருக்கால்
கேட்டீரேயானுற் கிலேசமறத்தீர்ந்துவிடும்
நாட்டீர்மனதையதில் நடுவேநிதானமதாய்
என்றுரைக்கவேபெரியோ ரின்பமாய்வந்திருந்து
அன்றுஜெனமேஜெயனும் ஆமென்றுபாரதத்தை
அடியைப்பிடியடா பாரதப்பாட்டாவெனவே
முடியுமட்டுந்தான்கேட்டு முற்றிலுமேஆராய்ந்து
வெள்ளையுந்தீர்ந்திலையோ வேந்தனிவன்றனக்கு

கொன்னைபிரமையிது கட்டோடேபோவதற்கு
ஐவரரசாண்டு அவனிவிட்டுத்தானேகி
செய்யபுகழ்வைகுந்தம் சேர்ந்தகதைதான்கேட்டால்
இரும்பிரமையிது தென்னவரேயென்றுரைத்தார்
பாரும்புதுமையது பலிக்குஞ்சவிப்பரவே
கரும்பட்டுப்போத்திக் கருத்துடனே தான்கேட்டால்
அரும்பட்டும்வெண்பட்டா யாகுமதுதப்பாது
அப்போபிரமை யகன்றுவிடுங்கண்மடரே
இப்போதுகேளும் இன்புற்றுத்தானிருந்து
என்றுசொல்லிமாமுனியுமேனினர்காணம்மானை
நன்றுநன்றென்று நமஸ்கரித்தாரெல்லோரும்
ஆமென்றுசம்மதித்து ஹரிவோமெனவேதான்
ஓமென்றுராஜு ஹற்றஜெனமேஜயனும்
வைகுந்தஅம்மானை வாருடனே தான்கேட்க
செய்கின்றசாஸ்திரங்கள் செய்வித்துவேத்தனுந்தான்
அம்மானைபாடுகின்ற அரியகதைதனையும்
செம்மான்தரித்த சிவனருளேஉண்டெனவே
கதைதுவக்கங்கேட்கக் கருத்திலுற்றமன்னவனும்
பதையாதுகேட்கப் பலநினைவுமில்லாமல்
நெஞ்சமயராமல் நினைவுதடுமாறாமல்
அஞ்சபஞ்சபூத மடங்கிப்பொறிபுலனை
வேறறுத்துக்காம வெகுளிதனைவிட்டேகி
காரறுத்துமாயக் கசடுதனையூடறுத்து
ஏகமனதாய் இருதயத்தைச்செப்பனிட்டு
ஆகமுடன்கேட்க அரசன்கொலுவிருந்தான்

விருத்தம்.

வேதவியாசர்முன்னுளில் விளம்புவசனமுள்ளபடி,சே
திமுழுதுஞ்சிறப்புளதுந்தெரிந்தபார்க்கச்சமனிதமாய்ப்,
பூதமைந்தருயிர்போலப்புவனமிருந்தவகைமோசம்,நீத
மிருந்துந்தெரிமிருந்தும் நிலையாவண்ணமெனிதாச்சே.



இதுவுமது.

விதித்தவிதியைப்பாராமல் வேதவியாசர்தனைநோக்கி, எதுத்துச்செய்திகேட்ட பலனிப்பநமக்குபலித்ததென்று, மதித்துமனதில்ஜெனமேஜயன்மனதுகலக்கிதெளிந்ததினாய், துதித்துமுனிவரடிபணிந்து துயமகிழ்ந்து சொன்னனே.

வேறு.

சொல்லியகதையைக்கேட்கச் சுத்தமாமனதைத்தேற்றி
பல்லியவசனமெல்லாம் பரிவுடன்தெரியநன்றாய்
துல்லியமாகக்கேட்டுத் துயரறப்பிரமைபோக
மெல்லியபட்டுப்போத்தி வீற்றிருந்தரசன்கேட்டான் ()

கருதிறப்பட்டுப்போத்திக் கதைதனையுற்றுக்கேட்டால்
கருதிறம்வாங்கிவெள்ளை கதித்தவெண்பட்டதாகும்
வருமொருபிரமைநீங்கி மனத்துயர்தீருமென்று
குருமுனியுரைத்ததேசக்குணமெனக்கேட்டான்மன்னன்

கதை.

வாருடையபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்ந்தகதை
பாருடையசொல்வான் பரிசித்துராஜன்மகன்
சீரார்ஜெனமேஜயனும் சித்தமகிழ்ந்தன்பாக
நேராகக்கேட்க நீலவண்ணர்காப்பாமே
ஓதும்புகழ்கதையை உரைக்கவேதான்கேளீர்
மாதுசரஸ்பதியாள் வழுத்துகின்றசொற்படியாய்
மேருவிலேகதந்தர் விரித்தெழுதும்வேதாந்தம்
பாரிலுள்ளோர்கேட்க படிக்கிறேனம்மானை
ஐவர்சகாய னரிகேசவன்முகுந்தன்
அரியவைகுந்தமடைவோமெனவேதான்
உரியதொருதன்ம ரொருமித்துமெனவே
நடக்கிரார்தேசம்விட்டு நன்னகரிதான்கடந்து
வடக்குமுகமாய் வடமேற்கொருபுரமாய்
தன்மருடதம்பியருந் தாரார்துரோபதையும்

கன்மமெல்லாம்விட்டுக் கங்கைக்கரையில்வைத்தார்
கங்கைநதிகண்டு கையாற்புனலேந்தி
மங்கைதுரோபதையும் மாகனலுருவுமாய்
தலையிற்புனல்தெளித்துத் தாமேசரணமென்று
அலையில்வேதான்மூழ்கி அனுஷ்டானமேமுடித்து
ஆதித்தனைவணங்கி ஐவருந்தானங்கிருந்து
சாதித்தார்வேற்றுருவஞ் சன்னியாசிவேடமுமாய்
சாத்தமரவுரியுஞ் சடைமுடியுந்தான்தரித்து
பாத்தமாய்வேடம் பருவமாய்த்தான்முடித்து
ஊராசைதானுமற்று உற்றமன்னராசைவிட்டு
பாராசைதானுமற்றுப் பைங்கொடியாள்தன்னைவிட்டு
மாதாவிறுசையற்று மந்திரிமார்தன்னைவிட்டு
மிதாவைகானகத்தில் விரையவேசென்றனர்காண்
அப்போதுமாயனவர்மனதைத்தேற்றுதற்கு
இப்போதெதிரே இவர்காணவேகலியன்
தனதுடையமாதாவின் தலைமேற்சுமையேற்றி
மன்னுமனைவிதன்னை வார்புயத்திலேயேற்றி
வந்தவனைக்கண்டு மன்னர்தன்மார்தானகைத்து
இந்தவகைநம்பியரே ஏதேசகாதேவா
கண்டோம்புதுமைஅய்யா கலியுகமேஆகையினால்
அன்டம்பெருந்தமையை அன்னைதலையிலேற்றி
பெண்டீர்தனைத்தோளிற் பிரியமுடன்வைத்துவந்தான்
பண்டுமொழிதவறிப் பழுதுவருமேநமக்கு
மாதகரைவிட்டுவந்து வனவாசம்பிழைத்தோமே
ஆனதம்பிமாரே அரிசேவன்பதத்தை
நன்றுகைச்சித்து நம்பியென்றுகே
குன்றுமனத்துடனே கோபாலருங்கேட்டவே
தார்மருவுந்தம்பியர்க்குத் தைரியமாய்வார்த்தைசொல்லி
சீர்மருவுங்கானகத்திற் சென்றுருக்காரம்மானை
கல்லுமுருகிவிடக் கடிவிருப்பிவைத்தாலிடு
புல்லும்புகைபாலதிலம் போய்ப்புகுந்தாரம்மானை



மேவலர்கள்தன்பதமும் மின்னனையாள்தன்பதமும்
பூவிலும்மெல்லியதான் பொருமனுந்தானே அரைப்பான்

விருத்தம்.

தேகமிழந்துவாராமற் செடத்தைமிகவேதான்சுமந்து
ஆகமிழந்துவாராமற் அடிகள்தமோகோபாலா
தாகமிருந்ததவிப்பினோப்புஞ் சாராதுதவிற்றமவுசெய்து
மேகஞ்சிறந்தமேனியனே விடைதாநந்தகோபாலா ()

ஒன்றுமறியோம் பொருளறியோ மூலகேழுளந்தமாயவனே, நன்றுமறியோம்நிதியோம் நந்தாமுகுந்தநாசிங்கா, அன்றுசகாயமுடனிருந்து அடியார்தங்களிடர்தீர்த்தாய், குன்றுமனங்கள்குன்றுமற் குடைநந்தகோபாலா

அடியார்க்கிடருவாராமல் அருகேயுருவாய்ப்பிரியாமல்
வடிவேற்காத்தான்மாமன்னன்று மாயாதேயமுடனேதா
கடிவாய்மிருகமகன்றேடக் கடியசுரங்களணுகாமல் [ன்
நெடியோனனவேவந்தருள்செய் நீயேநந்தகோபாலா.

உருவாயுருவிலோருருவா யுடலிற்புகுந்துதனைநாடி
வெருவாய்குளறிஉரையாமல் வேரேூர்கவளம்தினையாம
கருவாய்மயல்கள்பிடியாமற் காத்தாய்காத்தசிறையெதிர்
முன், வருவாயடியார்வைகுந்தம் வரவேநந்தகோபாலா.

மனதுவெறுமைபொல்லாது மாயக்குரங்குவலுசேட்டை
எனதுமனதுபடபடவு மென்றேயென்றும்பொறிபுலனே
தனதுதனதாளென்றுமற் றனக்குந்தானேதனித்துமனம்
உனதுபதியேகதியாக உதவும்நந்தகோபாலா. (௧௧)

கதை.

கலக்கமிலாதெங்களையுங் கண்ணுதலேகாத்தருள்வீர்
மலக்கமதைவிலக்கி வழிகாட்டிப்பொங்களையும்
நடத்தும்பெருமானே நாங்களொன்றுந்தானறியோம்
சடத்துக்குள்வாழும் தத்துவமேபோற்றியென்று
நடந்தார்வழியில்நமோ நாராயணனெனவே
மடத்தையுடனைவருமாய் மலர்ப்பாதத்தானெண்ணி

சோலைதிழலில்லாத சுடுவனங்களானதொரு
பாலைவனங்கடந்து பஞ்சவர்களப்பாலும்
அருள்முனிவர்வாழுமாச்சிரமந்தான்பார்த்து
இருளிரண்டுவாரதிறு லிரவியுமேபோய்மறைந்தான்
கார்மேவும்வல்லிருளிற் காவலர்கள்மூவருமாய்
பார்மீதிலேபளிங்குப் பாறையின்மேலேநடந்தார்
கொள்ளிக்குவிள்ளாத கூரிருளிலேமலைந்து
தள்ளிவழிநடக்கச் சற்றுந்தெரியாமல்
மனந்திகைத்துப்புண்ணுகி மாபோனைத்தானினைந்து
கனலின்மெழுகதுபோற் கானகத்திலேயுழன்று
தம்பிமார்தன்துயரந் தானறிந்துதன்மருந்தான்
எம்பிமார்தன்மனது இனியறிவோமென்றுதன்மர்
பார்த்தனுடன்நால்வரையும் பாஞ்சாலிதன்னையுந்தான்
எற்றதொருஉற்பணத்தா ளினிக்கூறக்கேளுமென்று
தம்பியரைநோக்கித் தன்மருந்தானேதுசொல்வார்
வெம்பிக்கலியால் வெருண்டுபயத்தைவருந்தான்
எதிர்த்துப்போராடாமல் இளைத்தோடிபோயினதால்
துதித்துலகோர்தானுந் தூஷணிப்பார்கண்டீரே
இருந்துஜெயங்கொண்டு எதிர்த்துவிரட்டாமல்
அருண்டுமிகப்பயந்து ஆரணியம்போய்புகுந்தார்
என்றுலகஞ்சொல்லி ஏசாமலிப்போது
மன்றுலகந்தன்னில் வாள்வீமன்மைந்தனுக்கு
சென்றுதவியாகத் திரும்பியேநால்வோரும்
ஒன்றுபோற்கூடி யுகைாறுந்தம்பியரே
சேர்ந்துகலந்து சேய்க்குதவியாயிருந்து
எந்துபரிசித்துவுக்கு எதிர்த்தோரைவாதுசெய்து
கலியனுப்பலந்து கைகலந்துதானொருங்கி
வலியச்சருவினைந்துபோர்செய்தாக்கால்
சிறுவன்வினையறியான் செருக்களத்திற்சென்றறியான்
உறும்பூசல்செய்தறியா னற்றதொருபேருமில்லை
தானேதனியாய்த் தயங்கிமலையாமல்



தேனேயென்தம்பியரே சேர்ந்துகலந்துகொண்டு
உற்றபரிசித்துதனக் குதவியாய்ப்போயிருந்து
வெற்றிசெய்யவந்தோரை விரட்டிவினையுடைத்து
செங்கோல்தழைத்தோங்கத் தேசமெங்குந்தான்வாழ
அங்கேயிருந்து அவனிதனையாளுமென்று
சீராருந்தன்மர் தெரிந்துரைத்தாரம்மானை
நேராயிருந்த நேரிளையோர்நால்வருந்தான்
மன்னுநீரெங்களையும் மாநகரிற்போயிரென்றால்
அன்னையேநாங்க ளபசாரஞ்செய்தனமோ
கத்தனுடனேத்தங் கலங்கினதுமாந்தனிதம்
பெற்றபிதாவறியோம் பின்னையொன்றுந்தானறியோம்
இந்தமட்டுமெங்களை நீ ரிடுக்கிக்கொடுதிரிந்து
வந்தவினைக்கெல்லா மறுப்படாதெங்களையும்
வளர்த்தஅருமையிதோ வனந்தனிலேவந்திருந்து
அழுத்தமுடனெங்களை நீ ரகலப்போவென்றுசொன்னீர்
அய்யாகுருகுலமே அண்ணரேயென்றழுதார்
மெய்யோதான் நீரும் விட்டுப்பிரிவீரோ
எங்களையும்விட்டு இருப்பீரோதான்தனியே
திங்கள்முகைத்தரு செப்புகின்றவாறேது
சித்தத்துக்கேறுத தீவினைகள்செய்தோமோ
கத்தரேதுரோகங் கனவினைகள்செய்தோமோ
செங்கோல்செலுத்துமென்று தேவருடவாக்கதனால்
எங்கள்முகம்பார்த்துரைக்க வெழுந்துதோசித்தமது
கணப்பொழுதுமும்மைவிட்டுக் காணுதிருப்போமோ
க்ஷணப்பொழுதுதான்பிரிந்தார் தரிக்குமோஎங்களுயிர்
அண்ணரேஎங்களைத்தா னவனிதனிற்போமெனவே
என்னிமனந்துணிந்து இயம்பினீரண்ணலே
தம்பியருமீதுரைக்கத் தன்மருந்தானேதுரைப்பார்
அன்புடையதம்பியரே ஆளுகின்றதேசம்விட்டு
என்பிறகேவந்தா லிளவுரசுக்காருமில்லை
தம்பிமுகம்வாடித் தானேபரிசித்திருப்பான்

அரசுநிலைநிறுத்தி அவனிதனிலேயிருந்து
விரசுண்ட அத்திபுரம் மேதினியைத்தானுண்டு
குருகுலத்து மன்னருடன் கோத்திரத்திற்றுன்கூடி
மருவியிருந்து வாழுமென்றுதானுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆனதம்பிமாரைவருந்தான்
இந்தமொழியுரைத்தீ ரென்கோவேயண்ணலே
மண்ணாசைபெண்ணாசை மற்றுமுள்ளபொன்னாசை
கண்ணுணையுந்தரோடு காசினியிற்பேராசை
எல்லாமனம்வெறுத்து இப்போதுஉம்முடனே
எல்லாரும்வைகுந்தஞ்சேரவென்றுதானினைந்து
வந்தோம்புவியைவிட்டு வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாய்வரவே சஞ்சலங்கள்சொல்வதென்ன
ஆண்டவனேஇப்போது அடியேனுஞ்செய்தபிழை
நீண்டபுவியில் நெறிசேருமண்ணலே
சரணஞ்சரணமென்று தாளிணையைப்பூண்டுகொண்டார்
அடிகள்பிக்கடவும் ஆவிதனைவிடவும்
கடியமனைத்கடவுங் காலையதின்றிடவும்
மாமையிருளில் வழிநிலைக்குநின்றிடவும்
சாலையைவிட்டுவந்து தட்டழிந்துநின்றிடவும்
பதியிழந்துகானிற் பரதேசியாய்வரவும்
அதிகபசிபொறுத்து அரும்பசிகொண்டேவரவும்
நீங்கள்பயிம்பாகேண்டு நெஞ்சம்பொறுக்காமல்
தாங்கமுடியாமற் றுனுரைத்தான் தம்பியரே
இன்பமுடன் நீங்க ளென்பிறகேவந்தவரை
துன்பமிகநினைந்து சொல்லுவனேயான்பாவி
நானுந்திருமால் நமக்குத்துணையாக
ஆறுங்குருசாமி அரியோன்பதஞ்சேர
நினைந்துவந்தநெஞ்சம் நிலைதவறுதோர்மனதாய்
மனந்துணிந்துவந்திரே வைகுந்தஞ்சேர்வோம்நாம்
என்றுதன்மர் தம்பியர்க்கு எத்தனைதொகுசெய்திசொல்லி
நின்றுதிரௌபதைதன் னிலைவதியவேணுமென்று



காய்களடிசுடவுங் கண்கள்பொறிபொழுவும்
மேல்களாதுபுண்ணுகி மெய்மறந்துகைசோர்ந்து
அருமைதலைகுலைய ஐவருடபின்னேதான்
பெருமைசிறுமையதாய்ப் பெண்ணரசேயிப்போது
உருமையுடன் நீவருவ துந்தமமோயெங்களுக்கு
தருமமென்றபேரோது தயவுசற்றுமில்லாவிட்டால்
ஆனதிருப்பெண்ணேயென் னன்னையர்தானுன்மாமி
தானவளும்மாளிகையிற் றனியேயிருப்பாள்கேள்
மானவளேநீபோயுன் மாமியுடன்சேர்ந்திருந்து
ஞானசிவபூசைகள்தான் நடத்தியதுநினைவும்
குந்தியம்மாள்தன்னிடத்திற் கோதையரேசேர்ந்திரென்
அந்தமொழிகேட்டு அருந்ததியுமேதுசொல்வாள் [குர்
மெய்யரேயெந்தனையும் விந்தகரேஇப்போது
பொய்யுரையாவேந்தே போவென்றுசொன்னதென்ன
நான்பாவியானேனோ நாயகமேயென்றழுதாள்
தேன்பாவுமங்கோவே சித்தத்திற்கண்டதென்ன
வாகாகவென்னை வரவேண்டாமென்றதென்ன
ஆகாப்புலைச்சி யழிபுலைச்சியானேனோ
சற்பனைகளான சதிகேடுசெய்தேனோ
கற்பழிந்துவேறு கண்டாசைகொண்டேனோ
ஐவர்துணையென்று அன்றுமுதலின்றளவும்
மெய்வருந்திநானும் விட்டுப்பிரியாமல்
சித்தம்வரநடந்து சேவடியைப்பூண்டிருந்தேன்
கத்தனுக்குகுத்தமென்றுங் கண்டீரோயென்கோவே
இனிமேலடியேற்கு ஈடேறபுத்தியென்ன
பனியானபொய்யுடலைப் பாரமென்றுகொள்வேனோ
வையகத்தோர் சொல்லி மறப்பிறகையாரோ
மெய்யகத்திற்சென்று மேலும்பிரியாமல்
காத்தருளவேணுங் கன்னருடதன்னருளால்
எற்றசிரைதன்னை யீடேறமுற்றிலுமே
சீர்பாதந்தன்னிற் றினமும்பணிந்துதொழ

ஓர்மனதாயிங்கிறென்று உத்தாரம்பண்ணுமென்றான்
தன்மர்மனமகிழ்ந்து தையலையுங்கொண்டாடி
கன்மமெல்லாம்விட்டுக் கரையேறினோமினிமேல்
சற்றுங்களங்கமில்லை தையலுடன்தம்பியர்மேல்
முற்றுந்தெளிந்து மோகவலைவிட்டேகி
வந்தோமினிமேல் மலைவுகள்சற்றுமில்லை
சந்தோஷமாச்சுதென்று தன்மர்மனமகிழ்ந்து
அவ்விருளுந்தானீங்கி யாதித்தன்வந்துதித்தான்
வல்விருளும்போனதற்பின் வாய்த்ததன்மரைவருந்தான்
எழுந்துதந்தசுத்திசெய்து இன்பமுடன்சூரியனை
விழுந்துநமஸ்கரித்து மென்மலர்கள்தானெடுத்து
தானமதுசாந்திபண்ணித் தற்பணமுந்தான்முடித்து
ஞானமதுசிவமும் நறுமலருந்தான்தூவி
வெய்யோனைத்தெண்டனிட்டு மிக்கானதுவருந்தான்
மையிருண்டகான வனத்தின்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பொல்லாதயானையன்றி
நலிவுகண்டுதானதட்டி நடந்தார்வனங்கடந்தார்
பார்த்திபருங்காடுவிட்டுப் பரிவாய்வெளியில்வந்தார்
ஆற்றோரம்வந்து ஆத்துமத்தைசுத்திபண்ணி
சிரானகாட்டிலுள்ள தீர்த்தமதுதானாடி
தாராருமாமுனிவர் தன்னையடிபணிந்து
மாமுனியேநாங்கள் வைகுந்தஞ்சேர்வதற்கு
பூமேவும்மேனியரே பொருந்தவிடைதாருமென்றார்
நேமமுடனிப்போது நெடியோன்பதஞ்சேர்வீர்
ஆமென்றுமாமுனியும் அருளினார்நல்வசனம்
நல்லதென்றுபாலைநிலம்நடந்தார்கள்பஞ்சவர்கள்
வல்லதொருகானல் வழித்தொழுகிநீரதுபோல்
காடுதனிலோடுங் கானலைநீரென்றுசொல்லி
ஓடுவாரன்னியுன்னை ஒண்டொடியுமைவருவாய்
பாலைவனக்கொடுமை பார்பினந்துவோராகி
சாலையெனுமூங்கில்வனந் தானெருங்கித்தானாகி



விண்ணளவுத்தீவளர்ந்து மேகமும்நீர்வற்றிமோம்
கண்ணுறும்விழிக்கரிதாய்க் கனலுமகோரமதாய்
கண்டுபயந்து கடவுளேதஞ்சமென்று
விண்டுவின்றன்பாதம் மென்மேலுமுண்டெனவே
நடந்தார்மலையாமல் நாரணரேதஞ்சமென்று
அடர்ந்துமருதவன மடுத்துமெள்ளவந்ததுவாம்
இருந்துதவிப்பாரில் எழுந்திருந்தாரம்மானை
வருந்துமைவரந்த வனமுங்கடந்தேகி
ஓடியொருபதினேழு யோசனையுந்தான்கடந்து
நாடித்திசைநோக்கி நடந்துவழிகூடி
பத்தியாய்த்தேங்கும் பரிசித்துநிழலாடும்
வெத்தியுள்ளவெள்ளை வெளியாகத்தான்தோன்றும்
அதித்தோரைக்காட்டுகின்ற அளவற்றசோதியது
தொடுத்துவெகுதூரஞ் சுத்தவெளியானதொரு
பளிங்குகல்பாறையிலே பாங்குடனேதானடந்து
பொழிந்துபனிமழைபோற் புயல்பெய்யக்கண்டனராம்
கண்டபுதுமைதனைக் கண்ணுடையதம்பியர்க்கும்
ஒண்டொடிக்குங்காட்டி உயர்கானகங்கடந்து
மேனிமிகக்குழைய மெல்லடிகள்கொப்பளிக்க
சோனைமழைபெய்யுந் தொல்கானகங்கடந்து
வெகுதூரந்தான்கடந்து விசாரமெல்லாந்தான்களைந்து
ரகுராமாவென்று நடந்தார்காணம்மானை
அங்கேநெடுந்தூரம் ஆறு அருவிகளும்
தங்காமலேநடந்து தாண்டிக்கரையேறி
ஓடும்நதிகடந்து உப்பாறுதான்கடந்து
தாடும்புனல்கடந்து தகையாரிதின்றளவில்
நெடுங்கானகந்தனிலே நெருப்பாறுதான்வரவே
கடுங்கனல்தானுரவாரங் கண்டுஇவர்கள்மனம்
கலங்கிமனமிடைந்து காவலர்களன்னேரம்
மலங்கியேதன்மர் மாயோனைத்தானினைந்தார்

நெருப்பாற்றை வழியிற்கண்டு ஸ்ரீபாண்டவர் விஷ்ணுவைத் துதித்தல்

விருத்தம்.

ஆயனே நந்தகோபா அச்சுதா பச்சைமாலே
மாயனே சமையமிப்போ வந்துநீர்காக்கவேணும்
தூயனே நெருப்புவெள்ளஞ் சுழியெரிந்தோடக்கட
நேயனே ஆறுதாண்ட நெடியவா துணைசெய்வாயே

நெருப்பாறுண்டபவனுவேகம் நீயறிவாய்நாரணநீயே ன், கருப்பரெனவேகனைபதனைக் கையாலணைத்துக்காக்க யாரத், திருப்பாய்களைப்புனலாக்கி செவ்வேவழியுந்தி றந்துதல்ல, தருப்போதுதவுங்கோபாலா சரணஞ்சரண ஞ்சரணுமக்கே. (கஅ)

அனலாயெழுந்து வருந்திவை அடியேன் கண்டு டயந்துநொந்து, புனவேகன்னிலிருந்தொழுகப் புன் ஹைப்நொந்து புலம்புகிறேன், கனவேபுனலாய்க் கொண் டருளிக் கற்பித்தருள்வாய் கண்ணுதவே, எனலாயிரங் கெயடியார்முன் இனியானந்தகோபாலா. (கக)

கதை.

மாயன்றனை நினைந்து மன்னதிற்றியானமதாய்
நேயமுடனைவர் நின்றுதொழுமல்வனம்
அரிகரிமாதவனே ஆபத்துக்காத்தவனே
விரிகடற்பள்ளிகொண்ட வித்தகனே வந்தருளும்
வடமலைக்கோபாலா வந்துநீ காக்கவேணும்
கடலையடைத்தவாயா காவலுன்காவலையா
மதகரிதனைக்காத்த மாதவா கோவிந்தா
இதுதற்சமயமையா எங்களைக்காப்பாற்றவாருந்
பச்சைமாலென்றுசொல்லப் பாவமகன்றவிடும்
அச்சுதா நந்தகோபா ஆயனேயென்றுசொன்னார்
விக்கினங்களெல்லாம் விலக்குமேயென்றுசொல்ல
அக்கினிபகவானும் அன்பாய்மனதிரங்கி
மற்றுமந்த அக்கினிதான் வழிவிலகியப்பாலே



உற்றமருமகற்கு ஒதுங்கி நின்றமாயினைப்போல்
விலகிவழிவிடவும் விரைந்தவர்தானடந்தார்
இலகுபுகழ்க்கிளிவிட் டேகினார்காணம்மானை
அவ்வனத்தைவிட்டு அநேகநெடுந்தூரம்
எவ்வனமுமாயுதமு மிக்கோலமாய் நடந்தால்
பாவமகலாது பார்த்தவற்குமோராது
தேவகிதன்பாலன் திருமாலுதவிசெய்வார்
வரும்நமக்குஞானம் வழியேபுதுமையெனத்
தருமருத்தானினைந்து தம்பியரைத்தானோக்கி
தாரார்புயவீமா தம்பியருக்கணரே
சீரகதாமொருசொல் செப்புகிறேன்கேளுமென்றார்
தம்பியரென்றென்றது தனையனுமென்றென்றது
தம்பியரோன்னைச்சுற்றம் தால்வகையுமென்றது
பெற்றபிள்ளாயிதெனவே பிரியமுடனென்றது
சுற்றமென்றுசத்ரே அன்னையுமிதென்றென்றது
மன்னர்முடிமுடி வர்த்தனரென்றென்றது
தென்னர்குருவாசாரி தேவனையுமென்றது
தானனுமென்றுந்தலைவியென்றென்றது
ஞானசிவயோகியொரு நாதனென்றுமென்றது
வாதுசமர்பொருத வந்துவிடமித்தமதம்
நிறைவருமல்லாது தெளிவுரைமாட்டாது
மூர்க்கமேஉண்டாகும் மூனைபெரிதுவாகும்
தீர்க்கமுடனன்மையிது செய்யுந்தொழிலாகும்
ஆசாரந்தோற்றுது அன்புசற்றுமிராது
ராஜாதிராஜனென்று லாகிரியேஉண்டாகும்
வித்தைமதம்புத்திமதம் வெகுவேஉண்டாகும்
இத்தையெல்லாங்கண்டு எதுவுமதுநாயல்ல
ஆயுதமுமாகாது அருந்தவரில்லைந்தவற்கு
வேயுதவிதம்பியரே விஷ்ணுமெச்சிப்பார்களோ
வல்லவிருந்தீன்சிலைய வாருமினிப்போமென்றார்
அல்லறுதாமும் அவனே துணையெனவே

போவதுவேணுமயம் புத்திசொல்லக்கேட்டருளும்
தேவரீர்சொன்னமொழி சிறியோர்கள்கேளோமோ
அன்னரேயெங்கள்சிலை ஆழ்கடலிலேயிருந்து
திண்ணமாய்வாரோமென் றேவாதாமென்றுசொல்லி
தருமமுரைத்தமொழி தம்பியருந்தட்டாமல்
பொருசிலைகொடுபோய்ப் போட்டாரலைகடலில்
நடந்தார் நிராயுதமாய் நல்லதர்மர்தம்பியரும்
கடந்தார்வெகுதூரங் காதமிருகாதவழி
அப்பால்வெகுதூர மானபிரமகிரி
பொய்ப்பாகவேநடந்து விரையவேகாதவழி
வந்துதவிப்பாரி வானுதனுமைவருமாய்
சிந்தைவுங்கன்றுறங்காத் தேவியுறைநாகமலை
தங்காமல்வந்து சங்கரியைத்தான்றொழுது
பூங்காவனம்புகுந்து பேருர்களைவருவாய்
அந்தவனந்தனிலே அனுகாவனமாகி
தொந்துவழிகாணாமல் நொந்திடைத்துஐவருமாய்
மறுகித்திகைத்து மாயோனைத்தஞ்சமென்று
முறையிடவேஅந்தரத்தில் மொழிபிறந்ததம்மானை
வேழமுகத்தானுடைய விக்கினங்காணென்றுசொல்லி
காளமுகில்மேனியனுர் கற்பித்தாரந்தரத்தில்
அவ்வசனங்கேட்டு ஆனதன்மருளமகிழ்ந்து
எவ்வசனஞ்சொல்லி யேற்றித்தொழுவோமென்று
விக்கினங்கள்தீர்க்கும் விநாயகனேதஞ்சமென்று
கைக்கினியமாங்கனிதேன் கடலைபயறுடனே
எட்பொரியுநெற்பொரியு மியல்பானசர்க்கரையும்
செப்பமுடன்முப்பொழுதுந் தெவிட்டாதுணவுசெய்ய
வைப்பேன்பலாச்சுளையும் வாழைப்பழந்திருத்தி
அப்பமுடன்தேங்காய் அலங்காரஎள்ளுருண்டை
சீனியதிரசமுஞ் சிறந்தவவல்பச்சரிசி
நானிவேன்தப்பாது நாதா துணைசெய்வாய்.



சந்த விருத்தம்.

மூலப்பொருளே முதற்பொருளே முத்தேவித்தாய் மூளைத்தெழுந்த, ஞாலப்பொருளேஎவ்வுயிர்க்கும் நடுவாய்நின்றநாயகமே, கோலத்துடனேஉள்ளிருந்துகுருவாய்மூலக்கிழங்காகி, சாலத்திருத்தி வேனையாளுந் தந்திமுகவாயிதுசமயம்.

வேறு.

வல்லைதனக்குநேசம் வைத்தவென்சித்தம்போல
தில்லையாவென்றுநெஞ்சம் நினைவுடன்கலந்துபாரில்
மெல்லவேமயக்கிவிட்ட வெறுமையையகற்றியப்பாற்
செல்லவேநடத்துமையா திருவடிசரணந்தானே. (எக)

சந்த விருத்தம்.

ஐந்துகரமொருமருப்பும்அகண்டசெவியுஞ்சிறுகண்ணு
தொந்திவயிறும்புகர்முகமுந் தூலவுடலுமிருபதமுஞ் [ந்
தந்திவடிவுமிருமணியுஞ் சத்தமொலிப்பமத்தாரை
சித்தியொழுக அடியார்முன் தெரியவருவாய்கணபதியே.

கதை.

என்றுதன்மர்தானினைந்து ஏற்றகணபதிக்கு
நன்றுகச்சொல்லி நாடித்திசைநோக்கி
நெஞ்சுதனில்வைத்து நேசத்தையுள்ளிருத்தி
பஞ்சமலம்நீக்கிப் பாசத்தையுள்ளறுத்து
அடுக்காறும்பார்த்து அகண்டவெளிதான்பார்த்து
நடுக்கமதுதவிர்த்து நமன்விதியைத்தள்ளிவைத்து
நெசித்துக்கும்பகத்தில் நினைவானபூரகத்தில்
நாசித்துவாரம் நடுவிணையைத்தான்திறந்து
சித்தன்பரிசித்துத் தெரிந்துவகையறிந்து
சத்துமசத்துந் தடுத்துவிடயமற
ஆராய்ந்துதேடி ஐம்புலனையொன்றாக்கி
சீராய்ந்துபூத்த நிறைக்கைறாதுக்கெடுத்து
காலாக்கனலெழுப்பிக் கணபதியைப்பார்ப்பளவில்
மூலக்கிழங்காகி முத்திக்குவித்தாகி

மும்மண்டலமு முடியுதியுந்தானுகி
எம்மண்டலத்தனக்கு ஏகமுதலாகாசம்
அம்மண்டலத்தனக்கு ஆதியனுதியுமாய்
கம்மென்றநாதமணி கலகலெனத்தான்முழங்க

பஞ்சவர் ஏகநாதனை அஞ்சலிசெய்தல்.

வந்தார்மரம்பிடுங்கி மலைகள்தகர்த்தெறிந்து
பந்தாடியேமலையைப் பாய்ந்துபிளந்தெறிந்து
கண்கள்சிவந்து கனலாய்ப்பொறிபறக்க
விண்களதிர விநாயகர்வந்துதித்தார்.

சந்தவிருத்தம்.

கடநடவிகடித நடனசரணம்
கரிமுகவிரிதிரு மருகசரணம்
வடவரையதிரிட வந்தாய்சரணம்
மதகளிறெனவுரு கொண்டாய்சரணம்
அடவியில்வழுதடு மாறியுமடியேன்
அன்புடன்மனதினி லுனையேதினமு
மடமிடிவகைத லுன்னைவந்தாய்
நாதகணபதி சரணஞ்சரணம். (எக)

இடைந்தேமனது புண்ணுறி வெக்கேவிட மென்றச
ந்து,குடைந்தேநினைவுநடல்தும்பி கோழையிரல்வழுவு
ள துய்,கடைந்தேதொடர்ந்துபின்சென்று கந்நகதந்த
னென,அடைந்தேன்சரணம் வைகுந்த மறியும்படிவழி
காட்டும். (எச)

கதை

தன்மர்துதித்துச் சரணமென்றுபோற்றிசெய்ய
மும்மதவேளானை முகனும்மனமகிழ்ந்து
என்பிள்ளாய்தம்பியரே இத்தூரம்நீங்களுந்தான்
தான்பிறந்தநாடுந் தலமும்நிலமும்விட்டு
பெற்றபிள்ளைபேரன்முதற் பெண்டுகளும்ஆளடிமை



உற்றசனத்தாயும் உறைதுறையுந்தன்னைவிட்டு
கானகத்தில்வந்தமையாற் கவ்விநமக்குண்டாகி
வானகத்தோர்தாமறிய மனதாகிப்பதற
தடித்தோம்தாமுங்களையுந் தன்மரேயென்றுசொன்னார்
அடுத்துமிகத்தன்மர் ஹூங்காரனைத்தெண்டனிட்டு
நடந்தவிபரிதமும் நாரணனார்கற்பனையும்
முடிந்தசகலமும் முழுதுமெடுத்துரைத்து
தொடர்ந்துகலிவருமுன் தொல்லுலகைவிட்டகன்று
அடர்ந்தவனத்தூடே அடியார்வருகையிலே
வழிமயக்கித்தேவர் வாட்டப்படுத்தினதால்
தெளியவழிகாட்டவென்று தேவர்தமைநினைத்தோம்
என்றுதன்மர்சொல்ல ஏற்றவிநாயகனும்
நன்றுகாண்தன்மரே நீர் நாரணனார்தம்மிடத்தில்
சென்றுவைகுந்தஞ் சேர்வதற்குநாம்தானும்
இன்றுவழிகாட்ட எழுந்தருளுமென்றுசொல்ல

பஞ்சவர்க்குவிநாயகர் பாதைகாட்டியது

கானகத்தினூடே கணபதியுந்தானடந்தார்
வானகத்துக்கேற்ற வழிதானிதுவெனவே
நல்லவழிகாட்டி நடந்தார்விநாயகரும்
வெல்லரியதன்மர் விநாயகனைத்தான்தொழுது
தம்பியரும்தன்மருமாய்த் தானடந்தாரம்மானை
நம்பிவெகுதூரம் நடுக்காடுந்தான்கடந்து
காடும்மலைசெடிகள் கல்லடர்ந்தபூமியுமாய்
இடரும்வழிமுழுதும் இக்கட்டாய்க்காதவழி
அலுத்துநடந்து அப்பாலும்போகையிலே
வலுத்தவெகுஉன்னிதமாய் மலைதெரியக்கண்டார்கள்
கண்டவுடன்தன்மர் கருத்துடையதம்பியரே
கொண்டல்சொரியுங் குழலான்துரோபதையும்
அசந்தான்நடைதளர்ந்தாள் அப்போவெனவொ...

ஓசந்தமலைதன்னில் ஒண்டொடியுந்தாமிப்போ
தங்கியிருந்து தவிப்பாரிப்போகவென்று
மங்கியிருள்வருமுன் மலையடிப்போமென்றுசொல்லி
மலையைத்திசைநோக்கி வந்தார்காணம்மானை
நிலையைத்தொடுத்து நெடுகவளர்ந்தமலை
மேகம்படியும் விலாசமுள்ளதந்தமலை
மாகமுகடளவும் வளர்ந்தமலைதனிலே

சீருநபஞ்சவரைக் காந்தருவன் போருக்கழைத்தது.

காந்தருவனொருவன் கண்டெதிரேவந்துநின்று
ஊர்ந்துவருமானிடரே உயிர்வெறுத்துவந்ததென்ன
ஏகிவிடுவதில்லை பெண்பெயரும்மேகநாதன்
நாகமுடன்பேருருஞ் சாற்றுகென்றானம்மானை
அப்போதுதன்மர் அவனைமுகம்நோக்கி
இப்போதுநாங்களுந்தான் ஏற்றகுருகுலத்தில்
சந்தனுமகாராஜன் றன்னுடையவங்கிஷத்தில்
வந்துதித்தோம்பஞ்சவராய் வகைவிபரம்நீர்கேளும்
எந்தன்பெயர்தருமர் எனக்கிளையோர்நால்வரிவர்
வந்தோங்கலியாலே வைகுந்தஞ்சேரவென்று
இந்தவழியாக ஏகிவந்தோமிப்போது
அந்தமொழிகேட்டு அவனேதுசெப்புவுற்றான்
வித்தையுடனன்குலத்து வேந்தரையுங்கொன்றழுக்கி
வந்தீர்களிப்போது வாய்த்தபழிதனக்குச்
சந்தோஷமாய்த்தருமர் தம்பிமார்நால்வரையும்
தந்துவிட்டுப்போமெனவே தானுரைத்தானம்மானை
முன்னுளில்வானவர்க்காய் மூர்க்கமுள்ள அர்ச்சனனும்
அன்னுளில்வந்தான் அந்நாத்தேர்தங்களுக்காய்
மன்னுபொறுத்துவிட்டேன் வலியவந்தீரிப்போது
இன்னுளிலென்பழிக்கு எதிராகவந்துவிட்டீர்
கொன்றுசினந்தீர்ப்பேன் கொற்றவரேஉங்களையும்



இன்றுசமர்வாருமென்று எதிர்த்தான்வனந்தனிலே
காந்தருவன்சொல்லைக் காவலர்கள்தான்கேட்டு
சாந்தமாய்த்தன்மர் தானுரைப்பாரோர்வசனம்
கலியைவிட்டுத்தப்பிக் காசினியைத்தானிழந்து
வலியவனந்தனிலே வைகுந்தந்தானேகி
போகையிலே நீமறித்துப் போர்வாடாவென்றுசொன்னாய்
ஆகையினுலுன்றுடனே அடர்த்துப்போர்செய்வதில்லை
என்றுதன்மர்சொல்ல ஏற்றதொருகாந்தருவன்
நன்றுதான்தன்மரேநீர் நாமோடிக்காட்டால்
திரும்பியுங்களத்திடம் சேருமென்றனிவழியே
கரும்புநிகர்மொழியாள் காந்தருவனைப்பார்த்து
எமேறுகெடுவாய்நீ இவ்வாறுத்தானுரைத்தாய்
நாமேயுன்சொற்கேட்டு நடப்பதுபோலேயுரைத்தாய்
பேய்கொண்டகாந்தருவா பேசாதிருபோடா
வாய்கொண்டதட்டாதே வழிவிலகிநீபோடா
மன்னுநீபோர்புரிய மாட்டாமையானாகில்
என்றுனையுன்ற வினைபோரேயென்மேலே
கடுகேயனுப்புமென்று காந்தருவன்றானுரைக்க
முடுகிப்பொருதவென்று மூர்க்கனவன்சொல்லுகையால்
தர்மமனம்வெருண்டு தம்பியைத்தானோக்கி
பொருமலுடன்மனது பொறுமைமிகவாடி
வார்த்தைசொல்லத்தம்பியர்கள் வணங்கிப்படிதுறுமல்
கீர்த்தியல்லசாமி கேடுகெட்டான்சொல்வதுதான்
என்றுசொல்லியப்பாலிருக்கின்றநால்வரையும்
இன்றுபடைபொருத யென்றேவுமென்றான்
சாற்றுபுகழ்பார்த்தனையுஞ் சகாதேவன்வீமனையும்
ஏற்றபரிநகுலன் இவர்களையும்வாருமென்ன
போருக்கழைத்தான் புத்திசற்றுமில்லாதான்
பாருக்குள்ளாவி பதைக்கவுடல்பதற
இக்கணமேஉங்களையும் எமலோகமேற்றுநற்கு
தக்கமுடன்வாருமென்று தாவிக்குதித்தோடா

இப்போ துரைங்களுங்மேலெதிர்ப்பதில்லையானாலும்
தப்பாதசொல்லுடையார் தன்வார்த்தைகேளாமல்
உன்மேலேயுத்தம் ஒருநாளுஞ்செய்வதில்லை
தன்மார்மொழிதட்டத் தருமமோஎங்களுக்கு
என்றார்ஐயோர்கள் என்சொல்வான்காந்தருவன்
நன்றுகக்கேட்டிலையோ நம்செய்தியின்னுலகில்
முன்னாளிலிந்திரன்மேல் முடுகிச்சமர்பொருத
மன்னவன்போர்புரிய மாட்டாமலப்பொழுது
சொன்னானைனைவர் தோத்துடனிந்தவழி
இன்னாள்வருவா ரெதிர்த்துப்போர்செய்யுமென்றார்
அப்படியே நீங்க ளவர்சொல்லைமீறாமல் [யும்
சொற்படியேவந்திர்கான் சூழ்ந்துகொண்டேனுங்களை
மண்டார்போல்காந்தருவா வைருந்தம்போதவரை
எண்டாதடைகள் மன்னரிசடுழிந்துபோகாதே
சொல்லக்கேள்வம்பா அடுக்கதனைவிட்டுவிடு
அல்லக்கான் நீங்கள் அடர்ந்துபோராடாமல்
போவதறிவமென்று புத்திகெட்டகாந்தருவன்
தாவித்துரோபதையைத்தானெடுத்துத்தோளில்வைத்து

துரோபதையைக் காந்தருவன் தோளில்வைத்தேகத்
துரோபதையை வீமன் நத்தி செயித்தது.

கொண்டுசெல்மங்கையுந்தான்கோவிந்தாவென்றழுதா
கண்டுபுகழ்வீமன் கண்கள்பொறிபறக்க [ள்
ஆகாசம்பூமி யதிரவெசந்தமிட்டுப்
போகாதேயென்று புறப்பட்டான்போர்வீமன்
காந்தருவன்றன்னைக் கட்டிமிகப்பிடித்து
சேர்ந்துபொருதிச் சினந்தெண்டுபோர்தானும்
காற்றுமழையுங் கலந்துபோர்செய்வதுபோல்
ஏற்றமலையிரண்டு மெதிர்த்துப்போர்செய்வதுபோல்
சிங்கமிரண்டுஞ் சேர்ந்துபோர்செய்வதுபோல்



பொங்குங்கடலிரண்டும் பூசல்விளைத்ததுபோல்
வாலியுடன்சுக்ரீபன் வினைத்துப்போர்செய்ததுபோல்
கோவியேமுன்னாளிற் கோபாலர்சிங்கமதாய்
இரணியனைக்கொன்றதுபோ லெதிர்த்தான்வலுவீமன்
தாணிதனிலவனைச் சக்கரிக்கவேநினைந்தான்
தன்மருந்தானறிந்து தன்போர்வாளைவிட்டு
பின்மருவும்வீமா விட்டுவிடுதம்பியென்றார்
அன்னைமொழிகேட்டு அவன்மயிரைவிட்டதுக்து
மன்னனிரவின்னாதிர வாரிபெடுத்தெறிந்து
குந்திமன்வீமன் கூவென்றான்காந்தருவன்
புத்திவந்ததென்று போற்றியேவிபனையும்
தெண்டனிட்டுடைவன் திரும்பிப்போகாமல்
சண்டையிட்டகாந்தருவன் தப்பிப்பிழைத்தானெனவே
பின்னால்துரோபதைதான் வேந்தைவர்தங்களுடன்
சொன்னால்அபாயமித் துன்பமெனலுநீங்களுந்தான்
பாடுபட்டதெல்லாம் பாவியென்றன்னாலே
கேடுகெட்டேன்யானுங் கிலேசமெல்லாம்விட்டுவிடும்
என்றுசொல்லத்தன்மரேத்திறைக்குப்புத்திசொல்லி
நன்றுநன்றென்று நடந்தாரவடம்விட்டு
மலைகள்சிறுகுன்று வனமும்பலகடந்து
கொலைசெய்யும்பாளிகர்கள் கொடியபுலிக்குஞ்சரமும்
வலுமிருகம்வாழும் மலையும்வனத்திரளும்
பலமிருகந்தானும் பஞ்சவர்கள்கொன்றுதிர்ந்து
விலகும்மிருகமதை விந்தையுடனார்த்திருந்து
கலைமிருகம் கண்டுநிங்கிப்போகுதென்று
தங்களிலேதான்பேசிச் சந்தோஷமாய்நடந்து
பொங்குநதியாறுகளும் பூபாலர்தான்கடந்து
செங்கழுநீர்க்குளமும் சேர்ந்தநீராம்பலுடன்
திக்குன்றமெங்காறும் சிறந்தவளர்சோலைகளும்
வைகைநதியாயும் வாவிதடாகமுமாய்
பொய்கையுதனைக்கண்டு புனலருந்தியங்கிருந்து

செப்புகழ்ராஜரிஷி செய்புந்தவத்தினையே
வெப்புகழ்தர்மர் விசேஷமிதுவென்றறிந்து
கண்டுபணிந்தைவர் களிகூர்ந்துதெண்டனிட்டார்
தொண்டுபண்ணிநின்றார்காண் அரைராஜமாமுனியை
பார்த்திபர்கள்மாமுனியைப் பணிந்தேதுகேட்கலுற்றார்
பெற்றம்புலித்தோலுடையீர் பொய்கைதானேதெனவே
நாடுபுகழ்வேந்தே நாகமடந்தையர்கள்
ஆடுகின்றதீர்த்தமிது ஆமென்றாரம்மானை
அப்போதுமாமுனியை ஐவருமேதானோக்கி
செப்போமுலைமடவார் தீர்த்தமிதுவாடுதற்கு
எப்போவருவா ரெனக்கேட்டாரம்மானை
நப்பாதமாமுனியுந் தானவர்க்குளதுசொல்வார்
ஓடுகின்றநீர்பரிதி உதயமெனும்வேளையிலே
காதலாலங்கவரைக் காணலாமென்றுரைத்தார்
கோலமடந்தையுடன் கொற்றவருமங்கிருக்க
வாலவுதயமதில் வந்தார்மடந்தையர்கள்
மீதானபொய்கைதனில் மெல்லிநல்லாள்தான்மூழ்கி
கோதானமாதரெல்லாங் குழலாதித்தான்முடித்து
வந்தவரைக்கண்டு மங்கையருந்தான்கூடி
இந்தவனத்தி லிவராரெனவேதான்
துங்கமுடிமன்னவரே துடியிடையாள்தன்னுடனே
இங்குவந்த நீங்க ளெவ்வூரெவடமென்றார்
பாரோர்புகழுகின்ற பாண்டுமன்னன்றன்புதல்வன்
தாரார்தருமனென்பேர் தம்பிமார்நால்வரிவர்
வாய்த்தகலியுகமும் மன்றலுலகில்வந்ததினால்
ஆய்ந்தபுகல்வைகுந்த மடையவென்றுவந்தோங்காண்
தருமரேமங்கையுடன் தம்பிமார்நால்வரிவர்
அருமையுடனிப்போது ஐவரையுங்கண்டோமே
எங்களுக்குநற்காலம் இப்போதுநீங்களுந்தான்
உங்களுக்குநாங்க ளேகத்தடிமைதானுமி
புரந்தரனார்தம்மிடத்திற் போவோமெனமகிழ்ந்து



வரந்தருவாரங்கே மகுடமுடிசூட்டிவைப்பார்
நானிமுடிசூடி நாகலோகமானதெல்லாம்
ஆளும்படிக்கு அரசாளவைத்திடுவார்
நன்றாகஉங்களுக்கு நாங்களெல்லாமிப்போது
மன்னர்சபையறிய மனையாட்டியாகிடுவோம்
சேருவோம்வானவர்முன் செல்வியுடனைவருமாய்
வாருமையாவென்று மடந்தையர்கள்தானழைக்க
பாசமுள்ளபெண்கள்தாம் பார்மீதிலாசைவிட்டு
வாசமுடன்நாங்கள் வைகுந்தஞ்சேரவென்று
போகையிலே நீங்கள்சொல்லப் புத்தியல்லமங்கையரே
தாகமுடன்சொல்லத் தகுமோதானுங்களுக்கு
என்றுதன்மர்சொல்ல ஏந்திழைமார்தான்கேட்டு
ஒன்றுமில்லைநாமிவர்க்கு உள்ளாசைகொண்டதெல்லாம்
சற்றாசையில்லாமற் றானுரைத்தார்தன்மருமே
சித்தாசைகொண்டபெண்கள் இருப்புமென்றுதான்போ
மன்னவரைவிட்டு மடந்தையர்கள்போனதற்பின் [ஆர்
தென்னவர்களைவருமாய்ச் சேர்ந்ததுரோபதையும்
மாமுனியைத்தான்வணங்கிவாழ்த்திவிடைதாருமென்ற
பூமுனிவன்வாக்கருளிப் போமென்றுசொல்லுகையில்
தன்மரேநீங்கள் தாவும்வழிதனிலே
தென்மலைபோற்பாம்பு சீறியேதான்விழுங்கும்
எப்படிநீர்போவீ ரென்றுரைத்தான்ராஜரிஷி
மெய்ப்புடைய தன்மர்விரைந்தேதுசெப்பலுற்றார்
விதிவசத்தையார்தானும் விலக்கவல்லாருண்டோதான்
சதிரானமாமுனியைத் தானனுப்பியேநடந்தார்
மின்கொடியுந்தன்மருமாய் வீமனுடன்தம்பிமாரு
வன்குமுதமாமலையில் வந்தனர்காணம்மானை
அந்தமலைச்சாரி னருகேயொருபுரமாய்
சந்துசிறுதாரைவழி தான்கடந்துபோகையிலே
சிற்றடியும்பாதையுமாய்ச் சிறியமலையதுபோல்
புற்றரவமானதுவும் புரளாதிருந்ததினால்

பாம்புபழ்ச்சவரை விழுங்கப்பாவவிமோசமானது

ஓங்கிவளர்ந்த உயர்மலையாமென்றுசொல்லி
தாங்கிநடவாமற் றூராளமாய்நடந்து
வந்தவர்களைவஞ்சமாய் வனிதைதுரோபதையும்
சந்தோஷமாயவந் தான்விழுங்கிற்றம்மானை
அப்போதுவீம னரையிற்சிறுவாளதுவும்
தப்போதுநாகமதைத் தான்பிளந்துகீறியதாம்
மெய்ப்பானதன்மருத்தான்விதிசெயமோவென்றுசொல்லி
இப்பால்வெளியில்வந்து எச்சில்பட்டோமென்றவரும்
மாதிர்த்தமாடி மடுக்கரையில்நிற்கையிலே
கோதில்விழுங்குநின்ற கொடியபாம்பார்ப்பானும்
வந்துபணிந்தான் மன்னவர்களைவரையும்
இந்தமகிமையிது ஏதென்றுதன்மருத்தான்
கேட்கும்பொழுது கிருபையுடன்பார்ப்பானும்
தாக்குமுதல்முந்நாள் சபித்தாரேமாமுனிவர்
பாங்கானபுஷ்பம் பறித்துவரச்சொன்னவுடன்
பூங்காவனத்தேடிப் போனேனவடமதில்
மாமுனிவர்சொற்படிக்கு மலரெடுக்கப்போகையிலே
காமுறவேரம்பையரைக் கண்டுமயங்கிவிட்டேன்
பூசைசெய்தனக்கு புஷ்பம்வரவில்லையென்று
ராஜரிஷிகோபமதால் நாட்டமுடனெந்தனையும்
பாம்பாகவேசபித்தார் பாரமுனிகோபமதாய்
ஆம்போவிச்சாபம் அகலுவதெக்காலமென்றேன்
ஐவர்வைகுந்தம் அடையவென்றுதான்வருவார்
மெய்வாய்பிளந்து விழுங்கிடுவாய்ஐவரையும்
தாமதமேதென்சாபந் தன்னைவிட்டுநீவிலக
வீமனுடைசிற்றிடைவாள் மெய்யுடலைத்தான்பிளக்கும்
அப்போதுசாப மகன்றுவிடுமென்றுரைத்தார்
இப்போதுநானும் ஈடேறஇங்குவந்தீர்
தன்மரையும்நால்வரையுந் தான்கண்டபோதெனக்கு



ஜென்மவிமோசனமாய்த் தேவர்சபைநான்சேர
நீரேகொடுத்தருளும் நீமலர்தனைநினைந்து
போரேறெனப்பார்ப்பான் போயினன்காணம்மானை
மார்க்கமுடனந்த மலைகடந்துஅப்பாலும்
தீர்க்கமுடனைவர் திருமால்தனைநினைந்து
வாரவழியில் மலைகளோராயிரமும்
ஏறியிரங்கியப்பால் வெங்காதந்தானடந்தார்
நடந்துவரும்வழியில் நல்லதொருஅஸ்தகிரி
அடர்ந்தோங்குமாகாச மந்தமட்டுந்தான்வளர்ந்து
நீண்டமலைகண்டு நினைவயர்ந்துதன்மருத்தான்
ஆண்டவனேயிந்த அதிசயந்தானேதெனவே

சயிலமாயிருந்த மறையோற்குச் சாபம் நீங்குதல்.

தெண்டாயுதமெடுத்துத் திறல்வீமனப்போது
அண்டமதிர அடித்தான்மலைதகர
தகர்ந்தமலைவேதியனாய்த் தானின்றனம்மானை
பார்த்துதன்மரேதென்று பார்ப்பானைத்தானோக்கி
இந்தவிசேஷ மேதென்றுதான்கேட்க
சிந்தைமகிழ்ந்து செப்புவானந்தவேதியனும்
முன்னுளசுரருடன் மூர்க்கமாய்நானும்
என்னுடையவர்கள் இகல்செய்யமாட்டாமல்
உதைபட்டசுர ருயிர்மடிந்துமண்மீதில்
வதைபட்டுயிர்போக வைகுந்தந்தாருமென்றார்
வகைநான்தெரியாமல் வைகுந்தந்தோமென்றேன்
பகைவருவதறியாமல் பாவியேனுரைத்த
சொல்லிவிட்டேன்வாய்விண்டுச்சொன்னதையுமாலறிந்
கல்லாயெனைச்சபித்தார் கார்வண்ணரப்போது [து
பண்டையுருமாறிப் பாரமலைதானுகி
விண்ணுயரந்தான்வளர்ந்து மேதினியிற்றுனிரென்றார்
ஆயரேஅச்சுதரே அடிபெற்றுச்சாபமுறந்தான்

தூயரேயிப்போது நிலையுமென்றுயான்கேட்டேன்
நேயமுடனவர் நினைந்துநம்மைத்தானோக்கி
மாயவரேதஞ்சமென்று வைகுந்தஞ்சேர்வதற்கு
வருவாரிதுவழியாய் மானனையார்தன்னுடனே
தருமருடதம்பியெனுந் தார்வீமன்தண்டாலே
உருமாறவுன்னை உடைபடவேதானடிப்பான்
வருவாய்போவென்று மாயன்சபித்துவிட்டார்
ஆனதினாலென்சாபம் ஐவரேதீர்த்திர்
நானதினாலேபிழைத்தேன் நல்லவரேஉங்கள்தர்மம்
நான்போறேன் நீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
தான்போங்களென்று சதுர்மறையோன்றானடந்தான்
ஆமாமென்றைவர் அனேகநெடுந்தூரம்
தாமோதரனே சரணஞ்சரணமென்று
தன்மருந்தம்பியருந் தாரார்துரோபதையும்
இம்மைதனிலெல்லாந்தா மிங்கேகழித்தமென்று
ஆதித்தனூடாடா தருங்கானகம்புகுந்து
பேதித்தவல்மிருகம் பெரும்பூதநாதகணம்
சாரும்பலவிருக்ஷம் தழைத்தநிழற்சோலைகளும்
ஊரும்பலசாதி உயர்பறவைவல்விலங்கும்
மன்னுயிருந்தன்னுயிர்போல் வாழும்புகழ்தன்மரென்று
பன்னுயிரெல்லாம்வணங்கும் பஞ்சவர்கள்தங்களையே
எண்பத்துநான்குயிரு மிவர்களுடன்றான்பேச
பண்போத்துப்பஞ்சவர்கள் பகைவிப்புமில்லாமல்
நாற்றிசையுங்கானகமும் நல்லசாஜனமும்
வேற்றுமைகளற்று விலாசமுடனவ்வனத்தில்

அகவழகப்பெண் அருச்சுனனால் விமோசனமானது.

வாரார்களைவருடன் வனிதையொருபெண்ணுமென
பேராகக்கண்டெதிரே பெண்கொடியாளென்றிருந்தி
அகவழகமாக ஐவர்முன்னேவந்துநின்றாள்



விகவசொரூபமுடன் மேலவரைமேவவென்று
தருமருடதம்பி தார்வீமருக்கினிய
வரும்விசயன்புயத்தில் வந்துதழுவவுற்றாள்
புரவிமுகமானதும் புண்டரீகமாமலர்போல்
இரவிமதிபோலே ஏந்திழையாள்நிற்பளவில்
தாதலருந்தன்மர் தானேஅதிசயமாய்
காதலரேயிந்தக் காரணமேதென்றுரைத்தார்
கானிம்முனிதேவி கானியென்பேர்முன்னாளில்
வானிலொருமுனிவன் வந்தென்னைச்சேருகையில்
அறிந்தெந்தன்பார்த்தாவும் அசுவமுகமானையென்றார்
பிரிந்தேன்முனியைவிட்டு பேச்சொன்றுமில்லாமல்
அப்பாவிச்சாபம் அகலும்வகையென்னவென்றேன்
மெய்யாகநீயும் விசயனுடன்றோளை
சென்றுதழுவத் திரும்புமசுவமுகம்
என்றுமுனிசொன்னபடி யிப்போதுதீர்ந்துதென்றாள்
பூவுலகில்வாழும் போர்வேற்கைவருந்தான்
தேவுவைகுந்தஞ் சேர்வீரெனமொழிந்து
போனதுன்சாபம் போச்சுதென்றுதான்மகிழ்ந்து
மானதும்போனதற்பின் மன்னவர்களைவருந்தான்
காணார்வனந்தாக்கிக் கடிதுநடக்கலுற்றார்
சேனைபதிவேந்தர் திருவுளமேவன்புடனே
நடந்தார்வெகுதூரம் நாலாறுகாதவழி
கடந்தப்பால்வந்துநின்று கண்டார்விமலமலை
அந்தமலைகடந்து அநேகநெடுந்தூரம்
சந்தனச்சோலை தடாகமதுகடந்து
ஆலிலைமேற்றுயின்ற அச்சுதனைத்தானினைந்து
மாலியாறென்னும் மாதவிம்மைந்துகண்டார்

அருவிருந்தபெண்ணை நேராகச்செய்தது.

ஆறுதனைக்கண்டு ஐவருந்தானக்கரைக்கு
ஏறவொண்ணாதென்று இயல்தருமர்தானுரைக்க

வீரிட்டுவீமன் விசயனையுந் தன்மனையும்
பூரித்திரண்டு புயமீதிலே வைத்துமிக
ஒருகைசகாதேவன் ஒருகை நகுலனையும்
மருவுமலர்முதுகில் மங்கையரைத் தானேற்றி
பிறவிப்பெருங்கடலைப் பெரியோர்கள் நீந்துகைபோல்
திறவிக்கரிய திறல்முனிவர் போலாகி
ஆறதனை நீந்தி அந்தக்கரைதனிலே
ஏறுதல்போலக்கரையி லேறினார் காணம்மானை
அந்தமுன்னபோது ஆரணங்கு போலாகி
வந்தவளுந் நீக்க மன்னுபுகழ்த் தன்மருந்தான்
ஏதுகாண் பெண்கொடியே இவ்வடமுன் றனக்கு
ஓதுவீரென்றதன்ம ருண்மையாய்த் தான்கேட்க
நீதமுனியின்தேவி நித்யகன்னியென்பெயரும்
ஏதமொழித் திரையிற் றுணைத்தல்செய்துவிட்டேன்
ஆகையினாலென்னை அருவாயென் றுரைத்தார்
மாயையிதுசாபம் வாங்குவதெக்காலமென்றேன்
அரியபுகழ் தன்மருடன் ஐவர் திரோபதையும்
பெரியவர்களித்தவழி பெண்ணேவருவார்கள்
ஆறென்றுசொல்லி யவர்கள் மயங்கி நிற்பார்
வேறென்றுவீமன் இவர்கள் தனையெடுத்து
நீந்திவருகையிலே நீங்குமுந்தன் சாபமென்றார்
சாந்தமுனி சொற்படியே தான்வந்திருப்போதென்
சாபமுந் தீர்த்ததுகாண் தன்மரே உங்கள்தன்மம்
பாபமன்றதுகாண் பதிதனக்கு நான்போறேன்
தேவரீர் நீங்கள் சேரும்வைகுந்தமென்று
காவலிளங்குயிலாள் கணவன்பதிபோய்ச் சேர்ந்தார்
அந்தமொழிகேட்டு அதிசயமாயுளமகிழ்ந்து
வந்தார்வெகு தூரம் வனமும்பல கடந்து



பாஞ்சாலி வைகுந்தபதியடைந்தது.

வரும்வழியிலே நிமித்தம் மதியங்கமா யுரைக்க
தருமரது கேட்டுத் தானேவியாகுற்று
கன்னி துரோபதைக்குக் காலம்போமாறெனவே
இன்னிமித்தஞ் சொல்லுதென்று இடைக்குமனமுழன்று
வருகையிலே நடந்துபின்னும் வந்துதுரோபதையும்
இருகைவிரித்தழி பெயர்த்தடியும் வையாமல்
மெய்சோர்ந்து சந்து மேல்மூச்சகோள்வையுமாய்
கைசோர்ந்து கண்ணசந்தி நின்றுதனையில்
ஐவர் திரும்பி ஆரணங்கை வந்தணைத்து
கைதாங்கியென்னக் கருத்தேதென்றுகேட்க
தனக்குவருமயக்கந் தானுரைத்தாளம்மானை
உனக்குவரும்மயக்கம் உள்ளபடி இல்லையென்று
சொல்லென்றுகேட்கத் துரோபதையும் வாய்வெருவி
நில்லென்றதாது நெடிநாடியுண் ணசந்து
நந்துவங்களற்றுத் தன்நினைவுதான்மாறி
பித்துக்கலங்கிப் பேரறிவுங்குற்றறிவாய்
கண்டத்திற்சேத்துமமாய்க் காலினதுமாறாவி
அண்டத்தில்நின்று ஆறடுக்குத் தானசைத்து
பிண்டத்தடுக்கிலைந்து பிராணனொனும்பையுமைத்துமன்
விண்டகத்தைநோக்கி விடையாதிகட்பதுதி
பொறிகலங்கியைந்து புலனும்மறியாங்கி
நெறிகலங்கியெழுந்தோர் நினைவுமொழி
வார்த்தமொழிங்கி வன்பித்தமேகுளிர்ந்து
சிரம்பறந்து சேத்துமமுமேலாகி
மன்னுந்தன்னிரதனிற் வந்துமிகவொடுங்கி
தன்னிருத்திமிற் றுரெறுங்கியேமாறி
வாயிலே நீரும் வந்தெட்டிப்பார்க்குதிப்போ
சாயுமுடம்பு கப்படனே ஆங்கைவிட்டு
அசதிகொடுக்குதுகா ணவரேயென்றுரைத்தாள்
அசதியென்ற சத்தம் ஐவருமே தான்கேட்டு

வீமன் நகுலன் விஜயன்சகாதேவன்
தாமுமயங்கித் தயங்குவதைத்தன்மருந்தான்
நால்வருக்கும்நெஞ்சு நடுங்காமற்புத்திசொல்லி
வேல்விழியாள் துரோபதைக்கு மெய்யெபதராமல்
சொல்லுகின்றார் தன்மர் துரோபதைக்குநேசமுடன்
வில்லுக்குநல்ல விஜயன்மனையாளே
மின்னே துரோபதையே விட்டுப்பிரியாதே
பொன்னே நாயமணியே புத்திசொல்லக்கேட்டருளும்
நெடியோனே தஞ்சமென நெஞ்சிற்றியானமதாய்
பிடியே நிலையாகப் பிடியென்றுதன்மர்சொல்ல
துடியிடையாள் நல்ல துரோபதையுந்தான்மகிழ்ந்து
படியளந்தமாலே பச்சைவண்ணா தஞ்சமென்று
மகிழ்ந்துதுரோபதையும்வழுத்தினள் தோத்திரந்தான்
புகழ்ந்துபுவியிலுள்ளோர் புத்தியென்றுகேட்டருள்வீர்

விருத்தம்.

பஞ்சவர்தமக்குநானும் பாஞ்சாலியாகத்தோன்றி
பஞ்சவரைந்துபேர்க்கும் பாரியாயிருந்துபாரில்
அஞ்சவேதுதுவென்று அர்ச்சனன்றுயிலக்கொய்து
அஞ்சலென்றருளிச்செய்த அச்சுதாசரணமென்றேன்.

இதுவுமது.

மேருவிற்பொரித்தவுண்மை வியாசர்சொற்படியாரித்தப்
பாரினிற்பகையுமற்றுப் பாரினையாண்டுபிற்பால்
ஊரினிற்கலியன்வாராதென்றைவர்ஒதுங்கிவந்த
சீரினிலடியாளுக்குச் சேரவைகுந்தந்தாரும்.

இதுவுமது

ஐவர்க்குந்தேவியாகி அழியாதகன்னிதானாய்
ஐவரைப்பிரியாதிந்த அவனியிலிருந்துவாழ்ந்து
ஐவருமடியாள்தானும் அறந்தவஞ்சேரவந்தோம்
ஐவர்க்குமுன்னேவாரேன் அரியவைகுந்தந்தாரும்.



இதுவுமது.

வந்தவிடத்திலிடைவழியில்மரணமெனக்குச்சரியெனவே
இந்தவனத்திலுடல் விழுந்தாளியேனுந்தன்பதஞ்சேர
விந்தயிரிக்குவழிகாட்டி வேறோர்துன்பமணுகாமல்
நந்தாமுகுந்தாவைகுந்தா நற்றாமலர்த்தாள்தருவாயே.

இதுவுமது.

என்னைநமனுமணுகாம லெதிரேபட்டாதம்வருக [தா
உன்னைமனதில்மறவாமு லுறையேன்வருவேன்வைகுந்
பின்னைமனதுபதறாமற் பிடித்தபிடியுந்தவறாமல் [கே
முன்னேவருவாய்கோபாலா முகுந்தாசரணஞ்சரணமே

கதை

என்றுதுரோபதையும் இறையோனைப்போற்றிசெய்து
ஒன்றுமறியேனிவனே உன்பாதமேயெனக்கு
தந்தருளவேணுந் தாணுவேபோற்றியென்று
நந்தாமுகுந்தா நடுக்காட்டிலென்றுடல்விட்
டிந்தாபிரிந்துயர்தா னென்கோவேஉம்மிடத்தில்
வந்தாலிடைவழியில் மறுக்காமலுன்றனுடைய
வைகுந்தந்தந்தருளும் மாயோனேபோற்றியென்று
மெய்கண்டுபோற்றி விமானமதிலேறி
தோத்திரங்கள்பண்ணி துதித்துபதறாமல்
மாத்திரைப்போதாகிலும் மனதுமயங்காமல்
தில்லைநகர்காளத்தி திருவருணையாத்திபுரம்
நெல்லைநகர்மதுரை நீராணைக்காவொடு
அவந்திஅயோத்திதிரு வரப்பாடிமாபுரம்
தவந்திதுவாரகையும் நாகைத்திருக்குடந்தை
காசிசித்துகாவேரி கங்கையமுனையடை
நாசிச்சரச்சுவதி நருமதைகோதாவரியும்
திருப்பதிபொன்னரங்கம் ஜெகன்னாதஞ்சோலைமலை
விருப்பமிகவுள்ள விசேடதலமந்தனையும்
சிந்தைதனில்நினைந்து தியானித்திருப்பாளவ்
அந்தரத்திலுள்ள அரம்பையர்களெல்லோரும்

தூய்யமலர்சொரிந்து தூந்துமிகள் தான்முழங்க
வெய்யமணிபதித்த விமானமதிலேதான்
ஆயாள் துரோபதையை அம்மையார்கள் தான்சூழ
நேயாள்வைகுந்தம் நிறைந்திருந்தாளம்மானை
மைக்கண் துரோபதையும் வைகுந்தஞ்சேர்ந்தபின்பு
மிக்கதொருபஞ்சவர்கள் மெய்கலங்கியுள்ளசந்து
வாடிமனதிடைந்து மழைகாணப்பயிராதுபோல்
கூடிப்பிரியாதிருளிற் கொம்பிழந்தவானரம்போல்
சோடுபிரிந்துமனைத் துயரமுறுமன்றில்போல்
காடுதனில்நின்று கவலைபெரிதாகி
தெய்வமேஉன்பெலனே தேறிமனதேர்மையதாய்
ஐவருக்கூடி அடக்கிருந்தமினை
மெய்யுந்தவறாமல் மேனிசத்தியமாமல்
செய்யுஞ்சடங்குகளைச் சிக்கிரமாய்த்தான்முடித்து
நடந்தார் திசைநோக்கி நல்லபுகழைவருந்தான்
கடந்தார்வெகுதூரங் கானகமும் ஆறுகளும்
அப்பாதும்போகையிலே ஆனதொருவீமனுந்தான்
தப்பாதசொல்லுடைய தார்வேந்தே அண்ணனே
கற்புடையமாது கானகத்திலேமடிந்த
உற்பனமேதென்று உயர்வீமன்றான்கேட்க
வைசுறுள்ள தன்மர் மகிழ்ந்தேதுசெப்பலுற்றார்
ஈசர்பதியொரு மிமையோர்மடந்தையிவள்
மாபாரதமுடையா னத்திருந்தாளெருக்குள்
நீபாவியானா நீபோதலைமடிந்து
பாரதப்போரும் பகையுமேதான்முடித்து
பாரதவேயாண்டு பரலோகஞ்சேரவென்று
கலியுகத்தைத்தான்டிக் காடுறைந்துதாய்வரவே
சலியாமல்தம்பிநீதே தானடந்தாளித்தூரம்
தேவர்சபையறியச் செய்திபோகாததினால்
பாவசரீரமிதை பாரினிலேவிட்டு
முன்னேநடந்துவிட்டாள் முகுந்தனுடன்சன்னதிக்கு



பின்னேநடந்து பிறகேவழிகூடி
நாமும்நடக்கவென்று நடந்தார்வெகுதூரம்
தாமும்பின்தம்பியருந் தையலையுந்தான்பிரிந்து
கானகத்தி னூடே கடுகிவருகையிலே
வானகத்துச்சிங்கம் மலைமுழைக்குள்ளேயிருந்து

மடக்கலாய்வந்த மறையோர்க்கு திடங்கொண்ட வீமனுஞ் சாபந்தீர்த்ததல்

வந்துபதுங்கி வருவானைத்தான்பார்த்து
எந்தன்பசிதீர எடுத்துண்பேனவரையும்
என்றுமகிழ்ந்து எதிராக ஆர்ப்பரித்து
கொன்றுபசிக்கக் கூர்நகமுங்கைகளுமாய்
கண்ணுமுழமுங் கனற்போலெரியவுமே
விண்ணுருவப்பாய்ந்து விழுங்கவென்றைவரையும்
சேர்ந்துபிடிக்கவென்று சிங்கமதுதான்சீறி
பாய்ந்துபிடித்ததுகாண் பருவீமன் றன்னையுந்தான்
கண்டானேவீமன் கண்டரவுந்தனையும்
அண்டாதடித்தொதுக்கி யப்பால்வெருண்டெழுந்து
சிங்கத்துவாயலகைத் திறல்வீமன்றான்பிடித்து
பங்கப்படுத்திப் பகுந்திரண்டுகூறாக்கி
உதைத்தானடிவயிற்றி லுருண்டோடிச்சிங்கமது
பதைத்துதிகைத்துப் பதறியுடல்நடுங்கி
வேதியர்போல்வந்துநின்றான் மெய்த்தருமர்முன்பாக
நீதிமறையோனும் நிற்பளவிற்றன்மருந்தான்
ஏதுகாண்வேதியரே இப்படிநீவந்ததென்ன
சாதுவிசுவமுனி தன்பூசைக்கேமலர்கள்
நாலெடுக்கப்போனேன் நடுக்கானகத்தனிலே
தாலெருக்குஞ்சோலையிலே தனித்திரண்டுசிங்கமது
ஆர்ப்பரித்துவாந்தினப்பி பங்கிரண்டுஞ்சண்டைசெய்ய
தாப்பிரியமாய்ப்பார்த்துத் தாமதமாய்நின்றுவிட்டேன்
வருகாமலங்கிருக்க மாமுனியுமோடிவந்து

தருகாமமென்னைச் சபித்துவிட்டார்சிங்கமதாய்
எத்தியசாபமெனக் கெப்போதுதீருமென்று
போற்றியேயான்துதிக்கப் புகழ்முனியுமப்போது
மைமருவுங்கானகத்தில் மால்பாதந்தான்தேடி
ஐவருந்தான்வருவா ரவர்களாலுன்றனக்கு
தீருமென்றுசொன்னார் தீர்த்தருக்காணிச்சாபம்
போருமென்றுதான்மகிழ்ந்து போனான்மறைபோலும்
மறைபோனும்போனதற்பின் மன்னவர்களைவருந்தான்
இறையோனேதஞ்சமென்று ஏகினார்கானம்பானே
மலைகள்பலகடந்து மாயோனைத்தான்நினைந்து
கலைகள்மறைகள் காடுபுலியாளிசிங்கம்
பெரியமதவாரணங்கள் பிடிபுறட்டன்றிகளும்
அரியவனக்காட்சி அதிசயமாய்த்தான்பார்த்து
மஞ்சுலவுஞ்செண்பகிரி பட்டமலையோர்புறமாய்
மிஞ்சுபுகழ்பஞ்சவர்கள் விரைந்துவருகையிலே
தானதவம்பூசைஜெபந் தன்னுடனே அம்மலையில்
ஏனமுனிவ ரிருந்தாரவர்தன்னையும்
கண்டுவணங்கிக் கையால்மலர்சொரிந்து
தொண்டுபண்ணிநிற்கையிலே தோற்றமுடனம்முனியும்
மன்னவரேஎங்கிருந்து வாரீரெனக்கேட்டார்
தென்னவர்கள்போற்றுஞ் சீரானதன்மருந்தான்
பாண்டுமைந்தர்நாங்கள் பாராசைவிட்டகன்று
வேண்டுங்கலியனுக்கு மேலுமுன்னேநீண்டோனை
தேடிவந்தோம்வைகுந்தஞ்சேரவென்றுநாங்களுந்தான்
நாடிவந்தோமும்முடைய நற்பாதத்தெண்டனிட்டோம்
என்றுதன்மர்சொல்ல இயல்முனிவரேதுரைப்பார்
நன்றுகாண்பஞ்சவரே நான்சொல்லநீர்கேளும்
வேகமுடனித்தூரம் விரைந்தோடிவந்ததினால்
தாகம்பசியிளைப்புந் தகையாரவேனுமென்று
ஐவரையுந்தானிருத்தி யன்புடனேவார்த்தைசொல்லி
மெய்வருந்திகந்தமூலம் வேணுமென்றுதானினைத்து



போசனமும்பால்தயிரும் போகவுண்டாகவென்றார்
வாசமுடன்முனிவன் மகிழ்ந்துரைத்துஐவரையும்
பார்த்திபரேஎன்முகத்தைப் பாருமென்றுதானுரைக்க
போற்றிமுனிமுகத்தைப் பூரணமாய்த்தான்பார்த்தார்
தேனுங்கனியுந் தெவிட்டாதபால்பழமும்
தானுஞ்சிலமுனிவர் தன்னிடத்திற்றோன்றியதால்
அந்தக்கனிதேன்பழமும் அருந்துமென்றார்மாமுனியும்
இந்தக்கனிபால்பழமும் இப்போதழைத்தவிதம்
அதிசயமாமென்று ஐவருமேதானருந்தி
நதியிற்புனலருந்தி நமஸ்கரித்தார்மாமுனியை
இருந்துதகையாறுமென்று இன்பமுனிதானுரைத்தார்
விருந்துண்டிளைப்பாறி வீற்றிருந்தாரைவருந்தான்
கதிரோனும்போய்மறைந்தான் கங்குல்வந்துமூடியதே
சதிரானமாமுனியுந் தன்மர்கதைதான்கேட்டு
வேதவிதிசாஸ்திரமும் விளக்கமாயைவருக்கும்
போதகமாய்ச்சொல்லிப் போதித்தார்மாமுனியும்
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
பொங்குபுகழைவருந்தான் பூரித்தெழுந்திருந்து
கதித்தபரிதியுடன் காலக்கடன்கழித்து
மதித்துமகிழ்ந்தைவர் மாமுனிவர்தம்மிடத்தில்
வந்துவணங்கி வைகுந்தஞ்சேர்வதற்கு
தந்துவழிவசமாய்த் தான்வழியுஞ்சொல்லுமென்றார்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களுமச்சுதனைத் தேடியின்னங்காணார்கள்
நீங்கள்போய்க்காணரிது நிட்சயங்காணிப்போது
ஓங்குபுகழ்முனிவருகந்துரைக்கப்பஞ்சவர்கள்
பன்னகமேற்றுயிலும் பச்சைமால்நாரணரை
என்றைக்குமெங்க ளிருதயத்தில்வாழ்வோனை
அடியார்க்கெளியானை ஐவருக்குந்நாயகனை
படியேழளந்தானைப் பராபரமாய்நின்றானை
தஞ்சமென்றபஞ்சவர்க்குச் சகாயமாய்நின்றானை

அஞ்சலென் றுவந்ததுவும் ஆதிமுதலோனை
கற்பாய் நினைத்தோர்க்குக் கண்ணெதிரே நின்றானை
இப்பாரிலெங்க ளிடர் தீர்க்கவந்தோனை
தப்பாதசொல்லுடைய சருவதயாபரனை
ஒப்பாருமில்லாத உயர்ந்தபராபரனை
காணலாமையா கருத்தில றுதினமும்
பூணலாஞ்சீர்பாதம் போற்றலாங்கண்ணார
ஏதுவினைவந்தாலு மெங்கள்மேற்சாராமல்
தீதுவினை தீர்த்த திருமால்காண்மாமுனியே
ஆதலாலெங்கள்புடலா மச்சுதனார் தன்பதியை
காதலாற்காணவழி காட்டுமென்றாரம்மானை
அந்தமொழிகேட்டு அருள்முனியுமேதுரைப்பார்
எந்தவகையாலு மிப்போதே நீர்காண்பீர்
கேசவனைக்காணக் கிட்டாதென்றேயுரைத்தேன்
பேசுநெறியால்மனது பேதியாதேயிருந்தீர்
நேசமதுகண்டேன் நிச்சயமாய்நீர்காண்பீர்
வாசமுள்ளபாதை வடதிசையில் நீர்நடவும்
காடுமலையுங் கடந்துகேதாரமட்டும்
நாடிநடவுங்காண் நல்லவைகுந்தபதி
காணலாமென்று கட்டுரைத்தார்மாமுனியும்
தோணவேமாமுனியைத் தொழுதுமிகவணங்கி
நடந்தார்களைவர் நாரணரே தஞ்சமென்று
கடந்தார்வெகுதூரங் கடியவனத்திரமும்
திரண்டமலையுந் திருமலையுங்காடுகளும்
இருண்டவனங்கடந்து இப்பால்வருகையிலே

ராட்சதையாயிருந்த நங்கைக்கு மீட்சியாயைவர்
விமோசனஞ்செய்தல்.

கரியமுகில்நிறத்தாள் கடலருந்தும் நீர்வாயாள்
பெரியபிறையெயிற்றாள் பிரிந்தநெற்றிக்கண்ணுடையாள்



விரிந்தகன்றவாயாள் வின்னுமண்ணுமொன்றாகி
பரிந்துமிகப்பாரிற் படுத்திருந்தாள்வல்லிடும்பி
பார்த்துமனமிடைந்து பாதையொன்றுங்காணமல்
மாற்றுவழிபார்க்க வல்லரக்கிவாய்வழியாய்த்
தோற்றுதுகாணங்கே சுற்றிவரப்பாதையில்லை
கூற்றுவன்போலேயிருந்தாள் கொடும்பாவிநெட்டூரி
வேறுவழிகாணோம் விடங்கர்சற்றுமில்லையிங்கே
மாறுபடாதாமும் வாய்வழியிலேநுழைந்து
பிடரிவழியாகப் புறப்பட்டுவந்திவளை
இடரிவள் தான்செய்ய எடுத்தநினைவின்னதென்று
அறிவோமெனவே அரக்கியுடவாய்தனிலே
பிறிவோமெனவே பிடரிவழியேவந்தார்
வாகுடனேஐவர் வந்துவெளியேயபின்
வேகமுடனரக்கி வேற்றுமுகமாயெழுந்து
சாதுவெனும்லட்சுமிபோல் நான்வடிவுமாகியந்த
மாதுதுரோபதைபோல் வந்துநின்றாளம்மானை
இந்தவனந்தனிலே எங்களையும்விட்ட தென்று
அந்தவைகுந்த மடைந்தனையேயென்றுசொல்லி
தேகமெடுத்தடக்கிச் செய்கருமந்தான்முடித்து
வேகத்துடன் நாங்கள் வின்னாமலித்தூரம்
வாரதுகண்டு வழியிலெதிராகவந்து
கூறதுருபம் குறையாமற்றுணவள்போல்
நின்றுமலைவுபண்ணி நெடுந்தவங்கள்தானுலைக்க
குன்றுமலைபோற்கிடந்த கொடும்பாவிநெட்டூரி
சொல்லுநீயெந்தன் துரோபதையாய்வந்தகதை
நில்லுமையாசொல்லுகிறேன் நிலவரமாயிப்போது
யோகமுனியென்றகப்பன் உற்றவெகன்னியென்போர்
யாகமையழுப மடவாருடன்கூடி
கற்பகச்சோலையிலே கண்துயின்றுபெண்களுடன்
உற்பனமாய்நாளும் உறங்கிவிழித்தெழுந்து
நிற்பளவிற்கோமுனிவன் நீண்டபூங்காவனத்தில்

பற்பமலர்வேள்வி பரிவாய்ச்சிறப்புடனே
வேதக்கடலொளிபோல் வேதாந்தவாக்கியத்தில்
நாதமுனிவேள்வியதை நானுதிக்கும்நான்பார்த்தேன்
கோபித்துக்கோமுனியுங் கொடுஞ்சாபந்தான்கூற
சாபித்துராட்சதையாய்த் தானிருபோவென்றுரைத்தார்
இச்சாபமென்றனக்கு எப்போத்தெளியுமென்றேன்
அச்சாபந்தீர்வதற்கு ஐவர்தானிந்தவழி
வருவாரவர்கள் தன்னை வாகுடனே நீகாணில்
மருவார்குழலணங்கே மாறுமிச்சாபமென்றார்
சாபமுந்தீர்ந்ததுகாண் தன்மரேசுங்கள்தன்மம்
பூபரேநான்போறேன் போவென்றவள்போனாள்
நல்லதென்றுஅஞ்சவர்கள் நாட்டமுடனே நடந்தார்
வல்லதொருகாடும் வனமும்பலகடந்து
தப்பாதசொல்லுடைய தன்மருந்தம்பியரும்
அப்பால்வெகுதூரம் அறுபத்துநாற்காதம்
வேகமுடனடந்து விள்ளாமலுள்ளயர்ந்து
வாகுடையதூர்வாச மாமுனிவர்தன்னகரில்
வந்துநின்றுபார்த்து வழியேதெனக்கேட்க
ஐந்துகரத்தொந்தி யவன்காவல்வாசலென்றார்
அப்போதுதன்மர் ஐங்கரனைநெஞ்சில்வைத்து
எப்போதுமெங்க ளிருதயத்தில்வாழ்வோனே
அடியார்க்கெளியோனே ஐவருக்குந்நாயகனே
படியேழுந்தானைப் பராபரமாயுள்நினைந்து
தஞ்சமென்றஞ்சவர்க்குச் சாங்கமாய்நின்றவனே
அஞ்சலென்றெங்கள்முன்னே ஆதரிக்கவந்தருளும்
அடியார்க்கெளியோனே ஐங்கரனேயெங்கள்குலக்
குடிகாக்கவந்ததொரு குஞ்சரமேவந்தருள்வாய்

விருத்தம்.

வருந்துமடியார்தனக்குதவும் மத்தகஜமேவழிதிறவு
ம், இருந்தபதியுமிடமும்விட்டு இங்கேவந்தோம் வைகுந்



தம், பொருந்தும்படியாய் வழிகாட்டிப்போவென்றரு
ளும்புகர்முகனே, இருந்துமுனிவர் தனைக்காணத் திறவு
க்கதவை சிவக்கொழுந்தே. (௮௰)

இதுவுமது.

வாசமுனிவர் துருவாசர்மலர்த்தாள்பணிந்துவரங்கேட்க
நேசமுடனேவழிதிறவும்நெடியோன்மருகா அடியார்கள்
தாசருனதுசரணடைந்து தயங்காநினைவுதந்தருளும்
ஈசன்மகனேகணபதியே எளியார்குனதுகதவுதிற. (௮௧)

வேறு.

உற்பனநகரந்தன்னி லுயர்முனிபாதங்காண
நிற்பதுமழகுதானோ நின்னுளமறியாதேனோ
கற்பகக்களிறேயுன்றன் காவலாம்வாசல்தன்னை
விற்பனவிரைவில்வந்து வழிதிறந்தழையுமையா. ()

வேறு.

அப்பாகதவுதிறந்தருளுமடியார்தன்னைவாவென்று
மெய்யாசரணமுதவிசெய்யும்வேழமுகனேகணபதியே, செ
ய்யாவினைதஞ்செய்தருளும் சித்தேவித்தேசிவக்கொழுந்
தே, கையாற்கதவுதிறந்தருளுங் கண்டேமுனியைத்தெ
ண்டனிட.

கதை.

முக்கணனார்மைந்தா மூஷிகவாகனனே
விக்கினங்கள்தீர்க்கும் விநாயகனேஉம்முடைய
வாசல்தனில்வந்து மருகியேஐவருந்தான்
நேசமுடன்மேல்வாசல் நின்றமனம்புண்ணாகி
குஞ்சரனேஎங்கள் குருபரனேஇப்போது
அஞ்சலென்றுவந்ததுவும் ஆனைமுகத்தோனே
காமனுக்குமைத்துனனே கணபதியேகற்பகமே
சோமன்கதிர்காமனுக்குத் தோற்றமுடன்முத்தோனே
வள்ளலேபார்வதியாள் மைந்தனேஎங்களைத்தான்
தள்ளுவதுநாயமல்ல சரணஞ்சரணமையா
வேழமுகத்தோனே விக்கினங்கள்தீர்த்தருளும்

காளமுகில்மேனியனார் கண்ணார்மருகோனே
கதவுதிறவுமைய்யா கணபதியேசரணமென்று
இதமுடனே தன்ம ரிருதாள்வணங்கிநிற்க
மத்தகெஜமுகனும் வாசல்வழிதிறந்தார்
வித்தைவிநாயகனை விழுந்துநமஸ்கரித்து
வட்டணைமதிக்குடையோன் மாநகரில்வந்துபுக்கி
பட்டணங்களெங்கும் பளிங்குதிறம்போலவே
எங்குஞ்சிவாலயமும் எம்பெருமானாலயமும்
பொங்குந்தவமுடையோர் பொருந்தியநல்வீதிகளும்
தவமும்ஜெபமும் சன்யாசிவேடமல்லால்
அவமும்பவமும் அஞ்ஞானமுமற
தெளியும்பெரியோர் தெருவும்பவரிகளும்
வழியும்வழிசெழும் மன்னவர்கள்தான்பார்த்து
மகிழ்ந்துகளிகூர்ந்து வந்தார்களைவருமாய்
புகழ்ந்துமுனியாதம் போற்றியடிபணிந்து
அப்பனேயெங்கள் ஆதிகுருபரனே
செப்பமுடனெங்கள்குலத் தெய்வசிகாமணியே
என்றுதன்மர்தெண்டனிட்டு இன்பமுடன்றொண்டபணிய
நன்றுநன்றுபஞ்சவர்கள் நாடிமுந்துவந்தகதை
பாண்டுவுடைமைந்தா பதியிழந்துஇத்தூரம்
வேண்டியேயிங்குவந்த விசாரமேதென்றுரைத்தார்
அய்யாமுனியேகே ளடியேன்சொல்விண்ணப்பம்
பொய்யானதோர்கலியன் பூமிதனில்வந்ததினால்
வந்தோம்புவியிழந்து வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயனுப்புந் தவமுனியேயென்றுரைத்தார்
நன்மொழிசொல்லத் தான்கேட்டமாமுனியும்
இம்மைதனில்வைகுந்தம் எவர்சேர்ந்தார்ப்புவியில்
வேதரிஷிமாதவர்கள் விண்ணவர்கள்காணாத
சிதமால்விந்தபதந் தேடிநீர்காண்பீரோ
ஆறுமுமாயன் றைவருக்குமன்புடையோன்
தாணைகோபாலர் தன்னிடத்தில் நீங்களுந்தான்



போனாலுமுங்களுக்குப் புத்திநான்சொல்லுகிறேன்
மானபிமானம் மதியாமலோர்மனதாய்
வேகம்வெகுளி வெருண்டதொருகோபம்
தாகம்பசியினைப்புச் சஞ்சலங்களில்லாமல்
இடும்புகொலைகளவு ஏதொன்றுமில்லாமல்
கடுங்காமவாசை கருத்துந்துப்பாராமல்
ஐம்புலனையுள்ளடக்கி ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
எம்பெருமான்தன்னை யிருதயத்திலேநினைந்து
மன்னுயிருந்தன்னுயிர்போல் மனதிலேதானினைந்து
பன்னுமறைகாணாத பழம்பொருளைத்தானோக்கி
நடந்தாற்றெரியுமப்பா நந்தகோபாலருட
இடந்தான்தெரியுமப்போ தென்னைநப்பாது
தாரார்துளபமணி தானணியுமூர்த்திதன்னை
ஆராய்ந்துதேடி யருள்பெறுவீர்கண்மரே
செல்லும்வழிதனிலே ஈதொன்றும்வராமல்
சொல்லுகிறேன்கேளும் துன்பமுற்றபாதையிது
ஞானபேர்களங்கு செல்லாவழிகேளீர்
கேதாரம்போய்புகுந்தாற் கிட்டவதுதூரமல்ல
பக்கவிலக்குமில்லை பலபாதைதானுமில்லை
சொர்க்கமதுசேரச் செல்லுகிறேன் நீர்கேளும்
கதித்ததொருவாசல் காவல்பத்திரகாளியம்மை
துதித்தவளைபோற்றித் துன்பமறவேநடவும்
என்றுதுருவாச ரிவ்வசனந்தான்கூற
நன்றென்றுபஞ்சவர்கள் நமஸ்கரித்துமாமுனியை
நடந்தார்திசைநோக்கி நல்லதொருபஞ்சவர்கள்
அடர்ந்தவழிகூடி அம்மையுடகோவில்சென்று
பணிந்தார்நமஸ்கரித்தார் பத்திரகாளிதன்னை
துணிந்தார்துதிக்கத் தோத்திரமும்சொல்லலுற்றார்

பாண்டவர் பத்திரகாளியைப் பணிந்து துதித்தல்.

சந்தவிருத்தம்.

சக்கரமொருகை தண்டொருகை தனுசுமொருகை யம்பொருகை, உக்கிரவாளா யுதமொருகைஉடுக்கையேந் தியெண்டோளி, அக்கரமைம்பத் தொன்றதனி லமர்ந் துநின்ற வரும்பொருளே, வக்கிரதந்தமுகமிலங்க வரு வாய்வரங்கடருவாயே. (௮௪)

காளிகவுரிகங்காளி கன்னிகுமரியெண்டோளி,ஆளி யூர்தியத்தரியே அடியார்க்கிரங்கிவழிகாட்ட,வேளையிது வேமாதாவே விரும்பிவிடைதாவென்றடுத்தோம், ஆளி எந்தனுயாளே அம்மாஇம்மாநிலந்தனிலே. (௮௫)

வேறு.

துந்துமிபிடாரிசெல்வி தோதகிமையானருத்ரி
இந்துமாவதனவீரி யிடாகினிமைடதாரி
சிந்துரத்திலதமிட்ட தேவியேபத்ரகாளி
வந்துமுன்தோன்றவேணும் மரகதவடிவினளே.(௮௬)

சந்த விருத்தம்.

தாதுமலர்த்தருழலைக்கேசமையமிதுகாண்வழிகாட்ட
மாதுதனைத்துகேதார மட்டுஞ்சேரமலைவன்றி
ஏதுவினைகள்வந்தாலு மெளியாரிடமேநீயிருந்து
தீதுவினைகளணுகாமற் செய்வேநடத்துந்திரிபுரையே.

நடக்குந்துயரமறிந்தனது நாட்டமதிலுக்கண்டிறங்கி
அடக்கமுடையபொருளறிய அம்மாவுனதுசெயலாலே.
கடக்கவேணும்வழிதொலையகாணவேணும்வைகுந்தம்
வடக்குவாசல்மடக்கொடியே வருவாய்வரங்கடருவாயே.

கதை.

மாதுகவுரி மகமாயிராஜகன்னி
சாதுவேகங்காளி தயாபரியேமாகாளி
அங்கயற்கண்மீனாட்சி யம்மைசடாட்சரியே



கங்காளர்க்கன்பான கண்மணியேநாரணியே
பஞ்சாக்ஷரத்தி பரிமளத்திபாம்பணைந்தி
அஞ்சலென்றுகார்க்கு மஞ்சாக்ஷரப்பொருளே
பஞ்சவர்கள்தாங்களம்மா பாரளைத்தனிலே
அஞ்சாவென்றுவந்திருந்தோம் அரியோன்பதஞ்சேர
மாதாவேதாயே வழிகாட்டவந்தருளும்
ஆதாரமில்லையம்மா அடியேற்குவந்துதவும்

மாகாளி ஐவர்க்கும் வழிகாட்டியது.

என்றுதன்மார்தான் துதிக்க இறங்கிவந்துமாகாளி
நன்றுதன்மரேயுமக்கு நல்லவழியீதெனவே
வழிகாட்டிமாகாளி மறைந்தனள்காணம்மானை
தெளிவாகப்பஞ்சவர்கள் சென்றார்வழிகூடி
தாராளமாய்நடந்தார் சத்தியபத்ரகாளிதன்னை
நேராயிருதயத்தில் நிறுத்தித்துதித்தேற்றி
எண்பத்துநாற்காத மிளைப்புறவேதானடந்தார்
நண்புற்றகானகத்தில் நடக்கும்வழிதனிலே
அப்பாலுமோர்மலைதா னளவற்றுயன்னிதமாய்
ஒப்பாருமில்லாத உயர்ந்தமலையீதேறி
அந்தமலைப்பெருமை ஐவருந்தான்பார்ப்பளவில்
கந்தமலையரக்கன் கயிலாசமென்றெண்பேர்
ஆகாசம்பூமி யளவாகப்பிளந்து
வாகாயவனுடைய வழிதனைமேக்கிநின்று

கதாயுதன் கயிலாசராக்ஷதனை அழையுதச்செய்யுதல்.

தீயெரிந்தகண் ணுஞ் சிவந்தவிழிநாசியுமாய்
பேரிருந்தவீடதுபோற் பெருடலும்நீள்வயிறும்
காட்டானைசிங்கங் கரடிபுலியாளிபன்றி
நாட்டமுடன்காதுவழி நடந்து திரிவளவாய்

நாசிவழிசென்று நடமாடப்பட்டதெல்லாம்
யோசனைகாதவழி யுழன்றலைந்துமே திரும்பி
சேட்டுமத்திலியதுபோற் சிக்கியலைந்திடவும்
வாட்டுகின்றகாத்து வல்லரக்கன்றன்மூச்சு
எல்லையில்லாப்பெருடல்தானெந் தமட்டோ தாமறியோம்
தொல்லையுடல்கிடக்குந் தூரம்வெகுதூரம்
கடக்கமுடியாது கார்மேகந்தனையொப்பாய்
கிடக்குகின்றராக்ஷதனைக் கிட்டியேசென்றாலும்
அடக்கமுடியாது ஆர்தனக்குமெட்டாது
நடக்கவழிகாணோம் ராக்ஷதனைத்தாண்டியப்பால்
எதித்துப்பொருதாலும் ஈடல்லதான்தானும்
மதித்தவனுமுன்னமென்றால் வாய்க்குநாம்பத்தோமே
கைகளுலாவிவரும் கால்கள்துளாவிவரும்
ஐவரும்பத்தாது அவன்வயிற்றுக்கிப்போது
என்றுமயங்கி யிருந்துவழிபார்த்தார்கள்
நின்றுமலைத்து நெடுமூச்சுத்தானெறிந்து
ஆவலாய்ச்சுத்திசுத்தி யங்கேவழிபார்த்தும்
காவலர்கள்போகவழி காணமலே திகைத்து
உத்தமதொருராட்சதனை உசிப்பிணர்கிட்டவந்து
சத்தமிட்டுக்குத்தியவர் தட்டியெழுப்பவுமே
என்னவென்றுசத்தமது என்னளவுந்தோற்றமல்
வின்னமன்றிச்சும்மா மெய்யசந்துகண்ணுறங்க
ஏதுவினைசெய்வோமென் றெண்ணிமனம்புண்ணாகி
தீதுவினைகாணிவனுந் திருவுளமேஉண்டெனவே
சுற்றுமிவராராய்ந்து சூழவழிகாணமல்
மற்றுமினிப்போவதற்கு வழிதானுமில்லையென்று
நின்றுவிசாரமிட நெடியதொருவல்லரக்கன்
குன்றுமலைபோலவனுங்கொட்டாவிகொண்டெழுந்தான்
ஐவரையுங்கண்டரக்கன் ஆவிபிடிப்பவவில்
தெய்வமேயென்று சினந்தெழுந்தான்வாள்வீமன்
மண்ணதிரதண்ணும் மலைகள்கிடுகிடென
விண்ணதிரத்தாண்டி வீமன்மிகச்சினந்து



ஆர்ப்பரித்துக்குத்த அரக்கனுமேதான்சினந்து
எர்ப்பரித்துவீம னெதிர்த்துப்பொருதவுற்றான்
மலையும்மலையுடனே மற்கட்டிநின்றதுபோல்
அலைகடலுங்காற்றும் அடர்ந்துகொண்டுவிட்டதுபோல்
காடுசெடிநீராகிக் கற்கநடுதூளாகி
ஈடுசெய்யமாட்டாம லெதிர்பட்டான்வல்லரக்கன்
தாக்கினான்வீமன் தலைகளுருண்டோட
நோக்கிவந்தராட்சதனும் நொடிக்குமுன்னேபட்டுருண் [டான்
பட்டவரக்கன் பாரிற்பிறைத்தெழுந்து
துட்டன்நம்மைத்தேடித் தூரத்திப்பிடிப்பனென்று
தாராருந்தன்மர் தம்பியரையொருமென்று
சீராகத்தானடந்தார் திருமால்துணையெனவே
வருத்தமுடனேங்கி வளர்ந்தவனக்காடுகளும்
திருத்தமுடன்கடந்து சென்றார்வழிகூடி
நடந்தார்வெகுதூரம் நாற்பதின்காதவழி
கடந்தார்மலைகள்பல கானகமுந்தான்பார்த்து
வருமளவிலேவீமன் வார்த்தையொன்றுதானினைந்து
தருமரடிபணிந்து தயவுடனேதுசொல்வார்
நடக்கும்வழிதொலைய நாயகமேயெங்களுக்கு
அடக்கமுள்ளமுற்கதைக ளருளுமென்றாரம்மானை
அருளுமென்றதம்பியர்க்கு ஆதரவாயுளமகிழ்ந்து
பொருளுமுறையும் போதமுடன்முற்கதைதான்

### முற்கதையைத் தன்மர் அற்புதமாயுரைத்தல்.

சாற்றுகிறேன்தம்பியரே தான்கேளுமென்றுரைத்தார்
போற்றுமுலகம் புவனம்பதினாலும்
வேதாவும்மாலும் மிக்கதொருருத்திரனும்
மீதானமூவர் விதித்தவிதிபாராமல்
நான்படைத்தேனென்று நான்முகனுந்தான்கூற
மாலிபிடித்தருத்திரனும் வகைபறைந்தானெனவும்

ஆயதொருமாயவனுந் தோற்றமெல்லாந்தானெனவும்
நேயமுடன்மூவருந்தான் நீபெரியோன் நான்பெரியோன்
என்றுவகையாகி யெதிர்த்துவழக்காட
மன்றிலிவர்களுட வல்லபத்தைத்தான்பேச
படைப்பிக்கவேதாவும் படியளக்குமாயவனும்
முடிப்பிக்கருத்திரனும் மூவருமேயல்லாது
ஒன்றைமொன் றமிஞ்சாது உள்ளபடிஞாயமிது
மன்றில்விளங்க வழக்குரைக்குமூவர்களும்
பார்க்கிற்சரியெனவே பரமரகசியத்தை
ஏர்க்கனவேமுந்நா ளெழுதிவைத்தார்மேருவினில்
ஆர்க்கும்பெரியோ னவனல்லால்வேறுளதோ
தீர்க்கமாய்மூவர் செய்தொழிலில்மிச்சமில்லை
அவனைமறந்துறைந்த அபசாரத்திரவென்று
சிவனுமயனுந் திருமாலுந்தான்கூடி
ஒருவற்கொருவ ருயர்வுசொல்லுதல்லவென்று
மருவித்தழுவி மகிழ்ந்திருந்தார்மூவர்களும்
அண்டபுவன மகண்டமெல்லாந்தான்படைத்து
அண்டங்கடந்துநின்றோ னடுத்திருக்கூத்தை
கண்டறியமாட்டார்கள் கருதியுரைத்ததெல்லாம்
கொண்டுவிதிப்பயனுங் கூறினேனிவ்வார்த்தை
அவனேபெரியோ னங்குமிங்குமொன்றுமி
எவனேஅவனவன்கா ணெல்லையில்லாப்பேரொளியை
மறந்துறைந்தகுற்றம் வாராமலேயிருக்க
இரந்துமனமிடைந்து இருந்தார்காணம்மானை
ஈதலாற்றம்பியரே இன்னமொருநற்கதைதான்
ஆதலாற்சொல்லுகிறே னன்புடனே தான்கேளும்

—oo—

தேவர்களமுதங்கடைந்த கதை செப்புதல்

—+—

வானவருந்தானவரும் மாதவரும்இந்திரரும்
தானவர்களொன்றாய்ச் சபைகூடியேபேசி



அன்றுனிற்றேவ ரமுதங்கடையவென்று
பொன்றுருமந்தரமாம் பூதரத்தைத்தூணக்கி
நாகமதுகயிறாய் நாட்டியதோர் தூண்தனக்கு
வாசுகியமாமதியும் மத்தாகத்தான்சேர்த்து
வானவர்களோர்புறமும் மத்தாகத்தான்சேர்த்து
ஆனவர்கள்பாற்கடலி லமுதங்கடையுமந்நாள்
மலைதான்சுழன்றிடவும் வாசுகியுமப்போது
நிலைதாங்கமாட்டாமல் நீள்விஷத்தைக்கக்கிடவே
மீறியதோராலவிடம் வெகுண்டுமிகவேயெழுந்து
சீறிபுலகெங்குஞ் சென்றுபறந்தப்பாலும்
அண்டமதிக்கு மகண்டமுதற்சென்றுபறந்து
விண்டவெழுமுகிலுவி விருஞ்சனுடலோகமெல்லாம்
பொங்கிவிஷம்பெருகிப் புகையெழுந்தகோரமுடன்
தங்கியமூவுலகுந் தானுண்டுமிழ்வதுபோல்
பாரவிடந்தன்னை வானவருங்கண்டேங்கி
போரவழிபார்த்துப் போகவழிகாணமல்
கண்டவிடந்தன்னைக் கலங்கியமரரெல்லாம்
அண்டவிடமில்லாமல் அரன்கயிலைசென்றுபுக்கி
தெண்டனிட்டுக்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்ததொரு தோஷங்கள்தீர்த்தருளும்
பரனேபராபரனே பார்வதிமணவாளனே
அரனே அரவணியு மண்ணவனே நீர்கேளும்
கடைந்தவமுதமதிற் காலவிடந்தான்பிறந்து
அடர்ந்ததிரிலோகமெங்கு மந்தகாரமாமெனவே
தொடர்ந்துவருந்தன்னைத் தடைக்கவகைகாணோம்
கடத்துபயந்தோடிவந்தோம் கயிலைமலைவாசா
கன்கலங்காதெங்களை நீர் காத்தருளவேணுமையா
பெண்கலந்தமேனி பிறைகலந்தசெஞ்சடில [ன்
பெம்மானொருமான் பிடித்தவொருமான்கயிலை
அம்மான்பொன்மான்முன்வருள்மானுக்கேற்றவம்மா
கஞ்சமுகமஞ்சடையான் கைமலரஞ்சடையான் [யான்
விஞ்சமெழுந்தஞ்சடையான் மெய்தொழிலோரஞ்சடை

மன்மதனைப்பன்றெரித்தோன் வன்கரியைதின்றுரித்தோன்
மூன்மலைவில்லாய்த்தரித்தோன் முப்புரம்வேவச்சிரித்தோ
ன்றெண்டிசைசூழ்வையமெல்லாஞ் சிவனேசிவனேயென
வெண்டிசையுந்தான்படைத்தாய் எங்கபெரந்துடைத்தாய்
என்றமரர்கூறி யிறைஞ்சியடைபயமிட
நின்றமரர்தன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றமரர்துயர்த்த திரளைநஞ்சுதனை
ஒன்றுபோற்றன்திரட்டி யுட்கொண்டாரப்பரரும்
நஞ்சுண்டாரென்று நல்லதொருபார்வதியும்
அஞ்சுவிரல்தன்னு லழுத்தினள்கண்டமதில்
எவ்வுயிருங்காக்கவென்று ஈசுரனுமுண்டநஞ்சு
அவ்வுயிரெல்லாம்பிழைக்க அரன்மிடற்றுப்போவரென்
கோவிவிடம்பாயாமற் குறுக்கேயிடரடியில் [அ
நாவிபிழைக்கவென்று தடுத்தாள்கரத்தாலே
கண்டத்தில்நின்று கறுத்து அகோரவிஷம்
அண்டத்துக்கப்பா லவ்விடத்தானடங்கி
நின்றதுகாணந்த நெற்றிமேலுச்சதனில்
அன்றுபிழைத்ததுகா ணண்டபிண்டமானதும்
துறவிமுனிவர்முதல் சுவர்க்கத்தோரெல்லோரும்
இறைவாமேயுலகை யிரட்சித்தாரம்மானை

சிவன் திரிபுரமெரித்ததைச் செப்புதல்.

ஈதலால்வேறுகதை யின்னமொன்றுசொல்லுகிறேன்
ஆதலால்மூன்று அசுரரெனுமுப்புரத்தார்
இவ்வுலகிலுள்ள எண்பத்துநான்குயிரும்
அவ்வுலகுமிவ்வுலகு மடங்கலுமேகொள்ளைகொண்டு
இக்கங்கள்பண்ணி யிருந்தநிசாசரரும்
அக்குமுபத்திரமுந் துன்பமதுக்காற்றுமல்
தேவருமிந்திரனுந் திசைநான்முகத்தோனும்
மூவருமொன்றாய் முழுமுதலாமீஸ்பரனை
சென்றுவணங்கிச் சிவனே அபயமென்று



இன்றுவரைமுப்புரத்தா ரிடுக்கமதுக்காற்றுமல்
வந்தோம்பராபரனே வல்வினைகாருமென்றார்
அந்தமொழிகேட்டு அரனுமேதுசொல்வார்
செங்கணசுரரெல்லாஞ் சிவபத்தராயிருப்பார்
அங்கவரைநம்மா லழிக்கவேபோகாது
சிறந்தவர்கள்செய்யுஞ் சிவபூசைதன்னையிப்போ
மறந்துவிடப்பண்ணில் வாகாயழித்திடலாம்
என்றுசிவன்சொல்ல எம்பெருமான்தன்பதிக்குச்
சென்றுதிசைமுகனுந் தேவர்களும்போய்ப்பணிந்து
கண்ணுறுந்தா கவுரிகாந்தியாளிக்கும்
அண்ணுதுளபமணி ஆயனே அச்சுதனே
முப்புரத்தோரெந்நாளும் மூவுலகுங்கொள்ளைகொண்டு
இப்போதழிந்ததுகா ணென்செய்வோமென்றுசொல்லி
வண்ணரேயீஸ்வரர்முன் னாகாகப்போயுரைத்தோம்
இன்னமுன்னமுப்புரத்தார் சிவபத்தராகையினால்
அவனவன்சிவபூசை யகற்றினலிப்போது
சிவனவர்கள்முப்புரத்தை செயிக்கிறோமென்றுசொன்ன
நம்மாலேயீதாமோ நடவாதொருக்காலும் [ர்
உம்மாலேயாகுமென்று யோசித்தார்தேவர்களும்
ஆகையினாலும்மை யடுத்திங்குதேடிவந்தோம்
மாயையபலசெய்து வகையாய்ச்சிவபதத்தை
மறந்திருக்கப்பண்ணுமையா மாபாவிமுப்புரத்தை
இறந்துதெருப்பெரிய எம்பெருமான்பண்ணுமையா
வானவருமிந்தவிதம் மயங்கிநின்றுவார்த்தைசொல்ல
ஆனபெருமானும் அவர்களுக்குத்தானிரங்கி
விண்ணவரே நீங்களஞ்ச வேண்டாமினிமேலே
தண்ணமருமுப்புரத்தோர் தங்களுடனேகலந்து
எண்ணமறநாளும் இருந்தவர்கள்வாய்தனிலே
மண்ணையடிப்பதற்கு மார்க்கமாய்த்தானிருந்து
தழுவியவர்களையுஞ் சற்பனையேசெய்துமுக்கி
வழுவறவேநான்பார்க்க வருகிறோம்போங்களென்றார்
அகமகிழ்ந்துவானவர்கள் அவரப்பதிசேர்ந்தார்

ஜெகநாதரப்போது திரிபுரத்தைத்தீயெரிக்க
வந்தார்காண்முப்புரத்தில் மாயோனுபாயமதாய்
வித்தையாய்ப்பூசை விழுத்தாட்டவேணுமென்று
புத்தர்சமையமென்று புத்தர்வடிவுகொண்டு
வித்தகனார்போயிருந்தார் வீரானமுப்புரத்தில்
போயிருந்தபுத்தர்தமை பொல்லாதமுப்புரத்தார்
தீயவினைநினைந்து சென்றுபுத்தர்தனைநோக்கி
நெறந்துசிவபூசையிங்கே செய்யுந்தலந்தனிலே
மறந்துமொருபுத்தன் வருவானேனென்றுசொல்லி
புத்தனுடனெதிர்த்துப் புரத்திலுள்ளோரெல்லோரும்
தத்துவங்கள்பேசியவர் தர்க்கித்தாரம்மானை
தர்க்கித்தகத்துவத்தாற் சமயமொருபன்னிரண்டும்
நிர்க்கதிருத்தி நிலைநிற்கவாதுசெய்து
சமையமொருநால்வேத சாஸ்திரமும்புத்தனென
அமையும்படிக்கு அறிவித்தாற்புத்தனென்று
வாதாடிமுப்புரத்தார் மலைத்திருந்துதான்தெளிந்து
சூதானபுத்தனுட சூட்சமறிவோமெனவே
புத்தரே நீயிருக்கும் பூமரத்தைநாங்களுமே
அத்தெரிந்துநீரு பதுசாம்பலாகவேதான்
பார்க்கிறோம்நாங்கள் பசுமரம்போலாக்குவீரோ
ஆக்கினைசாது வரனாறும்நீரெனவே
பாதம்பணிந்து பலகாலும்பூசைபண்ணி
வேதமெல்லாமும்முடைய வேதமேதான்படித்து
ஈசனிங்குவந்தாரென் றேத்துவோமென்றுரைத்தார்
வாசமுடன்முப்புரத்தார் வருத்துரைத்தசெய்தியினால்
புத்தர்நினைந்து பூமரத்தைப்பாருமென்றார்
பத்தரவேமுப்புரத்தார் பார்த்தார்மரந்தனையும்
பூமரமும்வெந்து பொடியாகிநீறுன
பூமரத்தைப்புத்தனுந்தான் பூமரம்போலாக்கிவித்தார்
கண்டுநான்முப்புரத்தார் கண்காட்சியென்றுசொல்லி
தெண்டனிட்டுப்போற்றிச் சிறந்திருந்தாரம்மானை
ஆயனுடமாயை அறியாமல்முப்புரத்தோர்



நேயமுடன்தங்கள் நினைவுமிகமறந்து
ஒருத்தனன்றித்தங்க ளுபதேசமும்மறந்து
வருத்தமுடனீசனுட வாசனையுந்தான்மறந்து
பெத்தவராயிருந்தார் பெரியதவந்தான்மறந்தார்
எத்தவந்தபுத்தனையு மீசரெனத்தான்பணிந்தார்
பூமரத்தால்முப்புரதத்தார் புத்தனேதெய்வமென்று
நேமமறந்திருந்தார் நெடுமாலுமப்போது
ஈசன்றனைநினைத்து இப்போதுமுப்புரத்தார்
பூசைதவங்குலைந்து போர்புரியமாட்டார்கள்
வேலையிதுவாருமென்று மேகவண்ணர்தானழைக்க
காலைதனிலேயுங் கடவுளருந்தானறிந்து
முந்திமனதில் மூஷிகனைத்தானினைந்து
வித்தமகாமேருவையும் வில்லாகத்தான்வளைத்து
வாசுகியேநாணாக மால்தானுமம்பாக
நேசமுள்ளநால்வேதம் நெடும்பரியுந்தேராக
சதுர்முகனேசாரதியாய்ச் சங்கரனார்தானடந்தார்
மூதுபகளிதானெடுத்து மூரிச்சிலையேந்தி
வருமளவில்மாயனுட மாயைதனையறிந்து
திருமருவுமுப்புரத்திற் சென்றுநின்றுதான்சிவனும்
காயாம்புமேனிக் கண்ணருடசூட்சமதை
வாயாரச்சொல்லி வழுத்தமுடியாதெனவே
சித்தத்திற்கொண்டருளிச் சினந்துசிறுநாணேத்தி
சுத்தவொலிநாணைசைத்தார் தராதலங்கள்தானடுங்க
கத்தனார்முப்புரத்தைக் கண்டுநகைசெய்தளவில்
பத்தரவேமுப்புரமும் பஸ்பமாய்த்தானெரிந்து
மாபாவிமுப்புரத்தார் மாண்டார்காணம்மானை
பூபாலனை புண்ணியனார் தன்பருமே
இக்கதையைநன்று யினியோர்க்குத்தானுரைக்க
அக்கதையைக்கேட்டு அடவிகளுமாமலையும்
கடந்துமொருநாலு யோசனைகாதவழி
நடந்துகதைகேட்டு நல்லதென்றுபோனையிலே

வென்றியுள்ளவிமன் விரையவேயப்போது
அன்றியுமோர்கதைதா னருளுமென்றுதா னுரைத்தான்
மன்னவரே தம்பியரே மற்றுமொருகதைதான்
இன்னமொன்றுசொல்லுகிறே னியல்பாக நீர்கேளும்

நாரணிநித் தம்பிமார் நடக்கு இரணியன்கதையை
தருமசேநற்கோதல்.

ஆடகனென்றேயொருவன் அவனிதனிற்றோன்றி
நாடுதனிற்றன்பேர் நலமாய்விளங்கிடவே
முரணியநமா தேவர் மூவர்கள்தம்மாலும்
மரணமன்றிவாழ்ந்திருப்பார் வல்லசரணம்மானை
தேவர்களுமிந்திரனும் திசைநான்முகத்தோனும்
ஏவல்செய்துநாளும் இரணியனையேபோற்றி
ஆற்றுமேலவர்க ளச்சுதனார் தம்மிடத்தில்
கூற்றுனமாபாவி கொடுமையெல்லாந்தா னுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆயனுமங்கே துரைப்பார்
சிந்தைவருந்தாதீர் தேவர்களே அஞ்சாதீர்
நாரணியநாரசிங்க மூர்த்திவடிவமதாய்
இரணியனைக்கொல்ல எடுப்போமவதாரம்
யாண்டானெனக்கருதி வானவரே தான்மகிழ்வீர்
வேண்டாமினித்துயரம் விட்டுவிடுஞ்சட்டெனவே
என்றுசொல்லமாய னிமையவருமிருந்திரும்
சென்றங்கன்பொன்னுலகம் சேர்ந்திருந்தாரம்மானை
நாரணிமுதல்மூவுலகுந் தானேகடவுளென்று
இரணியநமாவெனவே எல்லோருஞ்சொல்லிடவே
உலகமெல்லாந்தன்குடைக்கீழ் முகந்தாண்டிருக்கையிலே
சலசலோசனன்கிருபை தன்னாலிரணியர்க்கு
ஆமேபிறகல்ல அரியொருவனென்றுசொல்ல
கோமேகம்போலக் குழந்தைபிறந்தோன்ற
வந்துபிறந்தார்காண் மகிழ்ந்தானிரணியனும்



தந்தையருந்தாயரும் தானேபிரியமதாய்
காலுக்குத்தண்டையிட்டு கனத்தசதங்கையிட்டு
மேலுக்குஆபரணம் விதவிதமாய்த்தான்பூண்டு
ஐந்துவயதளவும் அருமையாய்த்தான்வளர்த்து
மூந்துமறைவேதம் மொழிவதற்குவேதியனை
மைந்தனுக்குவித்தை வருத்துமென்றுதா னுரைக்க
அந்தமொழிகேட்டு அந்தனனுஞ்சம்மதித்து
தம்பியற்குநல்ல சாஸ்திரங்களோதுவிக்க
நம்பிமுகனைத் துணையெனவேயுச்சரித்து
எடுபிடித்து இரணியநமாவெனவே
தேடுதமிழ்வேதியருஞ் செப்பினர்புத்திரற்கு
பேசாமலேயிருந்தான் பிரகலாதேவனவன்
ஆசானைத்தான்பார்த்து ஐயரே வேதியரே
உலகில்வளப்ப முறையாமலப்போது
தலைகிழாய்ச்சொன்னாற் சம்மதியோ ஆர்தனக்கும்
வளப்பமென்னவென்று மறையோனுந்தான்கேட்க
அளப்பொன்றுமில்லை அரிநமோவென்றுசொன்னால்
வேதமழிந்தாலும் விண்ணோரழிந்தாலும்
ஆதவனும் அம்புவியு மண்டமழிந்தாலும்
ஒருநாளுமழியாத உண்மைப்பொருளொக்குமிது
திருமாலும்நான்முகனுஞ் செப்புமொழிவேதாந்தம்
ஓம்நமோநாராயணா வென்னுமுபதேசம்
ஆம்மனுயிர்தனக்கும் அத்துணையாமுத்ததுவே
என்றுசிறுவ னெடுத்துரைக்கவேமறையோன்
ஒன்றுமுறையாம லோவியம்போற்றானிருந்து
மன்னனிரணியன்முன் வந்திருந்துவேதியனும்
தென்னவனே உன்மதலை செப்புகின்றவார்த்தைதன்னை
கேட்டிலையோவென்று கிருபையுடன்சொல்லலுற்றான்
நாட்டிகமாமென்மொழியைத் தப்பியவன்சொன்னதுதா
ன், இரணியநமாவென்று இன்பமுடன்சொல்லுமென்
றேன், நாரணியனைமுதலாய்மொழியவேமுற்றுமதோ

அரிநமாவென்றசத்தம் அகண்டமெல்லாங்கொண்டிடுமிக்
க, சரியாயிரணியனைத் தானெதிராய்ச்சொல்லுவரோ
என்றானுன்மைந்தன் இரணியனேயென்றுரைத்தார்
நன்றாய்ச்சொனவேஅன் றுழிகையில்மைந்தனையும்
கூட்டிவரச்சொல்லி குழந்தைதனைப்பார்த்து
பூட்டிவைத்தசொல்லதனைப் பொருந்தாமலிப்போது
ஏறுமாறாயுரைத்த தேன்பிள்ளாய்தம்பியரே
கூறுமிரணிய நமாவென்றுகூறுமென்றார்
அரிவோம்நமாவென்று அருளினன்பாலகனும்
எரியெழவேகோபமதாய் இரணியனுந்தான்சினந்து
சொன்னபடிசொல்லென்றுசுடரையவன்மேற்கொளுத்த
முன்னமேசொன்ன மொழியல்லால்வேறுமுண்டோ
என்னவதைசெய்தாலு மெடுத்துறையேனிந்தமொழி
மன்னவனேஎட்டெழுத்தை மறப்பதுவும் ஞாயமல்ல
ஆகாதசொல்லதனை ஆமென்றுசொல்லுவரோ
சாகாவரமுனக்குத் தந்தநிறைவிந்தமதம்
வந்ததுகாணென்று மைந்தனிவையுரைக்க
விந்தைவிந்தையிந்தமொழி வேண்டாமெனவேதான்
சென்னியசைத்துச் சினமாயிரணியனும்
என்னிலுந்தான்பெரியோ னின்னமொருவனுண்டோ
சொல்லடாவென்று சுதனைப்பிடித்தடிக்க
நில்லடாசொல்லுகிறேன் நிரந்தரவஸ்தொருவன்
இருக்கிறான்கண்டாய் என்னுக்குள்ளெண்ணையைப்போல்
உறுக்கியேநாட்டேன் அதைத்தானடிவயிற்றில்
இரும்பிந்தனையவன் திருமால்தனைநினைந்து
துரும்பிலிருப்பான்காண் தூணிலுந்தானிருப்பான்
என்றுபிரகலாதேவன் இவையுரைக்கஅப்போது
மன்றுபுகழ்ரத்னமணி வயிரத்தூண்தன்னிலேதான்
இருப்பானோவென்று இரணியனுங்கோபமதாய்
நெருப்பாயெழுந்து நிலவரமோவென்றுரைக்க
அப்போதுபாலன் அச்சுதனையுள்நினைந்து



இப்போதத்தூணி லிருக்கிறானென்றுரைக்க
என்னமன்றியிங்கே என்செய்திதானறிந்தும்
வன்னமணித்தூணில் வந்திருப்பானென்றுசொன்னாய்
எங்கையடாவென்று எழுந்தறைந்தான் தூண்தனையே
நங்கையபங்கன் தூணில் நரசிங்கமாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர்தாமெனவே
தெண்டனிடவேணுமென்று செப்பினான்தந்தையிடம்
அந்தமொழிகேட்டு ஆகாதிரணியனும்
வந்தநரசிங்கமுடன் வாகாய்ப்பொருதலுற்றான்
வாய்த்ததென்றுசொல்லி மாயன்மிகச்சினந்து
சாய்த்தவனைப்பற்றி தன்மடியிலேயிடத்தி
வாசற்படிதனிலே வந்திருந்துகூர்நகத்தால்
பாசக்குடல்மார்பதனைப் பகுந்திரண்டுகூறாக்கி
குடல்பிடுங்கிமாலையிட்டுக் குடித்துநிரம்பியாமல்
அடல்கதிரோன்பாதி அஸ்தமிக்கும்வேளையிலே
கொன்றான்காணிரணியனைக் கோபாலர்கைநகத்தால்
சென்றானிரணியனும் நிகரிலம்மானை
மாயோனைவந்து வானவர்கள்தெண்டனிட்டு
நாயேன்களுக்காக நரசிங்கமாயெழுந்து
நடுக்கந்தவிர்க்கவந்த நாரணரேதஞ்சமென்று
இடுக்கந்தவிர்க்கவந்த இறையோனைப்போற்றிசெய்து
போனார்கள்வானவர்கள் பொன்னுலகந்தானேகி
ஆறுவும்பஞ்சவர்கள் அநேகநெடுந்தூரம்

## மாவேலிவாணன் வரலாறுகூறுதல்.

பாதைதொலையவென்று பழங்கதைகள்தான்பேசி
வாதைகளன்றி மனத்துயரந்தான்தீர
கதையால்வழிதொலையக் காரணரேதஞ்சமென்று
பதையாமல்வீமன் பணிந்துதன்மார்சேவடியை
பூண்டுகொண்டுசொல்லுமெனப் புகழானதன்மருத்தான்

மீண்டுமொருகதைதான் விளம்புகிறேன்கேளுமென்றார்
கூடுமொருசிவனார் கோவிற்றிருவிளக்கு
ஆருஞ்சுடரொளிபோய் அமருகின்றவேளையிலே
நீண்டவிளக்கதனில் நெய்பருகவே நினைந்து
முண்டோரெலிவிளக்கை முஞ்சியிழுத்தூண்டிடவே
அவியாமலேவிளக்கு அழகாகநின்றெரிய
உவியாலுற்றுநின்ற உற்றஎலிதனையும்
பரமசிவனும் பார்வதியுந்தான்மகிழ்ந்து
வரமருளவேணுமென்று வரவென்றெலிதனையும்
அன்னவர்தாமு மாசாட்சியாகுமென்றார்
மன்னுலகையாளுமென்று வரங்கொடுத்தார்மாவெலியு
பூவுலகிலேபிறந்து புரந்தரன்போல்லோகமெல்லாம் [ம்
தேவரடிபணியத் தேசமெல்லாமோர் குடைக்கீழ்
ஆளுகின்றலோகம் அமிராவதத்தனைப்போல்
வாழுகின்றான்மாவெலியும் வையகமெல்லாந்தழைக்க
ஆயிரம்லிங்கம் அடவுடனேபூசைபண்ணி
கோயிற்குலமும் குடிபடையுமேசெழிக்க
தானதவமுந் தன்மபரிபாலனுமாய்
வானவர்க்குமெட்டாத மாபூசைகுருபூசை
ஞானசிவயோகியென்ன நற்குணமும்விற்பனமும்
ஈனமிரக்க மிரப்போர்கலிதீர்ந்து
நிரப்பொன்றுமில்லாமல் நெறிதவறிதில்லாமல்
இரப்போர்க்கொருநாளும் இல்லையென்றுசொல்லாமல்
ஆல்போல்தழைத்து அருகதுபோல்வேரூன்றிப்
பால்போல்பெருகப் பாருலகோரெல்லோரும்
சிவாமறுவண்ணப் பாக்கியமுந்தானருளி
வேதங்கள்தபோதனர்கள் நெறிமுறைமைதப்பாமல்
பாராளுமந்நாளிற் பச்சைமால்சோதனைக்குத்
தாரானமாயிதனைத் தானறிவோமென்றுசொல்லி
வந்தார்புவியில் மாவெலிதன்செய்கைகண்டு
சந்தோஷமாயிருந்தார் தவத்தின்பெருமையென்று



ஒருவிளக்குத்தூண்டி யுலகமெல்லாந்தானாண்டான்
திருவிளக்குலோகமெல்லாஞ் சிறப்பாயிருக்குதென்று
இவனுடையமாதரும மீரேழுலோகமெல்லாம்
சிவனுடையருபமதாய்த் தீபச்சுடரொழியாய்
எங்கும்விளக்கொளியா யிருக்குதுகாண்தானதவம்
பொங்குதுகாண்வையகங்கள் பொய்யாதபுண்ணியங்கள்
இவன்செய்யுந்தானதவம் எவ்வளவுங்குற்றமில்லை
அவஞ்செய்தழிக்கவென்று வாகாதெவராலும்
வள்ளல்கொடுத்தவரம் வளருதுகாண்மாவெலிக்கு
உள்ளமதனி லுபாயமென்னசெய்வமென்று
கள்ளத்திருடன் காயாம்புமேகவண்ணன்
மெள்ளமனதில் வேறேநினைவுகொண்டு
மாயோனுந்தானிருக்க மாவெலியுமன்னேரம்
தேயோனுந்தானதவம் நீணிலத்திற்செய்வதற்கு
உகந்துநதிமூழ்கி யுற்றநதிக்கரையில்
புகழ்ந்துசிவபூசை பூரணமாய்த்தான்முடித்து
மாதானம்பூமி வஸ்திரதானமுதல்
கோதானம்மாதிதியுங் கொடுத்தருளவேபலவும்
கன்னிகைதானங் காவலனுந்தான்கொடுக்க
உன்னிமனதி லொருமித்திருகரத்தாற்
கொடுக்குறானென்று கோபாலன்தான்கேட்டு
அடுக்கவந்துநின்று அந்தணர்போல்தானிருந்து
நரைதிரையுமூப்பும் நடுக்குமுடல்வாதமுமாய்
புரையிருமலாகிப் புகைத்திருண்டகண்களுமாய்
நாசியொழுகவொரு நாடிதளர்ந்திடவும்
பாசிபற்றும்பல்லும் பழுவாயொழுக்குமாய்
போற்றும்பரிவட்டமது பொள்ளலாய்க்காற்றோட
பீத்தப்புடவையுடன் பிராமணன்போல்வந்துநின்று
அன்னத்தருமாவெலியே அட்சதையிந்தாவெனவே
மன்னவனேயுன்னிடத்தில் வந்தேனெனவேதான் [ன்
அட்சதையுந்தான்கொடுத்து அந்தணனுந்தேகியென்று

பட்சமுடன்தேகியென்ற பார்ப்பானைவாருமென்று
ஏதுனக்குவேணுமென்று இன்பமுடன்மாவெலியும்
சாதுவுடன்கேட்கத் தன்னாடிமாமறையோன்
இடறிவிழுவார்போல் எப்புமிளைப்புடனே
வெடநேசமேயிருந்து வந்தேனுனும்மிடத்தில்
உன்னிடத்தில்வந்தேன்கா ணுத்தமனேயுந்தனுக்கு
தன்னிலத்தில்நானிருக்க நாட்டமுடனிப்போது
இருக்கஇடந்தாரும் என்னுடையகாலாலே
அருக்கமாய்மூவடிமண் சொல்லியேதத்தம்பண்ணும்
போருமெனக்குப் புண்ணியமேசெய்யுமென்றான்
வாருமையா நீர்தாமும் மற்றொன்றுங்கேளாமல்
இவ்வளவுகேட்டதென்ன இப்போதேதாரோம்நாம்
செவ்வுபாயமாவெலியுங் கொடுக்கவொருமனதாய்
கெண்டிதனையெடுத்துக் கெங்காசலம்விடுத்து
தெண்டிரைசூழ்வையமதில தத்தம்பண்ணும்வேளை [யிலே
தக்கதொருசுக்கிரனுந் தன்னுடையசிஷனென்று
மிக்கதொருவண்டெனவேவீழ்ந்துகெண்டித்தாரையிலே
பக்குவமாய்த்தானிருந்து பானியம்வீழாமற்
சிக்கெனவேதானடக்கத் தெரிந்தந்தமாமறையோன்
தருப்பையிறுத்திடவே தாரையொன்றுகெட்டிடவே
தருப்பையதிந்தேகவிழ எல்லோருமேசிடவே
ஈவோர்தமைவிலக்கில் இப்படியேகுற்றம்வரும்
தீவினையாய்த்தான்முடியுஞ் செய்வோர்தனைவிலக்கில்
என்றுமீடசொல்ல இருந்தான்தலைகவிழ்ந்து
ஒன்றுமுரையாம ஊமைபோலேயிருந்தான்
தாரைவழியாற்றண்ணீர் தாராளமாய்விழவே
பூரியென்னமாவெலியும் புகழ்ந்துதத்தம்பண்ணினனே
தெத்தமதுவாங்கித் திருமாலும்பூவுலகில்
வைத்தாரொருபாதம் வானுலகிலோர்பாதம்
ஈரடிமண் தானு மிவ்வுலகுமவ்வுலகும்
ஓரடிமண்ணைந்தனுக்கு உன்மேல்திலையையென்று



மாவெலியைமன்சிறையில் வைத்தார்மான்வானகத்தில்
தேவலோகஞ்சேர்ந்து சிறையிருந்தான்மாவெலியும்
வானவருந்தேவர்களும் மாயோனையேவணங்கி
தானவரும்வேதியருஞ் சதுர்வேதநான்முகனும்
மாயவனைவாழ்த்தி வாழ்ந்திருந்தாரம்மானை
தூயதொருபஞ்சவர்கள் தொலைதூரமேகடந்து
வேகமுடன்நடந்தார் விந்தமதுகானைவென்று
தாகமுடன்வீமன் தன்மர்தனைத்தொழுது
வைகுந்தஞ்சேர வழிதொலையவேணுமென்று
மெய்கண்டமூர்த்தியே நீர் விளம்புமொருகதைதான்
நடக்கமுடியவில்லை நல்லகதைசொல்லுமென்றான்
அடக்கமுள்ளதம்பியரே அருமையுடனோர்கதைநான்

### பெரியவன் நான் நீயென்று அரியுமயனும் அடித்துக்கொள்ளல்

சொல்லுகிறேன்முன்னுட் சுருதிமுதல்முற்கதைதான்
புல்லும்புவியும் புவனமுதலாகாசம்
கல்லுங்கரடுங் கடலுந்திரைகளொட்டும்
அல்லும்பகலும் அம்புலியும்வெய்யோனும்
இல்லாதகாலம் இறையோனொருத்தனுமாய்
அல்லாம்அதுமயமாய் அகண்டமெல்லாந்தானாகி
வெளியாகியெங்கும் விளங்குமொளியாகி
அழியாதவஸ்தொருவன் ஆதியாய்நின்றமுதல்
ஏகவெளியாகி யெல்லாம்நிறந்தரமாய்
ஆகமவேதமன்றி அசைவுபலநாதமன்றி
தானாகிநின்ற சருவதயாபரனார்
ஊனாயுடலா யுயிருக்குயிருயிராய்
வானாய்நிலநீராய் வாயுவாச்செஞ்சுடராய்
பானாய்மதியாய்ப் பலவகைகள்தோற்றமுமாய்
அண்டமடிக்கா யண்டபகிரண்டமுமாய்
பிண்டமுதலண்டமுமாய் பிரமாண்டகோளகையாய்

தட்டுதிலேதாபரமாய்த் தாரதலமூர்வனமாய்
எட்டுத்திசையும் எழுவான்படுவானும்
ஆகட்டுமென்று அருளிநினைவுகொண்டு
வாகிட்டரூபியென்றோர் வந்துமுன்னே நினைக்கவுற்றார்
எல்லாமுண்டாக்குமென்று இறையோன்பரையிடத்திற்
சொல்லமுடித்ததுகாண் தோத்திரமொடுக்கமெல்லாம்
தற்பரமாய்த்தோன்றி தற்பரத்திலேயிருந்து
சிற்பரமுந்தோன்றி சிற்பரத்திலேயிருந்து
பரந்தோன்றி நின்று பரத்திற்சிவந்தோன்றி
உரந்தோன்றசிவசத்தி உற்றசத்திதான்தோன்றி
சத்திதனிற்பூதபலன் தத்துவத்தில்நாதமுமாய்
முத்திநெளிபோலே மூலவிந்துதான்தோன்றி
விந்துதனில்நால்வேதம் வியனூறுசாஸ்திரமும்
பத்தமுறும்சாஸ்திரத்திற் பதினெண்புராணமுமாய்
தத்துவங்கள்தொண்ணூற்றாறுடனே தானமைத்து
நத்துமறுபத்து நாலுகலைக்கியானமுமாய்
ஆறுதாரங்களுடன் ஐம்பத்தோரட்சரமும்
வீறுஞ்சதகோடி வேதமுதல்மந்திரமும்
மந்திரத்தில்விந்துவதாய் வந்தசதாசிவமும்
அந்தசதாசிவத்தி லரியமகேஸ்பரனும்
இந்தமகேஸ்பரனிலொருருத்திரனும்
வந்ததொருருத்திரனில் வாசமுள்ளவிட்டுணுவும்
விட்டுணுவிலேயிருந்த விரிப்பிக்கும்வேதாவும்
[illegible]யிருவேதாவி லுதித்ததொருஆத்மாவும்
ஆத்மாவிலேயிருந்து ஆகாசந்தான்தோன்றி
சாத்திரமில்வாகாசந் தன்னிலேவாயுவுந்தான்
வாயுவிலேதேயுவதாய் வந்துதித்துஇப்போது
தேயுவிலேஅப்புவுந்தான் சிறப்பாகத்தான்தோன்றி
சிறப்பானஅப்புவிலே சேர்ந்ததொருமண்தோன்றி
அறப்பெரியமண்ணதனில் அருபலித்தாயுண்டாகி
ஒன்றுபத்துநூறு வொருகோடிஆயிரமாய்



அன்றவிதிகையா லனந்தநூறாயிரமாய்
வானும்புவியும் வகைவகுத்தாகி
ஊனுமுயிரும் ஊர்வனமும்பட்சிகளும்
திக்குத்திசையுந் தெண்டிரையும்வையகமும்
நிற்குமொருஅஷ்டகிரி நேரானஅஷ்டகெஜமும்
ஈரேழுலகமுமாய் எண்பத்துநான்குயிராய்
பாரேழுந்தாங்கப் பணமுடிகளாயிரமாய்
யோனிபலவாகி உருவமதுவெவ்வேறாய்
மானிலமேற்புற்பூடாய் மரங்கள்விருட்சமதாய்
நால்வகைசாதியுமாய் நால்வேதசாஸ்திரமாய்
நூல்வகைகளாகமுமாய் நோன்புவிரதமுமாய்
ஆண்பெண்ணிருவகையாய் ஆதாரமாமுதலாய்
காண்பதுவுங்கண்காமங் கலைக்கியானமும்பெரிதாய்
ஆசையெல்லாங்கூட்டி யடக்குநின்றபோக்கியமாய்
ஓசைபஞ்சபூதம் உருவஞ்சுவைநாற்றம்
வாசலொரொன்பதுமாய் மலமாண்டம்விடாக
பாசமெனுமைம்புலனும் பஞ்சநிலைப்பெருதிறம்
தத்துவங்கள்தொண்ணூற்றாறுஞ் சமையமுதல்
சுத்தண்டகடாச் சவுமடங்குமாய்
மற்றுஞ்சராசரமும் மண்டலங்கள்மூன்றுடனே
உற்றதிதிராசி யோகங்கரணமுடன்
சந்திரனுஞ்சூரியனுந் தாரகைநட்சேத்திரமும்
இந்திரனுந்தானவர்க ளிமையோர்முனிவர்களும்
தந்திரமாய்த்தான்வகுத்துச் சகலவஸ்துமுண்டாக்கி
அந்தரத்திற்பேச்சு ஆர்பெரியோனென்றதினில்
நாமேபுவியில் நால்வகையுந்தான்படைத்து
நாமேதமக்குச் சரியில்லையென்றிருந்தோம்
மாலவன்தானெல்லாம் வகுப்பித்தோமென்றுசொல்லி
ஆலமர்த்தேறி அவன்துயின்றுறைமாகில்
ஆதரியப்போரார்கள் அரியெனவும்அயனெனவும்
பேரறியவேதான் பெரியோனெனவுரைத்தான்

சென்றவனை நாமுஞ் சிறுக்கிட்டுப்போர் முடித்து
வென்றவனை நாமும் மிகுபெரியோன் வேதனென்று
நினைத்துமனதிலெண்ணி நெருப்பிருகண்டிபெரிய
மனைந்ததெல்லாம் பொய்யோ வகுத்ததெல்லாம் வீண்தா
நன்றுச்செவே நடந்தான் வைகுந்தமதில் (ரோ
அன்றுச்சிவகையா வடிவுண்டமாளிடத்தில்
சென்றுமிருந்தான் சிராட்டிவார்த்தைபதாய்
கன்றுங்கனிபெரிந்த காயாம்புமேனியனை
உன்பேச்சுமென்பேச்சும் உலகறியவேணுமின்று
தன்பேச்சுமேலாகத் தானெண்ணி நீயிருந்தால்
என்பேச்சுக்கீழா யிருப்பதுவுஞ் ஞாயமல்ல
முன்பேச்சுமுலகும் முப்பத்துமுக்கோடி
தேவர்களுமற்ற சிவபராசிகளும்
மூவர்களுத்தாமறிய முழுமேசமோபிறவும்
என்படைப்புக்குள்ளா யிருந்ததுவிழைபாமல்
உன்படைப்புமேலென் றுலகமதிற்சொல்லுகிறாய்
வம்பாக நீதான் வாரிபேசினதேன்
எம்பிரான்தானறிய இனிமேற்பொறுக்கேனென்
ஈரேழுலோகம் இகபரமுந்தானறிய
பாரேழுந்தானே பச்சைமால் நீயேது
இப்பாலென்கையா லீரேழுலோகமெல்லாம்
மெய்ப்பாரசத்த மேருதலேழ்கடலும்
அஷ்டதிக்கு அஷ்டகிரி அஷ்டமாநாகமுதல்
அஷ்டகஜமெட்டு மடங்களுமேதானுக
அஷ்டவசுக்கள்பல அசுரரொராட்சதரும்
திட்டமுயகாந்தருவர் சித்தவித்தியாதரரும்
கிம்புருடர்கெணநாதர் கின்னரர்கள்தன்னுடனே
தும்புருநாரதருந் தோற்றமெல்லாமென்னிடத்தில்
இந்திரனுமக்கினியும் எமன்நிருதியுமாய்
வந்ததொருவாயு வருணன்குபேரனுடன்
இட்டநந்தியட்டதிக்குப் பாலகருமென்றலே

திட்டமுடனேசகல சிவன்முதலென்றலே
உண்டானதென்று உன்மனதிலெண்ணாமல்
விண்டோமிவனையென்று மேதினியிலுன்னுடைய
உத்திக்கமலமதி லுதித்தானிவனெனவும்
சித்தித்திருந்ததெல்லாம் நீக்கமுடன்விட்டுவிடும்
எதிருமென்று மென்னுடைய கைதனைவாய்
வாதிருமென்வகையும் வருந்துவிடாதிருந்தால்
ஆணைநீக்கிப்பாய் அவனியொன்றுமில்லாவிட்டால்
பேரையறியாத பேச்சேதும்பேசலாமோ
சுவரில்லாச்சித்திரந்தான் தொட்டெழுதவல்லாயோ
எவரையுமாக்குகிறாய் இத்தொழிலைவிட்டுவிடும்
நால்வரையும் நீதான் பட்சிப்போமென்றதெல்லாம்
மால்பெருமைசெய்யாதே மறந்துவிடிப்போது
உன்னைவிடவேறே உன்போலொருவனைநாம்
பின்னையுண்டாக்கிப் பிரியமுடன்நகழிவென்பேன்
ஆர்க்கமுடன்பார்க்கடலில் அங்கேநீபள்ளிகொண்டால்
நீக்கமுடனசுரர் சென்றுவந்துகொல்வார்கள்
பார்க்கடலைவிட்டுப் பக்கமேசென்றுபுக்கி
எக்கவேழு மிப்போதொளித்திருப்போ
என்னுடையபேரன் இயல்பிருகுமாலிவியும்
உன்னுடையசெய்வினையா லன்னையேதான்சபித்தேன்
பத்துஜெனனமும் பாரிற்பிறந்திருந்து
முத்துமந்தச்சாபம் முழுதுத்துவைத்தாய
விட்டதறியாயோ விதித்தெழுதுமென்கையிலுன்
இட்டவெழுத்தின்படியே இருக்குமேயல்லாது
எல்லாவுயிர்க்கும் இன்னபடியென்றெழுதி
எல்லாமென்கையாங் கருத்ததுவுங்காணீரோ
உன்னுடையவுத்திதனி லுதித்தவனேனென்றுசொல்
என்னுடையபேரை இழப்பியாய்ச்சொன்னீரோ (லி
முந்தவொருநாளில் முளைத்தெழுந்தசின்னமதாய்
வந்தஇரணியனை மார்பைப்பிளந்தாயே
அந்தநாளுந்தனக்கு அன்னையோதந்தையோதான்
நந்தையேதானுமல் நடப்பதுந்நீதத்தனக்கு

அக்கினிதான்முங்கிருக்குள் ளைதரித்துநின்றும்
முக்கியமாமுனிவர்களை முழுஅம்பெய்து தீர்க்கிப்
போட்டதுபோல் நானுமுந்திப் புவதனிலேயிருந்து
வாட்டியுனைக்கொல்ல மாற்றுமுபாயத்தேறித்தேன்
என்றுஅமலரோ னிவையுரைக்கமாயவனும்
நின்றுமனதில் நினையாதெல்லாம் நினைந்து
காதிலேதாராசம் காய்ச்சிவிட்டதுபோல்
சதிவேணுஞ்சொல்ல ஏற்குமோமாயனுக்கு
அகோரம்பிறந்து அனலாய்ப்புனலெழும்ப
வினாதமுடன்நகைத்து வேதனுக்கிதமதும்
வத்திதென்னவென்று வருத்தமனதிலெண்ணி
இத்தமகிமை இனியறிவோமென்றுசொல்லி
வேதாவைத்தான்பார்த்து விந்துவுரைக்கேடமதாய்
மாதாவுனக்கென் வயிறென்றறியாமல்
நீதாயுரைத்தாய் சிறுபிள்ளையாகையினால்
மீதாய்ச்சிறுபிள்ளை வெகுளியாய்த்தானுரைத்தால்
தந்தையருகுற்றமென்று தான்நினைக்கலாகாதே
எந்தவிதம்தம்மை யிகழ்ச்சியாய்த்தானுரைத்தாய்
இப்படிச்சொல்ல எவர்பொறுப்பார்கண்மலரோ
அப்படிக்கொற்றபிள்ளை யகத்தையதுசெய்திடத்தே
உன்னைப்போலேந்தனுக்கு உற்றபிள்ளைதானிருவர்
பண்ணத்தகரிய பராக்கிரமமுள்ளவர்கள்
மதுகயிடவானென்றப்பேர் வாய்த்தாரிருபேரும்
…ராடிப்பேசி யென்னுடனேபோர்க்குவர
தந்தையென்றுபாராமல் தாய்மகன்தன்னுடனே
வந்தெதிர்த்துநம்முடனே மற்பொருதும்தானையிலே
கொல்லவரைமில்லாதத் குழந்தைவெகுநாட்பொருத
வெல்லவுபாயம் வேறேநினைந்துகொண்டு [டேன்
சற்பனையாய்க்கொன்றவரைத் தாரணியிற்போட்டுவிட்
அப்படியேயுந்தனுக்கு அறிவுரைப்பண்ணுட்டால்
உற்பனமென்றென்றுது உன்னகத்தைதில்லாது
நட்புடையதேகமதில் நல்வினைகளாலெழுந்த



புன்தனைப்புசிப் புரையறவேதானுற்றப்
பண்புடனேதானிருந்தால் பகையாதுஅறிவிடம்
அத்தன்மைபோல அகந்தைசெய்தபிள்ளைகளை
பெத்தபிள்ளையென்று பிரியமுடன்பாரார்கள்
உத்தன்பிரமி லொருசிரசையிப்பாறு
முந்தவேநின்றனையில் முனைந்ததோவுன்சிரசு
அந்தமட்டுமுன்றனக்கு ஆண்மையொன்றுமில்லாநாள்
எந்தமட்டுமுன்செய்தா னெவர்தனக்குநீநிலவன்
அனந்தன்பணைமுடிக ளாயிரந்தன்னிலொரு
கனந்தான்புவனங் கரித்ததிரசொன்றிதுக்கு
பத்தாதவோகம் படைத்தோமெனும்பெருமை
கத்தாவாய்ப்பேசவது காரியமோவுன்றனக்கு
சொல்லுமுந்தன்வேதமெல்லாஞ் சோமுகாசூரனுந்தான்
நில்லுமெனவேபரித்து நெடுகவேகொண்டேக
மீன்வடிவுதானெடுத்து வேதமதையேபரித்து
நான்மிகவுந்தந்த நன்றிமறந்திரோ
நச்சுமரமானாலும் நட்டமரந்தன்னையிப்போ
அச்சமறநாமும் அழிப்பதுமாகாது
என்பதினால்நாமும் இந்தமட்டுந்தான்பொறுத்தோம்
உன்பலத்துக்காத்தேனென் றுன்மதியிலென்றதே
பொல்லாதபிள்ளையென்று தன்னாதிதுவரையில்
கொல்லாதுவைத்திருந்த குற்றமேதானீவைத்தாய்
இனிமேலுங்குற்றமில்லை யென்றேநெடுமாலும்
கனிசிவந்தமாயான் கண்கள்நெருப்பெழவே
உரத்தெழுந்துவார்த்தைசொல்ல உன்னிமலரோனும்
இரத்தஇல்லிருந்தவர்போல் திக்கென்றெழுந்திருந்து
ஒருவர்க்கொருவர் ஒருபூசலாய்விளைந்து
இருவருமப்போ வெதிர்த்துப்பொருதனென்று
மட்டுமிகுஞ்சிவார்த்தை வாதுபலதான்கூறி
கட்டுவிட்டுப்பேசி காவலர்கள்புவியில்
குதித்தாரிருபேரும் கொடுமுடிகள்தானதிர
அதிர்த்தார்பெருமானுந் தொடைதட்டியேதுசொல்வார்

முன்னாளில்ராக்கதரால் முறையிட்டாய்நம்மிடத்தில்
மன்னுவுனக்காக வந்துநாமிராக்கதரை
கொன்றுங்கள்தெய்வப் பதவிகொடுத்தோமே
சென்றுங்கள்தெய்வப் பதவியதுசேர்ந்திருந்து
நன்றிமறந்தென்னை நையாண்டிபண்ணிப்போ
மன்றிற்பொருத வாதாடிவந்தெதிர்த்தாய்
இனியறிவோமென்று எதிர்த்தாரிருபேரும்
பனிவரைகள்ரெண்டும் பகைத்தெதிர்த்துநின்றாற்போல்

மாலுமயனும் மற்போர்புரிதல்.

மற்கட்டிச்சேர்ந்து மன்னாதிர வின்னாதிர
திக்கெட்டுந்தானதிரத் திசைகள்கிடுகிடென
இடசாரிமாய னெடுத்தடியும்வைக்கவுந்தான்
அடவுடனேவேத னடித்துவலசாரி
கால்களொடுகால்மாறிக் கைகளொடுகைசேர்ந்து
மேல்களொடுமேலுறைந்து வேகமுடன்தானிருவர்
உரத்துமிகுத்துவெரு ஓங்காரங்கொண்டெழுந்து
அறத்துகிறசத்தம் அண்டகடாகமட்டும்
நடுங்கிமலைகலங்கி நட்சேத்திரமுதிர
கடுங்கோபங்கொண்டு கதிரோனுந்தான்மறைய
பூமியதிரப் புவனம்பதினாலும்
சாமிதிருமாலயனோர் தர்க்கமதுக்காற்றுமல்
அழவுதலைமாற அடிக்கண்டந்தானசைய
இரவுபகலெனவு மெண்ணாதுமாலயனும்
இருவரும்போர்புரிந்தா ரிமையோர்நடுங்கிடவே
ஒருவர்க்கொருவர் உரத்துச்சினத்துக்கையால்
குத்துகின்றசத்தமது கொண்டலிடியதுபோல்
எத்துகின்றகால்களினா லெடுபட்டமாமலைகள்
தூளாய்நொருங்கியது தூளாய்ப்பறந்துவிழ
ஆளாயிருபேரும் அடவாய்வகுதுகொண்டு
வலசாரியாக மாயோனடிபேர்ந்து



மலரோனிடசாரி வருவதுநாம்பூதலத்தில்
இரவுவந்துமூடுதல்போல் எம்பெருமான்தன்மேனி
இரவுவந்துதோன்றுதல்போல் வெழில்வேதன்றன்மேனி
இப்படியாபோர்தொடுக்குள் ளிரவுபகலாயிரமாய்
மற்பிடித்துச்சக்கரம்போல் வட்டமிட்டுச்சுற்றுகையில்
பூவுலகிலுள்ள புற்பூடுசெடிநெருந்து
தாவுமிடமில்லாமல் தாய்குமாமத்தாத்தில்
ஆலையிலுள்ளவர்க ளயிராவதத்தனிடம்
மாலையமதுட்கொண்டு வந்துமுறையிடவே
அவர்கள்முறையிடுமுன் அயிராவதத்தோனும்
இவர்களுக்குமுன்னே இயம்பினன்றன்கதையும்
அறுத்திவனிடத்தி லடையமுடவாருமென்று
போனார்காண்தேவரெல்லாம் பொன்கயிலைதானேகி
அரனேயுனக்கபயம் அத்தனேமுக்கணனே
பரனேயுனக்கபயம் பாருலகிலிப்போது
மாலோனும்வேதாவும் மல்யுத்தம்பண்ணுகிறார்
நாலாவகைச்சீவன் நாங்கள்முதலெவ்வகையும்
நிற்கநிலையில்லாமல் நீந்திவந்தோமுன்பாதம்
தக்கதுனையெனவே நானுனைநம்பிவந்தோம்
சூறைவழிக்காற்றுச் சுழல்காற்றுப்போலாகி
ஈரேழுலோகம் நெருப்பாயெரியுதையா
அந்தரமாய்வானம் அச்சழிந்துபோகுதையா
இந்திரனுடட்டதிக்கு மெல்லாஞ்சுழலுதையா
சந்திரனுஞ்சூரியனுந் தானொளிந்துபோனார்கள்
மந்திரங்கள்வேதமெல்லாம் வரம்பழிந்துபோகுதையா
அடுக்குநிலைபேர்ந்து அலைகடலுந்தான்சுவறி
உடுக்களுதிர்ந்தே உயர்முகடுந்தான்கிழிந்து
எல்லாந்தடுமாறி எங்குதுகாண்முழுவதும்
நில்லாநிலையில் நிற்குதம்பராபரமே
நாதனேஎங்கள் நடுக்கந்தவிர்த்தருளும்
வேதனுடபோரும் விஷ்ணுவுடதன்போரும்

பார்க்கமுடியாது பரனேபராபரனே
காக்கவிதுசமயம் கடைக்கண்திருவையினல்
ஏறிட்டுப்பாருமையா இருவருடதன்போரை
கூறிட்டுலோகம் குலுங்குதுகாணண்டமெல்லாம்
இறையோனேயெங்களுட: இடுக்கந்தனைத்தீர்க்க
முறையோர்முறையிடவே முக்கணனேதஞ்சமென்று
இமையோர்முறையிடவே ஈசுபரனுந்தானிரங்கி
அமையுமமையுமுங்கள் ஆபத்தைத்தீர்ப்போம்நாம்
என்றுபரமசிவன் இருவருடபோர்விலக்க
குன்றுவடிவாய்க் கொழுங்கனலாய்த்தான்வளர்ந்து
நின்றனல்வடிவாய் நெடியதொருகம்பமென
ஒன்றுகலோகம் ஊடுருவத்தான்வளர்ந்தார்
இருவர்தனக்குமுன்னே எழுந்தார்தடிவாக
உருவன்றியக்கினியாய் ஓங்காரக்கம்பமதாய்
ஒருருவாய்நின்றார் உருவித்தனல்மலையாய்
அருமறியாத அகண்டபரவெளியாய்
அந்தமலைகண்டு அரியயன்றானும்
சிந்தைகலங்கித் திகைத்துநெடுமூச்செறிந்து
அக்கினியைக்கண்டு அகன்றிருவர்தான்விலகி
திக்கிருர்கண்கள் நீலமதுதான்பூத்து
பக்கமெல்லாமக்கினியாய்ப் பரந்ததுகாணண்டமெல்லாம்
திக்கெல்லாமக்கினியாய்ச்சிவந்ததுகாண் லோகமெல்லாம்
எந்தவிதமென்று இருவோருந்தான்விலகி
வந்தசிவசோதிதன்னை வகுத்தறியமாட்டாமல்
நொந்திடைந்துநின்றவரைநோக்கமுடனேசிவனும்
இந்தமகிமை யிவரறியாரென்றுசொல்லி
ஞானக்கண்கொண்டறிவோர் நல்லோர்பெரியோர்கள்
ஊனக்கண்கொண்டறிய ஒவ்வாதெவராலும்
பார்க்கமுடியாது பாவியேயென்றுசொல்லி
தீர்க்கமுடனிருவர் தெளிந்துவகைபேசி



அரியுமயனும் அரனின் அடிமுடிதேடுதல்.

இந்தமலைப்பெருமை இன்றறியவேணுமென்று
அந்தமலையின் அடிமுடியுந்தான்காணத்
தங்களிலேசம்மதித்து தானேஇருபேரும்
அங்கெழுந்தார்வேதாவும் அன்னவடிவாகச்
சீலமுடன்பறந்து தேடினன்விண்ணடைந்து
சாலமேலேழுலகந் தமனியனும்போயறிய
முடிதேடியேபறந்தான் முகடுவெளியூடுருவ
அடிதேடியேமாயன் ஆதிவராகமதாய்
கீளலெனுங்கொம்பதனாற் கிளைத்துக்கீழ்லோகமெல்லாம்
நீளநுழைந்து நிமலனடிவரையைத்
தேடியுங்காணமற்றிரும்பியேமாயோனும்
வாடிமனதிடைந்து வந்திருந்தாரம்மானை
வந்திருந்துமாயன் மனதிற்பலநினைவாய்
இந்தமகிமைதனை ஏழ்கீழ்லோகமெல்லாம்
ஆராய்ந்துதேடி யறைக்கணத்திலாயிரமாம்
பாராய்ந்துகாதவழி பாய்ந்துநாம்கண்டறியோம்
ஆதிவராகமென்று அதிருபங்கொண்டுசென்று
சோதிதனைத்தேடி தொல்லுலகமூடுருவி
கொம்புகளுந்தேய்ந்து குளம்புகளுந்தான்தேய்ந்து
சம்புசிவன்பாதந் தான்காணமாட்டாமல்
வருஷமொருநூறு மண்ணுலகமோரேழு
விரசுகொண்டபாதாள மெங்கெங்கும்நாம்பார்த்தோம்
இன்னவிடமென்றறியோ மீசருடதன்பாதம்
அன்னவாகனத்தோ னவன்கண்டதேதெனவே
என்னிமனதி லிறையோன்றனைநினைந்து
மன்னனிருந்து மனதிற்றியானமதாய்
ஞானக்கண்கொண்டு நாட்டத்தில்நோக்கமதாய்
மானக்கருத்தில் மவுனமாய்த்தானிருந்தார்
பட்சிவடிவுகொண்டு பறந்ததொருவேதாவும்
கட்டியொருகாதங் கணப்பொழுதிலாயிரமாய்

வெளிகடந்துசென்று மேலேழுலோகமும்போய்
தெளிவாசற்றுங்காணுமற் றிகைத்துமனமிடைந்து
அப்பாலும்நூறுநூ றாயிரங்காதமுமாய்
மெய்ப்பாய்வெளிதாண்டி மெய்பசந்துவேதாவும்
சிறகிரண்டுந்தேய்ந்து செயல்முழுதுந்தான்குறைந்து
இறகசைக்கமாட்டாம லிருந்துமனநொந்து
அண்டகடாகமட்டும் ஆராய்ந்துஇன்னமுந்தான்
கண்டதில்லைஅக்கினியாங் கம்பத்தின்றன்முடியை
இத்தூரம்வந்தும் இப்படியேயல்லாது
சத்துமதுகிட்டச் சாரீபமதுகாணேமே
அளவற்றசோதிதனை ஆராய்ந்துமுற்றுமல்
களபமணிமாயன் கண்டானேயெப்படியோ
ஆதியப்பொருள்கள் அளவளவாய்நின்றனை
பேரறியாச்சோதியிது பேச்சுக்குமெட்டாது
அங்குமிங்குமொன்றாய் அடிமுடியுந்தானுகி
எங்குந்நிறைந்திருக்கு மீஸ்பரனையல்லாது
வேறேவுபாயம் விடயமிங்கேசற்றுமில்லை
கூறேனொருவசனம் கொண்டல்வண்ணன்றனுடனே
பகைமுடித்துக் கொண்டதொரு பாவந்தொலையாதெனை
வகையாயுறவுசெய்து வனமாலிதன்னுடனே [வே
இணக்கமுடன்கூடி யிருந்துவிடாமலிப்போ
பிணக்குவரப்பண்ணி பிழைமோசமானேமே
என்றுமலரோ னெண்ணிமனம்புண்ணுகி
ஒன்றுமுறையாம லுள்ளமெல்லாந்தானடுங்கி
இருக்குந்தருவாயி லீசர்முடிமீதிருந்து
மருக்கமழுந்தாழை மலர்தான்வருகிறதை
கண்டுமலரோன் கற்பனையாய்த்தானினைந்து
உண்டுபண்ணிப்பொய்யை உரக்கமனதிலெண்ணி
பொய்சொன்னேமானுற் பொருந்தவேசொல்லவென்று
மெய்யாகச்சாக்ஷி விளம்புதற்குக்கேதகையை
வசப்படுத்திக்கொள்ள மனதில்நினைந்துகொண்டு



நிசப்படுத்தவேதான் நேராகவாரதொரு
கேதகையேநீர்தான் கிருபையுடனெங்கிருந்து
மாதகையாய்வாரீர் வருத்தமென்னசொல்லுமென்றுர்
அப்போதுகேதகையு மையனேநீர்கேளும்
இப்போதுசஸ்பரனு ரேற்றமுடிமீதிருந்து
இருந்துதவறிவிழுந் திழுபட்டுநான்வாரேன்
பொருந்துவனேபாவி பொல்லாதகாலமதாய்
தவறிவிழுந்து தங்குமிடமில்லாமல்
அவதிமிகப்பட்டு அந்தரத்திலேயலைந்து
வாடியிடைந்து வருகிறேமித்தூரம்
நாடிதளர்ந்து நடையசந்துகாலோய்ந்து
வருகிறேமப்பா மகாகோடிகாலயுகம் [போ
ஒருவரையுங்காணேம் நானுன்னையெதிர்கண்டேனிப்
இன்னம்நிலத்தில்விழ எத்தனைநாட்செல்லுமதோ
தன்னமில்லாதங்குசென்று தகையாறிநாமிருக்க
எத்தனைநாட்செல்லுமதோ இன்னபடியென்றறியேன்
கத்தனுடசெயலைக் கணக்கிடவும்போகாது
எப்படியோவென்று இவ்வசனங்கேதகைதான்
செப்பமுடன்சொல்லத் திர்க்கமுடன்நான்முகனும்
நல்லதொருகேதகையே நான்சொல்லநீர்கேளும்
வல்லதொருமாயனுக்கும் மாநிலத்திலெந்தனுக்கும்
வாதுவந்துசண்டையிட்டு மற்போருந்தான்பொருதி
நிதுவந்துமூண்டிருவர் செலுத்தமுடியாமல்
நீபெரியோன்நான்பெரியோ னென்றுசிலகாலம்
வாய்பேசிக்கொண்டு வழக்குரைத்துப்போராடி
மற்பிடித்துக்குத்துண்டு மண்டிச்சினம்வெகுண்டு
வெற்பிடியலோக மேலேழுந்தானதிர
அடுக்குநிலைகுலைய அண்டபகிரண்டமெல்லாம்
உடுக்கணங்கள்தானதிர உவர்திசையுந்தான்சுவற
பரிதிமதிசுழல பகிரண்டந்தான்சுழல
திருதிமுதலட்டதிக்கும் நெடியரவுந்தான்சுழல

தேவர்கள் நானவர்கள் திக்குத்திசைசுழல
மூவர்கள்முப்பத்து முக்கோடிசுரர்முனிவர்
யாவர்களுமேபெரிய அந்தரமுந்தான்சுழல
சீவசராசரங்கள் திரிலோகமுஞ்சுழல
போராடி நின்றேம் புவனந்தனிலிறங்கி
சீராடியிப்படியாய்ச் சென்றுசிலகாலம்
ஒன்றையொன்றுமீறாமல் ஒருபூசல்தான்விளைந்து
நின்றேடும்நெடுநாள் நீணிலத்தோர்கோவெனவே
அந்தமொழிகேட்டு அரனேபராபரனே
வந்துவிலகுவென்று மாயையாய்த்தான்தோன்றி
இருவருக்குமேநடுவா யெழுந்ததுகாணக்கினியும்
ஒருவருக்குந்தோற்றும ஓரேசுடர்வடிவாய்
வளர்ந்ததுகாண்சோதி மலையாய்ப்பருவதமாய்
அளந்துகைகாணாத ஆகாசமூடுருவி
நின்றநெருப்பேதெனவே நெறியறியமாட்டாமல்
ஒன்றையொன்றுபார்த்தே உழன்றுமனம்புண்ணாகி
நின்றுமயங்கி நிலைகள்தெரியாமல்
நன்றுபடுதுமையிது நாமறியவேணுமென்று
தங்களிலேதாங்கள் சம்மதித்துக்கொண்டேதான்
இங்குவந்தேனென்னமென விச்செய்திநீரறிவீர்
பண்டோரறியாப் பழம்பொருளடிமுடியைக்
கண்டோன்பெரியோன் காணுதான்தான்சிறியோன்
என்றுவகைபேசி யிருவருமேசம்மதித்து
அன்றுபுவிமூடுருவ ஆதிவராகமதாய்
பாதாளஞ்சென்றார் பச்சைமால்கண்மரே
மீதானவிண்ணகத்தில் வேகமுடன்நான்தானும்
வந்தேனிளைப்பாய் வலுவும்மிகக்குறைந்தேன் [ன்
உந்தனையேகண்டேன் உள்ளமெல்லாந்தான்குளிர்ந்தே
கண்டபொழுதேத்தன் கவலையெல்லாந்தான்தீர்ந்தேன்
அண்டினேனுன்னையிப்போ அபயந்தைக்காத்தருள்வாய்
நாரணனுந்தான்மெலிய நமக்கோருதவியென்று



ஆரணனுந்தான்கேட்க அடவுடனேகேதகையும்
ஏதுகாண்சொல்லுமென்று இன்பமுடன்கேட்க
சாதுவாய்நான்முகனுஞ் சாட்சிநீசாற்றுமென்றார்
அந்தமொழிகேட்டு அரகராவென்றுசொல்லி
விந்தைமலர்க்கேதகையும் மெய்பசந்தங்கேதுசொல்லும்
என்னவிதிப்பயனோ யீசர்முடிமீதிருந்து
அன்னமேகேளும் அவதிவந்துதித்தாம்
தவறினேன்கண்டீர் தரிக்கவிடமில்லாமல்
குவலயத்திற்சொல்லக் கொம்பிழந்தமந்தியைப்போல்
ஆகாதபாவி அடியேனொருபொருட்டாய்
வாகாகவும்முடைய வருத்தமதைச்சொன்னீரே
எங்குந்நிரந்தரமாய் எள்ளுக்குள்ளெண்ணையைப்போல்
அங்குமிங்குமொன்றே யடங்கலுமாஎவ்வுயிர்க்கும்
நிற்கும்பராபரனை நீக்கியென்னசொன்னாலும்
தர்க்கமுடன்கேதகையுந் தருமென்ன நான்முகனும்
ஆனல்முன்னாளி லமரர்முதற்றனைவரும்
வானோரமுதம் வாரியதனிற்கடைய
ஆலவிடம்பிறந்து அகிலமெல்லாந்தான்பறந்து
காலவிஷஞ்சீறிவரக் கண்டமரர்நாடோடி
பரனேபராபரனே பார்வதிமனோகரனே
அரனேஅபயமென்று அமரருக்காயவ்விஷத்தை
கொள்ளலையோயீசர் குவலயத்தோர்தான்பிழைக்க
தள்ளலையேயீசர் சர்ப்பவிஷமீதெனவே
பெரியோரிதெல்லாம் பேதமென்றுதள்ளார்கள்
தெரியாதார்க்கெல்லாந் தெரிந்துமனந்தேற
என்னபிழைவந்தாலு மேற்பார்பெரியோர்கள்
வின்னமென்றுகொள்ளார்கள் மேலானநல்லோர்கள்
அடுத்தாரைக்காப்பா ரடைக்கலமாய்வந்தோரை
விடுத்தேதுஞ்சொல்லார்கள் மெய்யிதுகாண்கேதகையே
நமக்குமொருசெய்தி நாம்சொல்லநீர்கேளும்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒருபேச்சுரைப்பீரே

ஈசர்முடிகண்டேனென் றியம்புவேன்மாலிடத்தில்
ஆசையுடன் நீர்தாழும் ஆமென் றுரையுமென்றார்
ஆபத்துவேளையிலே அஞ்சாதேயென்றொருபொய்
பாபத்தைப்பாராமற் பகர்ந்துமிரைக்கலாகுமோ
ஆர்க்குமொருசமையம் யாவருக்குமிப்படியே
பார்க்கவல்லோவேனும் பாவியோ தான்தானும்
உங்களுக்குதானு முதவேணுபாருலகில்
தங்களுக்குத்தானே தாங்கள்சளப்படவும்
பார்ப்பீரோவேணுமென்று பாருங்காண்கேதகையே
ஏற்போமுமக்காக இசைவோங்காண்வேதாவே
பொய்சொல்லக்கேதகையும் பொருந்தியேசம்மதித்து
மெய்சொல்லவேமறுத்து விதியோனுக்காகவேதான்
பொய்சொல்லவேதுணிந்து பூமிதனில்வந்திறங்கி
அய்யமறக்கேதகையும் அன்னமுந்தானென்றுமி
மேதினியில்வந்து விட்டுணுவைத்தான்பார்த்து
ஓதிமம்போல்பானும் உயர்வானகம்புகுந்து
அரைநிமிஷந்தன்னி லாயிரங்காதவழி
விரையவேயிப்படியாய் வெட்டவெளியூடேபோய்
கண்டேன்முடிதன்னை நீர் கண்டீரோசேவடியும்
கொண்டல்வண்ணரப்போ கொதித்துமனமிடைந்து
பன்றிவடிவெடுத்துப் பாதாளலோகமெல்லாம்
வென்றியுடன்தேடி மெலிந்துவந்தேனல்லாது
காணேன்சிவன்பாதங் காணவுந்தான்கிட்டாமல்
வீணேதிரிந்து வெளியேறிவந்தேன்காண்
முடிகண்டோமென்று மொழிந்தாயே நீபெரியோன்
அடிகண்டோமென்றால் அனலாயெரிந்திடுவேன்
கண்ணுறக்கண்டமென்ற காட்சிதனக்கொப்பனையாய்
விண்ணோரறிய விளம்புவையோவென்றுரைத்தார்
அப்போதுவேதன் அசத்தியமோவென்வார்த்தை
இப்போதுகேதகையும் ஈசர்முடிமீதிருந்து
நாம்கண்டபோது நமக்கவர்தான்சாட்சியென்றார்



ஆங்காணுமிட்டுணுவே அப்போதுநான்கூட
என்றிந்தக்கேதகையும் இவ்வார்த்தைதான்கூற
அன்றிந்தப்பொய்யை அரனறிந்துகோபமதாய்
நெடுகவளர்ந்தொரு நெருப்புமலைதான்கொதித்து
இடிதிடனவேமுழங்கிச் செந்தியகோரமதாய்
நெருநெறனவேதுமறி நேரேபடரெனவே
இறுகிறெனச்சக்கரம்போற் கீழேழுமேலேழு
லோகமெல்லாந்தான்சுழல நொடிக்குமிடியேறனவே
சாகரமுந்தான்வறதிச் சகலவஸ்துப்போன்றிடவே
வெடித்ததுகாணெங்கும் வெந்தனல்போல்நின்றமலை
பிடித்ததுகாணெங்கும் பெருந்தியனல்பறந்து
மண்ணுலகிலுள்ளோரும் மதிமயங்கிமூச்சையுற
விண்ணுலகிலுள்ளோரும் மெய்கலங்கியுள்நடுங்கி
இறையோனேஎங்கள் ஈஸ்பரனே தகுற்றம்
முறையோவணக்கமயம் மூர்த்தியேகாருமென்று
சகலாண்டசீவ சராசரங்களுள்ளதெல்லாம்
அகலாதசோதி பரனேவணக்கமயம்
பராபரமாய்நின்றோனே பரனேவுமக்கபயம்
தராதரமாய்நின்றிலங்குஞ் சருவதயாபரனே
காருமிதுசமயங் காரணமாய்நின்றோனே
வாருமிதுசமயம் வல்லவேயிப்போது
தீராவினைதீரச் சித்தம்பொருத்தருளும்
வாராதகுற்றம் வந்தாலுமெங்களுக்காய்
வந்திப்போகாத்தருளும் மழுவேந்துங்கையோனே
நந்திப்போவாக்குத் தாவேணுமீஸ்பரனே
தாங்கமுடியாமற் றராதலங்களுள்ளதெல்லாம்
ஏங்கியிடைந்து இடுக்கப்படுந்துயரம்
ஆங்காரமான அகோரமெல்லாந்தான் தீர்ந்து
ஓங்காரந்தானொடுங்கி உத்தமமாய்நற்குணமாய்
செஞ்சுடர்போல்நின்ற சிவனும் அபயஸ்தம்
அஞ்சலென்றேநந்து அரனுருமேதுசொல்வார்

ஏதுகாண்நான்முகனே என்முடி நீகண்டதென்று
வாதுசொல்லிமாயனிடம் வழக்குரைத்துநின்றுபே
காணாததம்முடியைக் கண்டோமெனச்சாக்ஷி
வீணானவார்த்தை விளம்பினையேஇப்போது
காதாரக்கேளாமல் கண்ணாரக்காணாமல்
பேதாய்நீசொன்ன கெருவமென்னவென்றுசொல்லி
சற்றேநகைபுரிந்தார் சங்கரநாராயணரும்
முத்தொழிற்போற்சற்றே முறுவலதுசெய்தளவில்
அண்டகடாக மகண்டவெளிக்கப்புறமும்
கொண்டலிடியின்போற் கொழுங்கனலுஞ்சோதியுமாய்
விண்டலங்களெங்கும் வெளவந்துதான்மூடி
கண்டஅசுரரெல்லாங் காங்கனொடுகொங்கன்பின்னரி
வீழ்ந்துவிடப்பாரும் மெய்சோர்ந்துநிற்பாரும்
தாழ்ந்துபணிவாருந் தன்மமோவென்பாரும்
சந்திரனுஞ்சூரியனும் தலைகட்டநூல்துபோல்
இந்திரனுந்தேவருவ ரிமையோர்முனிவர்களும்
அந்தரமும்வானும் அடுக்குநிலைகுலைந்து
நந்திமுதற்றேவர் நடுநடுங்கிமெய்மறந்து
போனதுவுங்கண்டேங்கி பூமேல்மலரோனும்
ஆனசவுரியமும் ஆங்காரமுள்ளதெல்லாம்
நீங்கிவலுக்குறைந்து நிலத்திற்றலைகவிழ்ந்து
ஏங்கிமிகவேங்கித் துக்கித்தான்நான்முகனும்
அப்போதுமுக்கணனும் அயனைமுகம்நோக்கி
இப்போதுபொய்யுரைத்தாய் இவ்வுலகிலுந்தனுக்கு
கோயில்குளம்பூசை குவலயத்திலில்லையென்று
சேயில்வருமீசர் செப்பினரம்மானை
செப்பியசொல்மாயன் திருச்செவியிற்கேட்டவுடன்
மெய்ப்புடையசவ்பரனை விழுந்துநமஸ்கரித்து
ஆடினார்மாயன் அரனைமிகக்கொண்டாடி
பாடினார்மெய்மகிழ்ந்து பணிந்துபணிந்தன்புருகி
ஆனந்தக்கூத்தாடி அருட்கண்ணால்நீர்சொரிய



ஞானந்தமாகிநின்ற சதாசிவமேவுன்மகிமை
ஆரறிவாருன்கோலம் அகண்டமெல்லாந்தானான
பேரறியாதாரறியார் பெருமைதனையறியார்
வேரறியார்தூரறியார் மேலறியார்கீழறியார்
ஓரறிவாயெங்கும் ஊடுருவிநின்றோனே
சீரறியாதுந்தன் செயலறியார்யாவர்களும்
கூரறியார்வீறுசெய்வார் குணமறியமாட்டார்கள்
நானேனறியத் தகுமோ நடனபதம்
பேயேன்சிறியேன் பிழையேதுசெய்தாலும்
பொறுத்தருளவேணும் புரமூன்றெரித்தோனே
சிறுத்தொண்டன்றன்மனையிற் சென்றமுதுகொண்டோ
அய்யாபொறுத்தருளும் அடியேன்றனக்காரும் [னே
மெய்யாபரணமென விளம்பித்திருமாலும்
தோத்திரங்கள்செய்து தொழுததெல்லாம்கண்டுசிவன்
நேத்திரத்திலைறிந்து நெடுமாலைத்தானழைத்து
ஏதுவரமுள்ளதெல்லா மிப்போதுடன்றனக்கு
சாதுவாய்த்தந்தோம் சந்தோஷமாச்சுதென்று
ஈசர்புகழ்ந்துரைக்க எம்பெருமான்தான்மகிழ்ந்து
நேசமுடனிருந்தார் நீணிலத்திலம்மானை
பொய்ச்சாட்சிசொன்னதொரு பூவேநீகேதகையே
இச்சாட்சிசொன்னமையா லிங்கேநீநம்மிடத்தில்
வேண்டாமினிமேல் விடுதியென்றுசாபமிட்டார்
நீண்டாமற்கேதகையுஞ் சிந்தைமிகவருந்தி
ஈசன்மேற்குற்றமில்லை இதுநம்மால்வந்தகுற்றம்
பேசவாயில்லையென்று பேசாமற்போனதுவே
வேதன்மனமிடைந்து வேகாமல்வெந்துருகி
நாதனேநானடியேன் நடந்ததெல்லாங்குற்றமையா
பொல்லாதான்செய்தபிழை பொறுதருளுமீஸ்பரனே
கொல்லாமலென்னைவிடக் கோபந்தணிந்தமையால்
இனிமேலுநானடியே னீடேறவேண்டியதால்
தனியேதனிப்பொருளே தற்காக்கவேணுமையா

பாவிக்குச்சாபம் பலித்துவிட்டாற்பூவுலகில்
சேவிக்கநானடியேன் சிந்தைசெய்வதெக்காலம்
சத்தசமுத்திரமுந் தான்கொதித்துப்பொங்கிவந்தால்
சுத்தஜலம்விட்டுத் துளாவியேஆற்றுதற்கு
மற்றுமொருதண்ணீர் மானிலத்திலுண்டோதான்
கற்றுங்கருணைக் கடலேவெளியொளியே
முப்புரத்தைத்தானெரித்து மூவரையுங்காப்பாற்றி
அப்புரத்தைக்காக்கிலையோ அரனே அவர்க்கிரங்கி
காமனையுந்தானெரித்தீர் கடவுளே இப்போது
பூமனையுமெதிரும்பிப் போதமுடன்காக்கிலையோ
மார்க்கண்டனுக்காக மறலிதனையுதைத்தீர்
திக்கமுடனேமனையும் திரும்பவும்நீகாக்கிலையோ
மூன்றுமதமுள்ள மும்மதத்தியானைதன்னை
தோன்றுதாருகாவனத்துள் சூரர்தமேவிவிட்ட
ஆனைதனையுரித்து அடவுடனேநால்போர்த்தீர்
வனைரிஷிகெருண்டு எக்கியத்தாலக்கினியை
கோபமுத்தாபமுமாய்க் கூட்டிவிடவுமாய்
தீபமுள்ள அக்கினியைச் சிவனென்றப்பாராமல்
வவினைப்போ தெடுத்தீர்மழுவாக
பாவினன்செய்த பகைதானெரியாதோ
மூடலுக்குள்நீயிருக்கும் முகனைதெரியாமல்
காடவரும்பொல்லாக் கசமாலவஞ்ஞானம்
போலிருந்துநாயேன் பொசுங்கியேவெந்துவிட்டேன்
கோவியெந்தன்மீதிருந்த குற்றமெல்லாந்தான்பொருத் [அ
காத்தருளவேணுங் கஞ்சன்படுந்துயரம்
பார்த்திருந்துமீசர் பண்புடனேவேதனுக்கு
அஞ்சலென்றுசொல்லி யருளினார்காணம்மானை
வஞ்சமெனும்பூவுலகில் மாமறையோர்வீடுகளில்
செய்யுந்தவபூசையெல்லாம் சித்தித்தோமுன்றனக்கு
உய்யும்பலபடைப்பும் உலகமுதலெவ்வகையும்
எப்போதும்போலே இருந்துபடையுமென்று



மப்போதுமீசர் மொழிந்தார்காண்வேதனுக்கு
ஆகையினால்வேதனுக்கும் அச்சுதற்கும்வந்தபகை
மாயையாயீசர் மலைபோலவேதோன்றி
இருவருடபகையும் ஈஸ்பரனுந்தான்தீர்த்து
ஒருவருடனொருவ ருறவாயிருங்களென்று
சேகரித்துநல்ல சிவபதமுந்தான்கொடுத்து
லோகத்திலெப்போதும் மேலோகத்திலுள்ளபடி
மாயனுக்கும்வேதனுக்கும் வஞ்சமினிவாராமல்
நேயமாய்ஞானம் நீதியுடன்தான்தீர்த்து
அவரவர்கள்செய்தொழிலை அவரவரேதான்முடித்து
விவரமுடன்தானிரென்று வித்தகனார்தாமுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆயனும்அந்தணனும்
விந்தைமலர்ப்பாதம் விழுந்துநமஸ்கரித்து
எங்கள்தனக்காக இவ்வடிவுதானெடுத்து
தங்கமயமாய்த் தணல்வடிவாய்த்தான்தோன்றி
ரட்சித்துக்காக்கவந்த நாதாபராபரனே
பட்சிவடிவெடுத்தும் பன்றிவடிவெடுத்தும்
தேடியுங்காணா சிவமேசிவதவமே
நாடியேநாங்கள் நாட்டமதிற்கண்டிருக்க
வேணும்பராபரனே மேதினியிலெப்போதும்
ஆணவங்கள்தானீங்கி அடியேன்கள்தான்பிழைக்க
பூசையனுதினமும் புஷ்பமலர்தான்சாத்தி
ஆசையறுத்து அரனடியைச்சேர்வதற்கு
சிற்சொருபமாகத் தெரிசனைக்குநேராக
தற்சொருபங்காட்டித் தயவுருஞ்ஜீஸ்பரனே
இந்தச்சொருபம் இப்படியாய்த்தானிருந்தால்
அந்தச்சொருபம் அறிந்தேதுபூசைசெய்வோம்
மேகஜலமுமக்கு மேனியெல்லாம்நீர்சொரிய
தேகமெல்லாம்மீன்குலங்கள் சிரசுமேற்புஷ்பமழை
பூசிக்கவீற்றிருக்கும் புண்ணியரேஉம்முடைய
காசிக்கிராதிகளுக் கற்பிக்கவேணுமிப்போ
வேதனும்மாலும் விரும்பியிவையுரைக்க

போதமுனியீசர் பூரித்தகமகிழ்ந்து
அக்கினியாய்நின்ற அனலைமிகநிறுத்தி
மெய்க்கினியசாந்தகமாய் மேதினியிலென்றனும்
நிற்கவொருமலையாய் நேமித்தாரம்மானை
தக்கதொருமலைக்குச் சாற்றினார்நாமமது
அருணனொளிவானதினா லருணாசலமெனவே
கருணகடாக்ஷமதாய்க் கற்பித்தார்பொன்மலையை
அம்மலையிலீசர் அமிக்கமதாய்தானிருக்க
செம்மலையிலிங்கமதாய் சிவரூபமாயிருந்தார்
அந்தமலையி லயனுந்திருமாலும்
கந்தமலர்ச்சோலைகளுங் கற்பகமுமுண்டுபண்ணி
தெய்வகம்மளயுஞ் சீக்கிரமாய்வாவெனவே
சைவர்க்குகந்த ஸ்தலமாம்அருணையிது
கோவில்திருப்பணியுங் கோபுரமுந்தான்சமைத்து
ஆவலுடன்பட்டணமு மலங்காரமாய்முடித்து
சிறப்பியுமென்று திருமாலும்நான்முகனும்
அறப்பெரியதச்சனுக்கு அருளினார்வசனம்
அந்தட்சணமே அரைநொடியிற்பட்டணமாய்
இந்தட்சணமுடித்து எகினன்விஸ்வகர்மா
வானுலகிலுள்ள மறையோர்முனிவர்களும்
தானுலகிலந்தத் தலத்திற்குடியேற்றி
அரம்பையரைத்தானழைத்து ஆடல்செய்யக்கோவிலுக்
உறம்பெறவேதானிருத்தி யுகந்துசிவபூசைசெய்ய [கு
மாலுமயனு மகிழ்ந்திருந்தாரம்மானை
கோலாகலமாகக் குன்றவில்லிசொற்படிக்கு
அருணசலந்தனிலே அயனுந்திருமாலும்
ஒருநாளும்பேதமற வுகந்திருந்தார்கண்டீரே
என்றுதன்மர்தம்பியர்க்கு எடுத்துரைத்தாரிக்கதையை
சென்றுவெகுதூரம் செலுத்திவழிதொலைய
நடந்தார்கள்பஞ்சவர்கள் தன்மலையுங்காடுகளும் [தான்
தொடர்ந்தவர்கள்போகையிலே சொல்லுவார்தன்மருந்



### விமன் விஜயந்த ராமன் கதையுரைத்தல்.

ஏற்கவேமுன்னாளில் இராமருந்தானப்போது
பாற்கடலிற்பள்ளிகொண்டு பச்சைமால்தானிருக்க
அரக்கருபத்திரவம் ஆற்றாமலேயிமையோர்
புரக்கும்நெடுமால்பதத்தைப் போற்றியென்றாரம்மானை
தேவர்களுமப்படியே தெண்டனிட்டுநிற்கையிலே
ஆவலதாக அவர்கள்தனைப்பார்த்து
ஆயனார்தாமும் அருளுவாரோர்வசனம்
நேயமுடன்தேவர்களே நிலைத்திருக்கும்வானரமாய்
நீங்களெல்லோரும் நீணிலத்திலேபிறக்கப்
போங்களனைவோரும் புறப்படுங்களென்றுரைத்தார்
பாதிமதியணியும் பரமசிவன்றன்னருளால்
ஆதிபதிகோசலைதா டயோத்திக்கரசெனவே
நாடுடையாராக நான்பிறப்பேனென்றுசொல்லி
பீடுடையார்வந்து பிறந்தனர்காணம்மானை
செந்திருவுமந்த ஜெனகரனார்தன்மகளாய்
வந்துமிதிலையிலே வளர்ந்தனரேஅப்போது
மன்னதிலேராமன் வளருகின்றநாளையிலே
திண்ணமுடன்கோசிகனுந் தெசரதனைவந்துகண்டு
காவலனேஎன்வேள்வி காக்கவுன்மைந்தனையும்
ஏவுவாயென்று எடுத்துரைத்தாரப்போது
சின்னஞ்சிரியனல்லோ சிலையெடுக்கமாட்டானே
என்செய்வேனென்று எடுத்துரைக்கமன்னவனும்
மாமுனிவன்றானுமந்த வசிஷ்டர்தனக்காகப்
பூமன்னையிப்போ பொறுத்தேனெனவுரைத்தார்
பேசாதமாமுனிவன் பேசமொழியாற்பார்த்து
கூசாமல்ராமனையுங் கூட்டிவிட்டாரம்மானை
உற்றதொருவேள்வி யுகந்துமுனிநடத்த
அற்றையழிக்கவென்று ஆங்காரங்கொண்டெழுந்து
நடுங்கவைத்ததாடகைமேல் நாரணனார்தான்விடுத்த

கொடுங்கணைதான்பட்டுருவிக் கூறாகத்தான்விழுந்தாள்
தையலெனுமகலி சாபந்தனைத்தொலைத்தான்
ஐயன்மிதிலை யடைந்தனர்காணன்னேரம்
பொன்னின்சிலையைப் போற்றியேதானெடுத்து
உன்னிவளைத்து ஒடித்தார்சிலையதனை
சீதைக்கும்ராமருக்குஞ் செய்யமணமுடித்தார்
கோதையரைக்கைபிடித்துக் கோதண்டராமனுந்தான்
பின்னையார்தன்னுடனே மேகவண்ணரப்போது
மன்னனயோத்தியிலே வந்தமர்ந்தாரம்மானை
தந்தையும்ராமனுக்கு தனிமகுடஞ்சூட்டவென்று
சிந்தைதனில்நினைந்து சிறப்பித்தார்பட்டணத்தை
சீராருங்கைகேசி சென்றுதசரதனை
பாராளப்பட்டம் பரதனுக்குச்சூட்டுமென்றாள்
கேட்டவுடன்மெத்தக் கிலேசமாய்மன்னவனும்
வாட்டமுடன்வீழ்ந்து மயங்கினரப்போது
மாயவனுமந்த மடந்தையுடன்தம்பியரும்
தூயவன்சொல்மீறாமற் றக்கவனம்புகுந்தார்
சித்திரகூடமதிற் சென்றான்பரதனப்போ
பத்தியுள்ளதம்பியற்குப் பாதுகையைத்தான்கொடுத்து
தாண்டுபுகழ்ராமன் தம்பிநீயேதெனவே
வேண்டியயோத்திதனில் வீற்றிருந்தாரம்மானை
சாற்றரியராவணனார் தங்கையென்னுஞ்சூர்ப்பநகை
போற்றியராமனையும் புணர்ச்சிசெய்யவேநினைத்தாள்
ஆனசெவிமூக்கை யறுத்துவிட்டான்லட்சுமணன்
கானுறையுமந்தக் கரதூஷணர்க்குரைத்தாள்
பாசமுடன்வந்தெதிர்த்துப் படைபொருதியெல்லோரும்
வாசமுள்ளராமன்கையால் மாண்டான்காணெல்லவரும்
பட்டபின்புராவணற்குப் பரிந்துரைத்தாரப்போது
திட்டெனவேபொய்மானை சொல்லிவிட்டான்ராவணனு
சீர்மால்சிலையெடுத்துச் சென்றுகணைதொடுத்து [ம்
பார்மீதிற்பொய்மானை பட்டுவிழவெய்துவிட்டார்



இங்கனிளைய பெருமாளெழுந்திருந்து
செங்கண்நெடுமாலைத் தேடலுற்றான்வனத்தில்
ஐயமென்றுராவணன்வந் தாரணங்கைத்தான்தூக்கி
உய்வதறியாமல் உலகளந்தோன்தேவிதனை
வண்டாடுஞ்சோலைதனில் வைத்தான்சிறையாக
கொண்டசிலைராமர் கூடவந்துதேடலுற்றார்
வைத்திடத்திற்காணமல் மாயவருந்தம்பியரும்
சித்தங்கலங்கித் திகைத்துமிகத்தேடலுற்றார்
கண்டசடாயுவுந்தான் கன்னிநிலைதானுரைக்க
கொண்டுவைகுந்தபதங் கொடுத்தார்காணம்மானை
தாரார்சவுரி தனக்குநல்லமோட்சபதம்
சீராகவேயளித்துத் தேடலுற்றாரப்போது
அன்னவனுமானை அருமையாயாண்டுகொண்டு
கன்றுற்சுக்ரீபனையுங்காண்பித்துக்கொண்டருளி
அங்கவர்கள்சொல்லுமொழி யத்தனையுந்தான்கேட்டு
இங்குநாமும்முடைய இடர்தீர்ப்போமென்றுரைத்தார்
வாலிதனைக்கொல்லவென்று மராமரங்களேழும்
கோலியேயூடுருவக் கோதண்டந்தான்தொடுத்தார்
தக்கசபதமியத் தான்கூறிசுக்ரீபன்
திக்கெனவேவாலிமுன்னே சென்றனேமன்னவனும்
தாகமுடன்வாலிதனைத் தாரகையுந்தான்விலக்க
மோகமுடனிவர்க்கு மூண்டதுகாண்சண்டையுமே
ஆளிமிகவேவரவே சுக்ரீபனைப்பிடித்து
மூளயவர்வாயில்வர மோதினர்காணப்போது
சீரானஸ்ரீராமன் சிலைவளைத்து அம்புவிட
மாரானவாலியுட மார்புதனைப்பட்டுருவ
வாலியதைப்பிடித்து வாசித்தான்ராமனென
கோலியாயெய்துவிட்டீர் கொண்டல்வண்ணாநீதியிதோ
காட்டில்மறைந்துவில்லைக் காணமற்றான்வளைத்து
போட்டியாயூடுருவப் போட்டாயேயாணமதை [யா
மானிடர்க்கும்வானவர்க்கும்வழக்குண்டோசொல்லுமை

பானுகுலத்துதித்த பராக்கிரமமீதெனவே
மிக்கதிறவாலி விண்ணுலம்போய்ப்புகுந்தான்
சுக்கிரீபனுக்குமுடி சூட்டினார்காணம்மானை
வாரிதனைக்கடந்து மாதாதைக்கண்டனுமான்
ஆரியனுந்தான்கொடுத்த ஆழிதனையீய்ந்தான்
மங்கையரைக்கண்டு வாட்டமறத்தானுரைத்தான்
அங்கெங்குஞ்சென்று அரக்கன்பதியழித்தான்
தங்காமல்ராவணனைத் தான்போய்க்கண்டானனுமான்
எங்குவந்தாய் நீகுரங்கே என்றானிராவணனும்
உங்களரசழிய வொருமானைத்தூதுவிட்டு
எங்கள்மான் றன்னை யெடுத்துவந்தாய்ப்போது
உத்தமியாக்கற்புடைய உலகின்றமாதாவை
வைத்திருக்கவொண்ணாது வல்லரக்காவிட்டுவிடு
வல்லரக்கன்றான்சினந்து வாலிற்றனல்கொளுத்த
கொல்லெனப்பட்டணத்தைக் கொண்டேகிச்சுட்டனுமா
வாரிதனைக்கடந்து மாதாவைத்தான்றொழுது [ன்
சீரியமால்பதத்தைத் தெண்டனிட்டாரம்மானை
அன்றேஸ்ரீராமர் அனுமான்முகம்நோக்கி
இன்றேபடையெடுப்பீரெனவானரவீரர்
திட்டாங்கடற்கரைக்கே சென்றார்களன்னேரம்
விட்டானிராவணன் விபீஷணனுந்தான்பகைத்து
இட்டமுடன்வந்து திருமால்பதம்பணிந்தான்
பட்டமுனக்கேயிலங்கைப் பட்டணமுமராச்சியமும்
என்றுவிபீஷணற்கு ஈந்தார்சிரஞ்சீவி
என்றுவருணனைத்தான் அழைத்துக்கடலடைத்து
பத்துத்தலையுடையான் பட்டணத்தைக்கண்டாரே
கொத்துமுடியானுக் குறிப்பாகப்பார்த்துநின்றான்
அண்ணல்மகிழ்ச்சியுடனங்கதனைத்தூதுவிட்டு
வண்ணமிகுநாலு வாசலையுந்தான்வளைத்தார்
முதல்நாள்சமர்பொருத முரியனுற்றான்ராவணனும்
மதமுடையகும்பகர்னன் மாண்டானரைநொடியில்



என்றுகேட்டிராவணனும் இற்றமரம்போல்விழுந்து
கன்றலைதம்பாவனைபோற் கண்டானதிகாயன்
எடுத்துச்சிலைவளைத்து இலட்சுமணன்றன்னுடனே
அடுத்துமகாசேனையுடன் அதிகாயன்வந்தெதிர்த்தான்
அச்சுதனார்தம்பிவிட்ட அஸ்திரக்காலப்போது
மெச்சுமதிகாயன் விண்ணுலகம்போய்ச்சேர்ந்தான்
செருக்களத்தில்மாண்டவர்கள் சேனைபலகோடி
வெருட்சியுடன்றாறு வெள்ளம்படைபோனபின்பு
வைதுமகாராட்சதர்கள் வந்தெதிர்த்தாரந்திரவில்
கொய்துமுடிதானறுத்தார் கோதண்டராமனப்போ
இளையபெருமாளுடனே இந்த்ரசித்துவந்தெதிர்க்க
வளையவில்வாங்கி வதைத்துவிட்டாரம்மானை
மோகரித்துவந்துநின்ற மூலபலமத்தனையும் [டாட
வேகமுடன்கொன்றுவிட்டார் விண்ணுலகோர்கொண்
மூண்டெழுந்தசேனையெல்லாம் மாண்டுவிழுந்தெனவே
ஆண்டுஞ்சிலைராமர்தனைத் துதித்தார்கள்தேவரெல்லாம்
ஆனபசுவுடனே அரக்கனையுந்தானறுத்தார்
சேனைதளத்துடனே சென்றானேராவணனும்
அற்றுவிழுந்தரக்கன் அரைக்கோடிதன்வயதும்
பெற்றவரந்தானிழந்து பிராமணனும்போனதுவே
வாடிமனமிடைந்து வன்சிறையிற்போய்ப்புகுந்து
தேடியந்தச்சீதையுந்தான் தீயில்முழுகிவர
இலங்கைநகரி லிருந்தவிபீஷணர்க்கு
துலங்குமுடிமகுடஞ் சூட்டினார்காணம்மானை
அண்ணல்மிகுசேனையுடன் அயோத்திநகர்க்கேக
வண்ணமணிப்பரதன் வந்தணலில்வீழாமுன்
தம்பியர்கள்தன்னுடனுஞ் சானகியாள்தன்னுடனும்
அம்பொன்முடிசூட்டி அயோத்திநகராண்டிருந்தார்
இத்தனைமாயைகளும் இவர்செய்தமாயையிது
சுத்தனார்தம்மைக் கடைபோகக்காப்பரென்று
சொல்லியதோர்தன்மர் துயரமுடன்போம்வழியில்
வில்லியதோர்தம்பியர்க்கு விபரமுடன்தானுரைப்பார்

கஞ்சமலாடிமேற் கஞ்சன்வரவிடுத்த
வஞ்சமெனுஞ்சகட்டை வாகாயுதைத்ததையும்
அலகைமுலையுமுண்டு அவ்வுயிரைக்கொன்றதுவும்
உலகுதனில்மாய னுகந்துவிளாமரத்திற்
கன்றுமெறிந்து கனிகள்மிகத்தின்றதுவும்
அன்றுதெருமண்ணை யள்ளிமிகவுண்டதுவும்
மரத்தையுதைத்ததுவும் வண்கட்டிரனுடனே
ஒருத்தரறியாம லுபாயங்கள்செய்ததுவும்
நச்சரவினுச்சிதனில் நடித்தகதைதனையும்
அச்சமறத்தம்பியர்க்கு அன்பாகவேயுரைத்து
வாசமுடன்தர்மர் வருகிறாரென்றுசொல்லி
நேசமுடன்மாயன் நினைவறியவேணுமென்று
ஆதிகெருடனையும் அருகேவரவழைத்து
நீதியுடன்தர்மர் நினைவறிந்துவாருமென்று
அன்னமெனும்வடிவாய் ஐயரெதிரேபோய்
தன்னமையாய்நின்று தர்க்கித்துவார்த்தைசொல்லி
உண்மையென்னவென்று உட்புலனையாராய்ந்து
வண்மையுறநன்றாய் வருத்தி நீசோதியென்றார்
ஆமென்றுதான் கெருடன் அன்னவடிவாகி
ஓமென்றுசம்மதித்தே உயர்ந்தாலவிருக்கமதில்
வந்திருந்துதன்மர் வரும்வழியிலன்பாக
இந்தக்கதைப்பயனை யேதென்றுகேட்கவென்று
பேசாமலேயிருந்தார் பெரியாலவிருக்கமதில்
ஆசாரமுள்ளதர்மர் ஆலமரத்தடியில்
இருந்துகதைபலவும் இளையோர்க்குத்தானுரைக்க
திருந்துபுகழ்தம்பியர்கள் செவியுற்றுத்தான்கேட்டு
விசாரமெல்லாந்தீர்த்து மெய்மகிழ்ந்துதானிருந்தார்
உசாராயிருந்ததொரு உற்றபுகழன்னமுந்தான்

## பாண்டவரை அன்னம் பரிசோதித்தது

மன்னவரே நீங்கள் வருத்தியுரைத்தகதை
இன்னவகையென்று எனக்குரையுமென்றுசொல்ல



சீரானதர்மர் சிறப்புடனே அன்னமதை
நேராகநோக்கி நிறைந்தகதைதனையும்
சொல்லுகிறேன்புள்ளனமே சுகமாகநீர்கேளும்
செல்லுங்குலதெய்வஞ் செங்கண்மாலெங்களுக்கு
எம்பெருமான்தன்பெருமை எல்லாமென்றன்னுடைய
தம்பியர்க்குநானுரைத்தேன் தாரணியிலேநடந்த
காரணங்களெல்லாங் கதையாகத்தான்முடித்து
பூரணமாய்நானுரைத்தேன்புண்ணியரைத்தானினைந்து
எங்கள்தெய்வந்தன்னையுமே எப்போதும்யான்மறவேன்
உங்கள்தெய்வமென்று உரைத்திரேமன்னவரே
தங்கள்தெய்வமேது நானேதுநீரேது
திங்களொளிகானகத்திற் றேடும்வகையேது
என்னவென்று அன்னம் இதமாகத்தான்கேட்க
அன்னமதுதனக்கு ஆனதர்மரேதுசொல்வார்
அண்டபுவன மளந்துநிறைந்தமுதல்
தண்டமிழ்நால்வேத சராசரமாய்நின்றமுதல்
எவ்வுயிர்க்குந்தானு யிருந்துகலந்தமுதல்
அவ்வுயிர்க்குமீந்து அறஞ்செலுத்திநின்றமுதல்
பாரதப்போர்செய்யப் படையெடுத்தநாள்முதலாய்
சாரதியாயெங்களுந் தற்காத்துநின்றமுதல்
மாயனுபாயன் வாசன்புவிராஜன்
ஆயன்சகாயன் ஐவர்க்கனுகூலன்
அச்சுதற்குநாங்க ளடிமையிலேயாகி
மெச்சுபுவியாண்டு விஷ்ணுபதந்தான்தேடி
நாயனெங்கேயென்று நாடித்திசைநோக்கி
நேயமுடன்தேடி நெடுகவந்தோமித்தூரம்
செய்யதொருவைகுந்தஞ் சேர்வோமெனவேநான்
ஐயமில்லாதேநாங்கள் அண்ணல்தனைத்தேடி
வாரோம்வழிதுலைய வாய்ந்தகதைதம்பியர்க்கு
பேராகச்சொல்லி பெரியதவந்தேடிவந்தோம்
என்றுதர்மர்சொல்ல இன்பமுடனன்னமுந்தான்

ஒன்றுமறியாம லுரைத்திரேயன்னவரே
மண்ணுலகிற்காணாது மலைதனிலுங்காணாது
விண்ணுலகிற்காணாது வெளிதனிலுங்காணாது
மெய்யுகந்துநீங்கள் விரைந்துநான்தேடுகிலும்
வைகுந்தங்காண வசமோதானுங்களுக்கு
சிந்தைகலங்காமற் றிரும்பியுங்களூர்தனிலே
விந்தையுடன்போயிருந்தால் வேண்டுந்தவமுண்டாகும்
மாயனையுங்கண்டிடலாம்வைகுந்தங்கைக்கொண்டிடலா
போயிருங்காணும்பதியிற் புண்ணியரேநீர்தாமும் [ம்
உங்கள்தெய்வம்மாயனென்றீர் போனித்தழும்புபட்டு
இங்கவனிதன்னி லிறந்துபிறந்தேதிரியும்
மானிடவன்றன்னை மாயோனெனநினைந்து
தேனடருஞ்சோலையெல்லாந் தேடிவந்தீர்தூரம்
தேவனையாமாகிற் சிறந்தவைகுந்தமதிற்
போவதிலையென்ன போயிருந்தாலென்னபலன் [திருந்து
மண்ணிலுள்ளோர்தன்மமென்று வாழ்த்துவதும்பார்த்
தெண்ணரியவேந்தே இருந்துபதியாளாமல்
வந்திரேசும்மா மறந்திரேநற்றவங்கள்
தந்திரேதன்மமெல்லாஞ் சகலமுங்கைவிட்டீரே
நாடுதனையாண்டிருந்தால் நல்லதவஞ்செய்திடலாம்
வீடுபெறலாமெனவே விளம்பியேபுன்றநுரைக்க
கேளாய்நீபுள்ளனமே கிருபையுடையோர்வசனம்
நாளாய்த்தேடுநாளாய் நாடிமுத்துவத்தகதை
மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபேராசை
பெண்ணாசையற்றுப் பின்னைமேலாசைவிட்டு
தேடுந்திரவியமுஞ் சேனைமன்னர்தன்னைவிட்டு
வீடுவிட்டுக்காடுறைந்து வித்தகனைத்தானினைந்து
வந்தவர்க்குஇன்னம் வடுவுண்டோபுள்ளனமே
இந்தமட்டுமில்லை இனிமேலுமெப்படியோ
உடலிலுயிரிருந்து உணவுசெய்யுமோராசை
அடரும்பிணிதீர்க்க அவுஷதமுமோராசை



நடத்தலிருத்தல் நகைகசியுமோராசை
கிடத்தலுறக்கங் கேள்விசெய்யுமோராசை
காலில்முள்ளுதையாமல் நடப்பதுவுமோராசை
மேலிலெறும்பூருதென்று வின்னுவதுமோராசை
குளிருக்கனல்தேடிக் கொள்ளுவதுமோராசை
அளிருமலரெடுத்துத் தொண்டுபண்ணுமோராசை
மேடுபள்ளங்கண்டு விலகுவதுமோராசை
காடுசெடிவேறெனவே கருதுவதுமோராசை
வெயிலுக்கொருநிழலை விரும்புவதுமோராசை
துயிலுதற்கொற்றநிலஞ் சூதானமோராசை
தாகத்துக்குதண்ணுந் தண்ணீருமோராசை
நாகத்துக்கஞ்சி நடப்பதுவுமோராசை
அரித்தவிடஞ்சொரிந்த லறப்பசியுமோராசை
விரித்தபலவசனம் விளம்புவதுமோராசை
காடுபுலிசிங்கமதைக் கண்டஞ்சுமோராசை
இடருவருமீதென்று என்னுவதுமோராசை
எப்போதுமன்னனி லிருக்கவேபேராசை
ஒப்பாதபெண்களையும் உறவுசெய்யுமோராசை
கன்னல்சென்னலென்று கருதுவதுமோராசை
பொன்னும்வெள்ளிதேடிப் புதைப்பதுவுமோராசை
நாடாளுஞ்செங்கோல் நடத்துவதுமோராசை
மாடாடுதேடி மகிழ்வதுவுமோராசை
புலைகொலைகள்செய்யப் பொருந்துவதுமோராசை
மலைகடல்களேறி வருந்துவதுமோராசை
மெய்மறந்துபொய்யுரைக்க விரும்புவதுமோராசை
நெய்பால்தயிரென்று நினைப்பதுவுமோராசை
வெளிதாண்டியேகவனம் விளையாடுமோராசை
அழியாமற்கற்பம் அருந்துவதுமோராசை
மனைதோறும்பிச்சை வாங்குவதுமோராசை
புனலாடவென்று போவதுவுமோராசை
ஒடுக்கம்மலைக்குகையி லொடுங்குவதுமோராசை

எடுக்கும்பல கோலம் எடுப்பதுவுமோராசை
இந்தமட்டுமாசை இருக்குதுகாணிவ்வுடலில்
அந்தாசைதன்னி லதிலுமொருபேராசை
தம்பியர்க்குமெந்தனக்குந் தானேதெவிட்டாது
எம்பெருமானாசையென்று மெங்கள்தனக்குளது
அளவற்றஆசையது அன்னமேயெங்களுக்கு
களபமணிமாயவனைக் கண்டாற்றுயர்தீரும்
ஆசையதுதீரும் அச்சுதனைக்கண்டாக்கால்
ஓசைபெறதேச முகந்திருப்போங்கண்டாயே
என்றுதன்மர்சொல்ல இன்பமுற்றுஅன்னமுந்தான்
சென்றுதிருமாய்பதத்திற்றெண்டனிட்டங்கேதுசொல்லு
மாத்தரியபஞ்சவர்கள் மன்னையெல்லாமாராய்ந்தேன்[ம்
பார்த்திபர்கள்வேறொருசொல்பகரவுந்தான்தான்காணே
எத்துயரம்வந்தாலும் எதிடர்கள்வந்தாலும் [ன்
அத்துயரந்தன்னை யணுவளவுமெண்ணார்கள்
மாலேதுணையெனவே வருகிறரோர்மனதாய்
ஆலேதுயிலுநின்ற அச்சுதனேதஞ்சமென்று
வாக்குமனதுமொன்றாய் வருகிறார்பஞ்சவர்கள்
தீர்க்கமுடன்காக்கச் சித்தமிரங்குமையா
காத்தசிறைதன்னைக் கடைபோகநீர்காரும்
எத்தவரைமுற்று மீடேறஉம்மிடத்தில்
இங்கிருக்கப்பண்ணுமையா மெங்கள்பெருமானே
செங்கருடன்சொல்ல ஸ்ரீமன்நாராயணரும்
அங்கங்குளிர்ந்து ஐவர்மேலன்புவைத்து
செங்கண்நெடுமாலுந் திருவாய்மலர்ந்தருளி
தன்மருந்தம்பியருந் தடையறவேநம்மிடத்தில்
சென்மமதுகொண்டொரத் தேவுலகுக்கேகுது
இம்மைதனிற்சென்மம் இதத்திலேதான்போட்டு
நன்மைசெய்ததாலே நம்மருகிற்றானிருக்க
நால்வருங்கூடவிட்டு நல்லவைகுந்தமதில்
பால்போலும்நம்மிடத்திற் பட்சமுடனேயிருப்பார்



சடத்துடனேதன்மர் தருகாமல்நம்முடைய
இடத்திலேவைத்து இருப்பாரினிதாக
என்றுகார்மேகவண்ணர் இவ்வார்த்தைதானுரைக்க
அன்றலர்ந்தபுஷ்பமென ஆழ்வார்மகிழ்ந்திருந்தார்
சக்கரத்தைவாருமென்று தானழைத்துக்கோபாலர்
இக்கணமேசென்று எம்முடையபஞ்சவரை
காணாமல்நீகலந்து காவலாய்வாருமென்று
ஊனுதனைவிட்டெழுந்தை உபதேசமேபுரிந்து
பஞ்சவர்களவர்தனிற் பகருகின்றநால்வருந்தான்
அஞ்சுமுடல்போட்டுத் தோற்றமுடன்நம்மிடத்தில்
வருவார்கடம்பெறுவார் வைகுந்தந்தான்சேர்வார்
மருவாருந்தன்மர் வருவார்தனியாக
வாரவழிதனிலே மற்றுமொருவிக்கினங்கள்
சேரவேயானைபுலி தீண்டாமல்நீதானும்
பக்கமேவாருமென்று பண்பானவார்த்தைசொல்லி
சக்கரத்தைப்போமெனவே சாற்றவுந்தாமானை
அத்தப்படியே அச்சுதனார்சொற்கேட்டு
இத்தப்பெருவனத்தி லெய்தியதேசக்கரமும்
சக்கரந்தான்வந்த சகாயமிவரதியார்
மிக்கானகாடும் வெகுமலையுந்தான்கடந்து
வண்டிளபமேனியனை வாகாகவேநினைந்து
கண்டுதொழுவேனுமென்று கடிதுநடந்துசென்று
சுத்தளவுநூறு யோசனைதூரவழி
வித்தாரமான வடபால்விருட்சமதில்
போயிருந்தார்பஞ்சவர்கள் புகழானதன்மருடன்
மாயனேதஞ்சமென்று மகிழ்ந்தாலின்கீழிருந்தார்
இருக்கும்பொழுதே இயமர்சகாதேவன்
நெருக்கும்விதிவசத்தை நேராய்நினைந்துகொண்டு
தனக்குவருங்கருமந் தானேதெரிந்துமின்னும்
எனக்குவருமபக்கம் இப்படியாமென்றுசொல்லி
தன்மர்தனக்குத் தமையன்மார்நால்வருக்கும்

வன்மமுள்ளதெல்லாம் வகையாகஇன்னதென்று
சத்துநானாய்நந்தேன் சக்கரந்தானித்தமட்டும்
முற்றிலுமேயென்றனக்கு முடிவுசரியாச்செனவே

மகாதேவன் வாழும் வைகுந்த பதவிக்குச் சகாதேவனிந்த
சடத்தை விட்டுச் சாருதல்.

தன்னையறிந்த சகாதேவனிதுரைக்க
என்னைத்துணையிழுத்தோ மென்றும்பங்காமல்
நமக்குள்ளசாஸ்திரங்கள் நன்றாய்நடத்திவித்து
சுமக்குஞ்சுமையொன்று துன்பமற்றேமென்றுசொல்லி
நாராயணர்பாதம் நாளும்மறவாமல்
சீரானவைகுந்தஞ் சேருமென்றுநானுரைத்து
அண்ணன்மார்நால்வரையும் அருகேஇருமெனவே
எண்ணமறநிட்டைதனி லிருந்தான்சகாதேவன்
மாலேசரணமென்று மனதிற்றியானமதாய்
சாலோகசாமீப சாருபமுந்தெரிந்து
மூலத்தெழுந்தியை மூட்டிச்சுழிமுனையில்
ஞானத்திலிருந்து நாரணனைப்போற்றிசெய்து

சந்த விருத்தம்.

ஏதுமறியேனென்னையறியேன் எல்லாவுயிர்க்குங்கடையாகி
வாதுசிறியவழக்கோரம் மன்றிலிருந்தவனுமுரைத்து
தீதுபகராநாயடியேன் ஜென்மமிழந்துவருகவென்று
காதுவரவுமிருப்பேன்ஜெகந்நாதமுகுந்தாதுணைநீயே. ()

இதுவுமது.

வீமன்விஜயன்நகுலனுடன் வேதஞானத்தன்மருமாய்
நேமமுடனேவைகுந்தம் நெடியோனடியைத்துணையாக
ராமதாசரென்னவேதான் நடந்தாருமதுநகர்தேடி
ஏமதூதனுகாமல் இதமாயுதவிசெய்வாயே. (கக)



இதுவுமது.

நாடிதனன்றுமதிமறந்து நடுக்கமிகுந்தாபிராணனுயிர்
ஓடியுமுன்றுகசவாயு வுள்ளேயடங்கிமெய்யதறி
வாடிமனதுதமொழி மயக்கமிருமலினைப்புடனே [வா
கூடிவரவும்பண்ணுமற் கொண்டாட்கொள்வாய்கோபா

இதுவுமது.

காயமிழந்துநவெழியிற் கருத்துமயங்கிதில்லாமல்
ஆயபதமேதுணையாகத் தொல்லைப்பிறப்பிலினிமேலும்
மாயவிருளிலலையாமல் வந்தாள்நந்தகோபாலா
ஆயமானவைகுந்த மருள்வாயெனதுபெருமானே. (கஉ)

இதுவுமது.

ஜனனமரணமிரண்டுமினி ஜெகத்திலுமுன்றுதிரியாம
லுனதுமலர்த்தாளனுதினமுமுறுதவிசுவமுன்னையதில்
எனதுமுடிமேலிருபாத மிருக்கும்படியாயருள்புரிந்து
தனதுஅடிமைசகாதேவன் சாகித்தகோபாலா. (கங)

இதுவுமது.

அட்டாக்ஷரமுமைம்பெழுத்தும் ஐம்பத்தொன்றாய்நி
ன்றெழுத்தும், எட்டாய் இரண்டாய்வட்டமதாய்ஈரேழு
லகுமோரெழுத்தாய், நட்டாய்முட்டமுடிபோக நவோய்
நின்றநாரணரே, விட்டாய்விட்டகுறைமுடித்தேன் விந்
தமலர்த்தாள்பெற்றேனே. (கச)

இதுவுமது வேறு.

அரியெனுமெழுத்திறலே அவனியிலுதித்தேன்யா
னும், அரியெனு மெழுத்திறலே அறிந்தன்னைத் தெரி
ந்துகொண்டேன், அரியெனுமெழுத்திறலே அருளது
பெற்றேன்மூர்த்தி, அரியெனுமெழுத்திறலே அடைவது
முத்தண்டபதம். (கரு)

இதுவுமது,

அய்வர்க்குமுன்னேவந்து அடைந்துவைகுந்தஞ்சேர்ந்
மெய்நிற்குமுனதுபாதம் விரும்பியேபணிந்துபூசை [அ

சொல்லிக்குமனை துகூர்ந்து சீக்கிரமென்னையிங்கே
உய்வதுன்பொருட்டாய்நல்கும்உண்மைபோமரமா.()

இதுவுமது சந்தவிருத்தம்

மரணமெனுமுசடமிழந்துன்மலர்த்தாள் துணையாய் வந்துமெத்தன், கரணமெனும்பொறி புலனுற்கலங்கிமயங்கிதில்லாமல், இரணவொளிபோல் மாசகற்றிக்கிருபையுடையவைகுந்தம், சரணமீகவெந்தருள்வாய்சாமிநந்தகோபாலா. (௧௭)

இதுவுமது.

உந்தன்மலர்த்தாளென்றனக்குஉற்றதுணையாயிப்போது வந்தேன்வந்தேனென்றருளி வருவாயடியேன்மனமாம கந்தனுடனேகணபதியுங் கட்சியுமைபாளாயர்குலம் [ந் நந்தாமுகுந்தாநரசிங்கா நாராயணனேநமஸ்காரம்.

கதை.

நாட்டமதிலிருந்து நாரணரைநெஞ்சில்வைத்து
வாட்டமறச்சித்தை மயங்காமல்வாயுவை
மூட்டியனலெழுப்பி மூச்சடைபொன்றுக்கி
கூட்டித்திரட்டிக் கொழுந்தைமூலைகட்டி
நான்முகனைக்கண்டு நமஸ்கரித்துஅப்பாலும்
மால்பதவியந்த மணிபூரகந்தனிலே
நின்றுவணங்கி நெடியோனைப்போற்றிசெய்து
அன்றுபுரமெரித்த அரனுறையகத்தில்
வந்துசிவனை வணங்கியடிபணிந்து
முந்துமகேஸ்பரனுர் மூதாவிசுத்தியதில்
கண்டுமகேஸ்பரனைக் கருத்தில்மிகவணங்கி
தொண்டுபண்ணியேயப்பால் சோதிசதாசிவன்றன்
அக்கினியிற்சென்று அடங்கிநின்றுகைகயில்
தக்கியதோர்சிவன் சத்தயர்ந்துமூலம்விட்டு
பிருதிவியிலேவந்தொடுங்கிப் போகதேமேல்நோக்கி
அருதிவிபணவேபிருதி அப்புவிலேவந்தொடுங்கி
அப்புவினிலேயிருந்து அக்கினியில்வந்தொடுங்கி



வைப்புடைய அக்கினிதான் வாயுவிலேவந்தொடுங்கி
வாயுசதாசிவத்தில் வந்தொடுங்கிமாயோனைப்
போயப்பாற்சென்று பூரணமாயுள்ளடங்கி
தேடிவைகுந்தஞ் சேர்ந்ததுவேஆத்மாவும்
ஓடியொடுங்கியபின் உடலும்மிகக்குழைந்து
கழுத்துவிழுந்துமூன்று கனத்ததலைசாய்ந்து
அழுத்தமன்றிமண்ணி லடித்துவிழுகுமுன்னே
எடுத்துச்சமமா யிருத்தியேநால்வருந்தான்
அடுத்திருந்துசாஸ்திரங்க ளாகமமெல்லாம்முடித்து
நிலத்திலடக்கியபின் நிலவண்ணுதஞ்சமென்று
அலத்திருந்நால்வ ரச்சுதற்குத்தான்கேட்க
வந்தான்சகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
நந்தாமுகுந்தா நாரணரேதீர்காரும்
மாயாவென்தம்பி வந்தடைந்தானுன்பாதம்
ஆயாவெனக்கபயம் அச்சுதரேகாத்தருளும்
தந்தைதாய்போலாகித் தற்காத்தீரெம்பெருமாள்
என்தம்பிவந்தான்கா ணினிக்காருனக்கபயம்
கண்ணரேகாத்தருளுங் காயாம்புமேனியரே
வண்ணரேநாங்கள் வருகிறோங்கண்டீரே
நன்றுசகாதேவன் நடந்தான்நமக்குமுன்னே
என்றுதன்மர்தானு மியல்பானதம்பியரும்
வாழ்த்திமனந்தேற்றி மாயோனைத்தான்போற்றி
ஏத்தித்தொழுது இருகையாற்றுன்துதித்து
அஞ்செழுத்துவஞ்சமெல்லாம் அஞ்சுபஞ்சபூதமுமாய்
அஞ்சுமுகமாய் அகண்டமெல்லாந்தானை
அஞ்சுபஞ்சலோகமுமாய் அஞ்சுபஞ்சவர்ணமுமாய்
அஞ்சுதலமாகி ஐம்பொன்மகாமேருவதாய்
அஞ்சுபுலனுமெங்கும் அஞ்சுபொறியாகி
அஞ்சுமலர்வேள்தனக்கு அஞ்சுபூதாணமுமாய்
எங்குந்திறந்தரமாய் இப்படியாய்த்தானிருக்க
பொங்குமெங்குமிந்தப் பூவுலகிற்பேசாகி

68286

ஐய்வரென்றுபேரா யன்றனைம்பின்றனவும்
தெய்வமென்னு நாங்கள் சேர்ந்திருந்தோமிப்போது
ஐய்வர் தனிலேயொருவன் அய்துவந்தான்கண்டீரோ
மெய்வருந்திநால்வர் விட்டகுறைநீர
எத்தனை நாளோ இப்போதுஇக்கணமோ
அத்தனேஉன்பெருமை யாரறியப்போறார்கள்
சித்தமுடனெங்களையுஞ் சீக்கிரத்திற்சேருமையா
வித்தகரேவாரோம் விண்ணப்பமென்றுதன்மர்

விருத்தம்.

கேசவாமுகுந்தாவாரோம் கிருஷ்ணமாதவனேவாரோம்
ராசகோபாலாவாரோம் நரசிங்கரூபாவாரோம் [ம்
தாசர்தான் நால்வர்வாரோம் தடையிடையில்லாவண்ண
நேசமாயுனதுபாதம் தேடியவாதாருங்காரும். (கக)

இதுவுமது.

நாரணர்பாதந்தேடி நால்வரும்நம்பிவாரோம்
வாரணம்யாளிசிங்கம் வல்லியங்காடியன்றி
கோரணகோஷ்டியன்றிக் கோவிந்தாஉந்தன்காவல்
காரணமாகவந்து காத்தருள்செய்குவாயே. (௫)

கதை.

தோத்திரங்கள்சொல்லித் தொழுதுநமஸ்கரித்து
சாத்திரஞ்சொல்வேதசித்தா தேவனை நிறுத்தி
வழிதேடிசெவ்வேமாயன்தனைத்தேடி
தெளிவாகியேநால்வர் திசைநோக்கியேநடந்தார்
நடந்தார்வெகுதூரம் நல்லதர்மர்தம்பியரும்
கடந்தார்மலையெல்லாங் காடும்வனத்திரளும்
ஊடேநடந்து உகந்துவரும்வழியில்
கோடேறிவீமன் கும்பிட்டுவாய்புதைத்து
அண்ணாவியிப்போ அடியேன்சொல்விண்ணப்பந்தான்
கண்ணான தம்பி கருத்துடையசகாதேவன்
விட்டுப்பிரிந்ததென்ன மேதினியில்நம்மையின்று
கட்டுடனேஎன்றனுக்கு காவலனேசொல்லுமென்று



வீமனுந்தான்கேட்க விளம்புகின்றார்தன்மருந்தான்
பூமனைமுன்னாட் பொருதுகின்றபாரதத்தில்
பேரிட்டுநாள்முகூர்த்தம் பேசினார்சாஸ்திரத்தில்
சீரிட்டுப்போர்முடியத் திருந்துமுடன்ராவானை
களப்பலியென்றேயிவனைக் கனைக்கிட்டாராகையினால்
அளப்பொன்றுமில்லை யதுக்காயிவன்சடத்தை
பழிதொடருமென்று பார்மீதிலேசடத்தை
வழிதடையிற்போட்டார் வகைவேறுமில்லையென்று
அந்தமொழிகேட்டவுடனேயென்றுவீமனுந்தான்
சிந்தையதுதெளிந்து சேகரமாய்நால்வோரும்
வைகுந்தம்நோக்கி வனத்தூடேசெல்லுகையில்
மெய்கண்டதீர்த்தமென்று விளம்புவாரோர்வசனம்
சந்திரகாந்தமென்னுஞ் சாந்தமாயோர்மலைதான்
இந்திரன்வந்தென்றுநாளும் இருந்துசிவபூசைசெய்யும்
அந்தமலைமீதில் அந்தமுள்ளதீர்த்தமதை
விந்தமலரெங்கும் விகசிதமாய்ப்பூத்துநிற்கும்
கண்டார்கள்கங்கையது காசிநதிபோலே
கொண்டார்கள்தீர்த்தமள்ளிக் கோபாலர்தன்னருளால்
அப்பெரியபொய்கைதனி லரம்பையருந்தேவர்களும்
செப்பமுடன்வந்து தீர்த்தங்களாடுகையில்
கன்னியருந்தேவர்களுங் கண்டார்கள்நால்வரையும்
மன்னியசீர்கன்னியர்கள் வந்துகரையேறிநின்று
பார்த்தார்கள்நால்வரையும் பாதாதிகேசமுதல்
வாய்த்தார்களென்று மனமகிழ்ந்துகன்னியர்கள்

தேவகன்னியர்கள் நுவகாரக்காறுதல்.

மாதுமையனும் மன்மதனும்போலாகி
மேதுமிருந்து விளையாடும்பாவனைபோல்
மெத்தமயலாகி மெல்லிநல்லாள்நால்வரிடம்
உத்தவர்போல்நேரா யுகந்துதான்வந்திருந்து

மன்னவரே நீங்கள் வந்தீரே இத்தூரம்
தென்னவரே உங்கள் தேசமெங்கே நீங்களெங்கே
எந்தநாடெத் தேசம் எங்குவந்தீர் சொல்லுமென்று
வித்தமுறு கன்னியர்கள் விரும்பியென்று கேட்டார்கள்
அப்போது தன்மர் அன்புடனே தானிருந்து
இப்போது சொல்லுகிறோம் மெத்தநிறைபோ கேளுமென்றார்
சீரார் குருநாடு தேசமெங்கள் தேசமது
தாராரும் பாண்டுமன்னன் தன்புதல்வர் நாங்களைந்தாள்
ஏராளமாய்க் கலிய னிவ்வுலகில் வந்ததினால்
நேராக நாங்கள் நிலைமைவிட்டுத் தானகன்றோம்
மாதுதிருலட்சுமிதன் வைகுந்தஞ் சேரவந்தோம்
சாதுவாயுங்களையுந் தான்கண்டோ மிப்போது
ஏதுவாய்த் தன்ம ரிவ்வசனந் தானுரைக்க
ஓதுவார் கன்னியர்க ளுற்றதன்மர் தன்னிடத்தில்
வாரீர் முன்னாளில் மாதாக்கள் சொற்கேட்டு
பாரீர் புருஷா மிருகமதின் பால்வாங்க
வீமன்றனையனுப்ப மெய்புடைய வீமனுந்தான்
நேயமுடன் கானகத்தில் நிமிஷத்திற் சென்றுபுக்கி
தந்திரத்தினாலே சபதமாய்ப் பால்வாங்கி
மந்திரத்தினாலே வருவீமன் றன்வரவும்
தொடர்ந்துவரும் மிருகமது சொன்னபடி தப்பாமல்
அடர்ந்துவருமிருகம் ஆவிபிடிக்கையிலே
சதிரிலொரு காலுந் தனிவனத்திலோர் காலும்
எதிரில்வந்து பற்றி யிழுக்கவே வீமனுந்தான்
தக்கமிட்டுக்கொண்டு சமராடி நின்றிருவர்
மிக்கபுகழ்த் தன்மரிடம் விளம்புவோம் ஞாயமென்று
சென்று மிருகமது தீர்க்கமாய் வீமனுடன்
அன்று தன்மர்முன்போய் ஆகமுடன் ஞாயமதை
கேளுமென்றவ் மிருகம் கிருபையுடன் றானுரைக்க
வாளுடைய வீமா வகையாகச் சொல்லுமென்ன
இருவருட ஞாயம் இயல்பாகத் தான்கேட்டு



ஒருவருக்குஞ் சாந்த முன்மை சற்றுமில்லாமல்
தம்பியென்று சற்றுந் தயவுவைத்துப் பாராமல்
அம்பிபுடமேனியிலே ஆளிலே பேர்பாதி
நிறையாக உன்னுடலை நேராகத் தான்பிளந்து
குறையாமலே யுமக்குக் கொடுத்துவிடுவீமா நீ
தச்சன்றனை யழைத்துச் சதுரான நூல்போட்டு
மெச்சவே தான்பிளக்க விரைந்து தச்சன் வந்தமையால்
மிருகமது கண்டு வெகுவாய் மனமகிழ்ந்து
தருகாமல் நான்போறேன் தன்மரே உத்தனுக்காய்
பொறுத்தே தனிநுஞாயம் பூவுலகிற் கண்டதில்லை
ஒருத்தேனை மிருகம் உயர்கானகந் தனிலே [று
போனதுவுங் கண்டிருப்போம் புண்ணியவான் தன்மரென்
அனைதிறலுங்களைப்போல் அவனிதனிலில்லையென்று
பின்னையுமோ வீமன் பிரபலமுங் கேட்டிருப்போம்
முன்னேயே பாரதப்போர் மூண்டசமர்க் களத்தில்
வல்லிடும்பன் றன்னுடனே வலியபகாசுரனையும்
சொல்லரிய கீசகனுங் கிரியோர் நூற்றுவரும்
வல்லவிராடன் முன்னே வந்தமல்லர் தங்களையும்
நல்லசராசந்தனையும் நாட்டிலுள்ள வேந்தரையும்
வீரமுடன் காலனுக்கு விருந்துதனையளித்த
பாரமுள்ள வீமனுட பராக்கிரமங் கேட்டிருப்போம்
ஈதல்லாற் பார்த்தனுந்தான் ஈஸ்பரனைத் தானோக்கி
பேதமில்லாப் பாசுபதம் பெற்றதுவுமில்லாமல்
அசுரர்தனை வென்றதுவும் அமரர்சிறைமீட்டதுவும்
பசியுடைய அக்கினிக்குப் பரித்தமுதமீந்ததுவும்
பாலனபிமனையும் பாரமற்றேற்றரசன்
சூலமதாற் கொன்ற துயரமதை வைத்திருந்து
தேத்தரசன்றன்னுடனுஞ் சேரும்பராதிகளை
மாத்தரசர் சேனையையும் மன்னரையுங் கொன்றுவென்ற
அருச்சுனனுமென்று அப்போதே கேட்டிருப்போம்
பரிக்குதகுலனென்று பாங்குடனே கேட்டிருப்போம்

மற்று நிகழ்காலம் வருங்காலஞ்செல்காலம்
முற்றுஞ்சகாதேவன் மொழிவினைக்கேட்டிருப்போம்
அப்படியே நாங்க ளவருடசெய்தியெல்லாம்
இப்படியாய்க்கேட்டிருப்போமின்னமுங்கண்டறிவோம்
அவரவரைக்கான ஆச்சரியமெங்களுக்கு
இவரிவர்தானென்று எங்களுக்குச்சொல்லுமென்று
மங்கையர்கள் தான்கேட்க மகிழ்ந்துதன்மாறனுந்தான்
சங்கையுள்ளபெண்கள் தன்மனென்போர்கண்டீரே
மெல்லியரே நல்ல வீமன்விஜயனவன்
சொல்லும்நகுலனிவன் தோகையரே இன்னமுந்தான்
வேதசகாதேவனுடன் மூன்றுள் அரோபனையும் [ர்
போதமுடன்வைகுந்தம் போய்ப்புகுந்தாரென்றுரைத்தா
திருந்துமதிக்கன்னியருந் தேவேந்திரன்மகளும்
இருந்துதன்மர்சொல்லு மியல்புதனைக்கேட்டிருந்து
வாருமையாஎங்களுடன் வானவர்கோன்றன்னிடத்தில்
சேருமையாஉங்களுக்குத் தேவலோகந்தானளித்து
மன்னவரே நாங்கள் மருவிமனையாளாய்
சொன்னபடிகேட்டுத் தொண்டுசெய்வோம்நாங்களுந்தா
எங்கள்பொருட்டா யினிக்கேளும்மன்னவரே [ன்
தங்களிலேவேள்விசெய்து தவமும்பண்ணிநிற்போரும்
அக்கினியி லூசியின்மே லுறிவிரலைத்தானூன்றிச்
சிக்கெனவே தவசு செய்துநின்றிடப்போரும்
கால்மேலுந்தலைகீழாய்க் கடுந்தவசு நிற்போரும்
பால்போலுமெக்கியங்கள் பண்ணிமுடிப்போரும்
தெய்வப்பெண்நாங்களென்றும் தெய்வப்பதவியென்றும்
மெய்வருடியாகம் விரும்பிவளர்ப்போரும்
வேண்டியபல்லோமிக்கவங்கள் வேறுமென்றுசெய்தார்க
ளாண்டிதினையாமற் சொற்பனத்திற்கேளாமல் [ன்
வலியவேநாங்களுர் வரவழைத்தால்நீங்களுமே
பொலிவாகுமென்று பூரணமாபெண்களுடன்
வந்துடனுந்தன்னை வணங்கியெழுதினமும்



மூத்துதெய்வலோக முழுதுந்தனதாக
இருக்கலாமென்று எந்திழைமார் தானுரைக்க
வருக்கமுடனின்னம் வகையுமக்குச்சொல்லுகிறோம்
தீர்க்கமுடன்வைகுந்தஞ் சேர்வேவேணுமென்றால்
ஆர்க்குமுடியாது அருந்தவத்தோர்க்கெட்டாது
துறந்தார்க்குமின்னந் தவ்வாதபேர்களுக்கும்
இறந்தார்க்குமேதினியி லிவ்வாழ்வோனேதுணைகாண்
கேளீரோபூவுலகிற் கிருபையுடன்மன்னவரே
ஆளீரோதேவுலகம் அன்பாகஎங்களுடன்
ஈசனுமேபெண்க ளிருவர்தனையருகில்
வாசமுடன்வைத்து மருவியிருக்கலையோ
பாவிற்கலைமகளைப் பன்னுமறைவேதாவும்
நாவிற்றரித்துமவர் நட்பாயிருக்கலையோ
சீதைதனைநெஞ்சிற் றிருமாலும்வைத்திருந்து
கோதையுடன்கூடிக் குலாவியிருக்கலையோ
தேவேந்திரனுஞ் சிறப்பாயிந்திராணியுடன்
கோவேந்தர்கூடிக் குலாவியிருக்கலையோ
மன்மதனும்ரதியை மருவியிருக்கலையோ
இன்பமுடன்தவசி லிருந்தபெரியோர்கள்
கண்டாசைகொண்டு கலந்தாசைதீர்க்கலையோ
விண்டாசையெல்லாம் வெறுத்தமுனிவோரும்
நன்றாய்த்தனையறிந்த நாதாக்களெல்லோரும்
ஒன்றாய்க்கடவுளரை யூடுருவக்கண்டோரும்
பூதமோரைந்தும் புலன்பொறிகள்தானடக்கி
நாதமொடுவிந்துசுழி நடுவினையுந்தான்றிறந்து
நாடிதனையறிந்து நாட்டமுடன்வாட்டமதிற்
தேடியமுதந் தெவிட்டாமலுண்டிருக்கும்
யோகிகளுமிப்போ துலகந்தனிலிறங்கி
போகமெனும்விந்துதனை புறம்போக்கிவீற்றிருப்பார்
அழகவெறுத்து அவனியின்மேலாசைவிட்டு
துறவாகிவந்ததென்ன சொல்லுமென்றார்கன்னியர்கள்

இன்பமுடன்கன்னியர்க ளிவ்வசனந்தான்கூற
அன்புடனே தன்ம ரவர்களுடனே துசொல்வார்
ஈதெல்லாம்நீங்க ளெடுத்துரைத்தீர்ப்போது
ஆதலால்நாங்க ளற்பசகளாறு வைதம்பி
ஈடழிந்துநாங்க ளெடுத்தவங்குலந்து
கூடழிந்துபொல்லாக் கொடுநரகில்வீழ்வதற்கு
சொன்னீரேபெண்காள் சோதனையோ எந்தவிதம்
முன்னீர்பொழியும் முகில்வண்ணர் தன்னருளால்
இப்படியுஞ்சொல்வாரோ எந்திழையேயெங்களுக்கு
கற்பனையுங் கேட்கக் கருமமோ இப்போது
சீரானவைகுந்தஞ் சேரவென்றுபோகையிலே
நேராகஅன் பூதிலுமெனச்சொல்லுவரோ
ஒன்றுமுறையாம லொலியமேநீங்களுந்தான்
நின்றுவிடுமென்று நெடுமாலைநினைந்து
வாகுடையதன்மருமாய் வாய்த்தகம்பீரவர்களும்
ஏகுவோமென்று இமைப்பனந்துவிட
நடந்தார்வனவாசம் நால்வருந்தான்கூடி
கடந்தார்வெகுதூரம் காடுமலைதான்தாண்டி
வானோர்புகழ்புஷ்ப வானிரமாயலைக்குப்
போனார்காண்நல்ல புதுமையெல்லாம்தானறிந்து
சேர்ந்தபலநதிகள் தீர்த்தமெல்லாந்தானாடி
வாய்ந்ததிருக்குராக்ஷ மரங்களுடன்சந்தனமும்
கற்பகக்காவுகளுங் கண்டுமிகத்தெண்டனிட்டு
நட்புடையசோலையென்று நடந்தார்காணம்மானை
அந்தமலைக்கப்பால் ஆறைந்துபோசனைதான்
வந்தவர்கள்முன்னே வழியில்வெகுவானரங்கள்
கண்டுமனமகிழ்ந்து காவலரேநீர்களும்
புண்டரீகமாயனுட பூமிதனில்வந்தோம்காண்
அந்நாளிலுங்களையும் அவனிதனில்யாங்களேனும்
எந்நாடெத்தேசம் எங்கிருந்துஎங்குவந்தாய்
மன்னூதீர்சொல்லுமென்று வானரங்கள்தான்கேட்க



பொன்னுருத்தன்மர் புரையுடையாரேதுசொல்வார்
பன்னூர்குருகுலத்திற் பாண்டுமைந்தர்நாங்களுந்தான்
மன்றனைவிட்டு வந்தோங்கியதனுல்
அத்திபுரத்திருந்து அச்சுதனைத்தான்தேடி
பத்தியுடன்கானகத்திற் பார்த்துவந்தோம்கண்டீரே
சீதமதிவானரங்கள் செய்தியெல்லாந்தான்கேட்டு
ஆதலாலெங்க ளனுமார்க்கிளையவன்றான்
வீமனல்லோவென்று விஜயனுடதேர்தனக்கு
கோமானேவெற்றிக் கொடியல்லோ நாங்களுந்தான்
உம்மானையெங்கட் குறியோர்காண் நீங்களுந்தான்
எம்மானையெங்கே இருந்தீரேயாமாகில்
நாடுபகைவந்ததென்றால் நாங்களேவெற்றிகொண்டு
ஈடுபண்ணியுங்களுக்கு ஏவல்செய்துகாணிருப்போம்
இங்கிருங்களென்று எடுத்துரைக்கவானரங்கள்
தங்குபுகழ்மன்னன் தன்மருந்தானேதுசொல்வார்
செங்கதிரோன்றன்குலத்தில் ஜெனித்துஅயோத்திவளர்
துங்கமுடிராமனுக்குத் தொண்டுசெய்யும்நீங்களல்லோ
கடல்தனையேயல்லணையாய்க் கட்டினவர்நீங்களல்லோ
திடமுண்டயராவணனைச் செயித்தவரும்நீங்களல்லோ
ஆணதிறலங்கை அஞ்சாதேயென்றுசொல்லி
மானமுடன்காக்க வானவர்தாம்நீரலவோ
ஆகமகிழ்ந்துநீங்க ளவனிதனிலெங்களையும்
ஊகத்தினிமேற்காக்க உங்கள்மேற்பாரமென்று
புகழ்ந்துதான்தன்மர் பூரித்துவார்த்தைசொல்ல
மகிழ்ந்துதான்வானரங்கள் வைகுந்தமாளிகைக்கு
போதமுடன்கேதாரம் போரவழியிதெனவே
நீதமுடன்காட்ட நெடுந்தூரம்கூடவந்து
வந்துதுணையாக வாகுடனேமுன்னடந்து
சந்தமயில்வானரங்கள் தாவிவழிகாட்ட
இமைந்தமனமகிழ்ந்து விரைந்துவழிகூடி
நற்றவன்தான்வேண்டி நடந்தார்வனத்தூடே

இயக்கர்பதியு மிராட்சதர்கள்தன்பதியும்
மயக்கும்புலையர் வல்வேடர்தன்பதியும்
கொலைஞர்பளிங்கர் குறவருடதன்பதியும்
மலையிற்பசாதி வாழுகின்றோர்தன்பதியும்
கடந்துவெகுதூரங் காவலர்கள்தான்மிகவும்
நடந்துமலைகடந்து நாற்பதிங்காதவழி
மிதானகானகத்தில் வேகமுடன்தான்நடந்தார்
ஈதாகமூவர்க் கிளையநகுலனுக்கு

பரிநகுலன் வைகுந்தப் பதவியடைந்தது.

மெய்கலங்கியுள்ளசந்து விதிப்படியுந்தான்மூடி
கைபசந்துகாலசந்து கண்ணுமிகச்சுழன்று
வாக்குத்தடுமாறி மதிமயங்கிவாய்குளறி
நாக்கறவேநின்று நன்னாவெம்வேளையிலே
வீமன்விஜயன் மிக்கான தன்மருமாய்
பூமன்நகுலனையும் போயணைத்தார்மார்புடனே
கார்மறலிதூதுவர்கள் கடுகவாவென்றுசொல்லி
போர்நகுலன்றன்னுடனேபோராடிவார்த்தைசொன்னார்
தூதுவர்கள்வந்த துடுக்குமிவனறிந்து
வேதுவாய்நெஞ்சில் எட்டெழுத்தைத்தானினைந்து
மாதுதிருமால்பதத்தை மனதிற்றியானமதாய்
ஓதுவான்போர்நகுலன் ஓதுங்கவேகாலனுந்தான்

விருத்தம்.

ஆண்டவரேஉந்தன்பாதம் அடைக்கலங்காருமென்றே
ன், மாண்டதோரிரண்டுபேரும் வைகுந்தம்வந்துசேர்ந்
தார்,பாண்டவாவினவர்தன்னிற் பாய்பரிநகுலன்வாறேன்
நீண்டவாஎன்முன்வந்து நீதுணைசெய்குவாயே. (ாக)

தூயதோர்தருமன்வீமன் துலங்கியவிஜயன்றானும்
நேயமாய்ப்பின்னேவாறார் நீண்டவைகுந்தத்தேடி.
மாயவாகருணைகூர்ந்து வந்துநீதுணையதாகக்
காயமாமுடலிற்சீவன் கழலுமுன்துணைசெய்வாயே.



பாவியேன்பூமிதன்னிற் படுத்துடல்கிடத்திப்போட்டு
ஆவியேஉந்தன்பாதம் அடையவென்றோடிவாறேன்
தாவியேமறலிவந்து தடையிடைபண்ணுவண்ணம்
கூவியேவாவாவென் அகோவிந்தா அருள்செய்வாயே. ()

வேறு.

இக்குமறியேன் இசையறியேன் தேவர்செயலை நான
றியேன்,மெய்க்குமொருசொற் பொருளறியேன் வினையே
ன்வேண்டி வாவெனவே,தக்கும்பொருள்நீ தானுகிச் சக
லதுணையும் நீயெனக்கு,நிற்கும்நிலையாய் வைகுந்தம் நீ
யேதருக நினைந்தருள்வாய். (ாச)

பெரியதிருமால்வைகுந்தம் பெறவேஐவர் பிரியமுட
ன், அரியதுணைகடனையிழந்து அரியேதுணையாய்,மன
திலெண்ணி, துரியவெளியுந்தான்கடந்து தோற்றமொ
டுங்கும்பராபரத்துள், விரியுங்கமல பதஞ்சேரவே உனு
மருள்செய்கோபாலா. (ாரு)

வேறு.

அண்டரும்முனிவர்கேட்க அகிலமீரேழுஞ்சாட்சி
விண்டதோருடலிற்சீவன் மெய்மறந்துன்னைத்தேடி
உண்டெனநம்பிவாறேன் உற்றதோர்துணைவேறில்லை
மண்டலமாதுபங்கா மாயனேதுணைசெய்வாயே. (ாசு)

கொச்சகம்.

ஆதியாய்நின்றதொரு ஆதிமகாமூலஞ்
சோதியாய்நின்றதொரு சோலைமலையழகா
நாதியநாதியுமாய் நடுவாய்அடிமுடியாய்
ஓதியநாலுவேதமுமாய் உள்ளாய்ப்பரம்பரனே. (ாஎ)

இதுவுமது.

நிலமாயெங்கும் நிரந்தரமாய்வாறுகி
மூலமாயோங்கிநின்று மூவுலகுமுருவி
சீலமாய்நின்றதொரு சீர்பாதமென்றனக்கு
காலமிதுவேலைதனிற் கைதருவாய்கோபாலா. (ாஅ

௧௯௩

கூத்துவனார்வந்துயிரைக் கோட்டாலேபண்ணுமல்
ஆத்துமத்தைக்காரும் அடிப்பமுனைக்கடயம்
என்றுநகுல னெட்டெழுத்தையுச்சரித்தான்
அன்றுமைமநாத ரகன்றனைக்காணம்மானை
விண்ணோர்நகுலனையும் விமானந்திலேற்றி
பண்ணோர்வைகுந்தப் பதியில்வைத்தார்மெய்மகிழ்ந்து
நகுலனுயிர்போய் நாரணர்பாதந்தான்சேர
பதுமானமீதெனவே பத்திமுத்திதன்னுடனே
தன்மருடதம்பியரும் தயங்காமலுளமகிழ்ந்து [னை
சென்மமெல்லாம்விட்டொழிந்துசீக்கிரமபோய்நாரணை
காண்பதற்குத்தானினைந்துகருமமெல்லாந்தான்முடித்து
வீண்சடத்தையேசுமந்து விடக்கெனவேதான்களித்து
அடக்கிஞர்பூமிதனி லன்பாய்நகுலனையும்
துடக்கெனவேவிட்டொழிந்து துதித்தார்பெருமானை
அரிநமோவென்று அச்சுதனைத்தானினைந்து
கரியமால்நாரணரே காத்தருளவேணுமென்று
தீர்த்தமதுதானுடிச் செய்கருமந்தான்முடித்து
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துமூவர்களும்
போற்றிவணங்கி பூரணமாயுள்மகிழ்ந்து
தோத்திரம்பண்ணித் தொழுதுதிருமால்தனையும்
மூன்றுகமையிறக்கும் முகுந்தாவெனநோக்கி
தோன்றுமொருகானகத்திற் றுன்பமறவே நடந்தார்
ஆனதொருவீமனுந்தான் அண்ணரேயிப்போது
மானமுடன்நகுலன் மடிந்ததுதான்கானகத்தில்
ஏதுபயனென்று என்கோவேசொல்லுமென்றான்
சாதுவுடன்தன்மர் தம்பியரைத்தானோக்கி
இவ்வுலகிற்கற்றகல்வி யாவருக்குமிப்பிறிலன்காண்
அவ்வுலகிலேநகுலன் அறிந்தவித்தைபுத்தியெல்லாம்
பிறருக்குறையாமற் பேசாதிருக்கையினல் [தார்
நிறமுடையகானகத்திற் சிதைந்தனர்காணென்றுரைத்



அந்தமொழிகேட்டு ஆமென்றுவீமனுந்தான்
சந்தோஷமாகத் தன்மருடனே நடந்தார்
விசையனும்வீமனுடன் மெய்யானதன்மருமாய்
அசையாவழிகூடி ஐனூறுகாதவழி
இசையநடந்தார்கள் எய்ப்புதிளைப்பில்லாமல்
திசைகடந்துநோக்கிச் சிறப்பாய்நடக்கையிலே
மற்றுமந்தக்கானகத்தில் வடபால்நிழல்தானும்
முற்றுமிகவளர்ந்து முப்பதுயோசனைதூரம்
படர்ந்துநின்றஆல்நிழலைப் பரிவாகக்கண்டார்கள்
அடர்த்தநிழல்தன்னி லவர்கள்இளைப்பாறி
இருந்துதகையாறி யென்னவெல்லாந்தான்தீர்த்து
வருந்துமனவாசை மாசறவேதீர்த்துதென்று
அந்தமரம்பார்க்கி லச்சுதனுறைப்பள்ளிகொள்ளும்
இந்தமராமென் றிறைஞ்சியேதான்பணிந்து
அங்கிருந்தமாமுனியை அடிபணிந்துதெண்டனிட்டு
பொங்கியபூரணமாய்ப் பூரித்தகமகிழ்ந்து
அந்தவனங்கடந்து அப்பாலுநன்குக
இந்தநல்லூமை ரெண்பதுயோசனைதூரம்
போனார்களப்பாலும் பிராறவழிதனிலே
தேனிருந்தசோலையிலே சிறந்தகருமேகமென்ன
வாரணம்போலநேரே வந்துமுன்னேதோன்றிநின்று
காரணமாய்மூவிடமுங் கனத்தமதம்பொழிந்து
பாரைப்பிளக்கும் பருமலையைத்தான்பேர்க்கும்
காரிலிடிபோறெனவே கதித்துவாய்விட்டலறும்
சினத்துமதமீறித் திடுக்கிடவேதான்வெகுண்டு
வனத்தையழித்தெதிரே வந்ததுவேவாரணமும்

வேழமாய்வந்த விப்பிரந்த விஜயன் விமோசனமானது.

வந்தமதயானையுந்தான் மன்னவர்கள்தன்மேலே
முந்தச்சினந்து முடுகிவந்துமோதிடவே

தெண்டாயுதவீமன் சினந்தமதயானை தன்னை
அண்டாதடித்து அஸ்தமதால்மஸ்தகத்தில்
குத்தியிருகையாற் கொம்பிரண்டையும்பிடித்து
வெத்திமதவீமன் மெலிவுசெய்யமாட்டாமல்
நிற்கிறான்கண்டீர் தொடியோன்மகிமையிது
எய்க்கிறான் தம்பி யித்தமட்டும்யானைதன்னை
விட்டுநின்றபோதே விஜயனைகாரணந்தான்
கிட்டுகின்றநாளாச்சு கெம்பீரந்தான்போச்சு
சீராகதம்முடைய தேசம்விட்டுவந்தபின்பு
பாராய்வலுவீமன் பராக்கிரமந்தான்போச்சு
பாரதப்போரதனிற் பகதத்தனேறிவந்த
வீரமுள்ளயானைதன்னை வீமனிவன்கையாலே
சுக்கிரதீபமதைச் சுழற்றியேதானறிய
சக்கிரவர்த்திமன்னர் தன்னிலும்நூறாயிரம்பேர்
அன்றெறியும்போதின்னம் அந்தரத்தில்நின்றிலையோ
இன்றெறியும்போதுபல மெங்கேயொழிந்ததென்று
சொல்லுகின்றபோதுமத யானைத்துதிக்கைதனை.
வெல்லுமதவீமன் விரைந்துசென்றுதான்பிடிக்க
கடியமதயானைக் கழுத்திலேதானேறி
மடிவுதொரட்டிகொண்டு மத்தகத்திற்கொத்துகைபோல்
கையில்நகத்தன்னாற் கதறவேதானமுத்தி
நையவொருசாரி நடத்திவைத்தார்வீமனுந்தான்
விந்தையுள்ளதன்மர் மிகமகிழ்ந்துகொண்டாடி
கந்தமதாங்கானங் கடக்குமளவாக
ஒப்பில்லாயானைதனை யுகந்துநடத்துமென
அப்பெரியவேழம் யானையுருத்தான்மாறி
செப்பரியவேதியன்போற் சிறந்துநின்றானம்மானை
இந்தமகிமையிது எதென்றுதன்மருந்தான்
வந்தவகையேது மறையோனேசொல்லுமென்றார்
அந்தமறையோனுரைப்பான் அவன்வந்தசெய்திதன்
சிந்தைமகிழ்ந்து சிறந்ததன்மரேகேளும் [னே



அங்குஷ்டமாயிருக்கும் அகஸ்தியமாமுனிவர்
தங்குசிவபூசை தானேமுடிப்பதற்கு
நந்தவனந்தன்னில் நறுமலர்கள்கொய்துவர [யில்
விந்தைமலர்வாவிதன்னில் விரைந்துநான்செல்லுகை
ஓதிமங்கள்ரெண்டும் ஊடுதல்செய்தேயிருக்கும்
சேதிதனைக்கண்டு சிந்தைமயலாகி
காதலுடன்மயங்கிக் கண்குளிரப்பார்த்துநின்றேன்
போதமுனிதன்னுடைய பூசைமுடியாமல்
சாதமிகுவேழமெனச் சாபமிட்டாரம்மானை
அய்யாயிச்சாபம் அகலவெப்போவென்றுரைத்தேன்
மெய்யாகவுன்முதுகில் வீமன்வந்தேறினக்கால்
மாறுஞ்சாபமது மாறுமென்றார்மாமுனியும்
வீரானசாபமது வீமரேஉம்மாலே
பேரானதெந்தனுக்குப் பெருமையுமேயுந்தனக்கு
போறேன்நானென்று புகழ்மறையோன்போனதற்பின்
தேடிவழிகூடிச் சென்றார்கள்பஞ்சவர்கள்
வேறேதினைவு விசாரமெல்லாம்விட்டொழிந்து
மாலேசரணமையா மாயோனேகாருமென்று
ஆலேதுயிலுமின்ற அச்சுதரேதஞ்சமென்று
கடுகிவனங்கடந்து காவலர்கள்மூவருமாய்
முடுகியேற்றங்கில்வனம் முத்துறுயோசனையும்
வாகாகவேகடந்து மகேந்திரமாமலையில்
ஏகாந்தமாகவந்து இருந்தாசனை நீராடி
வந்தசுகமென்று மலைமீதிற்றானேறி
புத்திமிகமகிழ்ந்து புயனென்னுமாமுனியை
பாதம்பணிந்து பரிவுடனேதானிருந்தான்
ஏதுநீரிங்குவந்தீ ரியம்புமென்றார்மாமுனியும்
தாங்கள்வந்தவாறு தன்மர்முனிக்குரைக்க
ஓங்குமுனிகேட்டு உகந்தேதுவார்த்தைசொல்வார்
பெருகவுந்தனக்குப் பெண்களையாயிரந்தான்
மாறுமல்நீங்கள் மணமுடித்துஇங்கிருக்க

காடுதனைக்களைந்து காவலரே இப்போது
நாடுதனையாண்டு நம்மிடத்தில் நிற்குவிரென்று
பெரியவரைச்சேர்ந்தால் பிறைபோலே நாடோறும்
வரிசையாய்த்தான்வாழ்ந்து வாழ்வுமிகவுண்டாகும்
சிறுமுனியைச்சேர்ந்தால் சிறுமைபெருமையதாய்
நார்முனிவன்தான்சொல்லத் தன்மருந்தாரோர்வசனம்
பார்முனிவேயெங்களுக்குப் பாராசைபொன்னுமில்லை
கார்முனிவேயெங்களை நீர் கூட்டிநடவேநினைந்து
எங்களுக்கு வைகுந்த மிருப்பிடமேயல்லாது
தங்குவதுமில்லை தரிப்பதுமிங்கில்லைகாண்
கஞ்சமலர்ப்பதத்தைக் காணவிடைதாருமென்று
தஞ்சமெனவேமுனியைத் தாளில்மிகப்பணிந்து
பணிந்துவிடைவாங்கிப் பஞ்சவரில்மூவருந்தான்
துணிந்துமுகமன்னர் சூதாறவேதானடந்தார்
அப்பாலுங்காகத்தி லைப்பதியோசனைதூரம்
வெப்பாகவேநடந்து மெல்லடிகள்கொப்பளமாய்
வருத்தமுடன்தானடந்து வடவாலின்கீழிருந்தார்
கருத்துடனே அங்கிரண்டு கன்னியர்களுமின்மேல்
பாதமதையூன்றிப் பாரில்விழநின்சடைகல்
நீருடன்தவசு நின்றார்கள்கன்னியர்கள்
கன்னியரைக்கண்டு காவலர்கள்தான்பணிந்து
மன்னவரே நீர்தாம் வந்ததுதானேதெனவே
கன்னியர்கள்தான்கேட்கக் களித்துப்புகழ்தன்மரவர்
பன்னியசீர்மாதே பத்தினியேஉத்தமியே
சீரார்குருநாட்டிற் சேர்ந்ததொரு அத்திபுரம்
பாராள்புவிராஜன் பாண்டுமன்னர்தன்புதல்வர்
மருவலையதன்மரென்பார் வாய்த்ததம்பிமார்களிவர்
திருவனையே நாங்கள் செய்தவத்தாலிங்கிருந்தீர்
கண்டபோதெங்கள் கன்மமெல்லாந்தான்தீர்ந்தோம்
தொண்டர்தவம்பெறவே சொல்லுமென்றார்தன்மருமே
தன்மர்மொழியத் தபவுவத்துகன்னிகையும்



இம்மைதனில்வேணுமென்றநிதல்லாருமக்களிப்பேன்
உங்களுக்குவேண்டியதை உண்மையாய்க்கேளுமென்றார்
எங்களுக்குவேண்டியது இந்தவமேபோதுமென்றார்
சொன்னவுடன்கன்னிகையுந் தோத்திரமாய்த்தான்வாழ்[த்தி
மன்னவரே நீங்கள் வைகுந்தந்தான்பெறுவீர்
என்றுவிடைகொடுத்து ஏந்திழைமார்தானிருந்தார்
அன்றவடந்தன்னி லாழியநீர்ப்பொய்கையிலே
தீர்த்தங்களாடித் திருநாமந்தான்தரித்து
பூர்த்தியெனவே புகழ்ந்துமனமகிழ்ந்து
மேகமளவாய்வளர்ந்த வீரமயேந்திரமென்னும்
மாகமுயர்மலைமேல் வந்திவர்கள்தானேறி
அங்குள்ளமாமுனிவ ரடிகள்பணிந்தேத்தி
பொங்குநதியாடிப் புண்ணியர்களப்போது
அத்தமலைகடந்து அடவிகளுமேநடந்து
நந்திவளர்கோசாலை நாட்டமுடன்தானேறி
பவளமணிமேனிப் பரஞ்சுடராமாமுனியை
துவளவணங்கித் தொழுதனர்காணம்மானை
அம்மலையில்வாழு மகஸ்தியர்புலஸ்தியரை
வெம்மைமிகுவா மித்திரர்வசிட்டரையும்
ஜாகன்ஜனக்குமரன் ஜனகமுனிதனையும்
மனமருவுங்காரமுனி வாகானகோமுனியும்
சுகருடனேகாசிமுனி சொற்பெரியகீதமுனி
பகருமோர்பெரிய பாராசமாமுனியும்
சென்றுவணங்கித் திருத்தாள்சரணமென்று
நின்றுபலமலையும் நேசமுடன்கண்டன்று
நடந்தார்மலைகடந்தார் நாகமலைதான்தொட
அடர்ந்ததொருகாடும் அருவிமலைபலவும்
கடந்துவெகுதூரங் கடிதுநடக்கலுற்றார்
தொடர்ந்துவருமானிசிங்கம் தொழுதிறை
மகிழ்ந்துகருடாள்வார் மலையேறியேகடந்து
புகழ்ந்தைநயப்பதின்காதம் போனார்கள்மூவருமாய்

அவ்விடத்திலுள்ள அதிசயமுந்தான்பார்த்து
எவ்விடத்துங்கண்டதில்லை இந்தஅதிசயங்கள்
கண்காட்சியெல்லாங் கண்டோங்களிகூர்ந்தோம்
விண்காட்சியெல்லாம் விரயநடக்கலுற்றோர்
நடக்கும்வழியதனில் நல்லமருத்துமலை
அடக்கமாய்நின்ற அதிசயமுந்தான்பார்த்து
தேவர்கள்வந்து திருக்கூட்டமாயிருக்கும்
பாவமெல்லாந்தீர்க்கும் பன்னகசாலையிலே
இருந்துதவிப்பாரி பெண்ணையெல்லாந்தான்தீர்த்து
அருந்துதலிழந்தி யமுதமளித்தானார்ந்து
சிறந்துவளர்ந்தோங்குந் தென்னைவளந்தன்னில்வந்து
அறந்தருமுனிவர்பதந் தொண்டுபண்ணியப்பாலும்
சிந்தைமிகமகிழ்ந்து திருமாலதனை நினைந்து
இந்திரகோபமென்னும் ஏகமலைமீதேறி
சொல்லுகின்றபோது சித்தாதிசித்தரெல்லாம்
நல்லவர்களென்று நயந்துமிகவார்த்தைசொல்லி
எங்கிருந்தெங்குவந்தீ ரிம்மூவர் நீங்களுந்தான்
தூங்கமுடிவேந்தர்களே சொல்லுமென்றார்சித்தர்களும்
சித்தர்களுங்கேட்கச் சீரானதன்மர்தான்
அத்தரேநாங்க ளத்தினபுரநாட்டில் [ன்
பாண்டுமன்னர்தன்புதல்வர் பஞ்சவர்கள் நாங்களுந்தா
வேண்டுமென்பேர்தன்மர் விஜயனிவன்வீமனிவன்
மாண்டுசகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
மீண்டுநகுலனிப்போ விழுந்தான்பதிசேர்ந்தான்
அஞ்சுபேர்தன்னில் அடியேங்கள்மூவருமாய்
மிஞ்சுமொருவைகுந்தம் வித்தகரேசேரவென்று
வந்தோம்வனந்தாண்டி மலைகடந்துஇத்தூரம்
சந்தோஷமாச்சுதுங்கள் சன்னிதியைக்கண்டவுடன்
இனிமேற்றூரம் எத்தனைகாதமும்
பனிபோலே நீங்குமுங்கள் பாததரிசனையால்
இன்புமுள்ளவைகுந்தம் எத்தனைநாள்செல்லுமையா



தீர்ப்புடனேசொல்லுமையா அடியேங்கள்போய்ச்சேர
என்றுதன்மர்கேட்க இயல்பானசித்தர்கள்தான்
நன்றுஇன்றுசொல்லுகிறோம் நன்றாய்க்கேள்பஞ்சவரே
அந்தரத்திலேதிரிந்து ஆகாசமுங்குளி
தந்திரத்திறற்குளிகை சாதகமாய்அண்டமெல்லாம்
மெவுனமாயோடியொரு கேசரிமார்க்கமதாய்
மவுனமாய்நாந்திரிந்தும் வைகுந்தங்கண்டதில்லை
வைகுந்தஞ்சுற்றி வருவோமறிந்தறியோம்
மெய்கொண்டுதேடி விளங்கிநாங்கண்டதில்லை
அந்தமட்டுங்கண்டறியோம் அச்சுதனைநாந்தாமும்
இந்தமட்டும்நீங்க ளெல்லாந்தனைவெறுத்து
நாடுவிட்டுவந்து நவநிதியத்தையும்
காடுதனிற்கண்டீர் கருத்துடனெங்களையும்
ஈடுநமக்குச்சோடெதிருண்டோமன்னவரே
நீடுபுகழ்வைகுந்தம் நீர்பெறுவீர்கண்மரே
மாயனுடசீர்பாதம் மன்னவரே நீர்சேர்வீர்
தூயதொருதன்மரென்று சொல்லுவார்கேட்டிருப்போம்
கண்டோம்நாமுங்களையுங் காவலரேயிப்போது
விண்டோம்நாமுங்களுடன் மெய்விட்டுவாய்திறந்து
கேதாரம்தூரமல்ல கிட்டச்சமீபமது
பாதாரவிந்தமதிற் பஞ்சவரேசேர்ந்திருப்பீர்
என்றுநவசித்தர்கள்தா னேகினார்காணம்மானை
அன்றுதன்மர்வீம னருச்சுனனுமன்னேரம்
செங்கமலமாது சீதைமகாலெட்சுமியாள்
பங்கரேநஞ்சமென்று பார்மீதிலேநடந்து
எல்லைகடந்தப்பா லெண்பதுயோசனைதூரம்
முல்லைமிச்சிசெண்பகப்பூ முளரிவனத்தூடே
வில்வவனமும் விளங்குபூங்காவனமும்
தில்லைவனங்கடந்து செழுநதிகள்தான்மூழ்கி
குன்றுபருவதமுங் கொடுசுரமுந்தான்கடந்து
சென்றுதிருமலையேறி தீர்த்தங்கள்தானாடி.

பற்பலபூவெடுத்துப் பஞ்சவர்பூசைமுடித்து
திற்பளவிலேவிஜயன் தீர்விழிதான்மயங்க

பார்த்தன் வைகுந்தப் பதவி யடைந்தது.

நெஞ்சுலர்ந்து கண்சுழன்று நெடுமால்தனை நினைந்து
குஞ்சரமாமலையைக் குறித்தே நடந்தருகில்
வந்தார்தகைதீர்த்தார் வடவால் நிழல்தனிலே
அந்தமுள்ளபார்த்தனுக்கு அசறிவெந்துதோன்றிடவே
காலசந்துகையசந்து கண்ணுமிகச்சுழன்று
மேலசந்துகீழிருக்க மெய்மறந்து நாவரண்டு
அங்கங்குளிர்ந்து அக்கினியுந்தானொடுங்கி
பொங்குஞ்சுவாசம் பொறிகலங்கிமேல்நோக்கி
நாடிதளர்ந்து நரம்புமிகப்பதறி
ஓடிபொடுக்கும் உண்மைதனைத்தானறிந்து
பொறிகலங்குமாயம் போர்விஜயன் தானறிந்து
நெறிகலங்குநெஞ்சை நிறுத்தியசையாமல்
இருநான்கெழுத்தை இருதயத்திலேயிருத்தி
ஒருநான்கெழுத்தை உள்ளடக்கிமேல்நோக்கி
நின்றெழுத்தைப்பார்த்து நினைவெழுத்தினலறிந்து
குன்றெடுத்தமாலே கோவிந்தாவென்றுசொல்லி
அத்தனேயெங்க ளாதிநாராயணனே
நித்தனேபோற்றியிப்போ நீலவண்ணயான்போற்றி
மெய்யனேபோற்றியுயர் விண்ணோர்பெருமானே
ஐயனேபோற்றி அடியார்க்கெளியானே
வேதன்றனைப்பயின்ற வித்தகரேமெய்ப்பொருளே
பாதந்தனைமறவேன் பச்சைமுகில்மேனியனே
பேய்முலைப்பாலுண்ட பிரானேஉனைமறவேன்
பொய்மறலிகையிற் பிடிபட்டிடையாமல்
கண்ணனேஎந்தன் கருத்திலேதானிருந்து
அண்ணலேகாக்க அடியேன்சரணமையா



ஆயனேஅச்சுதனே அடியேன்சரணமையா
நேயனேஎந்தன் நெடுமால்சரணமையா
மாலையழகா வடிவழகாமாயழகா
சோலையழகா துணையெனக்கேஉன்பாதம்
தம்பியெனக்கார்த்தருளும் நாரணரேதஞ்சமையா
வெம்பியுயிர்மாளாமல் விபராதிறுடனே
அவதாரம்பத்தும் அடியேன்பணிவிடைதான்
தவமாகவுழியஞ்செய் தாசனென்றுநானறிந்து
பத்தவதாரம் பார்மீதிலேயெடுத்தீர்
வித்தகரேஉம்மையும்நான் விட்டுப்பிரிந்தேனோ
நாரணரேகேளும் நான்விருத்தம்பாடுகிறேன்
காரணரேகாக்கக் கடவுளேகண்பாரீர்

விருத்தம்.

கண்ணுக் கருத்துமொன்றாகிக் கவளப்பொறியினு யிர்களைந்து, என்னுமெழுத்து மயாமை வெட்டக்காத் தைப் பிரியாமல், தன்னும் பதத்திலையுதினமும் நாரா யணனை தஞ்சமென்றேன், என்னும் புவியு மனந்து நின்ற விக்கையுமலர்த்தாள் தருவாயே. (௩௧)

அத்தனைக்கரசேவைகுந் தன்டமேஅளவில்லாத
சுத்தரப்புயனேமாலே கருதியின்முடிவேஇப்போ
உத்தனுக்கபயமையா உற்றதோர்வேளைதன்னில்
எத்தனைக்காரும்வந்துரைறையேன்மயக்கவண்ணம் ()
நாவிற்கமலத்தரசிருப்பில் நடுவெருடியாயிருக்கினுமென்
ஆவிக்குணர்வுதமொழி அறிவேகலங்கிமதிமயங்கும்[யிர்
பாவிக்குனதுதிருமலர்த்தாள் பதித்தான்றுத்திபெறவுமு
சிவிக்குமபோதுன்பதவி சேர்ப்பாய்காப்பாய்கோபாலா ()
தருமருடனேவிமரையுந் தனியேவிட்டியான்வாரேன்
பொருமல்தவிர நீவருவாய் பூதயமுனக்கிலையோ [ய்
அருமைபறிவாய்முன்னிருந்த ஐவருடையநினைவறிவா
பெருமையுனதுபெருமாளேபேசாதோடிவருவாயே ()

கலங்கும்வேளை தனக்கிரங்கி கலங்காதெனவேபயந் திர்த்திர், மலங்குமனதைமதித்திருத்தி மயங்காவண்ணந் தனைக்காட்டி, இலங்கும்வடிவைபெனக்கறிய எதிரேவந் துதிருநாமம், அலங்காரங்களாயிரத்தெட் டரியோம் நந்தகோபாலா. (ாமிக)

திருவடிசரணந்தன்னை தெரிசனையடியேற்கிப்போ
குருவடிவாகவந்து கோவிந்தாவென்றுசொல்லித்
பருவடிநீண்டுயர்ந்த பங்கயப்பாதந்தந்தால்
ஒருவடிபோதுமெந்த னுச்சிமேற்பாதந்தானே (ாமிஃ)
எமனுமனுகாதென்னை யிருள்களுமணுகாதிப்போ
ராமனோராமாவென்று நாமமுமறவாதாலே
வீமனுக்கிளையவீரன் விஜயனோகுரனென்பேர்
சாமிசாரதியாய்நின்ற தகமையாலனுகாதென்றேன் ()
மூவரும்வந்தோம்வந்தோம் முகுந்தனேவானிலுள்ள
தேவருமறியவந்தோம் சிறந்தவைகுந்தந்தன்னில்
யாவருமறியவந்தோம் அரியபாஞ்சாலிவந்தாள்
நீவரும்நினைவுசொன்னேன்நெடியமாலருள்செய்வாயே
ஆதியிலுனக்குச்சேஷன் அறுதினம்பிரியாநேசம்
நீதியிலுபாயமாகி நெறியுறிவிவேகிமுன்னே
பாதியுமனதாய்நிற்கும் பார்த்தனென்றெவருமாய்தல்
சேதியுமறிந்தநந்த கோபனேதிருத்தாள்போற்றி (ாமிள)
கடியமறவிதானேது கமலக்கண்ணனிங்கிருக்க
முடியவினைகளணுகாதுமுகுந்தாமுகுந்தாவெனத்துதிக்
விடியவுதித்தகதிர்போலே விந்தமலராம்வைகுந்த [க
நெடியபதவியுண்டாக்கி நீயேயருள்வாய்கோபாலா ()

கதை.

பத்துத்திருவிருத்தம் பாடித்துப்பணிந்தேற்றி
மூத்துந்திருமால் முழுதுமனமகிழ
வாசமுன்னதுதுவரும் வானவரும்வந்தெதிரே
தேசமுன்னபார்த்தனையும் நேராகத்தானழைத்து



புட்பகவிமானமதிற் பூரணமாய்த்தானிருத்தி
செப்பமுடனந்தரத்தோர் சிங்காரமாய்நடத்தி
பொன்னுலகமெங்கும் பூப்பந்தல்தானிரைத்து
மின்னுலவுதோரணங்கள் வீதியெல்லாந்தானமைத்து
தோரணங்கள் நீள்கமுகு சோடித்தார்வானவர்கள்
பூரணகும்பமெங்கும் பூரித்தாரம்பையர்கள்
ஆலாத்திகற்பூரம் அலங்கரித்தார்கன்னியர்கள்
நாலத்திருவிளக்குத் தானெடுத்தார்மாதரெல்லாம்
கற்பூரவாசம் கமகமென்றுதான்மணக்க
பொற்புடையவானோர்கள் பூரித்துச்சூழ்ந்துவர
நாரணனுர்தன்பதிக்கு நல்லவழியீதெனவே
பூரணமாய்வானோர்கள் போற்றிமிகத்தழுவி
அசுரர்தனையறுத்து அமரர்பயந்தீர்த்த
விசயரேவானவர்கோன் வேந்தனுடபுத்திரரே
காண்டபந்தானசுரர் கட்டறவேவெட்டிமிக
வேண்டியேதானவரை மிகமகிழவைத்தோனே
வானவரும்மாதவரும் வந்துமலர்சொரிய
தானவரும்வேதியருந் தனஞ்சயனென்பாரும்
அந்தணர்கள்சூழ்ந்துவர அரம்பையர்களாடிவர
கந்தருவர்கிம்புருடர் கனநாதர்பாடிவர
தேவேந்திரன்புதல்வன் தேர்மீதிலேவரவே
கோவேந்திரனே குபேரனேயென்பாரும்
திக்குவிஜயஞ் செலுத்தினனென்பாரும்
தக்கபுகழ்விஜயன் தனஞ்சயன்காணென்பாரும்
மிக்கபுகழ்பற்குணனும் வீரன்காணென்பாரும்
மைக்கணரம்பையர்கள் வந்துமலர்தூவ
அந்தரதுந்துமிக வாலாத்தியேந்திவர
தந்திரகின்னரர்கள் சங்கீதம்பாடிவர
சோபனங்கள்சொல்லித் தோகையர்களாடிவர
பூபனருச்சுனனும் புட்பகவிமானமதில்
தேவர்கள்கொண்டாடச் செயசோபனத்துடனே

மூவர்களுங்கண்டு முத்திபெற்றனென்றுசொல்லி
தாமனருச்சுனனுஞ் சந்திரன்போலிந்திரன்போல்
ராமர்வைகுந்தமதில் நாராயணனெனவே
கொண்டுவந்தவரானவர்கள் கோவிந்தாவென்றுசொல்லி
விண்ணொடபதியில் வீற்றிரென்றுவைத்தார்கள்
வந்தானிருந்தான் வைகுந்தந்தான்சேர்ந்தான்
வித்தகோவிந்தர்பதம் விஜயனுஞ்சேர்ந்தபின்பு
பார்த்தனுயிர்போக பார்த்திருந்ததன்மருந்தான்
நேத்திருந்தாரின்றிருக்க நிட்சயமில்லாதவுடல்
காத்திருந்தகாற்று கழன்றோடிப்போனவழி
பார்த்திருந்தநெஞ்சம் பதறுமதுள்ளடங்கி
வீற்றிருந்தபார்த்தனுக்கு வேறுமென்றசால்திரமும்
காத்திருந்துதானிருவர் கைக்கருமந்தான்முடித்து
செய்துமுடித்துத் தீர்த்தமதுதாருடி
எய்துகருமமெல்லா மிருவோருந்தான்முடித்து
சிவனேசிவராமா திருமாலேகாருமென்று
அவனேஅரிராமா அருச்சுனனைக்காருமென்று
தருமருடன்வீமனுமாய்த் தானிருந்துமாயனையும்
திருமாலேஉந்தன் சீர்பாதமெப்போதும்
மறவாமலேநடந்தும் வருவோம்பதிசேர்வோம்
திறமாகஉம்முடைய சீர்பாதந்தாருமையா
இத்தரணிதன்னி லிருவோர்க்குந்தான்றுணையாய்
வித்தகரேவந்து வீமனையுமெந்தனையும்
மெய்கலங்கிநில்லாமல் வித்தைநமைத்தான்காட்டி
அப்பனேகாத்தருளும் அச்சுதரேவாருமென்று
மெய்யுடையதன்மருமாய் வீமனுடனெழுந்து
வைகுந்தஞ்சேர வழியேநடக்கலுற்றார்
ஓங்குமொருபட்சிக் கொருசிறகுவீழ்ந்தாப்போல்
தாங்குமொருசிறகு தனிவீமன்றனாகி
இருசிறகுகொண்டு எதிரில்லையென்றிருந்தோம்
ஒருசிறகுகொண்டு உன்னிவழிநடந்து



நிதில்லா நின்றருமர் சென்றார்வனத்தூடே
ஓதரியவீம னொருவனுமேபின்றொடர
அன்னவர்கள் நல்வ ருங்கானிலேமடிய
மன்னரிருவோரும் வாழ்கயிலைதான்சேர்ந்தார்
சேர்ந்திருந்துதங்கள் தியக்கந்தனைதீர்ந்து
வாய்ந்தபுயவீமன் மனமதுமிகவுழன்று
தாராருந்தன்மரிட தாளிணையைத்தானோக்கி
சீரானவில்விஜயன் சீவித்தானிவ்வனத்தில்
எதையாசொல்லு மெனக்கரியதன்றவே
இதானபாரதத்தில் தேர்ப்பாகனானதுமி
மேகவண்ணன்தேர்நடத்தும் மிகைமிகுவில்வனத்தில்
தேகமதைவிட்டெரித்து திருமாலிடஞ்சேர்ந்தான்
விசாரமினிவேண்டாம் வீமரேயென்றுசொல்லி
உசாவுதுன்னை நமக்கு உகைவந்தானன்றேனவே
சோடிழந்தபட்சிகள்போற் துயரமெல்லாமுள்ளடங்கி
கோடில்லாமன்னவர்கள் கிஞ்சுகவனந்தனிலே
கூடியேசென்று குமுதமலராதுதன்னை
நாடியேபாதை நடந்துவெகுதூரம்
தொடர்ந்துவனங்கடந்து தொண்ணூறுயோசனைதான்
நடந்துமலைமீதில் நாற்பதுயோசனைதூரம்
உத்தகருமலையும் ஓமகிரியென்னுமந்த
அத்தகிரிமலையு மங்கவர்கள்சென்றுகண்டு
சராசரமாமலையுந் தாங்கள்மிகக்கடந்து
வராகமலைதன்னில் வந்தடைந்தாரம்மானை

### வராகமாய்வந்த மறையோர்க்கு வீமனுற்சாபந்தீரல்.

தன்றியுள்ளதன்மரின்மேல் நாடிச்சினந்தெழுந்து
பன்றியொன்றுவந்து பாய்ந்ததட்டிமோதுகையில்
பரிந்துமிகவீமன் பன்றிதனைப்பிடித்து
தெரிந்துகழுத்தைத் திருகுமந்தவேளையிலே

வேதியன்போல் நின்றான் மிகமிழ்ந்துபன்றியுந்தான்
நீதியுள்ளதன்மர் நினைவேதெனக்கேட்க
ஓதுவான்வேதியனு முள்ளபடி தப்பாமல்
சாதுவுள்ளதன்மர் தான்கேட்கவேதியனும்
கருதித்தவம்புரியுங் கார்மேகமாமுனிவன்
பருதிக்கவசம் பருவதத்தின்மேலிருப்போன்
தக்கவேள்விக்குச் சமிதைமிகவெடுக்கச்
சிக்கெனவேவாவென்று செப்பினார்மாமுனிவர்
சமித்தெடுக்கப்போகத் தாமதமாய்ப்போச்சுதென்று
குமித்துமிகுகோபங் கொண்டெழுந்துமாமுனியும்
இச்சாபமிட்டார்காண் எனவடிவாகவேதான்
அச்சாபந்தீர்வதெப்போ தருளுமென்றுதான்கேட்க
தன்மருடவீமன் தன்னித்துவரும்வழியில்
மின்மருவுந்தன்மரை நீ வேதித்தெடுப்பளவில்
வலுவீமன்கையால் வாரிப்பிடித்துன்னை
தலையைத்திருகவுமே தான்தீருஞ்சாபமென்றார்
ஆனதினுற்சாப மகன்றதுகாணும்மாலே
வானவர்கள்வைகுந்தம் மன்னவரேசேருமென்று
போனான்மறையோனும் புகழ்பெரியகானகத்தில்
தேனுருந்தன்மர் சிவனேசிவாயமென்று
இந்த்ரகிரிசந்த்ரகிரி யென்னுமொருமாமலையும்
அந்த்ரகிரிவானமலை யப்பாலுந்தான்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு ஓமகிரிதான்கடந்து
மூங்கில்வனங்கடந்து மூப்பதின்காதவழி
பாங்குடனேபாதாளம் பட்டுருவப்பாதைவழி
தெங்குமிலந்துவாரத் திசைகடந்து அப்பாலும்
வெளியேறிவந்தார்கள் வீமருடன்தன்மருமாய்
வழிகூடியேகடந்தார் மலைகள்வனங்கடந்தார்
இப்பாலிருநூற்றெண் பதுயோசனைதூரம்
மெய்ப்பானகாட்சிகளும் வேணதெல்லாந்தான்பார்த்து
சோமகிரிகண்டு தொழுதங்கடிபணிந்து



தேமருடன்கானகத்தில் சென்றுபோனையுள் நினைந்து
காரணமாய்வேவளர்ந்த காடுதனிலேகடந்து
பூரணமாயிருந்த புட்கரணிதானுடி
கிர்த்திபெருஞ்சக்ரகிரி கிரவுஞ்சமாமலையும்
கார்த்திகைமாமலையுங் கடம்பவனந்தான்கடந்து
இப்பாலிருவருந்தா னிருபதுயோசனைதூரம்
அப்பாலுந்தான்கடந்து அகன்றனர்கானம்மானை
அவ்வனத்திலே நிமித்த மார்ப்பரித்துத்தான்கூற
இவ்வனத்திலே நிமித்த மென்னவென்றுபார்ப்பளவில்
தாராரும்வீமனுக்குச் சக்கரமுமாச்சுதென்று
நேராகவே நிமித்தம் நிச்சயமாய்ச்சொல்லுதென்று
தன்மரறிந்து தனியானேனென்றுசொல்லி
இம்மைதனிலெல்லா மிழந்தோமேயென்றுதர்மர்
விந்தையுள்ளதம்பி வீமரேஉந்தனுக்கு
அந்தியகாலஞ்சரியா யாச்சுதென்றுதானுரைக்க
பாரியசொல்வீமன் பட்சமுடன்தன்மரையும்
ஆரியரே அண்ணவி அடியேன்சொல்லிண்ணப்பம்
உம்மைத்தனியேவிட்டு உடலிழந்துநான்போற
கன்மமதுசொல்லக் கவலைதொலையாது
இறப்பதுவுமெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்புடையவைகுந்தஞ் சேர்வதுவேஉண்மையென்று
எமக்குப்பயமில்லை என்னுடையஅண்ணவி
உமக்காகவேமனது உழன்றதுவேஅல்லாமல்
வேறேகவனம் விடைவுசற்றுமில்லையையா
கூறேனொருவார்த்தை கோவிந்தாவென்றுசொல்லி
தனியென்றுசொல்லிச் சளையாமல்நீர்தாமும்
இனியவைகுந்தமது இப்போதேசேருமென்று
கண்ணார்தனை நினைந்து கருத்திற்றியானமதாய்
என்னைமற அண்ணரே நீ ரிருமென்றுவீமருந்தான்
சொல்லும்பொழுது சோதியுமவந்ததுவே
மல்லுயபுயவீமனுக்கு மதியங்கள்வந்தவுடன்

வல்வீமன் வைகுந்த மடைந்தது.

ஐம்புலனையுள்ளடக்கி அறிவைமிகத்திருத்தி
செண்பதுமமாயன் திருத்தாள்சரணமென்று
அரிநமோவென்று அஷ்டாக்கரந்தனையும்
பிரியாமல்நெஞ்சிற் பிடித்தான் திருவிருத்தம்

விருத்தம்.

அப்வர்க்குஞ்சகாயமுன்று ளடைக்கலங்காத்தமாலே
தெய்வர்க்குந்தெய்வமாகித் தேவனுயிருந்தமூர்த்தி
உப்பவர்க்கருளிதென்றே உள்ளத்திலன்புகாட்டி
மெய்வர்க்கமாகிநின்ற வேதநாரணரேபோற்றி. (௱௰௧)

அருமறைப்பொருளேவுன்னை படைத்தவரைவரன்றோ
திருமறையுடையாய்நால்வர் திருவடிசரணஞ்சேர்ந்தோ
கருமருப்பிறகேவாரார் தனிவழித்தனியனுகி [ம்
வரும்வழிபயமில்லாமல் மாயனேவந்துகாரும். (௱௨௰)

இன்பமும்பொருளும்நீயே இகபரசுகமும்நீயே
அன்பருக்கன்பன்நீயே அச்சுதாபச்சைமாலே
துன்பமுமிகழ்த்துநாயேன்சுருதியேபொருளாயென்னனி
தின்பதந்தேடிவாரேன் தேடியவாபோற்றிபோற்றி. ()

அருந்தவர்க்கெட்டாமூலம் அறுதியாமறைமூலம்
பொருந்தவர்நெஞ்சந்தன்னிற் பூரணமானமூலம்
இருந்தவெட்டெழுத்தாமூலஞ்செகதலமனத்தமூலம்
வருந்தவேவந்தமூலம் வைகுந்தமூலந்தானே. (௱௨௨)

மாருதப்ரசண்டகோர வாயுவின்புதல்வன்வாரேன்
பாரதப்போர்முடித்த பாரியவீமன்வாரேன்
நாரதப்பிரியரான நாரணநந்தகோபா
வாரிதிசயனத்தானே மாயனேபோற்றிபோற்றி. (௱௨௩

கத்தனேகரியமாலே காரணசிவந்தபாதா
முத்தனேமுதல்வாபச்சை முகுந்தனேநந்தகோபா



அத்தனேஅடியேன்வீமன் அடியிணைதொழுகவாரேன்
சுத்தனேசுவாமிநாதா சுந்தர்நந்தகோபா. (௱௨௪)

அளவில்லாதனத்தநாதா அரிகரிராமநாதா
களவினல்வெண்ணெயுண்ட கரியவாபெரியமாலே
அளபமேஅணியுமூர்த்தி சோதியேசுருதிவாழ்வே
தளவமேகளபவாசா ஜானகிநேயாபோற்றி. (௱௨௫)

அஞ்சினுக்கஞ்சாய்மூன்று யகண்டமாயருளிநின்ற
கஞ்சமாமலர்த்தாள்காணக் கருதியான்வருகநேசம்
அஞ்சலாய்மலையாவண்ணந் துணைப்பதமருளியெந்தன்
நெஞ்சமேபுகுந்துகாக்க நிலமாமுகிலேபோற்றி (௱௨௬)

கானவுங்கடவதாகக் காட்டவுமிருதாள்தன்னைப்
பூணவும்பணிவதாகப் பொருளெனச்சிரமேற்கொள்ளத்
தோணவும்வருவாய்மாயைத் துயரநக்கிவாயெந்தன்
நாணமுமகற்றிசெவ்வேநடத்துவாய்கரியமாலே (௱௨௭)

முன்னுள்முதல்வாமுகில்வண்ணமுகுந்தாநந்தகோபாலா
உன்னுளாகியிருந்தடியே னுடலேபிரிந்துஉயிர்பிரிந்து
என்னுள்வந்தபடியாலே இப்போவந்தேன்வைகுந்தம்
தன்னுளெனவேவந்தக்காக்கச் சரணஞ்சரணங்கோபாலா()

அங்குசக்கரனேபோற்றி அரிநமசிவாயாபோற்றி
சங்குசக்கரனேபோற்றி சாரங்கதரனேபோற்றி
எங்குமாய்நின்றாய்போற்றி ஏழைபங்காளாபோற்றி
பொங்குபூரணனேபோற்றி பூமகள்கணவாபோற்றி. ()

கலிநடை.

ஆயனேஅச்சுதனே அண்டர்பெருமானே
நேயனேபாண்டவர்க்கு நீதியாய்நின்றோனே
கண்ணகத்தினுள்ளே கண்மணியாய்நின்றோனே
விண்ணகத்துக்கெல்லாம்மெய்ப்பொருளாய்நின்றோனே
எனக்குவருமயக்கம் இதுதிருமுடிவாகி
உனக்கபயமென்று ஓதினேன்நான்விருத்தம்

கடைக்கண்ணிருளாக்கிச் சுதோசைவேறாகி
படைக்கலமுங்கையமர்ந்து பாரிலுடல்வீழ்ந்து
உடைக்கலமுந்தாள்முறந்து உயிர்பிரிந்துவாறுருக்கி
அடைக்கலமென்றுந்தனையே அடியேன்மிகநினைந்து
வந்தாலடியேற்கு வைகுந்தந்தானருளி
தந்தருளவேணுஞ் சரணஞ்சரணமையா
பொய்கொண்டநெஞ்சன் புலையனடியேனை
வைகுந்தஞ்சேர்த்து வைத்தருளுமாயோனே
பஞ்சாயுதத்துடனும் பசுந்துளபமாலையுடன்
கஞ்சமலர்மாதுறையுங் கனத்ததிருமார்புடனும்
செம்பொன்மணிமாலையுடன் சிறந்தபசுமேனியுமாய்
ஐம்பொன்முடியிலங்க அழகாயடியேன்முன்
ஆடுங்கெருடனரியதொருவாகனத்தில்
நீடுந்திருக்கோலமுடன் நீரிங்கெழுந்தருளி
அடியேன்றனைப்பைய அடிமையாயாண்டுகொண்டு
படியாளும்வைகுந்தப் பதிதனிலேவைப்பீரென்று
கட்டழகன்வீமன் கருணைக்கடலாகி
எட்டெழுத்தையுச்சரித்து இறைஞ்சினனம்மானை
மேகவண்ணர்தன்பதத்தை வீமனுந்தானுச்சரிக்க
தாகமுடனிமையோர் தங்கள்விமானமதைக்
கொண்டுவந்துவீமனையுங்கூட்டியதிலிருத்தி
விண்டுசங்குசின்னம் மேளம்பலமுழங்க
பைகொண்டநாகப் படத்தின்மேற்பள்ளிகொண்ட
வைகுந்தன்வாழ்பதியில் வைத்தனர்காணம்மானை
வீமன்வைகுந்தம் விரைந்தேகிப்போனபின்பு
தாமன்தருமன் தனியாயுளமயர்ந்து

தருமர் தம்பிமாரை நினைத்துப் புலம்பல்.

வெம்பிமனமிடைந்து வெந்துமனம்புண்ணாகி
தம்பியரைக்காணாத தனிமையதுமிகுந்து



வீமாவிஜயா மிகுத்தசகாதேவா
தாமாபரிகுலா தம்பியரேயென்றழுது
கண்ணர்தனையறிந்து கவலையெல்லாந்தானீத்து
என்னையென்னவென்னவென்று எம்பெருமானுண்டென
வே, இன்றைக்கிருப்பதும்போய் என்பிறவியென்பதும்
அன்றைக்கிருந்தபடி யல்லாதுவேறுமுண்டோ [போய்
பூமிதனில்வந்து பிறந்தோம்புவியாண்டோம்
சாமிதிருமால் சகாயமதுபோற்றிருந்தோம்
ஐவரென்றுபாரி லரசாய்த்தானிருந்தோம்
ஐவரிலேநால்வ ரகன்றார்கள்நம்மைவிட்டு
ஏதுசெய்வோமென்று இடைந்துருகிநொந்தாலும்
மாதுமலைவோன் வகுத்தபடியாமிதுவும்
விட்டுப்பிரியாத வீமனருச்சுனனும்
மட்டுப்படாநகுலன் வாய்த்தசகாதேவன்
மாண்டுவிட்டாரென்று மயங்கியழுதாலும்
மீண்டுதிரும்பி விரைந்துவந்தீர்ப்பாரோ
இந்தமயக்க மிருந்தாற்பரலோகம்
வந்தெய்தமாட்டாதே வைகுந்தமிப்போது
என்றுதன்மனதேற்றி மிகுந்துதுகையாறி
அன்றுதம்பிவீமனுக்கு அழகாகத்தானிருந்து
செய்யுங்கருமமெல்லாஞ் சீக்கிரமாய்த்தான்முடித்து
உய்யும்பொருள்தமக்கு உலகளந்தானுமெனவே
சிந்தைதனிலெண்ணித் திருமாலைத்தானினைத்து
சந்ததமுனக்கட்டம் தானிந்தவாழ்வென்று
நடந்துவனத்தூடே நாரணரேதஞ்சமென்று
கடந்துவெகுதூரங் கைவிட்டசூத்திரம்போல்
திகைத்துமறுகித் திசையறியமாட்டாமல்
வகைக்குவகையிதெனவே வகைசொல்லுந்தம்பிதனை
விட்டுப்பிரிந்து வெறிகொண்டபித்தரைப்போல்
கட்டுப்பட்டுநின்றலையுந் தாயில்லாக்குஞ்சதுபோல்
முன்னேவல்செய்து முன்னேவழிகூட

பின்னைவல்செய்யப் பிறவிதனைக்காணாமல்
வானகத்தைப்பார்த்து மயங்கிவழிதிகைத்து
கானகத்தைப்பார்த்துக் கவலைபெரிதாகி
இறகுதிர்ந்தசக்கலைப்போ லேங்கிமனமுழன்று
பிறவிமயக்கம் பிரமையதுதான்பிடித்து
வாசமுள்ளதன்மருக்கு மயக்கம்வந்துமூடியபின்
தேசமறந்து நினைவுதடுமாறிபோரு
மெய்மறந்துகாலசந்து வேறுபட்டமானதுபோல்
கைமறந்துவாய்மறந்து கண்ணிரண்டுமாசடைந்து
நாடிமுழந்துமிந்த நடுக்கம்பிடியாமல்
சோடிமுறந்துநின்ற துயரமேதான்பிடித்து
நல்லறிவுகுன்றி ஞானம்பலகைமறந்து
புல்லறிவுகொண்டு புலம்புவார்தன்மருமே

கொச்சகம்.

அந்தரமேயேகவெளி யம்பரமேமங்குல்களே
சந்திரனேசூரியனே தம்பிமார்நால்வருந்தான்
இந்திரனேஇறையவனே எந்தவழிவந்தார்சொல்
செந்திருமால்வைகுந்தஞ் சேர்ந்தாரோசோலையோ ()

பாரேபருவரையே பனிமலர்கள்செண்பகஞ்சேர்
மேரேபரிமளமே மேதினியிற்கானகமே
ஓரேசிறந்துபொங்குஞ் சிந்துநதிவாயேறி
வீரேனக்கிளைய வீமன்வரக்காணீரோ. (௱௩௧)

நாகமேநின்சாரை நற்கனைக்குமாலியா
பூகமேவாரணமே போற்றுஞ்சிறுபுள்ளினமே
காகமேநிலநிறக் கண்ணர்வைகுந்தமதற்
கேகவலுவிம னிங்குவரக்காணீரோ. (௱௩௨)

தேக்கரசேபூவரசே தென்னைபுன்னை ஆச்சாவே
பாக்குடைபடைநெல்லிபலா பாதிரியேபோராலே
நோக்கரியமூங்கில்களே நூதனமேமென்னிளவர்
பாக்கியமேபார்த்தனித்தப்பாதைவரக்காணீரோ (௱௩௩)



காட்டுப்புலியே காடிபன்றியானைகளே
கோட்டுத்திகிரியதக் குஞ்சரமேஇப்போது
நாட்டும்பரிநகுலன் நாரணரைத்தான்தேடி
மேட்டுக்கிரியேறி விரைந்துவரக்காணீரோ. (௱௩௪)

ஆடுமயிலினங்காள் அன்னங்காள்கிஞ்சுகங்காள்
நீடுகுயிலினங்காள் நீலவண்ணர்தாமிருக்கும்
வீடுவைகுந்தமென விரைந்துசகாதேவன்
ஓடுவதைக்காணீரோ உண்மைகண்டாற்சொல்வீரே. ()

வுதறியேன்யாரும் இடவலமுந்தானறியேன்
நீதறியேன்பொய்யுரையேன் நிருவனமேயல்லாமல்
சூதறியேன்வஞ்சத் துடுக்கறியேன் நியறிவாய்
மாதுரையும்மார்பா நின் வைகுந்தத்தாருமையா. (௱௩௬)

வைகுந்தம்வைகுந்தம் வைகுந்தமெந்தனக்கு
வைகுந்தமேகதியாய் வரவும்வரந்தருவாய்
வைகுந்தமென்றொருக்கால் வாயிநூறு றுரைத்தால்
வைகுந்தமேபெருக மாலருளிசெய்வாயே. (௱௩௭)

விருத்தம்.

வழியுந் துறையுந் திசையுந்தெரிந்து வழிதானறியத் தெரியாமல், விழிநீர்சொரியமெய்சோர விட்டாய் வெட்டவெளிதனிலே, இளையோர்பிரிந்த நான்முதலா வெளியேன்மனது தெளியவேறு, அழியாதிருக்கும் பெரியோனே அடியேன் மலையா தருள்வாயே. (௱௩௮)

இதுவுமது.

என்னைப்பிரியாதிருந்தோர்கள் எங்கேயெங்கேவந்தார்பார், உன்னைப்பிரியா தேயிருந்தே துயிலின்மெழுகு போலுருகித், தன்னைத்தெரியா நிலைவேறு தடுத்தாட்கொண்டுவைகுந்தம், பின்னைப்பதவி யெனக்கருளிப் பிரியாதிருக்கவரந்தாரும். (௱௩௯)

விருத்தம்.

தாருமெனக்குச்சீர்பாதந் தமியென்வழியில் பகையாமல்
வாருமெனக்குத்துணையாகவந்தாலெனது துயர்தீரும்[ந்
ஆருமெனக்குத்துணையில்லை அடியேனொருத்தனுனைநினை
காருமனதுடனுஞ்சேரக் கண்பார்த்தருள்கோபாலா.(௩௪௰)

கதை.

பொருள்மயக்கமில்லை பூமிமயக்கமில்லை
அருள்மயக்கமில்லை அரியதவத்தாசையில்லை
இருள்மயக்கமாகி யேதுந்தெரியாமல்
மருள்மயக்கங்கொண்டு மனதுமிகவழன்றேன்
பித்தனைப்போலாகிப் பிரமைபிடித்துழன்றேன்
அத்தன்றெய்வமோ வரியவைகுந்தமதை
நோக்கிவரும்போது நொந்துமனம்புண்ணாகி
தாக்கிவரும்வினைக்குத் தம்பிமாரில்லாமல்
தனியேவழிநடந்து நானொருவனுமாய்
இனியார்நமக்கு எம்பெருமானுண்டெனவே
கக்குந்தனிவாள் நிழலிற் கைபெருவனையாய்த்
தங்கியேகண்டேன்றார் தன்மருந்தானம்மானை

தருமனை சர்ப்பம் விழுங்க சக்கரம் அறுத்தது.

சத்துலவும்மன்னவனைத் தானிரையாமென்றுசொல்லி
ஐத்தலைநாகமது அருந்தியதேயம்மானை
அலையிற்றுயிலுகின்ற அச்சுதநாரணனார்
தலைநாளுரைத்தமொழி தப்பாமற்சக்கரமும்
மற்றுமொருநால்வர் மடிந்ததற்பின்னவரையும்
பற்றுடனேகாத்துவந்த பரிவானசக்கரமும்
வடவாலிற்கண்டுயிலும் மன்னனேவலாலும்
அடவாகநாகமதை அறுத்ததுகாண்சக்கரமும்
அரவுதன்னைப்பிளந்து அடிவயிற்றிலுள்ளிருந்த



தருமர்தனையெடுத்துச் சாந்தமாய்ஆல்நிழலில்
அறுங்காமலேவிடத்தித் தாந்திருக்கச்சக்கரமும்
அறுங்காமற்றன்மர் அசதிவெருநித்திரையாய்
புத்தரவமுண்டதுவும் பூலோகச்சக்கரந்தான்
அத்தரவுரெண்டாயறுத்தெறிந்துபோட்டதுவும்
சத்துமறியாமற் றருமருங்கண்டுயின்று
நித்திரையுந்தான்றெளிந்து நிருபனெழுந்திருந்தான்
ஆரறியார்போலே அண்ணல்தனைநோக்கி
ஊரறியார்பாதை பொருவனமாய்த்தானடந்து
கல்லுங்கரடுங் கடியவனந்திரமும்
அல்லும்பகலும் அரியாவழிநடந்து
திகைத்துமலைத்துத் திசைகெட்டமானதுபோல்
தகைத்துத்தனியே தவிப்பாயினைப்பாறி
பேச்சுத்துணையும் பின்துணையுமில்லாமல்
பக்கத்துணையுமற்றுப் பரதேசிபோலாகி
துக்கசமுன்றித் தொலைதூரந்தானடந்து
உன்னிநடந்துதன்மர் ஒன்பதுயோசனைதூரம்
கன்னிமலைகடந்து கடியவனந்தான்கடந்து
வருணன்மலைகடந்து வாயுமலைகடந்து
தருணநதிகடந்து தவளமலைதான்கடந்து
மிக்கதொருபொய்கை மிகுந்தபெருக்குடைய
புட்கரணிகண்டு புனலாடிப்பூசைபண்ணி
வீமன்விஜயனுக்கும் வித்தைநகுலனுக்கும்
நாமன்சகாதேவனுக்குந் தற்பணமுஞ்சாஸ்திரமும்
சொல்லிமுடித்துச் சூரியனைத்தெண்டனிட்டு
நல்லதம்பிமார்களுக்கு நாரணனுண்டெனவே
தன்துயரந்தீராமற் றனியேவனத்தூடே
என்துயரந்தீர எத்தனைநாட்செல்லுமென்று
சிந்தைதனிலெண்ணிச் சிவனேசிவாயவென்று
விந்தையுடனாருலகில் மேவன்னர்தன்கூற்று
பார்க்குமளவிற் பலவிதமாய்மாயைகளாய்

திர்க்கமுடன்தோன்றத் தெளிந்துதன்மரப்பாலும்
மார்க்கமுடன்செல்லும் வழிதனிலேஒர் மலைதான்
ஆர்க்கும்புகுமரிதா மண்டகடாகமட்டும்
ஓங்கிவளர்ந்துநின்ற உன்னிதத்தைக்கண்டவுடன்
எங்குமலைத்துநின்று இதுக்குவழியெங்கேயென்று

வழியில் வளர்ந்த மலையை அழியச் சக்கர மகற்றியது.

நாலுதிக்குமோடி நன்றாகஆராய்ந்து
காலுக்கெட்டுந்தூரமெல்லாங் கடவுசந்துமில்லாமல்
வெம்பியுழன்று மெய்மறந்துதன்மருந்தான்
தம்பியரில்லாதிடத்தே தாழ்வுவந்ததென்றுசொல்லி
என்செய்வேன்கோபாலா எவரிடத்திற்போயுரைப்பேன்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
ஏதுமயக்கமினி யென்செய்வேனத்திரத்தில்
வாதுமயக்கம் மதிமயக்கம்மால்மயக்கம்
சூதுதிருமால் சோதனையாலிம்மயக்கம்
இப்படியோயென்னையிடருபண்ணிபார்ப்பதுவும்
அப்படியுமானால் அடியேன்மலையேறு
கண்ணுவுனக்கபயங் கானகத்திலாருமில்லை
அண்ணுவுனக்கபயம் அருகேஒருவரில்லை
அனந்தசயனு அபயமுனக்கபயம்
வனந்தனிலேவைத்த வழிமயக்கந்தான்தீர்த்து
அபயமென்றசத்தம் அச்சுதற்குக்கேட்கலையோ
உபயசக்கரந்தா னொளித்தோடிப்போனதுவோ
சங்குத்தொனிபன்னைச் சமையமுனக்கிலையோ
மங்குமதிமயக்கம் வந்துதோமாயோனே
ஆயிரநாமா அசந்துதோஎன்னுலே
பாயிரமாம்பாயலிலே பள்ளிகொள்ளப்போனீரோ
உன்சித்தமென்று உன்னைநம்பிவந்திடத்தில்
என்சித்தமேகலங்க இப்போதிடைவழியில்



தம்பியருமாண்டு தட்டழிந்துநான்தானும்
தம்பிமுகம்வாடித் தவிப்பதறியீரோ
நம்பினேனும்மையென்று நான்வரவும்நீர்தானும்
வம்புசெய்துமென்னை மயக்கிவிக்கலாமோதான்
மனதுதிடமறிய வழிமயக்கிஇப்போது
தனதுக்குரிய சமர்த்தறியவேணுமென்று
சித்தமேயல்லாது செயல்வேறுயில்லையென்று
சுத்தமாய்த்தன்மர் தோத்திரங்கள்பண்ணியபின்
காத்திருந்தசக்கரமுங் கண்ணருடவலினால்
பேத்தெடுத்துமாமலையைப் பெருங்கடலிற்போட்டதுவே
ஏகவெளியாக இடையூறுதான்நீங்கி
போகவழிகண்டு பூரித்தகமகிழ்ந்து
வேகமுடன்தன்மர் விரைந்துவழிகட
தாகமுடன்நாற்காதந் தாண்டியேஅப்பாலும்
அஞ்சனமாமலையு மதிஉள்ளகுன்றுகளும்
கஞ்சமலர்வாவிகளுங் கண்டுபுனலாடி
மஞ்சுலவுசோலைவனமும்பலகடந்து
பஞ்சமலைநீங்கும் பாரமலைகடந்து
சென்றார்வழியூடே சீரானகானகத்தில்
நின்றார்திகைத்து நெடுமாலெனக்கூறி.

தருமர் புருஷாமிருகத்தைக் கண்டது.

காட்டகத்திலேயாமுங் கடியபுருஷாமிருகம்
கேட்டவுடன்வந்து கிருணயுடன்தன்மரையும்
ஆரெவர்தானென்று அறிவுடனேதான்கேட்க
நீரேஇனிக்கேளும் நீதியுடன்சொல்லுகிறேன்
அத்திபுரநாட்டி லானதொருபாண்டுமன்னன்
புத்திரனுதன்மர் புண்ணியனேநீர்கேளும்
காசினியிற்காலங் கலியுகமும்வந்ததினால்
தோசிக்கலியன் தொடராமல்நாங்களுந்தான்

பாஞ்சாலிதன்னுடனே பஞ்சவர்களைவருமே
வாஞ்சையாயெட்டெழுத்தை மறவாமலேதுதித்து
வந்தோம்வனத்தூடே வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாகவந்த தம்பிமார்துரோபதையும்
மாண்டிறந்துமுன்னே வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஆண்டிபோல்நானும் பரதேசியாகவந்தேன்
தனியொருவனாகிச் சலசமிலேதண்ணீர்போல்
இனியொருவர்காணாமலிங்குவரவுன்னையுந்தான்
கண்டேனெனக்குக் கவலையெல்லாந்தீர்ந்ததென்று
விண்டேபுருஷா மிருகந்தனக்குரைக்க
கேட்டவுடனமிருகங் கிலேசமிகவுண்டாகி
நாட்டுபுகழ்தன்மரேவுன் றயமதுக்கொப்பாக
இப்புவியில்யான்காணே னிங்குவந்தீர் நீர்தனியே
ஒப்புடையவீம னுயிர்த்துணையாமெந்தனக்கு
வீமனிறந்ததென்று விசாரமெனக்காறுது
நேமமுடன்நீர்தான் நீதியோபெங்களுக்கு
முன்னுள்வழக்கு மொழிந்ததறிவேனே
இன்றுமுன்னைமறந்தா லீடேறமாட்டேனே
நீதியுள்ளதன்மரிங்கே நீர்தனியேவந்தீரே
ஆதிச்சிநேக மதைமறக்கமாட்டேன்யானே
வருவேன்றுணையாக வைகுந்தஞ்சேரமட்டும்
குருவேசரணமென்று கோதியேபின்னுக
வாரமிருகமதை வகையுடனேதன்மருந்தான்
தேறவேசிந்தை தெளியவேஆதரவாய்
எத்தன்மனந்தேற்றி யித்தூரம்வந்திரே
சந்தோஷமாச்ச இனித் தாயே நீபோவென்வே
தன்மனிலையுரைக்கத் தனிமிருகமேதுசொல்லும்
இம்மைதனில்வைகுந்த மெவர்சேர்ந்தாரிப்புவியில்
நன்மைதிமையிரண்டும் நாட்டிலனுபவித்து
ஜென்மங்கரையேறச் செய்வார்கள்தான்றருமம்
வைகுந்தஞ்சேர்ந்து வாரியெடுப்பதென்ன



கைகண்டதோர்பலன்றன் காவலனேயான்றாரேன்
அரசபதிலோக மடங்கலுமேயுண்டாக்கி
விரகுமுடிசூட்டி வேந்தரைப்போலிங்கிருக்க
வைக்கிறேனும்மை மன்னவனேதானிரென்று
தக்கபுருஷா மிருகமதுதானுரைக்க
நல்லதென்றுதர்மர் நகைத்தேதுசெப்பலுற்றார்
அல்லவேயுந்தனுக்கு அன்பாகநீருரைத்தீர்
சொல்லவேகேளுந் தொல்லுலகம்விட்டகன்றேன்
செல்லவேவைகுந்தஞ் சேரவென்றுயான்போறேன்
நில்லென்றுசொல்லி நீறுத்தவதுநாயமல்ல
தம்பியர்தான்மாண்ட சலிப்பொன்றும்பாராமல்
தம்பியெனையரசு நாட்டுகிறேனென்றியே
நந்தகோபால நரசிங்கருபனையே
எந்தவிதமானுலு மேகிவழிநடந்து
விஷ்ணுபதஞ்சேர்ந்து மெய்மகிழ்ந்தநாளினும்
கிருஷ்ணவதாரமுடன் கிலேசமெல்லாந்தானுரைத்து
பாதம்பணிந்து பரிவுடனேபோற்றிசெய்து
நீதமுடனென்னை நீயனுப்பவேணுமென்று
புருஷாமிருகமுடன் போதனையாய்ச்சொன்னவுடன்
புருஷாமிருகமது புகழ்ந்துமேதன்மரையும்
பாங்காகப்பின்றொடர்ந்து பாதைவழிகூட்டி
நீங்காமலெங்கும் நெறியுடனேதானடந்து
ஸ்ரீராமர்வைகுந்தஞ் சேர்ந்திருநீயென்றுசொல்லி
போராமல்மாமிருகம் பிரியமுடன்றனைமுவி
போமென்றுசொல்லிப் புருஷாமிருகமது
நாமொன்றுசொல்லுகிறோம் நல்லவைகுந்தபதி
மெத்தச்சமீபமது விசாரமினிவேண்டாங்காண்
கர்த்தனுடசீர்பாதங் காண்பீரெனவுரைத்து
அனுப்பியேவல்மிருகம் அருங்கானிற்போனதுவாம்
தனுப்போலுந்தன்மர் தருகாமலேநடந்தார்
அரியதிருமாலே அருகாகஎன்னுடனே
பிரியாமல்நேரே பின்னேதுணையாக

பரவே னுமையாநீ வைகுந்தவாசகரே
நரவே னுஞ்சிர்பாதந் தானுவேயென்றுதன்மர்
நடந்தார் திசைநோக்கி நாற்பதிங்காதவழி
கடந்தார்வெகுதூரங் கண்ணரேதஞ்சமென்று
கங்காதரனை காளகண்டநாதனென்னும்
சங்கரனார் தாமுறையுஞ் சத்திசித்திமாமலையும்
அன்புதிரிகோணமலை யருகாகவந்துநின்று
என்புருகிநின்று இறைவனைநெஞ்சில்வைத்து

விருத்தம்.

ஆசையிருந்த பொய்க்கூட்டை அடருங்காமப் பொக்கிஷத்தை, ஓசையிருந்த அருத்திதன்னை உடைத்து வழியுங்கிருமியுடன், வாசமிருந்த மலசலத்தை மருவியடிபெலித்தூரம், பாசமுடைந்த பருஞ்சுமையைப் பார்த்தே செலுத்தவருவேனோ. (௱௪௧)

இதுவுமது.

எல்லாமுமாது செயலாலே ஏகவெளியுத்தாரகி, நில்லா நிலையில் நின்றேனோ நிலைவில் நிலை மசையாமல், அல்லாமொருவ னுன்பொடலே அடியேன்மன திலனுதினமும், சொல்லால் பெருமைதனையடையச் சுமையோடுடம்பெருவேனோ. (௱௪௨)

இதுவுமது.

பிறவித் துன்பங்கள் தனையிழந்து பேரின் போற்றனியே காணகத்தில், அறவேமனது தமோதி அடியேன் தெளியாதுழன்றதெறிந்த், இறைதனையே பொருளெனவே சிவகனவுந்தன் கிருபையினுல், உறவாய்ப்பெரிய வைகுந்தம் உடலோடடைந் சேர்வேனோ. (௱௪௩)

ஒன்றாய்ரெண்டாய் மூன்றாகி ஓரஞ்செழுத்தாய் உயிர்பலவாய், நின்றாயகண்ட வெளிதானய் நிலைக்குஞ் சித்தம்படிகமதாய், நன்றாயொளியுங் குன்றொளியாய் நடனம்புரிந்த பெருமானே, என்றாலடியேற் கிரங்கியிப்போ திறைவாவென்றுன் வருவாயே. (௱௪௪)



கோலத்துடனே அடியேனுங் குருநாடதனை விட்டேகி, ஞாலத்துடனே துயரமெல்லாம் நன்றாய்க்கழித்து வழிதோறும், ஞாலத்துடனே வைகுந்தஞ்சொர்க்கபதவி தான்சேர, ஆலத்துடையாய் அனைசெய்வா யரனேயானுன் னடைக்கலமே. (௱௪௫)

வந்தேனுனது திரிகோண மலையினருகே தானிருந்து, செந்தேனொழுகும் திருப்பதிச் சிவனே சிவனே யெனத்தொழுது, நொந்தேன் திசைந்துவழிதேடி நோன்புவிரதம் மறவாமல் உந்தேனுந்தன் மலர்த்தாளே உதவியெனக்குத்தருவாயே. (௱௪௬)

வேறு.

மாரனையெரித்தகண் ணும் மான்மழுதரித்தகையும்
வீரனைத்துணித்தவாளும் விடமுண்டகந்தங்காலக்
கோரனையுதைத்தாளுங் குஞ்சரமுரித்துப்போர்த்துஞ்
சீரனைத்தெரியவைத்தான் சிவசிவாநமசிவாயா. (௱௪௭)

என்றுமழியாப் பொருளாகி ஏகபரமுந் தானுகி, அன்றுமுதலாயின்றளவும் அனுவுக்கனுவா யுள்ளொளியாய், நின்றுநெடிய புவனமெல்லாம் நீயாயிருந்த பரஞ்சுடரே, ஒன்றுமறியே னுமைபாகா உடையாருடையபாதாரும். (௱௪௮)

காசினிதன்னிவாழ்ந்து கன்மவேமிகவுஞ்செய்து
பாசிநீர்போலேயானும் பாரைவிட்டகன்றுசெவ்வே
தேசிகனுகியிந்தத் தேகத்தைச்சுமந்துகொண்டு
வாசனையுடனேவுந்தன் மலரடிபெறுகவாரேன். (௱௪௯)
மாயனார்வாழுகின்ற வைகுந்தந்தன்னிலென்னை
ஆயனேடருகிருக்க அருளியேகடாக்ஷித்தாரும்
தூயனே நமசிவாயா சோதியேஅறுதிமூலம்
நாயனை துணையதாக நடத்துவாய்நமசிவாயம். (௱௫௰)

தருமருத்துப் பாமாலை தரிசனமானது.

தொழுதுவிருத்தம் துதித்தவுடனே அரனுர்
மூழுதுமனமகிழ்ந்து முன்னின்றரம்மானை

கண்டனர் தம்மைக் கருணைவிழி கூறந்
தெண்டனிட்டுக்கண்குளிரச் சிந்தையகமகிழ்ந்து
மாலயனுங்காணாத மலரடியை நாமேனும்
காலடிகள்கண்டேனிறு காண்பேன்வைகுந்தமென்று
சங்கையில்லாதேதருமர் சரணமெனத்தொழுதார்
கங்கைசடைக்கணிந்த கறைகண்டருளமகிழ்ந்து
மாயவரை நீகாண்பாய் வைகுந்தந்தான்பெறுவாய்
தாபதிருமாலடியுஞ் சொர்க்கமுந்தான்பெறுவாய்
என்றுசிவருத்திரனு மிவன்பெரும்போகரிஷி
அன்றுபட்டங்கூறி யருளானுப்பினராம்
சம்புசிவருத்திரனார் தன்மலையிற்றீர்த்தமெல்லாம்
இன்பமுடன்தானாடி யிருந்தக்கிலைப்பாரி
தாண்டுமணிரத்னகிரி கலையிற்புவையாடி
வேண்டுங்கயிலையென்னும் வெள்ளிமலைக்கப்பாலும்
ஆரியனார் தன்மலையும் அண்டர்திருப்பதியும்
கூடியபேர்வானகிரி கொடுமுடியுந்தான்கடந்து
காற்கடியவேகம் கடுவேகமாய்நடந்து
பாலடியுமேனிப் பரஞ்சுடரைத்தானினைந்து
எண்பத்திருகாதம் எப்புறவேதான்கடந்து
பண்புற்றதேசம் பசுந்தளபமேனியர்மேல்
ஆசைகொண்டுதன்ம ரனேகமெடுத்தாரய்
பாசைபலபேசிப் பல்கிருகட்டியோடும்
பேசிநடந்துபெருந்துயரந்தான்தீர்ந்து
தேசிகனுமமெனுஞ் சிவலோகப்பட்டியுந்தான்
இத்துயரங்கொண்டு இங்குவந்திராரெனவே
அத்துயரங்கேட்ட ஆரியபட்டிதன்னுடனே
இப்புவியிலைத்திடுர மியல்பானதன்மரென்பேர்
மெய்ப்புடையதம்பியரை விட்டுப்பிரிந்தமையால்
வைகுந்தவாழ்பதிக்கு வழியறியமாட்டாமல்
மய்தவன்றயானும் விசாரமாய்வந்தேன்காண்
ழ்ந்துமனந்தேற்றிச் சலியாதிருமெனவே [னை
வாழ்த்தநெடுமால்பதத்தை மனதிலுன்னிச்சொல்லுமே



புள்ளதுவுஞ்சொல்லப் பூரணமாயுளமகிழ்ந்து
வள்ளல்திருவைகுந்தம் மன்னவனோதூரமல்ல
கிட்டச்சமீபமது கோதாரச்சேத்திரங்காண்
சட்டமுடன்தன்மரே நீர் சலியாமலேநடந்து
போமென்றுசொல்லிப் பூரித்தகமகிழ்ந்து
நாமெங்கிருந்தாலும் நமக்குநீயுண்டெனவே
எண்ணியிருப்பேன்கா ணென்னுடையபுள்ளரசே
புண்ணியரேபோமெனவே போகவுற்றார்தன்மருமே
தன்மர்தனைப்பட்டியுமே தானனுப்பிப்போனபின்
தன்மருவுஞ்சோலை நடுவனமுந்தான்கடந்து
இப்பால்வெகுதூர மினியாமலேநடந்து
அப்பாலிருக்கின்ற அத்தவனந்தனிலே
கீதபட்டியென்னுங் கிரணப்பிரகாசமதாய்
நீதமுடனேயிருந்து நீராரெனக்கேட்க
சாதுபயில்தன்மர் சாற்றுவாருள்ளதெல்லாம்
ஓதுபயனெல்லா முண்மையாய்க்கேட்டிருந்து
எல்லாங்குறித்துமிங்கே இத்தூரம்வந்துவிட்டார்
பொல்லாங்கினியுனக்கும் போச்சுதுகாணச்சமில்லை
அடுத்தீர்வைகுந்த மன்பானதன்மரே நீர்
கொடுத்திரமுதனித்தீர் கோபாலருண்டெனவே
தன்மப்பலித்ததுகாண் தன்மரேஉந்தனுக்கு
கன்மமெல்லாம்போயகலக் கண்ணர்பதம்வந்ததுகாண்
ஜென்மமுடன் வைகுந்தஞ் சேர்வீர்பயமறவே
இம்மைதனிலுந்தனைப்போ லிப்புவியிலாருமில்லை
என்றந்தப்பட்டி யெடுத்துமிகத்தானுரைக்க
நின்றந்தத்தன்மர் நீயாரெனக்கேட்க
ஈசனடியாள்யான் இமையவருந்தான்வளர்த்த
வாசமுறுகின்னர்தனை வகைசெய்தேனுகையிருல்
கோபமுடன்மாதாவுங் கூறியபுள்சாவையென்றுன்
சோபமுடன்சாபமென்னைச் சூழ்ந்துதென்றுபட்டியுந்தா
அம்மலைவிட்டு அகன்றுதானிப்போது [ன்

மிக்கதொருவைகுந்த வீதிவழியேகிவந்தேன்
செங்கண்டுமாலுடைய இருக்கோலமுள்ளதெல்லாம்
பொங்கமுடன்சொல்லிப் பூங்காவனந்தனிலே
இருக்குமலர்ப்பொய்கை யெல்லாமுமென்னதுகாண்
தருக்கமுடனிவ்வனத்திற் றானிருப்பீரென்றனும்
இந்தத்தலத்தி லினியதவமிருந்தால்
எத்தப்பலன்களுமிங் கெய்திடுங்காண்தப்பாது
தாகமுடன் நீயிருந்தாற் றவமுற்றவப்பலனும்
மேகவண்ணர் தன்னை விரைந்துநானிங்கழைத்து
மவுலிதரித்து மகுடமுடிசூட்டி
பவுரிகமாயுன்னைப் பாராளவைப்பேன்காண்
அரசர்மடந்தையரும் அரம்பையருமுந்தனக்கு [ன்
விரகுடனேவல்செய்ய மேவுதலாய்ப்பண்ணிவைப்பே
என்றுசொன்ன பட்சியைப்பார்த்தே துரைப்பார்தன்மரு
நன்றுநன்று நீயுரைத்தாய் நாதகிதப்பட்சியேகேள் [மே
தந்தைதாய்சுற்றமுதற் றாரமொடுமைந்தர்களும்
விந்துநிலையென்று வெறுப்பாகவேயானும்
தாரணிமேலாசைவிட்டுச் சற்றுமனமில்லாமல்
ஆரணனார்வைகுந்த மடையவென்றுபோகையிலே
பின்னாசைவைத்துப் பேசுவரோபுள்ளரசே
என்னாசையானாலும் இனிமேலேள்ளளவும்
இல்லையிங்கேசற்று மென்மனதுக்கேறாது
கல்லையுருவாக்கிவைத்த காரணரேஉண்டெனவே
புகலுமொழிகேட்டுப் புள்ளரசும்போது
இகலுடையவேந்தே எந்தன்மொழி நீகேளாய்
ஆதிதிருமாலுடைய அன்பன்காண் நீர்தாமும்
நீதியுடன்தம்பியரை நீர்நினைத்தார்காரியமோ
வேறுநினைவு விசாரமதுதானுமன்றி
கூறுமொருநினைவு கோவிந்தாவென்றுசொல்லி
பார்த்திபரே தம்பியர்மேற் பாசந்தனையகற்றி
ஏத்தியேமால்பதத்தை இறைஞ்சுமென்றாரம்மானை



ஓதரியமுன்றனி லூழ்வினையைஉம்மாலே
வேதன்விதியை விலக்குவரோபாருலகில்
என்றுகிதப்பட்சிசொல்ல இன்முடன்தன்மருமே
ஒன்றுமறியாமலுரைத்தீரேபுள்ளினமே
ஓங்குபஞ்சபூத மொன்றொன்றுங்கூடாமல்
ஆங்குமயக்கமெனுந் துயர்கடலிலேவீழ்ந்து
அழுந்துவினையகற்று மச்சுதனே அல்லாது
தொழுந்தகைமையார்க்குந் தோற்றுமோபுள்ளரசே
என்றுதன்மர்சொல்ல இயல்பானபட்சியுந்தான்
நன்றுகாண் தன்மரென்று நவின்றேகிப்போனதுவே
பட்சியுமப்பாற் பறந்தேகிப்போனவுடன்
காட்சியாய்த்தன்மர் கதிக்கவேதான்கடந்து
அந்நவனம்விட்டு அநேகநெடுந்தூரம்
மன்றலுறுஞ்செண்பகப்பூ வனமும்மிகக்கடந்து
திரிகோணமாமலையிற் சென்றுதயவாகி
கரிகமலமென்னத் தோன்றுமந்தமாமலையும்
பார்த்துமகிழ்ந்து பாலாறுதன்னில்வந்து
சாத்துமொருநாலு சதுர்வேதமாமலையும்
தாராருந்திண்புயத்தான் தன்மருந்தானப்போது
சீராரும்பாறையின்மேற் சென்றிருந்தாரம்மானை
பரியமலைதன்னிற் பன்றியொன்றுதான்வரவே
கரியதிருமாலைக் கண்டீரோபன்றியென்றார்
இவனாரெனவே எதொன்றும்பேசாமல்
வனமதுவேறாய்க் காட்டகத்திலோடியதாம்
ஓடியதோர்பன்றிதனை உத்தமனேபோமெனவே
நாடியேசெவ்வே நடந்தார்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் போராளைமற்றுமுள்ள
நிலவுகண்டுதானதட்டி நடந்தார்வனங்கடந்தார்
சேனையுடைய ஜெகவேகராஜனுந்தான்
கானந்திவந்து கண்டார்கானம்மானை
ஆதவனுஞ்சென்று அடர்ந்தவுடனவ்விருளில்
போதமுடன்தன்மர் புல்லேதுழுவணையாய்

தேவியுயர்கானகத்தில் தெடுமரத்தின்கீழேதான்
தாபியல்பாய்க்கண்டுயின்றார் தன்மருமேதானசந்து
அங்கேபரிதி அருணைவுதயமென
பங்கயம்போலாகிப் பரிதிவந்துதோன்றியபின்
வெண்மையுடனெழுந்த வேகவதியாறுதன்னில்
வண்மையுடன்புஷ்கரணி மாதீர்த்தமாடுதற்கு
செந்திருவைபொப்பாகத் தெய்வமடந்தையர்கள்
அந்தநதிதீர்த்த மாடலுற்றாரம்மானை
நீராடிக்கன்னியர்கள் நீள்கரையிற்றானேறி
சீராடித்திகிலுதித்திச் சிகையாற்றியேமுடிந்து
பூசைபதுமுறித்துப் புஷ்பமலர்தான்தரித்து
ஓசையுடன்காவி லுலாவிவருகையிலே
சோபமுடன்தன்மர் சோலைநிழல்தனிலே
தாபமுடனிருக்கத் தான்கண்டார்கன்னியர்கள்
பூவுலகில்மன்னன் பொய்கைக்கரைதனிலே
காவுதனில்வந்திருந்த காரணந்தானேதெனவே
வந்தருகில்நின்று மாதரெல்லாந்தான்கூடி
இந்தவனந்தனிலே இந்தாரம்வந்ததென்ன
என்றுசொல்லிக்கன்னியர்க ளிதுரைக்கத்தன்மருமே
மன்றுலகில்நானும் வாசமுள்ளதம்பியரும்
இருந்துசிலகால மில்லறமும்விட்டுழந்து
திருந்துவைகுந்தஞ் சேரவென்றுவந்திடத்தில்
மடிந்தார்கள்தம்பியர்கள் வனத்திலேநான்வருந்தான்
இடிந்துமனமுழன்று இங்குவந்தேன்நானொருவன்
வழியறியேன்யானும் மற்றுந்திசையறியேன்
வெளியேதனியாக வேற்றுமுகமாகிவந்தேன்
களிகூறஉங்களைநான் கண்டேனேகன்னியரே
தெளிவாச்சுவைகுந்தனுக்குத் தென்னமுதேஇப்போது
உங்களைநான்கண்டதின்பின் உடலிலுயிர்வந்ததுவே
இங்கொளியதுபோற் றெரிசித்தேனுனையினுல்
வித்தையுள்ளவைகுந்தம் வீடுபெறவேந்தனுக்கு
எந்தநாளோ அறியேன் எத்தனைநாட்சொல்லுமதோ



மாதர்களேநந்தனுக்கு வழிதானும் நீங்களுமே
ஆதரவாய்ச்சொல்லி யனுப்புமென்றார் தன்மருமே
அந்தமொழிகேட்டு அரம்பையர்களன்னேரம்
விந்தமதுதேடி விரைந்துவந்தீர் தன்மரே நீர்
அதிதுயம்பதிபடங்கு அரசனேவந்தனுக்கு
சதிரும்பதியுஞ் சம்பத்துவாறுனையில்
உம்மைமறுடிகூட்டி உமக்கேவல்செய்துநிற்போம்
நம்மையுடனெங்களை நீர் நம்பிவொருமென்று
கன்னியர்கள்சொல்லக் கருத்துடனே தன்மருந்தான்
மன்னியதோர்பெண்ணரசே மன்னுனையில்லையினி
உண்மையாய்ச்சொல்லுகிறேன் றுற்றகருமமென்று
தன்மையாய்நானுந் தற்காத்துநின்றதொரு
அச்சுதனார்பாதமல்லால் ஆசைவேறில்லையென்று
நச்சுவிழிமாதே நடவுமென்றுதானுரைத்தார்
வேந்தனிவைசொல்ல விரைந்துதான்கன்னியரும்
சாந்தமுடன்கானகத்திற் றுணடந்தாரம்மானை
தேவகன்னிமாருந் திசைநோக்கிப்போனவுடன்
ஆவலுடன் தன்மர் ஆயன்பதிநோக்கி
மனமசாட்சியதாய் வாருந்திருமாலே
அறிதிப்பொருளான ஆதிமகாலட்சுமியை
வந்திபெறுமின்னுள் மாதுமகாலட்சுமியை
தெத்திலஇன்னும் நீங்காமல்வைத்தருளும்
நீலவண்ணர்தம்மை நினைந்துவெகுதூரம்
சீலமுடனேமிரி கெரமதுதான்தெரிந்து
அங்குள்ளதீர்த்தமது ஆடிக்கரையேறி
துங்கமுடிவேந்தன் தொண்ணூறுகாதவழி
கடந்தங்கொருவனுமாய்க் கங்கையடைந்தானேறி
அடர்ந்தமலைச்சாரி னருகாகத்தன்மருந்தான்
சென்றுகங்கைநீராடிச் சிறிதுவரந்தான்கேட்டு
குன்றுகுடையாய்பிடித்த கோவிந்தாவென்றுசொல்லி
கேசவனைத்தானினைந்து இருடையுள்ளதன்மருந்தான்
நாசகோபாலர்திருநாமமிட்டுக்கருணை

ஆற்றைக்கண்டு நன்மை அரிவைந்துதித்தல்.

ஆறுதனில்வந்து நின்று ஆழமிதுவென்றுசொல்லி
வேறுவழியெங்கும் விசாரித்துக்காணாமல்
நின்று திகைத்து நெடுமாலைத்தானினைந்து
ஒன்றுமாத்திலெண்ணி யுரைப்பார் திருவிருத்தம்

விருத்தம்.

ஆழியும்நதியுங்கண்டேன் அக்கரைகடக்கவென்றால்
நீளிடையாறுதன்னை நீந்தவுமாட்டேனிப்போ
வாளியோர்வீமனில்லை மற்றுளதம்பியில்லை
சூழவோர்துணையுமில்லை சுந்தரநந்தகோபா. (௫௧)

அக்கமும்நீயேயெந்தனாத்துமநேசம்நீயே
பக்கமும்நீயேயல்லாற் பாவினைவேறுகாணேன்
சிக்கமுந்திகைப்புநீக்கித் திறைமொன்றுமனதிற்றுனே
நிக்கவே நிலத்தோடென்ற நீயருள்நந்தகோபா (௫௨)

வருந்தியுனையேயான்தேடி வரவேவழியில்வெருமானை பொருந்தியமயக்கிமிகப்பகட்டி பொல்லானெனவேவே முக்கி திருத்தநினைவிற்றுனிறைத்தாற் சிறியேன்தற்கு ஈடோதான், அருந்தியுனதுபதஞ்சேர அருள்வாய் நந்தகோபாலா. (௫௩)

எல்லாப்பாடும் பட்டலுத்தே னிங்கேயோர் பிரிந்த நான்முதலாய், பொல்லாப்பொழியவெதிலேல பூதகயவு முனக்கில்லை, சொல்லாற்பெரியவைகுந்தத் துரையேயுன்னைநாடிவந்தால், இல்லாப்பகையைஎதிர்விடுத்தாலெனியேனிணையோ கோபாலா. (௫௪)

கல்லோமரமோ துணையெனக்குக் காடோசெடியோ துணையெனக்குப், புல்லோபுனலோ துணையெனக்குப் பூடோதிலமோ துணையெனக்கு, அல்லோபகலோ துணை



யெனக்கு அகன்றேயிருந்தாலார் துணைசொல், வல்லோர் புகழும் பெரியோனே மாயாநந்தகோபாலா (௫௫)

இதுவுமது.

ஆறுங்குளமுங்காடுமேலே அரியகராடிபுலிசிங்கம்,எறும்களிறுபூதகணம் இருண்டவரக்கர்தனைப்போலும், தாறுங்கடிய யிருள்போலுந் தோன்றித்துன்பஞ்செய்தால் நான், தேறுங்கருமமெந்தவிதந் தெளிவுத்திரமும் நீதானே. (௫௬)

இதுவுமது.

அருடாவுனதுவினையாடலைந்தங்கோடியாதிமுதற்
றிருடாவுனதுதிறமறிய செயலேதெனக்குன்தொழிலரிய
வருடார்தனையும்வருடாய் நீ மாயமாயவுபாய நீ
கருடாழ்வார்மேலேறிவந்து கருணைபுரிவாய்கோபாலா.

இதுவுமது.

தொடரும்வினைகள் தொடராமற் றுன்பச் சனத்திலேழுந்தாமல், அடரும்பகைகளறுகாக வருளைப்பொருளையறிவேற்கு, இடருமகலத் துணைப்பாதத்தை யெனதுசிரமேலனுதினமும், படரும்படியாக் கிருபையது பார்பார் நந்தகோபாலா. (௫௮)

வேறு.

சீர்மிகுதேவாபோற்றி செந்திருமாலேபோற்றி
ஆரியராமாபோற்றி ஆழிதுயில்வாய்போற்றி
பாரியஆறுதாண்டப் பரிவுடன்பாதைதோன்றக்
காரியமாகவந்தென் கண்ணினிற்றோன்றுவாயே. (௫௯)

இதுவுமது.

காமணிதுளபமாலை மார்பினிலிலங்கவெய்யோன்
பூமணிகளபமேனிப் புளகிதநளினமாக
நாமணிவயிரமுத்தும் நவமணிபுனைந்துமெத்தன்
தாமணிச்சிரமேல்நிற்கும் சச்சிதாநந்தகோபா, (௬௰)

மாயவன் ஆடு வழிவிட வந்தச் செய்தது.

நல்லதிருவிருத்தம் நாரணனுர்தான்கேட்டு
மெல்லச்சிரித்து மெய்மகிழ்ந்துபூரணமாய்
ஆடுதனைப்பார்த்து அமருமென்றார்கோபாலர்
மாடுபுனல்சுவரி வழிபாகத்தேதான்றியபின்
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
கந்தமலர்த்தருமர் கருத்தரியவேணுமென்று
நந்தகோபாலரங்கே நமனைவரவழைத்து
விந்தமுறுந்தன்மருட மெய்யதனைச்சோதியென்றார்

சுணங்கனாகவந்த நமன் தருமரைச் சோதித்தல்.

அந்தமொழிகேட்டு அளவொருமாமறலி
சிந்தைமகிழ்ந்துருவஞ் சீக்கிரமாய்த்தான்மாறி
இணங்குமுடல்வாய்க்கனொங்கும்புழுச்சொரிய
சுணங்கனுரும்வடிவாய்த் தோன்றிநின்றாரம்மானை
வந்துதன்மர்முன்னே வாலதனைத்தானட்டி
நொந்துபயமிடைந்து நோக்கிமுகமண்ணூந்து
ஓலமெனஊளையிட்டு ஓடியோடியேதிரும்பி
காலடியில்வந்துநின்று காலினைநும்நாய்தானும்
ஆய்ந்துடலிற்புண்தா னழுகிப்புழுச்சொரிய
சேர்ந்துவிட்டேன்மெத்தத் அன்பலினைதன்னுலே
சாருந்துணையில்லை சஞ்சலத்திர்ப்பாருமில்லை
ஆருந்துணையில்லை ஆதரவுதானுமில்லை
எந்தன் துயர்தீர்க்க இனியாருமில்லாமல்
உந்தனருகே ஓடிவந்தேன்காருமென்று
இந்தச்சுணங்க னெடுத்துரைக்கத்தன்மருந்தான்
எந்தனுடுந்தனக்கின் கேடுகளியாருமிப்போ
வாராய்சுணங்கேதான் வகையுனக்குச்செய்வதென்ன



சீராகச்சொல்லுமென்று செப்பினார்தன்மருந்தான்
எந்தலேதீர்க்கேனும் இயம்புவேனோர்வசனம்
சாந்தமொழிதன்மரே நீர் தனியொருவனுகவந்திர்
நாந்தான் துணையாக நம்பியேதான்வாரேன்
சாந்தமாஏவல்செய்து தான்வருவேனுன்பிறகே
வருகிறெனைத்தனை நீ மனதுவைத்துக்காப்பாற்றி
அருகேயெனைவளர்த்து ஆதரவாய்க்கொண்டுசென்று
நம்பினபேரை நட்டாற்றிற்றள்ளாமல்
தம்பிரானனதொரு தன்மரேரெட்சியென்று
தாழ்ந்துசுணைங்கன் சஞ்சலமாய்வார்த்தைசொல்லி
ஆய்ந்தசுணங்கனுக்கு அஞ்சலென் றுவார்த்தைசொல்லி
காக்கிறேமென்று கலங்காமல்வார்த்தைசொன்னார்
மார்க்கமுடனேன்பிறகே வாவென் றுநாநடந்து
போகையிலேபோராறு பூமிதனிலேபெருக்காய்
வருவதைக்கண்டு இவர்கள்மிகமயங்கி
நிற்குமளவில் நீள்வாய்ச்சுணங்கனுந்தான்
அக்கரையிலென்னை அப்பனேகொண்டுசென்று
விட்டுவிடுமுந்தனுக்கு வேண்டுஞ்சுகிர்தமுண்டு
கட்டுடனேதன்மர் கருத்திலமிகநினைந்து
போராறுதாண்டவென்று பெருமான்றனைநினைந்து
தாரேறுந்தன்மர் தாவிறங்கியாறுதனில்
வாட்டமுறச்சுணங்கா வாவென் றருகழைத்து
தேட்டமுடன்கை நீட்டிச் சேர்த்தணைத்துத்தான்வாரி
மார்பிலணைத்து வயிற்றளவுவெள்ளமதில்
சோர்வறத்தன்மர் சுணங்கனைத்தானெடுத்து
வயிற்றளவுதண்ணீரும் மார்பளவுதான்வரவே
புயத்திலேதானேந்திப் போனார்சுணங்கனையும்
கழுத்தளவுதண்ணீராய்க் கண்டவுடன்றன்மருமே
அழுத்தமுடன்சிரசி லன்பாய்ச்சுணங்கனையும்
வைத்துச்சுமக்க வழிந்தொழுகவேயுருகி
மொய்த்துவழிந்து முகத்துவழியாக

மிருத்துக்கிருமி வெகுதிரளாய்த்தானிர
மூக்குவழியாக முளுதும்நெஞ்சுவாயுதிர
அள்ளியெறிவதுபோய் அங்கமெல்லாம்புழுச்சொரிய
தள்ளிவிடவேணுமென்று சற்றுமனமில்லாமல்
அல்லலரத்தன்மார் ஆற்றின்றவொக
செல்லுமனவிற்சுணங்கள் செப்புமொருதற்செய்தி
நான்செய்ததீவினையை நல்லவரே நீர்கேளும்
ஊன்சேரும்ஆவதனை உண்ணவென்றுகொன்றுவிட்டே
வேதமறையோர்தம் விரதமழித்துவிட்டேன் [ன்
காதலுடன்மங்கையர்தன் கற்பையழித்துவிட்டேன்
நேசமுடன்குருவை நிந்தனைகள்சொல்லிவிட்டேன்
வாசமுள்ளவேதியரை வதைப்படுத்தியான்பிழைத்தேன்
தந்தைதாய்மாமன் தமயன்முதல்மூத்தோரை
எந்தனுக்குள்ளாக்கி ஏவல்செய்யுமென்றுவிட்டேன்
சூதுசெய்வார்தன்னுடனுந் துட்டருடனுங்கூடி
தீதுசெய்யும்பாதகங்கள் செய்துவிட்டேனிப்போது
அழிவழக்குத்தானுரைத்து அரியமனங்கலைத்து
பழிகொலைகள்செய்துவெகு பாவங்கள்செய்துவிட்டேன்
செய்தநன்றிதான்மறந்தேன் தீவினையேசெய்துவிட்டே
எய்தியேநம்பிவந்தோர்க்கிடுக்கமேசெய்துவிட்டேன்[ன்
காசினியோர்தங்களுட கட்டையழித்துவிட்டேன்
வீசியேசுற்றியுள்ள வேலியிரித்துவிட்டேன்
அறையிலிருந்தோரை மறவேவதைத்துவிட்டேன்
பொறையுடையார்களையும் பொல்லாங்குசெய்துவிட்டே
என்னரியபாவமெல்லா மெத்தனையோசெய்ததினால் [ன்
புண்ணியனும்மேனியெல்லாம்புழுச்சொரியவுன்றலைமே
வைத்துச்சுமக்க வழிநெடுகச்சொல்லுமும் [ல்
சற்றுமனங்கோணுமல் தான்சுமந்துபோனதினால்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒப்புடனேசொர்க்கமுண்டு
எமக்குநரகமுண்டு என்னையுந்தானினசத்திற்
போட்டுவிடுமுந்தனுக்குப் புண்ணியமேயுண்டாகும்.



நாட்டுப்புகழ்தன்மரே நீர் ஞாயமல்லபோட்டுவிடும்
பாதகனைப்போட்டுவிட்டுப் பாணியிலேதானம்பண்ணி
சாதகமாய்வாசமுள்ள சவ்வாதுதான்பூசி
அத்தந்தம்போக்கிச் சுகந்தமிகவணிந்து
நற்கந்தமாக நடவுமென்றாரம்மானை
நலமேற்சுணங்கன் தானிருந்துசொன்னதெல்லாம்
அலமேற்அரும்பெனவே அத்தவுரைகேளாமல்
பாதகம்நீசெய்தாலும் பழிகொலைகள்செய்தாலும்
ஆதாரவாறுன்னை ஆறுகடக்கவிட்டு
போவென்றுசொல்லாமற் புல்லறிவுகொண்டோநான்
சாவென்றுசொல்லித் தள்ளுவேனோஆறுதனில்
வேறொன்றும்பேசாமல் வெஞ்சுணங்கேநீயிரென்று
ஆறென்றுநீந்தி யக்கரையிற்றானேறி
வந்துநின்றுதன்மர் வருந்திச்சுணங்குதனை
நொந்துநோவன்னுடம்புரோமமெல்லாம்புண்ணுச்சே
வெந்துநோயெந்தன் வெக்கையட்டுமேனியெல்லாம்
நைந்துநோசிந்தை நடுங்கிற்றேஉன்மேனி
என்றுசுணங்கனை மிதமாயிரக்கிவிட்டு
சென்றுசிறுகால்தானுஞ் செவ்வேபிடித்தருவி
ஆற்றிமிகப்போற்றி அன்பாயரவணைத்து
தேற்றித்தவிப்பாற்றித் தேகமெல்லாந்தான்தடவி
இன்பங்குளிர்ந்ததப்போ எமதன்மராசனுக்கு
அன்புடையமைந்தனுக்கு அழகாகத்தன்வடிவை
காட்டிமகிழ்ந்தணைத்துக் கன்னத்தேமுத்தமிட்டு [மு
நாட்டிலேதன்புத்திரனே நன்மைசெய்தாய்தன்மரென்
கீர்த்தியொன்றுபுத்திரனே கிடைத்ததுகாணுந்தனுக்கு
பார்த்திபனேவைகுந்தப் பதிதனக்கேசொல்லுமென்று
எமதன்மர்தானும் எமலோகம்போய்ப்புகுந்தார்
தேமமுள்ளதன்மர் நீதியொன்றுந்தப்பாமல்
வீரடனேஇப்பால் விரைந்துவெகுதூரம்
கடந்துசெல்க் கொடியென்னுமாநதியும்

பார்த்துமித்திரனிட பஞ்சமுகப்பாறையென்று
ஏற்றுமொருசோடான இரண்டுமலைதான்கடந்து
மற்றுமுள்ளகேணிகளும் மலைகள்பலதான்கடந்து
உற்றதலமெல்லா முன்னமையாய்த்தான்பார்த்து
சந்திரகோசமென்னுந் தானுமலையானதுவும்
இந்திரவிமானம்போ லிருக்குமலங்காரம்
பார்த்துப்பணிந்து பரிவுடனேதானடந்து
சாற்றுமொருமால்தான் தனிதனில்முன்னுளில்
மண்டலத்தில்மாவெலிபால் மாயன்விடைவாங்கி
அண்டமுறநிறைந்த அரிபொன்மலர்ப்பதத்தை
தோத்திரங்கள்பண்ணித் துதித்துமிகப்பணிந்து
ஏத்திவிருதானை விருதபத்திலேநினைத்து
கேம்பமிலுமந்தக் கேதாரமாமலையும்
ஓதுமொருமுன்னூபத்து யோசனைதூரமென்ன
வளர்ந்திருக்குமந்த வடவால்விருட்சமதில்
தளர்ந்துமிகத்தவித்து தன்மருந்தான்வந்திருந்தார்
இருந்துதவிப்பாரி யெழுந்திருந்துதானடந்து
பொருந்துமலையும் பொருப்புமிகக்கடந்து
செவ்வைபொற்றகானகமுந் சீர்மலையுந்தான்கடந்து
கொவ்வைபடர்ந்தமலைக் கோபுரமுந்தான்கடந்து
தோற்றுந்திருக்கேதாரஞ் சோதிமலைகண்டுகந்து
போற்றியேயப்பதியிற் புகுந்திருந்தாரம்மானை
மேடைகளும்மண்டபமும் வெற்றிச்சிகரங்களும்
மாடமிருகூடமுமாய் மதிலுந்தெருவீதியுமாய்
நீடுஞ்சுனையும் நிறைந்தசொருவாவிகளும்
கூடுஞ்சிவாலயமுங் கொண்டல்வண்ணராலயமும்
நாடுதிருகேதாரம் நாகரீகங்கண்டுசென்று
ஆடுங்கொடிவேந்த னங்கிருந்தாரம்மானை
மிக்கவைகுந்தமதில் மேவியேசக்கரமும்
இக்கிதுள்ளோர்போற்றுந் திருமால்தனைப்பணிந்து
பத்தியுள்மேலாசையல்லால் பாரிதிலாசையில்லை



மற்றுந்தருமன் மலையுமலைச்சாரல்களும்
நீடியர்த்தகாவும் நிறைந்தமலர்ச்சாலைகளும்
காடும்பலநதியுங் கடந்தவைந்துதிப்பாறும்
மன்னர்திருக்கேதார மாமலையில்வந்திருந்தார்
அன்னவனைக்காப்ப தடைக்கலங்காணென்றுமொரு
சக்கரமுஞ்சொல்லிச் சரணமிகப்பண்ணியபின்
மிக்கதொருசக்கரந்தான் விளம்பியதெல்லாங்கேட்டு
செங்கமால்தான்மகிழ்ந்து சீர்தருமனுக்கெதிரே
இங்குள்ளவானவர்க ளெதிர்கொண்டழைப்பரென்றார்

அமரர்கள் தருமனை யழைத்துப்போதல்.

அந்தமால்தானனுப்ப அமரர்கோனிந்திரனும்
முந்தியெழுப்பத்து முக்கோடிதேவர்களும்
சித்தவித்தியாதரருந் தேடரியகாருடர்
சத்தரிஷிமாமுனிவர் தபோதரர்களருடன்
கின்னரர்கிம்புருடர் கெருடருரகருடன்
துன்னுமைத்தியருந் தோற்றமுள்ளமாதேவர்
தேவரிஷிமாதவரும் தேவகன்னிமார்களுடன்
பாவலரும்பாடகரும் பத்தரொடுசித்தர்களும்
வாக்கியங்கள்தான்முழங்க வானவர்கள்தான்கூட
நோக்கியேதன்மனிடம் நன்னிலைப்பொன்றுடனே
ஆடலுடன்பாடலுமாய் அரம்பையர்களாடிவர
வடலுருந்தன்மனையும் எதிராகக்காண்பதற்கு
தூவருவாரும் உபசாரஞ்செய்வாரும்
நாடிவருவாரும் நல்லதன்மனென்பாரும்
பார்க்கவருவாரும் பரிமளங்கள்தூவுவாரும்
ஏர்க்கவேவந்து எல்லையிட்டுநிற்பாரும்
வானவர்கள்வந்து மாரிக்குடன்தன்மனையும்
தானவர்கள்வந்தெதிரே தழுவியரவணைத்து
வந்தமரர்தன்மனுடன் மகிழ்ந்துமுகநோக்கி

முத்திபெறபாரதப்போர் முடித்ததொருபாவமெல்லாம்
போகவேநீருமிந்தப் பொய்கைதனில்மூழ்குமென்றார்
அகமகிழ்ந்துதன்ம ரப்படியேதான்மூழ்கி
பழையவுருமாறிப் பசும்பொன் நிறமானார்
அழகாகத்தன்மருக்கு அமரர்மலர்பொழிய
இந்திரவிமானமதி லேற்றியேதன்மரையும்
அந்தரத்தேவதைக ளமரருமிருக்க
தேர்நடத்திவானவர்கள் சிறப்பாய்மலர்சொரிய
வார்பிடித்துரெண்டருகும் மடந்தையர்களாடிவர
தயக்கமிகுவாறொருத் தன்மருமேதேரேறி
இயக்கர்பதிதன்னி லேகினார்காணம்மானை

வானுலகத்துக்குத் தருமர் வந்தது.

மன்னவரேஇன்னகரில் வாழ்ந்திருப்போம்வாருமென்று
ர், பொன்னகரோர்சொல்லப் போர்வேந்தனேதுரைப்
பான், என்னுடையதம்பியர்க ளிருக்குந்தலந்தனிலே
பன்னுமறைவேதியரே பரிவுடன்கொண்டேகுமென்றார்
பரிதிபதியிதுகாண் பார்த்திபனேஉந்தனுக்கு
கருதிமுடிசூட்டுகிறோங் கருத்துடனே நீரிருங்காண்
அச்சுதனார்தான்வாழும் அரியவைகுந்தமதில்
மெச்சவேநான்போக வேணுமெனவேதருமர்
அப்பதியைத்தான்கடந்து அமரருடன்மன்னவரும்
செப்பரியருத்திரர்கள் சிறந்திருக்குமன்னகரில்
சென்றுதருமருக்குச் சிராயமாரெல்லாம்
அன்றுமுடிசூட்டவென்று அருள்செய்தார்வானவர்கள்
ஈறில்லாதெம்பெருமான் இருக்குமிடமில்லாமல்
வேறேபதியொருநாள் வேண்டேனெனவுரைத்தார்
உடுக்கன்பதிதன்னி லுரையுமென்றுதானுரைத்தார்
இடுக்கம்வருவேனோதன்னி லிமையோரேயெங்கள்தமை
தடுக்கந்தவிர்த்துலகில் நயமாகநாடோறும்



அடுக்கவேகாத்தருளு மச்சுதனார்தன்பதிக்கு
போகவேவேணுமென்று பொன்னுலகந்தன்னில்வந்தா
தோகைநவரத்தினஞ்சூழ் அலங்குமுடிமன்னவனே [ர்
நீதில்லாமாநகரிற் சிங்காசனத்திருந்து
மாதரரம்பையர்கள் வலிக்கவுரிமிட
அந்தமுடனிங்கிரென்று அமரர்கோன்தான்கூற
இந்தவுலகாகாதென் றெடுத்துரைத்தார்தன்மருமே
வானவர்களத்த மறலிதனைவந்துகண்டு
தேனமருந்தார்மார்பன் தேசமெல்லாம்விட்டகன்று
கலிதானும்வந்தமையால் காடுமலைகடந்து
வலிவிருந்தமாநகரில் மன்னனுமவந்தனர்காண்
அன்றந்தேஅமர்நமக்கு அரியபதியீயுமென்று
தழைத்தேதாங்கவாழுமென்று சாற்றலுற்றாரம்மானை

தருமரை எமபதிக்கழைத்துப் போதல்.

மறலியுந்தான்மகிழ்ந்து மைந்தனையுமன்னேரம்
விறலுடனேஇங்கழையும் விண்ணவனேயென்றுரைத்தா
ர், அந்தகன்பால்தன்மரையு மழைத்துமுன்னேவிட்டார்
கள், வந்துபணிந்ததொரு மைந்தனையுந்தானெடுத்து
சந்தோஷமாய்மார்பிற் றனணைத்துமுத்தமிட்டு
சிந்தைமகிழ்ந்துநமன் செப்புவானோர்வசனம்
உத்தமனேஇந்த உலகுருள்வேணுந்தனுக்கு
எத்திசையும்போற்ற இருமென்றார்தன்மரையும்
அப்போதுதன்மர் அன்புடனேயதுசொல்வார்
இப்போதுமக்குநான் இன்பமுடன்வேணுமென்றல்
அண்ணல்திருவைகுந்தம் அடைவதற்குன்னோயுமே
புண்ணியரேஅந்தப் பொன்னகற்குவகுமென்றார்
பாசமுடன்நீர்பொருதும் பாரதப்போர்தனிலே
தேசதுரோணருடன் தின்றுசமர்பொருத
மாமுனிவன்மைச்சிலையின் வலிமைகண்மோமோனும்

ஆரணியேயுந்த வகைவந்தமாவெனவே
சொல்வாயெனமாயன் சொல்லேனை நீயும்
ஆர்வியென்றுமாய னப்போவெனுன்றுரைக்க
கோபிக்க நீப்பாந்து கூறுகின்றபொய்மொழியால்
நாமிக்கும்பாவமென்று நானிருக்குமன்பேரில்
அந்தோஷப்போக அருணகம்பார்ப்பதற்கு
வைத்தார்மனிமாய மன்னவனே சொல்லுமென்றார்

சொர்க்கம் நரகமெனத் தூதுவர் காட்டல்.

இன்று நான்பாருமென்று எழுநரகமுந்தான்
சென்றேறிக்காட்டித் திரும்பிவாருமென்று
தூதுவரைத்தானழைத்துச் சொற்பெரியதன்மனையும்
போதமுடன்கொண்டுபோய்ப் புண்ணியரே பாருமென்றார்
பார்த்துவரும்போதகுயிலே பலவிதமாய்நரகம்
தோற்றுதுகாணெவைவே சொல்லுமென்றார் தன்மரு
கற்பகக்காவிற் கடவிக்காசனத்தில் [மே
சொர்க்கத்தனிலிருந்து அலங்குடைபிடிக்க
பரித்துதெய்வகன்னியர்கள் பணிவிடைகள்செய்துதிக்க
தெந்துடமையவல்லினந் தேவர்களுஞ்செய்துதிக்க
கற்பகக்காவுடனே காமதேனுவந்துநிற்க
விற்பனமாய்வந்துநின்று வேண்டியதெல்லாங்கொடுக்க
களித்தேயிருப்பாரைக் கண்டேபிரியமுடன் [வே
செழித்தபுகழ்கன்மருந்தவன் சிரைத்துரைப்பாரேதென
இவர்கள்செய்ததன்ம மேதெனவெனக்கேட்க
தவமுடையகிங்கிலியர் சாற்றுவார்தன்மருக்கு
தக்கதவஞ்செய்து தருமத்துறைநிதோங்க
அக்கறுடன்பாவம் தொலைத்தோரிவர்களும்
ஓதுகின்றபஞ்சமர்கு பொன்றுகையொழியில்
நீதமுடனடத்தும் நிருபரிவர்களும்
ஓரசிவபூசை செய்தோரிவர்களும்



பாரிரிபூசை பண்ணினோரிவர்களும்
விளங்கவேமாதருமம் மேதினியிலெப்போதும்
கலங்கமறச்செய்து களித்தோரிவர்களும்
பூசமனோடைப பூசைகளுந்தான்கொடுத்து
ஈசுரமிழ்வேதியர்க்கு ஈந்தோரிவர்களும்
அடைந்தோர்கள் தம்மை ஆதரித்தோரிவர்களும்
இடைந்தோரைத்தாங்கி யிளைப்பாற்றிவிட்டவன்காண்
மிகுந்ததவமுனிவர் வேள்விகளைக்காத்தோன்காண்
பருத்தரியாய்நால்வகையும் பட்சமுடன்காத்தவன்காண்
மறையோர்க்குநல்ல மாதானஞ்செய்தவர்காண் [ன்
குறைகள்செய்துவந்தோர்க்குக்குடிகாத்துவைத்தோர்கா
பசித்துவந்தோர் தங்களுக்குப் பாலமுதமீந்தோர்காண்
ருசித்துவெகுதன்மமே முடித்தசொருபுண்ணியர்கா
கோதானமீந்து குளங்கிணறுண்டாக்கினோர்காண் [ண்
பூதானமீந்து புண்ணியமேசெய்தவர்காண்
தங்கநொருகன்னிகா தானமுடித்தோரிவர்காண்
மிக்கதொருபூவுலகில் வேத்தேஇவர்களெல்லாம்
இத்தவங்கள்செய்து இங்கிருந்தார்கண்மகரே
முத்தனே நீறுமே மூர்த்தியென்றார்கள்
தன்மத்தினைச்செய்தவர்கள் தாங்காமற்சொர்க்கமதில்
இம்மைதனிலிப்போது இங்குவந்தார்கண்மகரே
குன்றுமொருகிழ்நரகு கொற்றவனேபார்ப்பதற்கு
இன்று நீர்வாருமென்று ஏகினார்காணம்மானை
ஒன்றுமந்நரகமது ஒருநூறியோசனையாம்
நன்றாமிரண்டாம் நரகமிருநூறும்
இத்தனையிலொரு எழுநரகமுந்தான்
உத்திரவகலம் ஒருயோசனை நீளம்
பெருத்தகிருமிகளாய்ப் பேருடவுமுள்ளதுவாய்
வெருத்தமதியாமல் மானிடரைத்தான்விழுங்கி
தேளியும்புழுவும் நிறைந்தநீரங்களும்
உளையுமதல்வுட ஊருகின்ற அட்டைகளும்
பாம்புடனேநீர்நாயும் பத்திமுதலைகளும்

சோம்புவார்கண்டுதன்மர் துயருடனப்போது
பொய்யும்புரட்டும் பொருந்தாக்கொலைகளவும்
செய்யாதகாரியங்கள் செய்தோரிவர்களாகும்
இந்தநரகமதிற் கேழாம்நரகமதை
வந்திவிப்பாரென்ன மலைந்துசென்றார்தன்மருமே
நாடியேயேழாம் நரகிலுள்ளபாவங்களை
கூடியேமனுதருடன் கொற்றவனுந்தான்பார்த்து
ஏழாம்நரகமதின் கீழாயிருந்தவலும்
பாழாம்நரகமது பாதாளபாதகமும்
ஆழாம்நரகமதில் அலறிக்கிடப்பாரை
தாழாமுடியனையுந் தான்கண்டார்தன்மருமே

துரியோதனுதியர் துன்பமடைவதைக்காணல்.

பாசமுள்ளதோர் நரகிற் பாதவிக்கும்நாற்றவரை
வாசமுள்ளதன்மர் வாகுடனேகண்டனராம்
பொல்லாதநாற்றவரைப் புழுக்களரித்துடம்பை
இல்லாதரேகட்டாலே இருசெவியுமூக்கிலுமாய்
ஊடுருவியேதுளைத்து உலாவித்திரிவதையும்
வாடிமுடல்கிடந்து மயங்கித்தவிப்பதையும்
கவ்விமுதலை கடித்துப்பிடித்திழுக்க
மதித்ததொருநாற்றவர்கள் மயங்கும்வருத்தமெல்லாம்
கதித்தபுகழ்தருமர் கண்டார்காணம்மானை
கண்டவுடன்மாதருமர் கலங்கியுடல்பதறி
அண்டமுறநின்று அரிநமசிவாயமென்று
ஓதுமுலகமெங்கு மொருகுடைக்கீழாண்டதொரு
மாதுபயில்மன்னன் மகாநரகுக்குள்ளானன்
என்றுசொல்லித்தன்ம ரேங்கிமனமிடைந்து
நின்றனைவிலத்த நெடியதுரியோதனனும்
விண்டுரைக்கமாட்டாமல் விசாரமாயுள்ளசத்து
கண்டுதன்மர்தன்னைக் கண்கலங்கியேதுசொல்வான்



தருமனைப்பார்த்து துரியோதனன்சொல்லுதல்.

விருத்தம்.

தம்பியுனையேயான்செய்த சதிகேடனைத்துமபொறுத்த
வெம்பிநரகிலழுந்தாமல்வேண்டியெனையேகரையேற்றி
நம்பியுனதுகைகொடுத்து நடத்துமழுதுதன்மரென
எம்பியெனையேவைகுந்தந் திருக்கண்ணையுந்தவமுனக்கே.
யான்செய்தவினையினலே அழுந்தினேன் நரகில்வீழ்ந்து
தான்செய்தவத்தினலே தன்மரென்றிங்கேவந்திர்
ஊன்செய்தபகையினலே உடல்தன்னைகிடத்திப்போட்டு
ஊன்செய்தஉயிர்தான்வாடி மயக்கமுந்தீர்ப்பாயெம்பி. ()
முன்னளிருந்தபடைவினைகள்முழுதுமறந்துநினையாமல்
இன்றெனக்குதுணையாகஇரங்கிக்கசந்திடிடவாமல்
மன்னவுனதுகைதந்து வாவாவென்றுகரையேற்ற
சொன்னல்மறலிஆமென்று துயரந்தீர்ப்பாருமக்காக. ()

பிறவிமயக்கந்தெளியாமற்பேதாபேதமிகநினைந்தேன், நிறவிசுகத்தின்பெருமையினைத் திரணமளவுந்தோற்றமல், அறவேகொடுமைபண்ணிவிட்டேன் அந்தப்பெருமை நீபொறுத்து, இறவாதிருக்கும் வைகுந்தம் எப்தும்படியாய்க்கைதாரும். (௱௬௪)

பேரார்பெரிய தன்மனெனப் பேற்றுப்பெருமையதனலே, நேரிப்பெரிய தன்மனென நின்றேன்கொடுமையதனலே, பாராய்புவியிலுன்னையென்னைப் பகர்வார்பெரியோர் பாரதத்திற், சீராய்மனது தயவுடனே திறமாய்வந்துகைதாரும். (௱௬௫)

வேறு.

பஞ்சவா ளஞ்சுபேர்க்கும் பாஞ்சாலி தனக்குந்தானே, வஞ்சமாய்ச் செய்தபாவம் மட்டல்லசொல்லக்கேளும், கொஞ்சமாய் நினைத்தபுத்தி கொடியதோர்நரகஞ்சேர்ந்தேன், தஞ்சமென் றுன்னைச்சொன்னேன் தன்மருன்கையேதாரும். (௱௬௬)

குதிரைக்கடலுஞ்செய்து திர்த்திரனென்வனத்திலயானும்
எதிரைற்குவலயத்தி லிப்படி நரகம்புக்க
வாதிரைப்பகைபேசிய்து வங்கிஷமுமமான்டு
இதிரைல்நரகஞ்சேர்ந்தோம் ஜெயமுண்டுகைபோதாகும்.()

இருவுமது.

மாயன்றாதுவந்தார் மதித்துநான் அறிந்தேனில்லை
ஆயருர்மனதுக்கேற நாகச்சே அரகதேர்ந்தேன்
தூயனார்பாதம்போற்றித்தொழுதுவைகெ நிபோத்தீர்
வேயனார்க்காகத்தன்மர் விரைந்திருகைவைத்தாரும். ()

வேறு.

பொறுமையுடைய தன்மரேதீர் போறுலெனக்குக் கெதியில்லை, இருபியுடலைத் துன்க்குதுபார் கெஞ்சியழு துபாதலிங்க, உருமியதட்டி நீர்தாயுமஉடக்கிமுதலை பி டித்திழுக்கச்,சிதுமைமெதிநாட்பட்ட துத்தேன் தெய்வப் பிறப்பேகைதாரும். (௱௩௩)

வேற்றுமையனைக்கேதப்பா மெய்புயிராக்கைக்கெல்லாம்
பார்த்திபனைமூர்த்தி பாபமவந்தாய்சேர்த்தாய்
நாற்றிசைபுகழும்கீர்த்தி நரகம்விட்டகலவென்னை
எத்திபோகவைவிட்டு இருக்கவைகுந்தஞ்சேர்ப்பாய்.
உந்தனைக்கண்டபோதே உடலுயிர்மகிழ்ச்சிபெற்றேன்
எந்தனைவிட்டுப்போறு வெளக்கினி துணைவேறில்லை
சிந்தனைதுரக்குந்தம்பி திருவுளமறிய நீயும்
வந்தனைதருமரேதீர் வைகுந்தஞ்சேருமிப்போ. (௱௩௪)

கதை

தேர்வேந்தேதா னுனக்குச் செய்ததொருதீவினையால்
ஓர்சுமிதா னு முன்பனதிற்காணும்
தருமநெறியுறையுந் தபவுந்தவிராமூர்
இருமையுடன் நீயிருந்த வற்பனத்தானும்மிடம்
வந்திர்வைகுந்தம் வாழ்படியுந்தான்பெருக
முந்திதானசெய்த மோசமெல்லாம்விட்டுவிடு
மன்னவனேயான்செய்த வன்மமெல்லாம்விட்டுவிடு



என்னைநரகம்விட்டு ஏடுறத்தான்பாரும்
ஏராதபாவி யிவையுரைக்கத்தான்கேட்டு
தாராருந்தன்மர் தயவுடனேதான்தேக்கி
பேதமாய்ப்பார்த்து நின்ற பேர்பெரியதன்மருக்கு
ஒதரியமில்லிய ருகந்தே தனசொல்வார்கள்
புன்னியபாவமெல்லாம் பொருத்தவேபார்த்துவந்திர்
என்னிடமன்பக்குறு எதுமென்றுர் தா துவாக்கள்
மன்னனவனைக்கண்டு மறலிபக்கம்தான்போக
அன்னவனைக்கூட்டி யனுப்புமென்றுராம்மானை
பார்த்திபன்றான்செய்ததெல்லாம் பாவமேயல்லாது
ஏத்திபொருதன்மமுந்தானிவன்செய்ததில்லையென்றுர்
இவன்றன்பரகெதி வெய்துவது மெப்படித்தான்
தவமுடையதன்மரேநீர் சாத்துமென்றுரைத்தார்
இருந்தவேதானதன்மஞ் செய்திலனோயானால்
பொரித்திடப்போதான்செய்த புண்ணியத்திற்பாதி
மன்னனுக்குதன்றாய் மகிழ்ந்தளித்தேனிப்போது
சொன்னேன்காண் தூதுவனே சுகமாக நீர்தாரும்
புலோகராஜனையே புறக்குதிவையவிட்டேக
செலைவந்தாக்கி விடுமென்றுராம்மானை
அந்தமொழிகேட்டு ஆனதொருகிங்கிலியர்
வந்துமொருகாந்தாரி வாழ்த்தினியோகைதாக்கி
கூப்மற்றொனுடுக்குக் கூட்டினாராம்மானை
ஆசாரமாக அன்னவ்திரியோதனனை
காராருந்தன்மர் கழுக்கொடுநவனைத்து
சிராகப்பேசித் திவினையெல்லாமகற்றி
பாரார்புகழ்தருமர் பாவிகையைத்தான்பிடித்து
வாரார்மறலிமுன்னே வந்துகண்டாரம்மானை
இருவர்வாக்கண்டே யமராஜன்கலங்கி
அருவினையன்மாபாவி அவன்வருவதேதெனவே
புகழ்தருமன்செய்துவந்த புண்ணியத்திற்பாதி
இகழாதிவ்வேந்தனுக்கு ஈய்ந்தாயெனவுரைத்தார்

கேட்டுமகிழ்ந்துதருமன் கிட்டவேமுன்னிருத்தி
வாட்டமில்லாமன்னவர்க்கு மகிழ்ந்துரைப்பாரம்மானை
அடர்ந்துதீமைசெய்தவர்கள் அவதிமிகப்படுவார்
நடந்துநன்மைசெய்தவர்கள் நல்லபதம்பெறுவார்
என்னும்பழமொழியுண் டென்றிந்தவுலகும்
முன்னேபெரியோர் மொழியவேகேட்டிருப்போம்
ஆயனொருபாலிவர்க்காய் ஐந்துநூர்விதிக்கவென்ன
சயிருக்கத்தானு மிடமில்லையென்றுரைகான்
தெரிந்திவன்முன்செய்தீமையெல்லாந்தான்பொறுத்து
பரிந்துசெய்நயன்களித்திப் பாடுபெருத்திடந்தான்
ராஜரிஷியானுமிவன் நன்முடிசூட்டுமென்றார்
பாசமுள்ளகூட்டமவனும் பகர்ந்துரைத்தாரம்மானை
இமையோர்மனமகிழ்ந்து இராஜரிஷியென்றுபட்டம்
அமையமுடிசூட்டி அங்கிருக்கவேதருமன்
நோக்கமிந்தநரகம்விட்டுச் சுற்றத்தார்யாவரையும்
ஏற்றங்கரையேறவென்றுதன்மர்தானுரைக்க
வையமகிழ்தன்மர் வங்கேடத்திலுள்ளோரை
துய்யதருமன்சொற்படிக்குச் சொர்க்கத்திலேற்றினரே
மற்றுத்தருமனையே மகிழ்ந்துபெருவானோர்கள்
சுற்றமெல்லாம்பூமிதனில் சூழ்ந்துமிகவந்ததுபோல்
சொர்க்கத்திற்றன்மருந்தான்சுற்றமுள்ளோர்தங்களையும்
வர்க்கமுள்ளசொர்க்கமதில் வைத்தாரெனவேதான்
தேனுற்றொடைமார்பன் தெய்வத்தருமனையும்
வானோர்களெல்லாம் மகிழ்ந்தார்காணம்மானை
அத்தகனுமங்கே அருள்மைந்தனைநோக்கி
உத்தகனுக்கு இந்த உலகமெல்லாம்தான்தருவேன்
துங்கமுடிசூட்டிச் சொர்க்கத்தையாளுமென்று
அங்கேமறலி யருளினான்தன்மருக்கு
தன்மராதுகேட்டுச் சரணமெனப்பணிந்து
ஜென்மமழிந்தாலும் செய்தருமம்போனாலும்
எம்பிரானெம்பெருமா ளிறைவோன்வைகுந்தமல்லால்



நம்பியோர்ஞிடத்தில் நான்தரியேனென்றுரைத்தார்
பகர்ந்தவொருமறலி பாங்குடனேமால்பதிக்கு
உகந்துநீர்செல்லுமென்று உபசாரமாயுரைத்தார்
தந்தையிவைசொல்லத் தருமமடிபணிய
மைந்தன்றனையனைந்து வைகுந்தஞ்சேருமென்றார்
தொடர்ந்தசுற்றமுள்ளவையுந் தூரியோதனன்றனையும்
அடர்ந்தசொர்க்கஞ்சேருமென்று அன்புடனேதானிருத்
[தி

### தருமர் பிரமபதி சென்றது

வானோர்கள் தன்மரையும் மகிழ்ந்தரதமேற்றி
சேனுபதித்தருமர் செல்லவுற்றாரம்மானை
அந்தரத்திற்றுந்துமிகள் ஆர்ப்பரிக்கும்பேரொலியும்
முத்தியபேரிகைகள் முரசினுடபேரொலியும்
எழுகடல்போலுவலி லெத்திசையுமேழுழங்க
வாழும்பிரமலோகம் வந்தடைந்தாரம்மானை
அகத்தியனுங்கோசிகனும் அத்திரிபுலத்தியனும்
மகத்திற்கௌதமரும வசிட்டர்பராசருமே
சொல்லவுஞ்சவுமியருந் துர்வாசர்காசிபரும்
வல்லசமதக்கினியும் மார்க்கண்டர்வால்மீகி
அட்டதிக்குப்பாலகரும் அட்டவசுக்களுடன்
திட்டமுடனெல்லோரும் ஜெயவென்றுபோற்றிசெய்ய
மாணிக்கத்தாற்சமைத்த வண்ணமணிமண்டபத்தில்
ஆணிக்கனகமணி யழகியசிங்காசனத்தில்
ஓதுமீரேழுலகும் உகந்துபடைத்தோரும்
வேதனும்தன்றாய் வீற்றிருக்கும்வேளையிலே
தெரிந்தமுனிவர்களும் தேவர்களுஞ்சூழ்ந்தவர
பரிந்துநல்லதன்மர்வந்து பணிந்தார்காணம்மானை
இசைநான்முகத்தோ னிவனாரெனக்கேட்க
வான்குருகுலத்து நீள்பாண்டுதன்புதல்வன்
திருமனிவன்காணுந் தாரணியிலேகலியன்
பெருமையுடன்வந்ததிறம் பேருலகைத்தானிழந்து

ஆதிநெடுமா லிகேசவன்பாதம்
ஸ்ரீவைகுந்தம் நினைத்துவைத்தானைவிருஷ் [ன்று
அழைத்துவைத்தோரப்புரைடைய அடியணியவேணுமெ
தழைத்தோங்குத்தன்மமென்று சாற்றினார்வானோர்கள்
செப்பரியநான்முகத்தோன் சிந்தைமகிழ்ந்து
ஒப்பரியநன்மருவைகுந்தமெப்போதும்
நன்றாகச்செங்கோல் நடத்துமெனசேஷமெல்லாம்
குன்றுநமாமுனிவர் கூறுகையிட்டிருப்போம்
தன்னிகராயாருடன் நன்றாகஇருந்துவைத்தான்
பன்னியபாலனொன்றுமிலப் போதவேயுன்டெனிலும்
இன்னமும்பூவுலகி லெக்காலையுண்டெனிலும்
பொன்னுலகின்மேலாகை போக்கவேயுண்டெனிலும்
எவ்வுலகும்வேண்டியது இப்போதுகூட்ட
அவ்வுலகத்தன்னிராசனைப்பெறுன்
வேண்டியதுசிகளென்வே வேறுமகிழ்ந்துரைக்க
ஆண்டவனைவைகுந்தம் ஆளவுமென்றார்தம்மருக்கு
ஏதுமிலத்தானையிவ்வை மிகுமவனேஇப்போது
நாதனையும்வேதனையும் நற்சுநகம்வேண்டி
வந்தானிவனெனவே வானோருரைத்ததற்பின்
சிந்தாகுலம்படைத்துத் தீராமுகனுமெதுரைப்பான்
தருமன்தனக்குநீப்போ தானவரேவானவரே
பிரமனின்மேன்றபட்டம் பேர்ட்டமையுமென்றார்
அத்திணைத்தில்வானோரும் அருள்முனிவர்நாதர்களும்
இத்தலத்தாயிரமிஸி யென்றசெப்பித்தானையுந்தார்
பிரமபுரியிட்டுப் போனாதன்பரோடு
தருமமதன்றானகஞாம் கழிவதனித்செல்வமென்று
சகர்குத்து மியங்கவிதைன்றுபடிக்
வாசமலர்சொரிய மாமுனிவரேவலிட
ஆடுவோர்கோடி பலவகாயகரவேதான்
பாடுவோர்கோடி பலவாத்தியமுழங்க
கொட்டுவோர்கோடி கூத்தாடுவோர்கோடி
தட்டுவோர்கோடி சங்கூதுவார்கோடி



காணமயிலாடக் கன்றுதுக்தவான்மறையோர்
ஆனா நிதுதிருக்கத் தாமென்றுசொல்வாரும்
ஆவினமுன்னன்றும் அடர்த்துபுவியில்வாழும்
காவுதிரிகிமேழ்த்து கபடபுலியாளியுடன்
வாரமுடன்மான்மறைகள் மற்றுமுள்ளபட்சிகளும்
சேரவொத்துதமையிற் சென்றடையும்வாவிகளும்
குன்றுதவாவிகளும் கோலத்தெருவீதியெல்லாம்
சென்றடங்கமெல்லாந் செண்பகங்கள்பூச்சொரிய
வாசல்கடோறும் மாப்புரத்துப்படிமுதிர
தேசமெங்குஞ்செழிக்கத் தேவகன்னியர்மகிழ்வாய்
மாவாலைகோலம் மகாதேவர்க்கென்றுசொல்லி
ஆவலாய்நாலுதிக்கும் அழகாகத்தான்போட்டு
வன்னமுள்ளமாலை வயிரமுத்துமாலைகளும்
பொன்னும்நவமணிகள் போதலங்கரித்து
இருகையுமுடியில்வைத்து இருந்துதவஞ்செய்வோரும்
சுருதிபோசித்திருந்து தவம்பண்ணுவார்கள்சிலர்
தவத்தின்பெருமைகண்டு தன்மர்மிகமகிழ்ந்து
அவத்தின்படியோனை ஆண்டுகொண்டதெப்படியோ
எம்பிரான்வாழ்கக்கண்டு இயல்தருமரோதுரைப்பார்
தம்பிரானே அடியேன் நானுமென்னபெறுபெற்றேன்
செப்பமுடன்புவியிற் சிவனார்திருவருளால்
இப்படிஅவைதனைநான் என்னதவஞ்செய்தேனோ
நாராயணனருளோ நற்சிவனார்தன்னருளோ
சீராருமையருளோ தேவர்கள்தன்செயலோ
என்றுசொல்லியேதரும ஸ்ரீமையோருடன்கூடி
சென்றுகயிலாசச் சிறப்புதனைத்தான்பார்த்து
சந்தோஷமேபெருகித் தன்மருமங்கேதுரைப்பார்
அந்தத்தேவர்களே அரனார்தன்கோவிலெங்கே
என்றுரைப்பானதன்ம ரியம்பவிமையோரும்
சென்றுதின்றிதோபாரும் சிவனார்திருக்கோவில்
பயமுடையதேவர்களும் பார்த்துநின்றுதாமுரைக்க

நயமுடைய நந்திசர் நாதர்கொடுத்துரைக்க
ஓடினர் நந்திசர் ஒருநொடியிலீஸ்பரர்முன்
தேடியேதெண்டனிட்டுச் சிவனுருடனுரைப்பார்
வாசமுள்ள தன்மருமகம் வாசலில்வந்தாரெனவே
நேசமுள்ள தன்மர்தன்னை நீரழைத்துவாருமென்ருர்
பாதமிகப்பணிந்து பண்புடையநந்திசர்
நாதருரைகேட்டு நல்லதன்மபுத்திரரை
தேசமிகப்புகழுஞ் சிறந்ததன்மபுத்திரரை
வாசலிலேநந்திசர் வாருமென்றுதானழைக்க
நந்திசர்பாதம் நன்மையுடன்தெண்டனிட்டார்
வந்தனம்செய்து வாய்த்துதித்துதன்மருக்கு
அவ்வீச ரருள்பெறுவீரென்றுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தாரேதருமருந்தான்
வாசற்படிகடந்து வந்தார்நந்திசருடன்
ஈசாகயிலைமலை வாசாஜெகதீசா
அந்திவண்ணனுமுக்கண்ணு ஆரனேயெனத்துதித்து
சந்திரசேகரனைத் தலைசாய்த்துத்தான்வணங்கி
மாடேறுமீஸ்பரனர் மலர்ப்பாதங்கண்ணிலொற்றி
ஈடேற்றவேணுமென்று ஈசரடிபோற்றினரே
ஆரணிக்கமான அரியதொருபஞ்சவர்தம்
காரணிக்குங்கேட்டிருப்போங் காசினியில்தருமம்
உன்னைநிகர்சொல்ல உலகத்திலிப்பொழுதும்
பின்னையுந்தான்காணேன் பேர்பெரியதன்மரே நீர்
என்றுமனமகிழ்ந்து ஈஸ்பரனர்கொண்டாடி
வென்றியுடனிசைப்பார் விஜயனொடுநால்வரும்
காட்டிலுடல்போட்டுக் கண்ணனர்பொற்பாதம்
தேட்டமுடன்றானுஞ் சென்ருர்களவ்விடத்தில்
வைகுந்தம்பெற்றமரர் வாழ்ந்திருப்பார்கண்டாயே
கைகண்டதாகையினர்கயிலைப்பதிதனிலே
ஒன்றுங்குறைவில்லை உன்றனக்கிங்கெப்போதும்
என்றுமொருநாளா யிருப்பீர்காணென்னிடத்தில்



ஆனதினலினனமொன்று அன்பாகச்சொல்லுகிறேம்
மாறுபரனை மாலுமேஉங்களுக்காய்
திரியோதனுதிகளைச் செயப்பண்ணித்தந்ததுவும் [ம்
அரியோன்தானுங்களுக்குஅனுவனுவாய்நின்றதுவு
தேற்றரசன்றன்னைவெல்லத் திருமாலருச்சுனனும்
நாற்றிசையுங்கொண்டாட நம்மிடத்தில்வந்தன்பு
அன்றுபுராமெரித்த அவ்வாளிவாங்கியதும்
சென்றுகுருக்ஷேத்திரத்தில் திரியோதனுதிகளை
பாரதப்போர்வென்றுதந்து பாராளவைத்ததுவும்
வாரிதுயில்மாயனுங்கள் மைத்துனனாய்த்தோன்றியதும்
என்றுமொருநாட்போ லிருந்துமலகாண்டதுவும்
நன்றியுள்ளநாரணரை நாடோறுந்தான்போற்றி
வந்ததுவுமந்த வகையறியோங்கண்டீரே
நந்துடயில்நாரணரும் நாந்தாமுகவேற்றுமையோ
சீலமுடன்வைத்திருப்போம் சீர்வேந்தேஉங்களை நாம்
மாலவனைவிட்டிறக்க வல்லீரோவென்றுரைத்தார்
தேவரீர்க்கேற்ற திருவுளந்தானெக்காலம்
ஏவல்செய்வோமென்று தன்மரேற்றிவர்காணம்மானை
தன்மனிலைவசொல்லச் சங்கரனுமேதுரைப்பார்
அன்பனேஉன்றினைவு அங்கோயிருப்பதினுல்
மாலவனர்தம்மிடத்தில் வைகுந்தத்தேயிருங்கோ
சீலமுடன்நம்மைவந்து தெரிசித்துப்போங்களப்பா
என்றரனுற்சொன்னதற்பின் ஏற்றமுள்ளமாதருமர்
நின்றுதித்து நீலகண்டர்தாள்பணிந்து
பாதம்பணிந்து பரிமுகத்தெண்டனிட்டு
நாதருடகோவில் நன்றாகவிட்டகன்றார்
முப்பத்துமுக்கோடி தேவமுனிவர்களும்
இப்படியேநாற்பத் தெண்ணாயிரம்ரிஷிகள்
கின்னரர்காந்தருவர் கிம்புருடர்விஞ்ஞையரும்
அன்னமுயர்த்தோனும் அயிராவதத்தோனும்
இம்மையிற்றன்மரென எவர்பெற்ருரென்றுசொல்ல
தும்புருநாரதருஞ் சுபசோபனம்பாட
ஆலாத்திக்காரியர்க ளணியணியாயங்குவர

மாலயன்பட்டணத்தை வாகாகவேபார்க்க
தேவன்னிரம்பையர்கள் ஜெயமங்களம்பாட
ஆலயத்தன்மருடன் அமரர்களுமங்குவர

தேவர்கள் வைகுந்தத்தைச் சிங்காரித்தல்.

மெய்கொண்டநன்மர் விரும்பிவருதற்கு
வைகுண்டலோகமெல்லாம் வாஞ்சையலங்கரித்தார்
நன்மணிசேர்மண்டபமும் நற்கனகமண்டபமும்
பொன்மணிசேர்மண்டபமும் பூமலர்சேர்மண்டபமும்
வைத்தழுத்தும்பவள மாணிக்கமண்டபமும்
கத்துகடல்முத்தும் கனகத்தின்மண்டபமும்
புட்பராகம்பதித்த புதிதானமண்டபமும்
அற்புதமாய்ரத்னமணி யமைத்தநேருமண்டபமும்
தூயகோமேதகத்தால் தூணிருத்திமண்டபமும்
வையமிழ்பச்சை வயிரத்துணிமண்டபமும்
சிங்காரமண்டபமும் சிற்பரின்குமண்டபமும்
வங்காரமண்டபமும் வச்சிரத்தூண்மண்டபமும்
விரிவாபட்டாடை மேற்கட்டிமண்டபமும்
மாருதகன்னுடி மாளிகையின்மண்டபமும்
விரைத்தசவ்வாதுவுடன் மெழுகியநேர்மண்டபமும்
நிறைத்துநல்லசந்தனத்தால் நிலமெழுகும்மண்டபமும்
கத்தபொடிவாசங் கமகமென்றமண்டபமும்
மந்தாரைபிச்சி மலர்தூக்குமண்டபமும்
சாரவேகற்பூரத் தான்துலங்குமண்டபமும்
ஆரவேகஸ்தூரி யாமணக்குமண்டபமும்
ஆழிரண்டாழ்வா ரமைந்ததோர்மண்டபமும்
கூறுமொருபொற்கனகங் குவித்திருக்குமண்டபமும்
நீண்டகருடக் கொடியுடைய நீள்மதிலும்
பூண்டஅனுமக் கொடி நிறைந்தகோபுரமும்
உப்பரிக்கைமேடைகளும் உயர்ந்தசிகரமதாய்
அப்பெரியதேவ ரலங்கரித்தாரப்பதியை
தூயதொருமாணிக்கத் தோரணமுந்தானட்டி
மாயனுடமாளிகையை வாஞ்சையலங்கரித்தார்



போதவேவிதியெங்கும் பூங்கமுகுநாட்டி
காதலுடன்கதலிக் கரும்புமிக நிறைத்து
பொன்னியமாலே பூரணமாய்க்கான்றுக்கி
மன்னியமுத்துமணி மாலைமாலைதூக்கி
கனமொத்துளையங் கஸ்தூரிபெய்நிறைத்து
அழகாகவைகுந்த மலங்கரித்தாரப்போது

வைகுந்தநாதன் தூணை நன்னாளில் வைத்தது.

மாசில்லாத்தன்மருடன் வானவர்கள்தேரேறி
பேசியநேர்வைகுந்தப் பெருநகரில்வைத்துடிகள்
மண்ணுலகில்வாழ்தருமன் வைகுந்தவாழ்பதிக்கு
எண்ணியேதேவருட னிங்குவந்தாரென்றுசொல்ல
கேட்டுமகிழ்ந்தப்போது கேசவநாராயணனும்
நாட்டமுடனங்கிருந்த நல்முனிவோர்தான்போற்ற
சக்கரமுஞ்சங்குந் தரித்தமணிமாலையுடன்
திக்கெங்குந்தானிலங்கத் திகழ்கருடன்மீதேறி
வண்ணமணித்துளப மாலைமுதம்மின்னிலங்க
எண்ணரியதன்மருக்கு எதிர்வந்தார்கோபாலர்
அண்டபகிரண்ட மகண்டமுந்தானாகி
உண்டுமிழ்ந்துநின்ற உலகளந்தார்தன்பதத்தை
பண்டுநான்செய்ததன்மம் பலித்ததெனவேதன்மர்
கண்டுமனமுருகிக் கண்குளிரக்கண்டனரே

விருத்தம்.

கண்டபொழுதே களித்தேன் கண்மயிர்நான் கச
டறுத்தேன், அண்டர்புகழும் பொற்பாதம் அடியேன் ப
ணியத் தவம்பெற்றேன், தொண்டனிவனென் றருளிச்
சொல்லும்பெரிய வைகுந்தக், குண்டமதிலே எனையிருத்
தும் கோவேநந்த கோபாலா. (௬௪)

வேறு.

ஆதவாவுன்னைக்கண்டேன் அல்லிருளகன்றுநீபோ
மாதவாவெனதுசித்தை மயக்கறத்தீர்த்தேன்தீர்த்தேன்
சீதவாரணமாம தேவகிதந்தகோபா
சிதவாயிசைகள்சேரும் திருவடிவைகுந்தத்தோர்ந்தேன்

இதுவுமது.

ஜானகிராமா ராமா சாரங்கபாணிபூமா
மாதசரதயோத்திராமா மாதவாவாசுதேவா
ரகுநாமோராமாராமா உலகிலையனந்தமாயா
தாளவாக வுதபாதம் சரணமெனக்கண்டேன்கண்டேன்

வேறு.

பட்டேன்புவியிலிருமுன் அடியேன்பாச்சினைநீத்துவரு
மனையும் விட்டேனுணர்வுகளை மறந்தேன் விரதமுணடு
வைகுந்தம் மட்டேஅறிய நடந்துவந்தேன் மறலிமை
ரோன் வானவரும் தொட்டேஅணைந்தார் சகம்பெற்
றேன் தொழுதேனுனைநான் தெழுதேனே. (௩௬௫)

வேறு.

வைகுந்தப்பதவிசேர வருவதுவாளிதோர்ந்தன்
வைகுந்தமென்றுசொன்னால்வருமவினைபகன்றுபோமே
வைகுந்தராஜராஜே வடமலையானேஅய்யா
வைகுந்தநாதந்தாயின்று வைகுந்தஞ்சேர்ந்தேன்யானே

கதை

மாப்பாருதுந்நா மாபாரதந்தனிலே
ஆபாதிகாயெரித் தாதவினைத்தான்மறைத்து
சிராபிமனுக்காய்த் தேந்தரசன்றன்னைவென்று
தாரார்விஜயனையுஞ் சாகாமற்காத்தனையே
ஆனேதின்அருமையெனை அந்தமடுக்கரையில்
காலில்வந்து அஞ்சலென்ற காருத்தாவென்றுசொல்லி
தொழுதான்பணிந்தான் ஆயவெல்லாந்தான்தீர்ந்தான்
அழுதான்கருணைவிழி பானந்தநீர்சொரிய
ஆடினான்மெய்மகிழ்ந்து அரிகரியென்றுசொல்லி
பாடினான்கீதம் பணிந்தானிருபாதம்
செங்கமலப்பாதம் சேவைபண்ணவேதிருமும்
இங்கிருக்கப்பெற்றேன்யா னென்னதவஞ்செய்தேனென்
என்றுதனமர்சொல்லி ஏற்றுமின்றதோத்திரத்தை
மன்றுலகில்மாயோன் மனமகிழ்ந்துதன்மனையும்
வாருமென்றுதானழைக்க வானவர்களன்னேரம்
பாருமென்றுகூடவரப் பங்கயனுமிந்திரனும்
தேடரியாப்பாதஞ் சேவிக்கப்பெற்றனையோ
ஆண்டவனைவந்தனுக்கு ஆச்சரியமென்றுரைத்தார்



என்றுசொல்லித்தன்மனையு மிமையோர்மகிழ்ச்சியுடன்
அன்றுகந்துகட்டி யணைத்தாரேகாணம்மானே
மற்றுமந்தமாயவனூர் வாசேனர்தனைநோக்கி
கொற்றவனைக்கொண்டு கோவிலிலேவையுமென்றார்
பரிந்துதன்மர்கோவிற்புகப் பச்சைமால்தான்மகிழ்ந்து
இருந்தங்கிமையோரை எம்பெருமான்தானனுப்ப
சாற்றுபுகழ்தன்மருந்தான் தானினைக்கிற்பூசைசெய்ய
ஏற்றதொருமாய னிதுவென்றுதானுரைத்தார்
பொய்யில்லாவாசகனே போதவே நீயுமிப்போ
வைகுந்தலோகம் வளம்பார்க்கவாருமென்றார்
அய்யன்றுருந்தன் அரிகேசவனுடனே
உய்யுந்தருமனவ ருடன்நடந்தாரம்மானே

வைகுந்த வளமையைத் தன்மருக்குக் காட்டுதல்.

கூறரியமாவெலிதன் கோவில்மணிவாசல்தனில்
வீறுடனேதானடந்து மேகவண்ணர்வந்துநின்றார்
மாயோனுந்தன்மருமாய் வாசலில்வந்தாரெனவே [ர்
ஆயதொருமாவெலிக்குத் தூதுவர்போய்த்தானுரைத்தா
விரைந்தங்கேமாவெலியும் வெகுண்டுதானோடிவந்து
கரைந்துகரைந்துருகிக் கண்ணுயிர்த்தோனும்
நானுமற்றேவர்களும் நான்முகனுந்தான்தேடி
காணுதபாதமது கடையேன்பொருட்டாக
கொடியேனிருகுடிலிற் கோபாலர்வாசல்தனில்
அடியேன்பொருட்டாக அய்யா நீர்போது
இங்கெழுந்தருள என்னதவஞ்செய்தேனோ
சங்கேதுமாலே சரணஞ்சரணமென்றார்
திருமாலேயிங்கிவனூர் செப்புமென்றுமாவெலியும்
குருகுலத்துத்தர்மனிவன் குணமும்பொறுமையுள்ளோ
சாதகமாம்நான்முதலாய்ச் சத்தியவான்தானுமிவன் [ன்
நீதமுடையவன்காண் நீனிலத்துமன்னருக்குள்
நேக்கபொறைதெரியுந் தவமுடையவன்காண்
தீக்கவினைக்காணவென்று வேண்டியவந்தோன்காண்
மாவெலியேயென்றுரைக்க மாயோனைமுற்றுடைய
மவலிதுவவருந்தான் இந்தருபோலாகி

தாழ்த்தோருவர்த்தோராய்த் தானிருப்பார்கண்மயிரே
வாழ்த்தோரளிவன்பெருமை மாயனேசொன்னீரே [ர்
தங்குசெம்பொன்மேருவினிற் றன்காகத்தோர்த்திருந்தா
அன்றுமத்தக்காகம் றும்பொன்னிறமாகியபோ
ஆதிறும்நாயின்னையொன்று அருளைக்கேன்மாவெலியே
பாத்துநல்லமாமறையோர் பன்னீராயிரம்பேர்க்கு
திருத்தமொருவேள்வி நினைத்தோ அப்பன்னிவைத்தா
மற்றுமோராயிரம்பேர் மாமறையோர்தங்களுக்கு [ன்
நித்தமன்னதானம் நிறையக்கொடுத்தவன்காண்
தன்றுயமனுநீதி நடத்துமுறைதனிலே
குன்றுமாவிலொன்று கொண்டோனவன்காணும்
இத்தேவரிரவோர் நினைத்தோர்கள்தங்களுக்கு
எல்லாருமிருயினுமிப்பொற்காத்தவன்காண்
சத்தியமாய்மை தவறுமற்றுவதில்
நித்தியுநீதி நிலைநிறுத்தம்புண்ணியன்காண்
இங்கன்றுமமாரி இறந்துகெட்டபுமிய
பொங்கும்புவியும் புவனமெலாந்தனதில்
உண்ணுமருமன்னனி ருவைமிகுவுடையதும்
மன்னுவிரிந்த மகிமைவெள்ளாறி
வழக்காரிவிமனுடன் வந்தபூஷாமிருகம்
பழக்காருந்தன்மருட பக்கலிலேனுராமது
வந்திருவார்தாமும் வழக்கொன்றுதான்கூற
மித்திருவன்வியமனையும் பின்நதுபோவென்றவன்காண்
தெரிந்ததுயோமனையைத் திருவொருவனன்பிடித்து
பரித்துறுதிதுரியப் பார்த்துநின்றநால்வோரும்
வில்லம்புதிட்டிவெருண்டுநின்றிருந்தார்
பாகின்மேலாவயற்றுப் பார்த்தேபாகநின்றவர்
சேரவேதானின்றது நிங்கொன்றுபோசாமல்
ஆவதுடனின்றுவந்தான் அன்பாகதம்மருகில்
என்றனவிம்மாவெலியும் இருதயமுந்தான்மகிழ்ந்து
சென்றதருமியாருஞ் சிந்தையுறந்தான்கூறி
மன்னவனேதீர்ந்தான் வருந்திசெய்தவத்தால்
இன்னகிவைத்தாய்நீ பொன்றாரிகப்புகழ்ந்து
உற்றதொருகன்மருக்கு முடமாரமோரைத்து
மற்றுமடந்தமாபோலே வணங்கினைமாவெலிதான்
மாவெலியைத்தானிருத்தி மாயோனுமன்பாக



காவலனார்தன்மனையுங் கைப்படவேகொடுமன்சென்று
பேராரும்பாவைகளைப் பிரவாதேவனுடன்
தாராரும்நாரதனுஞ் சதுர்வேதமாமுனியும்
உத்தமனறியதோர் உருத்துமாங்கதனுடனும்
பத்தியுள்ளஆழ்வார் பன்னிருவர்தன்னுடனே
விற்றிருக்குஞ்சோலைதனில் மேகவண்ணர்தன்கோலவி
போற்றியேயவரவர்கள் பொற்றூருறுதப்பவளித்து [ல்
தங்குபுகழ்தன்மருக்குஞ் சக்கரமுந்தான்தரித்து
பொங்குதிருமாயோனைப் போற்றிநின்றாரவரோர்கள்
அங்கவர்கள்தம்மை அச்சுதனார்தாம்நிறுத்தி
நிக்கணுநல்வேதனுமாய்த் திருமால்வெழுந்தருளி
குளிர்ந்தமலர்ச்சோலைதனில் கோபாலர்தானடந்தார்
அழுத்தகமாதர்நின்ற வலங்காரத்தமண்டபத்தில்
செல்லும்பொழுது ஜெயஜெயமினனுடன்
சொல்லுமிரட்டையரும தோரத்துயேமனையும்
இருவரையுங்கண்டு எதிரேயெழுந்திருந்து
அரியபொருள்கண்டவர்போல் அரியிணையடியில்
வந்துபணிந்து மலர்மாரிகள்சொரிந்து
சிந்தைமகிழ்ந்து செலித்துதிப்பாளில்
தம்பெருந்தங்கையுந் தன்மருமக்களைந்து
எம்பிரான்சிபாத மிறைத்தலேறும்போதுமினி
நந்தகோபாலர் நாரியர்களுடன்
விந்தமினிநடந்து மெய்தனந்துவிட்டமரே
என்றுரைத்துத்தம்பிரோ பாகனவருத்தான்
மன்றுளவுமாயோனை மகிழ்ந்துரைத்தாமமானை
இன்னகிபோது மிருமென்றுதானுரைத்தார்
ஆனந்தவாரி தொண்டைவாயுந்திரட்டி
தானந்தமானவன்ணக் சாற்றிமுடிசூட்டி
மன்னவனார்தான்வாழ்த்தி வாழ்த்தினங்களெல்லாஞ்சொல்லி
கோரமுடன்கொண்டுசென்று நிலமணிமண்டபத்தில்
அன்பாகதம்மிடத்தி லருகேயிருமெனவே
இன்பமாய்நீருமிருமென்றுரைமானை
காரதனார்தான்முதலாய் நன்முனிவோர்தான்கூடி
சிரந்தான்கொதந் திருந்தவேதமென்று
சிங்காசனத்தில் மேலிருமென்றுரைக்க
பாசிங்கமாவேதத்தர் பார்த்துமகிழ்ந்திருந்தார்

வெண்கவரி தான்வீச விருதுபலமுழங்க
தங்கமணிமண்டபத்தில் தம்பெருத்தன்மருமாய்
ஏந்திழையார்தம்மோ டிருந்தபணிமாற
ஆய்ந்தமடமாத ரரம்பையர்களாடல்செய்ய
அச்சுதனுர்நேச மகலாதபஞ்சவர்கள்
மெச்சுபுகழ்வைகுந்தம் வீற்றிருந்தாரம்மானை
பொய்யில்லாமெய்யரவர் புண்ணியவான்மாதருமர்
செய்யும்வெகுதர்மமெல்லாந் தேடியேசெய்தமையால்
பரிதிமதிகாணுத பச்சைமால்தன்பதிக்கு
விருதாசப்பஞ்சவர்கள் மேவினார்காணம்மானை
இவர்பெற்றபேர்தா னெவர்பெற்றார்பூவுலகில்
வைகுந்தத்தெஞ்சாரின்னங் காணுதவிந்தைதகள்
கண்டாரிவரெனவே கனகசபைதான்முழங்க
அண்டர்முனிவோருமதிசயமாய்க்கொண்டாட
மெய்கண்டார்கண்டார் வெளியிலொளியாயிருந்த
வைகுண்டங்கண்டார் வாசமுள்ளபஞ்சவர்கள்
என்றுகதைசொல்ல எற்றஜெனமேஜெயனுக்கு
சென்றுதிருச்செவியின் செவிமெடுதன்றுக

## ஜெனமேஜெயனுக்கு பிரமஹத்திதோஷம் நீங்குதல்.

ஓசையுறக்கேட்டே யுளமகிழ்ந்துதானிருக்க
பாசமுடன்போர்த்துமொரு பழையகயனம்பட்டுவும்
வெண்பட்டுமோதி வெறிபிரமைபோய்நீங்கி
பண்பட்டவார்த்தை பழையபடிதான்பேசி
இருமையகன்றதென்று ஜெகதலத்தோர்கொண்டாட
பொறுமையுள்ளபஞ்சவர்கள் புவியாண்டிருந்தமதில்
போன அதிசயத்தான் புதுமைபுதுமையென்று
ஆனஜெனமேஜெயனுக்கு அறிவுவந்துதானகையினுல்
சத்தியவான்வசனம் சத்திவிளங்குதென்று
பத்திபுடனப்போது பஞ்சவர்கள்கோவிலொன்று
கட்டிமுடித்துக் கைவிதுதப்பூசைபண்ணி
இட்டமுடிந்துநற் திருக்கோவிலாலயமாய்
பூமிதனிலிருத்தப பூலோகங்கொண்டாட
ராமனோராமனென்று நாதமணிதானுட



திருவிளக்குநின்றிலங்க தீபமுடன் தூபம்
பரிமளங்கள்வீசப் பஞ்சவர்கள்கோவிலென்று
வருவார்பணிய வரும்வினைகள்தானகல
தருவார்துளபமுடன் சந்தனமுண்டாக
மெய்யுதிகொட்டி விளங்கியேலோகமெல்லாம்
ஐவர்திசையங்க ளன்புடையோர்கொண்டாட
தன்மக்கதையென்று தாரணியிலேதுதிக்க
கன்மமகலக் கற்பனைகள்விட்டோட
நோய்கள்பலதீர நொந்தமன்னங்களிப்ப
பேய்களகலப் பிரமஹத்திதான்தீர
குட்டங்குறைநோவு குலைமுட்டி தீராமை
அட்டகுன்மவாயுவுடன் அடங்காதநீரிழிவும்
வெட்டைகரப்பான் வெகுசூலைமேகமுதல்
துட்டக்கிரந்தி சோகைகாமாலையுடன்
அந்தரவாயுவுட னண்டபவுத்திரமும்
மூத்திரிப்புவலி முழங்காமல்கரப்பனுடன்
கன்னக்கரப்பன் கடியகண்டமாலையுடன்
அன்னக்கிருமி அழி நீரழிவுமுதல்
பற்குத்துப்பல்லரணை பாண்டுநீராப்பனுடன்
உட்குத்துடம்புளைதல் ஒடுக்காக்கரப்பனுடன்
ஈழையிருமல் இளைப்புப்பெருவயிறும்
கோழைகுடவாழை கூடியதீர்ப்பிளிசமும்
வாதக்கரப்பன் மண்டைப்பொரிகரப்பன்
காதிரைச்சல்கண்புகைச்சல் கண்மாசடைதலுடன்
வைப்புப்புதைப்பு வலுத்தபில்லிசூனியமும்
வெப்புவெதுப்பு விரணம்பலவிதமும்
முகவாதசன்னி முடக்கல்தலையசைப்பும்
பகராதிவீக்கம் பழுத்தாத்தகாசமுதல்
கடுத்துவயிரெழுச்சல் கண்டிப்புக்கெண்டையுடன்
அடுத்தநடுக்கல் அசதிசந்துவாதமுதல்
வலிப்புமிசிப்பு வழுய்நோய்வரட்சியுடன்
கலிப்புப்பினைவு கண்ணேறுசைவைப்புருதி
சண்டிவில்லிப்பிருமல் தாதுநட்டமானதுவும்
அண்டவலிஅகோரநோ யந்தரவாயுமுதல்
பருப்பகுவன் சிலவிதைங்கள் பண்டிப்புத்தொண்டைவலி
கருப்பழிதஞர்கிருமி கனிவுமிகச்செழுப்பனமும்

உன்றனுக்குநோவு முடம்பிலெலும்புருக்கி
வெள்ளுறுணைவென்றுநடு வீக்கும்பெருபாண்டு
சிலிப்பிளவை கரிப்பிளவை சிறுமுறைப்பாரிறகல்
அரிப்பிளவைப் பாணி அனந்தவாயுடன்
அழுங்கொப்பொருமை லடைப்பு நீர்கல்லடைப்பு
கழல்வாதங்குளிர்காய்ச்சல் கண்ணோவு நீர்வருதல்
பித்தாம்பார்வை சேட்டுமந்தின்கோட்டாலே
வாதசரம்பித்தம் வருநீர்ச்சுரமிப்படியாய்
எழுவாயாகி எழுந்தவியாதிகளும்
பழுதாயாரான பாசவாயுறுதல்
நிருமெங்குமாயன் திருவாய்மொழிந்தபடி
அருந்தவமுடையோர் அரிகிமென்றுசொல்ல
வாங்குமனமுமொன்றாய் மகிழ்ந்திருந்துதான்கேட்டு
பாக்குள்பழிபாவம் பறந்துவிடுஞ்சத்தியமே
என்னதவமானாலும் இச்சிந்துகேட்போர்க்கு
சொன்னமயமாகச் சொரிவான்துரோபதையும்
பின்னைத்தவமும் பெருந்தவமுந்தான்கொடுத்து
இன்னைந்துரோபதையுங் கேட்கவரந்தானீந்து
தேவமுள்ளகாரியங்கள் நிமிஷத்திலேனுமென
வீமனுமதிசெய்ய விஜயனுமேதிக்கதிர
தென்னருமாறுபத்தி திசைகளெட்டுங்கீர்த்திகொண்டு
மெய்யாய்நகுலன் வெகுதவங்கள்தானிய
மன்னுசகாதேவன் வந்தநோய்க்கினங்கள்
பன்னுமொருஞானப் பார்வையால்தானீக்க
தருமர்குருவாகத் தான்மனுவிலேயிருக்க
கருமப்பாத்தோடக் கலிவினைதீர
வெத்திகொண்டபாரதம்போல் விண்ணிலகுமண்ணிலகு
அங்குமிகாவன்போல் ஐவர்சிறந்திருக்க [ம்
இங்குமைவர்தானிருந்து ஏற்றவரங்கொடுக்க
பெற்றோர்பெருமையென்று பேருகைக்கொண்டாட
உற்றோருறவோருகந்துபணிமார
பூங்கோவில்வாசல்கள் போதவெதான்மணக்க
பாங்காமணிவிளக்கு பக்கமெல்லாந்தன்றிலங்க
சாம்பிராணிவாசம் சன்னதியெல்லாமணக்க
தேம்பாமல்தாருங்கனி திருச்சங்குதான்முழங்க
நாவினிக்குந் திருஞ்சுவியமும்



தர்மர்ஜெனமேஜெயன் தானறிந்துபோற்றிசெய்ய
பொதுமையுள்ளபஞ்சவர்கள் பூலோகந்தன்னிலிப்போ
திருமைப்பிரமஹத்தி தீர்ந்ததனாற்றனுக்கு
வீதிவசத்தையாராலும் விலக்குமுடியாதெனவே
அதிசயமாய்க்கொண்டாடி அத்திபுரநகரில்
வீற்றிருந்துசெங்கோல் விளங்குமுடிசூட்டி
பார்த்திபருஞ்சூழப் பார்மன்னர்தான்சூழ
சிங்காசனத்திருந்து செங்கோல்செலுத்துதற்கு
மங்காவியாசருட வாக்கியமுந்தான்கேட்க
நினைத்துஜெனமேஜெயன் நெஞ்சுருகிந்தான்தேட
அனைத்துயிருமொன்றன் நறிந்தவியாசரவர்
பொன்னுலகம்விட்டு பூலோகந்தன்னில்வந்தார்
பின்னுமையுமந்த வேதவியாசனையும்
கண்டுஜெனமேஜெயன் கண்களிக்கத்தான்போற்றி
தொண்டனுக்குப்புத்தி தோற்றமுடனேயுரைத்தீர்
அந்தவிபரமதை அய்ந்தறிந்துபாரமல்
வந்தபிரமஹத்தி மாற்றிவைக்கவேண்டுமென
பஞ்சவர்களைவர் பாரண்டொழிந்து
வஞ்சமில்லாவைகுந்த மாபதிக்குப்போனதை
கேளுமென்றுசொன்னா ரிதுவைப்படிநானும்
நாளுமொருமாதம் நன்றாகத்தான்கேட்டு
ஆளும்பிரமைப்பு அகன்றதுகாண்மாமுனியே
கேளும்வினையுங் கொடுமைகளுந்தான்விலகி
போனதினாலைவர் புதுமைஅதிசயத்தால்
தானமுடன்பொற்கோவில் தான்சமைத்துப்பூசைபண்
ணவைரேனிப்போது வைத்துவணங்குகிறேன் [ணி
நாஅமுதன்பாதம் நாடோறுந்தான்பணிவேன்
என்றுஜெனமேஜெயன் இவ்வார்த்தைதான்கூற
ன்றிருவேதவியாசரகமகிழ்ந்து
சத்தியவாய்மை தவறாதிப்போது
நித்தியமாயெங்கும் நிரந்தரமாய்த்தானவர்கள்

இங்குமிருப்பா ரெவ்வுலகுத்தானுள்ளோர்
அங்குமிருப்பா ரமரரோடாசனத்தில்
நல்லவர்கள்பஞ்சவர்கள் நற்றவம்பெற்றாரெனவே
வல்லபுகழ்மாமுனிவர் மகிழ்ந்துஜெனமேஜெயனுக்கு
ராஜசிங்காதனத்தில் நன்றாயிருந்துசெங்கோல்
வாசமுடன்பூவுலகில் மன்னுயிருமெனவே
வாழ்த்திவிடைகொடுக்க மகிழ்ந்துஜெனமேஜெயனும்
போற்றிநமஸ்கரித்துப் பொற்பாதம் பூண்டுகொண்டு
ஏற்றியிணையடியை யிறைஞ்சிநின்றுதோத்திரமும்
சாற்றினன்மாமுனிதான் சரணமெனக்கைதொழுது

விருத்தம்.

பூருவத்தரசநாட்டிப் பூவுலகினைத்துங்கூட்டி
வேறுசொற்பகையுங்காட்டி வேலைதொழிற்புரியவிட்டு
கூடமுறக்கதையுங்காட்டி கொலைதொழிற்புரியவிட்டு [றி
பேறுபெற்றவரென்று பெருமையுறுநித்தாய்போற்

வேறு.

அடியேனடியேன்பிழைபொறுத்தி ராசநிருத்திவி
னையறுத்திர், சிறியேனுனதுமகவாகச் சிந்தமிரங்கியரு
ளிராயும், வெறியேயகல்வலைபுரிந்தி விட்டகுறையும் நி
றைவேறக், குறியாய்மகுடமுடிசூட்டினனேவே னைதுரு
ல்கொழுந்தே. (௱௭௩)

இன்னஞ்சிறியேன் கலியுகத்தி லிருந்துமெலிந்து
மிகேலியாமல், முன்னஞ்சபேர்க்கும்நாற்றுவர்க்குமொழி
யும்பிபரந்துபோல, வின்னன்கமரா நத்தாயம் விரும்
பிரைத்துஅடியேனைத், தன்னஞ்சரிவு தானதுபோற்
றுற்காத்தருளுந் தயாபரனே (௱௭௪)

வேறுமது.

முன்னுன் நடந்தவழிவசமும் முறைமுமெனக்குத் தெ
ரியாது, இன்னுன் நடக்கும்விபரீதத்தாலென்னைமறந்துசு
டையாமல், அன்னுட்கலியன்வந்ததிற லைரகன்றராரில்
டத்தில், பின்னைநமக்குமாயடியேன் பேசாதடிமையாள்
வாயே. (௱௮௫)



வேறு.

குருகுலத்தரசுக்கெல்லாங் கொற்றவாவுற்றவேளை
வருமெனச்சமயமென்பேன் வந்தருள்புரிந்துநிரும் [லே
குருவெனத்தடுத்தாட்கொண்டு கொற்றவா அடியேன்மீறி
கருவெனக்கனகமியுஞ் சற்குருநாதாபோற்றி. (௱௮௬)

கதை.

தோத்திரமுஞ்சொல்லித் தொழுதுநமஸ்கரிக்க
வாழ்த்திவிடைகொடுத்து மாமுனியுந்தான்போனார்
வேதவியாசர் விண்ணகத்துக்கேகியபின்
சாதுஜெனமேஜெயனுந் தானவியோர்போற்றிசெய்ய
இருந்தான்கொலுவில் லேகசிங்காதனத்தில்
வருந்தார்தமக்கு வணங்காதகோவேந்தாய்
கலியுகத்திலேயிருந்த காரணமாம்நற்கதையைச்
சலியாமற்கேட்டுத் தான்பிரமைதீர்ந்தமையால்
பழுதில்லாதிக்கதையைப் பட்சமுடன்தான்கேட்டு
எழுதிப்படிப்போர்க்கும் இன்புற்றுக்கேட்போர்க்கும்
வைகுந்தமென்றெருக்கால் வாயினாற்சொன்னோர்க்கும்
மெய்கொண்டமூர்த்தி விஷ்ணுபதமுண்டாக
வந்தவினையும் வரும்வினையுந்தான்தீர்ந்து
செந்திருமால்பாதஞ் சேர்ந்திருப்பார்கண்மரே
இந்தவைகுந்தக்கதை இயல்பாகமுன்னுளில்
சிந்தைமகிழ்சிரங்க ராயருடன்சிஷன்
வெங்கிபருள்வடவன் விளம்பினிந்தக்கதையை
பொங்கியசொல்லதனைப் புரிந்துநன்றாக
முதலைமுதல்தெரிந்து முற்கதையைஆராய்ந்து
குதலைமொழியெனவே கொண்டாடிக்கேட்பவர்க்கு
ஒருசொற்பொருளை ஒன்பதாய்த்தான்விரித்து
கருவாகவேதெரிந்து கற்பித்தான்விற்பனமாய்
திருத்துபுகழ்வைகைத் தென்வீரையம்பதியான்
பொருந்துதவஞ்செய்யும் புகழுமருதன்புதல்வன்
மன்னவரும்பொன்னமுகு மருகனெனவேவளரும்
அண்டருவானவர்க்கும் அன்புடையோர்தங்களுக்கும்

சொன்னபடிகேட்டுத் தொழுதுமிகவணங்கும்
இன்னிலத்திற்றென்றமி ழியம்புங்கவிவாணருக்கும்
சிஷ்ரடியார்க்குஞ் சிஷனாய்த்தாவிருந்து
காசமென்றுகூறித் தமிழினலிக்கதையை
தேடித்தெளிந்து திருவிருத்தமதான்கலந்து
பாடிப்படித்தெழுதும் பாருலகிலுள்ளோர்க்கும்
நாற்றெண்பத்தோர்விருத்தம் நூனுக்கமாய்த்தான்பாடி
பார்த்தன்புகழ்ப் பஞ்சவருடன்கலந்து
க்ஷேத்திரம்போல்நன்றாய்த் திரட்டியொருநூலாகக்,
கோத்திரமுந்தான்வாழ்கக் கூறினனிக்கதையை
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியரும்மற்றோரும் யவர்களுந்தான்படிக்க
முன்னாளிலேவடவன் மொழிந்தவைகுந்தக்கதை
இன்றுளிற்போற்ற வெழுத்தாவெழுத்ததனுல்
வாழிமிகவாழி மங்காத நூல்வாழி
வாழிசெங்கோல்செலுத்தும் மன்னர்மிகவாழி
அன்னைசுற்றம்வாழி அருந்தமிழோர்தான்வாழி
சின்னஞ்சிறுபிள்ளை செல்வமுடன்தான்வாழி
ஆல்போல்தழைத்து அறுகதுபோல்வேரூன்றி
பால்போல்நுரைப் பாரில்மிகத்தான்வாழி
முகில்போலன்னை நிறம் முசியாமற்றன்வாழி
ஓங்கியநால்வேத முயிர்பலவுந்தான்வாழி

விருத்தம்.

ஸ்ரீராமாவென்றால் அகன்றிடுங்கோடிபாவம்
ஸ்ரீராமாவென்றால் அனேகமாம்பொருளுஞ்சேரும்
ஸ்ரீராமாவென்றால் அறங்களுமிருந்துவாழும்
ஸ்ரீராமாவென்றால் அவர்கள்மெய்ஞ்ஞானியாமே.

வைகுந்த அம்மானை

முற்றிற்று.

64386